

# தங்க திரிசூலம்

இந்திரா சௌந்தர்ராஜன்

## பொருளடக்கம்


தங்க திரிசூலம் ..... 7

பாஷாண லிங்கம் ..... 113


# தங்க திரிசூலம்

## 1

புரிந்துகொள்ள முடிந்தால் புரிந்து கொள்ளுங்கள்...

ஒருவர் பார்வைக்கு ஒருவராக தெரியலாம். உண்மையில் அவர் ஒருவர் மட்டுமல்ல! அவருக்கு முன்பின் ஒரு வரிசை உள்ளது!

வெகு நாட்களுக்கு பிறகு லக்ஷ்மி முகத்தில் கொஞ்சம் போல துளி சந்தோஷம், தெரிந்தது. அதற்கு காரணமும் இருந்தது. அந்த காரணத்துக்கு கஜேந்திரன் என்று ஒரு பெயரும் உண்டு. கஜேந்திரன் யாரோ அல்ல... அவள் தவமிருந்து பெற்ற பிள்ளை.

அவனும் அவள் எதிரில் கையில் ஒரு ஃபைலுடன், டக் செய்து கொண்டு சட்டை பேண்ட்டுடன் வந்து புன்னகையோடு நின்றான்.

''என்ன கண்ணு புறப்பட்டுட்டியா?''

''ஆமாம்மா... நேரமாயிடிச்சு. இப்ப புறப்பட்டாதான் ஆபீஸ் போக சரியா இருக்கும். இல்லாட்டி முதல் நாளே லேட்டா போனேன்கற கெட்ட பெயர்தான் ஏற்படும்...''

''வேணாம்... வேணாம். நீ இப்பவே கிளம்பு...''

"விபூதி வெச்சு ஆசிர்வாதம் பண்ணி அனுப்பும்மா"

லக்ஷ்மி மகன் விருப்பத்தை நிறைவேற்றி முடித்தாள். அவன் வீட்டை விட்டு வெளியேறவும், கணவன் கோவிந்தராஜனின் படத்தின் முன் நின்று ஒரு பெருமூச்சுடன் பார்த்தாள்.

மாலை போடப்பட்ட படம்!

கோவிந்தராஜன் இறந்து ஏழெட்டு வருடங்கள் ஆகின்றன. அன்று தொலைந்து போன சந்தோஷம் இன்று கஜேந்திரன் வேலைக்கு புறப்பட்டிருக்கும் நிலையில்தான் துளிபோல் அந்த வீட்டுக்குள் அடி எடுத்து வைத்துள்ளது.

இருந்தபோதிலும் கோவிந்தராஜன் இறந்த விதம் மிகக் கொடுமையானது. இரும்புக் கம்பிகளை ஏற்றி வந்த லாரி ஒன்றன் பின்னால் ஸ்கூட்டரில் சென்றபடி இருந்த கோவிந்தராஜன், லாரி டிரைவர் பிரேக் பிடிக்கவும், தானும் பிரேக் பிடித்து நிறுத்துவதற்குள் ஸ்கூட்டர் தான் வந்த வேகத்துக்கு முன்னேறிவிட்டது. அப்படி ஏறியதில் மிகச் சரியாக கூரிய கம்பிகள் அவர் மார்புக்குள் துளை போட்டுக் கொண்டு புகுந்ததில் மனிதர் அப்படியே, அந்த கம்பிகள் அவரை மார்போடு தூக்கிப் பிடித்த நிலையிலேயே உயிரை விட்டது பெரிய கொடுமை.

அதை எல்லா பத்திரிகைகளும் வேறு புகைப்படம் எடுத்து வெளியிட்டு லக்ஷ்மி மனதில் ஆறாத ரணத்தை உண்டாக்கிவிட்டன. கணவனின் மரணம் மட்டுமல்ல, லக்ஷ்மியின் கொழுந்தன், அதாவது கஜேந்திரனின் சித்தப்பா கூட கிட்டத்தட்ட அதேபோலதான் ஒரு விபத்தில் உயிரை விட்டார். அவர் ஒரு பில்டிங் காண்ட்ராக்டர்.

கட்டடம் ஒன்றின் மாடித்தளத்தில் நின்றபடி மேற்பார்வை இட்டுக் கொண்டிருந்தவர், தளம் எதிர்



பாராமல் பெயர்ந்ததில் பொட்டலம் போல் மேலிருந்து கீழே விழத் தொடங்கினார். கீழே கட்டட பில்லர் ஒன்று கம்பி கட்டப்பட்ட நிலையில் இருக்க, அதன்மேல் விழுந்ததில் பில்லர் கம்பிகளில் சரியாக மூன்று கம்பிகள் மட்டும் திரிசூலம் போல மார்பை துளை போட்டிருந்தன.

இப்படி ஒரு துக்கத்துக்கு இரண்டு துக்கங்கள் சூழ்ந்து கொண்டதில் லக்ஷ்மி உறைந்து போய் விட்டாள். நல்ல வேளையாக ஓரளவிற்கு சொத்துபத்துக்கள் இருந்ததில் பொருளாதார சிரமங்கள் பெரிய அளவில் இல்லாமல் போய்விட்டன. கஜேந்திரனையும் நன்றாக படிக்க வைக்க முடிந்தது. இன்றைக்கு படிக்க வைப்பதா பெரியதா படிப்பதுதானே பெரிது... கஜேந்திரன் நல்ல பையன்... நன்றாகவே படித்தான். நிறைய பாடங்களில் முதல் மாணவனாகவும் வந்தான். அதெல்லாம் சேர்ந்து ஒரு நல்ல வேலையையும் வாங்கிக் கொடுத்துவிட்டது.

பிரபலமான ஒரு விண்ட்மில் நிறுவனத்தில் புராஜெக்ட் இன்ஜினியர் போஸ்ட்!

மாதம் முப்பதாயிரம் சம்பளம்!

இன்று வேலை என்பது இருவிதமாகத்தான் உள்ளது! ஒன்று, மகாமட்டமான அடிமாட்டு சம்பளத்துடன் கூடிய வேலை...

இன்னொன்றோ கை கொள்ளாத அளவு சம்பளம் தரும் பெரிய வேலை... அந்த காலம் போல, ஐம்பது ரூபாய் சம்பளத்தில் ஆரம்பித்தேன். படிப்படியாக வளர்ந்து ஐயாயிரம் வரை வந்தேன் என்று நம் அப்பா, மாமாக்கள் பாடிய பல்லவிக்கெல்லாம் இன்று இடமில்லை. இப்படி காலம் மாறிப் போயிருப்பதும் வளர்ச்சியா இல்லை கலியின்

கொடுமையா என்பதெல்லாம் போகப் போக ஒரு வேளை புரியுமோ என்னவோ...?

நல்ல வேளை கஜேந்திரன் கை நிறைய சம்பாதிக்கும் சம்பளக்காரனாகிவிட்டான். ஒரு நல்ல வேலை கிடைத்து அவன் வேலைக்கு போனதில் லக்ஷ்மிக்கு கொஞ்சம் போல பெருமை... மகிழ்ச்சி...

அவனது விண்ட் மில் நிறுவனம் ஒரு புதிய நிறுவனம். வடநாட்டுக்காரர் ஒருவரின் முதலீட்டில் துவங்கப் பட்டுள்ளது. இன்று இந்தியாவுக்கு இருக்கும் இரண்டு பிரதான சிக்கலில் முதலானது மின்சாரம்! அடுத்தது எரிபொருள்... இந்த இரண்டும் இல்லாதபடிக்கு ஆதாம் ஏவாளில் தொடங்கி நம்முடைய சேர சோழ பாண்டியர்கள் வரை எல்லோரும் எப்படித்தான் காலம் தள்ளினார்களோ? அதை கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை. கரண்ட் கட் ஆன நொடி உடம்பு வியர்க்க ஆரம்பித்து ஒரு எரிச்சல் பரவத் தொடங்கி விடுகிறது. பெட்ரோல் தட்டுப்பாடு வந்து விட்டாலோ அது இன்னும் மோசம்... கால்கள் இருப்பது வீட்டுக்குள் நடப்பதற்கும், அடுத்தபடியாக கடவுள் கால்களை கொடுத்திருப்பதே பைக்கை உதைத்து ஸ்டார்ட் செய்வதற்கும், காலால் அமுக்கி பிரேக் போடுவதற்கும் தானே? எனவே, திண்டாடிப் போய் விடுகிறோம். அதனாலேயே பெட்ரோல் என்ன விலை விற்றாலும் அதன் விற்பனைக்கு மட்டும் ஒரு குந்தகமும் வருவதேயில்லை.

இப்படி இரு சமாசாரங்கள் இந்தியாவை மட்டுமல்ல, உலகையே ஆட்டி வைக்கும்போது அந்த சக்தியை வசப் படுத்துவது எப்படி என்றுதான் புத்திசாலிகள் யோசிப்பார்கள்?

கஜேந்திரன் வேலைக்கு சேர்ந்திருக்கும் விண்ட் மில் புராஜெக்ட் நிறுவனம் காற்றாலை மூலம் மின்சாரம்



தயாரிக்கும் ஒரு நிறுவனமாகும். அந்த மின்சாரத்தை உடனுக்குடன் பயன்படுத்திக் கொள்வது ஒரு பக்கம்... தண்ணீரை பனிக்கட்டியாக மாற்றி இடம் மாற்றி எடுத்துச் சென்று பின் உருக்கி அதை பயன்படுத்திக் கொள்வது போல காற்றாலை மின்சாரத்தை எதிலாவது சேமித்து வைத்து தேவைப்படும்போது தேவைப்படும் இடத்துக்கு பேட்டரி களை கொண்டு சென்று பயன்படுத்துவது போல பயன் படுத்த முடியுமா என்பதெல்லாம்தான் அந்த நிறுவனம் இனி கண்டறியப் போகிற விஷயம்... அப்படி கண்டறிய வேண்டியவர்களில் கஜேந்திரனும் ஒருவன்.

ட்யூட்டியில் ஜாய்ன் பண்ணுவதற்காக இதோ ஜி.எம். அறை முன்னால் காத்திருக்கிறான்... அழகான ஏ.ஸி. அறை, அவர்களது விண்ட்மில் லோகோ அறையின் உட்புறத்து நீல நிறச் சுவரில் பளிச்சென்று தெரிகிறது. அதில் "Wind Power is Greater than Win Power' என்னும் வாசகமும் அவனுக்கு பிடித்திருந்தது. அதை ரசித்தபடி அமர்ந்திருந்த அவனை ஜி.எம். பி.ஏ-வான பாலு என்னும் பாலசுந்தரம் அழைத்து ஜி.எம். அறைக்குள் அனுப்பி வைத்தார்!

''வெல்கம் ஜென்டில்மேன்..'' என்று கம்பீரமாக அழைத்தார். ஜி.எம். தாமஸ். அவர் கழுத்தில் ஒரு சிறிய சிலுவை சங்கிலி தங்கத்தில்... அதுவே அவர் ஒரு இறை நம்பிக்கை உடையவர் என்பதை கஜேந்திரனுக்கும் உணர்த்திவிட்டது. வலது கையை நீட்டி குலுக்கிவிட்டு அவருக்கு எதிரான டிஸைன் நாற்காலியில் அமர்ந்தான்.

''அப்புறம் சொல்லுங்க கஜேந்திரன்... ஒரு பெரிய கன்சர்னோட புராஜெக்ட் இன்ஜினியரா ஆகப் போறீங்க... சந்தோஷம்தானே?''

''ரொம்பவே சந்தோஷம் சார்...''

''உங்க காலேஜ் லைஃப்ல நீங்க ரொம்பவே ரெஸ்பான்சிபிள் பர்சனா இருந்திருக்கீங்க. சாதாரணமா எல்லார்கிட்டேயும் இருக்கிற விளையாட்டு ஆர்வம்கூட உங்ககிட்ட இல்லை. எப்பவும் படிப்பு படிப்புன்னே நீங்க இருந்துருக்கிறது பளிச்சின்னு உங்க மார்க்குகள்ள தெரிஞ்சது. இது ஒரு ஆச்சரியமான விஷயம். கமல், ரஜினி, விஜய், அஜீத்னு யாருடைய தாக்கமும் இல்லாம டி.வி., சினிமா மேலேகூட பெரிய இன்ட்ரஸ்ட் காட்டாம, படிக்கிறது மட்டும்தான் என் வேலை, நான் பிறந்திருக்கிறதே அதுக்காக தான்கற மாதிரி நீங்க இருந்திருக்கீங்க... ஆம் ஐ கரெக்ட்?''

தாமஸ் மிகச் சரியாகவே கேட்டார், புன்னகையோடு, ''ஆமாம் சார்... நான் ஒரு புத்தகப் புழு... இன்ஃபாக்ட் நீங்க குறிப்பிட்ட விஷயங்கள் ஏனோ என்னை இழுக்கலை...'' என்றான்.

''நீங்க ஒரு பெக்கூலியர்தான் மிஸ்டர் கஜேந்திரன்... எறும்புன்னா சர்க்கரையைச் சாப்பிடத்தான் செய்யும். இளமைல சில விஷயங்கள் தவிர்க்க முடியாதவை. நீங்க தவிர்த்திருக்கிறது என் வரைல ஒரு விதிவிலக்கான விஷயம்'' என்றவர், இன்டர்காமில் பர்சனல் மேனேஜரை அழைத்து, ''சார்தான் புது புராஜெக்ட் இன்ஜினீயர். இவருக்கு இவரோட ஸீட்டைக் காட்டி நம்ம பைலாஸ் பத்தியும் எக்ஸ்ப்ளைன் பண்ணிடுங்க...'' என்றார்.

அந்த பர்சனல் மேனேஜரும் அவனை அழைத்துச் செல்லத் தொடங்கினார்.

''சார்! மே நேம் இஸ் இளங்கோவன்... நீங்க கஜேந்திரன்தானே?''

''எக்ஸாக்ட்லி...''



''எந்த காலேஜ்?''

''மதுரை தியாகராஜர் இன்ஜினீயரிங்.''

''ஓ... தமிழ்நாட்டுல உள்ள முதல் பத்து இன்ஜினீயரிங் காலேஜ்ல ஒண்ணு இல்ல...''

''ஆமாம் சார்!''

''நீங்க வேற விண்ட் மில் ஏரியாக்களுக்கு போயிருக்கீங்களா?''

''இல்ல சார்... சப்ஜெக்ட்ல விண்ட் மில் பத்தி நான் ஒரு தீசிஸ் சப்மிட் பண்ணிருக்கேன்.''

''ஃப்யூச்சர் இனிமே இந்த மாதிரி புராஜெக்ட்டுக்குத் தான். இப்போதைக்கு ஆரல்வாய்மொழில இருக்கிற கணவாய் பகுதியில் ஐந்நூறுக்கும் மேல விண்ட் மில்ஸ் இருக்கு... நம்ம கம்பெனி கம்பம், குமுளி மலைப்பகுதில சில இடங்கள் இந்த புராஜெக்ட்டுக்கு ஏற்ற இடமா தேர்ந்தெடுத்து வெச்சிருக்கு...''

அவர் சொல்லிக் கொண்டே ஆபீஸுக்கு வெளியே உள்ள சாலைக்கு வந்தார். இருபுறமும் அசோக மரங்கள். அவ்வளவு மரங்களிலும் இலைகளுக்கும் அதிகமாய் பூக்கள். நடக்கும் சாலை எங்கும் ஒருவித பூ விரிப்பு போலவே இருந்தது. சாலையை ஒட்டி சில இடங்களில் கட்டட விரிவாக்கம் நடந்து கொண்டிருந்தது. சில கொத்தனார் சித்தாட்கள் அங்கே வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

''உங்க டிபார்ட்மெண்ட் அதோ அங்க இருக்கு... இதெல்லாம் ஆபீஸ் பில்டிங். அக்கவுண்ட்ஸ் செக்ஷன் இங்க வரப்போகுது'' என்று ஒரு முக்காலே மூணு வாசம் கட்டப்பட்டுவிட்ட கட்டடத்தைக் காண்பித்தார். கஜேந்திரனும்

கவனித்தான். அப்போது அந்த கட்டட வேலையில் இருந்த ஒரு சூப்பர்வைசர், "சார்! ஒரு நிமிஷம் வந்துட்டுப் போங்க..." என்றார்.

இளங்கோவனும், ஒன் மினிட் மிஸ்டர் கஜேந்திரன் என்று நகரவும் அப்படியே ஒரு ஓரமாக ஒரு அசோக மரத்தின் நிழலில் சென்று நின்று கொண்டான் கஜேந்திரன்.

அப்போது சாலையோரம் ஒரு வளைவான இடத்தில் மரம் ஒன்றின் கீழ் ஒரு திரிசூலம் நடப்பட்டு அதற்கு மாலை எல்லாம் போடப்பட்டிருந்தது. ஆச்சரியமாக இருந்தது கஜேந்திரனுக்கு... இளங்கோவன் திரும்பி வரவும் கேட்டான்.

"என்ன சார் அது... திரிசூலம் மாதிரி..."

"மாதிரி இல்ல... திரிசூலம்தான்"

"ஆச்சரியமா இருக்கே?"

"அதை ஏன் கேக்கறீங்க. அந்த வேப்பமரத்துல ஒரு நாள் பால் வடிஞ்சிச்சு. அது நல்லா இனிப்பாவும் இருந்துச்சு. இங்க வேலை பார்க்கற எல்லாரும் சாப்பிட்டு அதுக்கு கீழதான் கொஞ்ச நேரம் படுப்பாங்க. பால் வடியவும் அதை சாமியா மாத்தி கும்பிட ஆரம்பிச்சிட்டாங்க. படுத்துக் கிடந்த இடம் இப்ப கோவில்!"

"திரிசூலம்லாம்...!"

"சூலத்தை நட்டாதானே அங்க சாமி இருக்கிறது மத்தவங்களுக்குத் தெரியவரும்."

"ஒரு இண்டஸ்ட்ரில இதை எப்படி அனுமதிக்கிறாங்க."



"முதல்ல நாங்க அதை அனுமதிக்கல... சாமி பூதம்னு முட்டாள்தனமா நடந்துக்காதீங்கன்னுதான் சொன்னோம். ஆனா, மறு நாளே அங்க நல்ல பாம்பு ஒண்ணு படம் விரிச்சுக்கிட்டு காட்சி தந்துடுச்சு... வேலை பாத்துக்கிட்டிருந்த பொண்ணு ஒருத்திக்கும் சாமி வர ஆரம்பிச்சிடுச்சு. எங்க எம்.டி. ஒரு மாரியம்மன் பக்தர். பார்த்தாரு. அவங்க விருப்பபடியே அந்த வேப்பமரத்தை சக்தியா நினைச்சு கும்பிட்டுப் போகட்டும். கோவில் கட்டறதுன்னாதான் யோசிக்கணும்னு சொன்னார்..."

இளங்கோவன் நடந்தபடியே படு கேஷுவல் ஆக சொன்னார். கஜேந்திரன் முகத்தில் ஒரு வெற்றுச் சிரிப்பு! அது கேலிச்சிரிப்பு மாதிரிதான் இளங்கோவனுக்கு தோன்றியது.

"என்ன சார்... உங்களுக்கு கடவுள் நம்பிக்கை எல்லாம் கிடையாதா?"

"உண்டு சார்... ஆனா, இந்த மாதிரி ஒரு அர்த்தமில்லாம நம்பிக்கைகள் நிச்சயமாக கிடையாது."

"அப்ப இந்த வேப்பமர விஷயம் உங்க வரைல அர்த்தமில்லாத ஒரு விஷயமா?"

"நிச்சயமா சார்... வேப்பமரத்துல பால் வர்றதுங்கறது அதோட வாசத்துக்காக இருக்கலாம். சாமி வந்ததும் மைண்ட் சம்பந்தப்பட்ட, நெர்வஸ் சம்பந்தப்பட்ட ஒரு விஷயம்... எல்லாத்துக்கும் ஒரு பதில் தெளிவாக இருக்கும் போது அதை சக்தின்னு எதை வெச்சு நம்பறது...?

ஒரு பேச்சுக்கு கேட்க விரும்பறேன்... இந்த உலகமே அந்த சக்தியோட படைப்புதான். இந்த இண்டஸ்ட்ரிக்குள்ள ஒரு மரத்தடி மட்டும் அதுக்கு எதுக்கு பிடிக்கணும். அப்படியே பிடிச்சிருந்தா உங்க பால் கனவுலயோ இல்லை

நேர்லயோ வந்து ஒரு வார்த்தை சொன்னா போதும்... முதல்ல பால், அப்புறம் பாம்பு, அதுக்கும் பிறகு சாமின்னு எதுக்கு சாமி சுத்தி வளைச்செல்லாம் மூக்கைத் தொடணும்?''

கஜேந்திரனின் கேள்வியில் அவன் எதையும் நுட்பமாக யோசிப்பவன் என்பது இளங்கோவனுக்கு புரிந்தது. அந்த நொடியிலேயே கஜேந்திரன் தன் கேரியரிலும் எப்படி நுட்பமாக நடந்து கொள்வான் என்பதும் அவருக்குப் புரிந்துவிட்டது.

''கரெக்ட் மிஸ்டர் கஜேந்திரன்... உங்க கோணம்தான் சரி. நானும் இந்த விஷயத்துல உங்க கட்சிதான்... ஆனா நாம இங்க வேலைக்கு வந்துட்டுப் போறவங்க... முதலாளி வேற மாதிரி யோசிக்கும்போது, நாம என்ன செய்ய முடியும்?'' என்று ஒரு மாதிரி மங்களம் பாடி முடித்தபோது அவர்கள் அந்த சூலம் நடப்பட்ட மரத்தை நெருங்கி விட்டிருந்தனர்.

கஜேந்திரன் அந்த சூலத்தை அருகில் பார்க்கவும் சற்று பெரிதாகவே சிரித்தான். சூலத்துக்கு கீழே தேங்காய், பழம் எல்லாம் உடைக்கப்பட்டிருந்தது. குங்குமமும் சிதறிக் கிடந்தது. தன் செருப்பு கால்களுடன் மரத்தின் பால் வடிந்த பாகத்தைப் பார்ப்பதற்காக சில அடிகள் எடுத்து வைத்தவனை ''சார்! சார்...'' என்கிற ஒரு சித்தாள் பெண்ணின் குரல் தடுத்தது. திரும்பிப் பார்த்தான்.

''செருப்புக் காலோட போவாதீங்க.''

''போனா என்னாயிடும்மா...?'' கேட்டுக் கொண்டே மரத்தடிக்கு சென்றுவிட்டான். பால் வற்றிப் போய் காய்ந்தும் விட்டிருந்தது. தொட்டுப் பார்த்து நாக்கில் விரலை வைத்தான் இனித்தது...



''இட் ஈஸ் பியூர்லி ஜெனடிக்... இந்த பாலுக்கு சில மருத்துவ குணங்கள்கூட இருக்கலாம்'' என்றபடியே திரும்பி இளங்கோவன் நிற்கும் சாலைக்கு வந்து சேர்ந்தான்.

தலைக்கு மேல் அந்த வேப்பமரத்தின் பரந்த விரிவு. கீழ்பாகத்தில் அடர்வான நிழல். அதில் நின்று பேசுவது இதமாக இருந்தது.

''உங்களுக்கு ரொம்பவே தைரியமும்கூட... உங்ககிட்ட ஒரு கமாண்டிங் இருக்கு மிஸ்டர் கஜேந்திரன்...'' என்று இளங்கோவன் பாராட்டவும் செய்தார்.

''அட, என்ன சார் நீங்க... ஒருமரத்தடிக்கு செருப்பு காலோட போனதை ஒரு பெரிய விஷயமா நினைச்சு நீங்களும் பாராட்டறீங்களே... இது ஒரு விஷயமா சார்...''

''அப்படி இல்ல... அந்த பாம்பு, அது தின்ன விதம், இப்ப கூட எனக்கு ஒரு த்ரில்லான விஷயமாதான் இருக்கு. நான்கூட ஒரு வேளை இங்க தெய்வம் இருக்கோன்னு நம்பிட்டேன்னா பார்த்துக்குங்களேன்.''

''நீங்க சொல்லச் சொல்ல அந்த பாம்பை பாக்கற ஆசை எனக்கும் ஏற்படுது'' என்று பேசிக் கொண்டே அகலக் காலெடுத்தான். அவன் அகன்ற மறு நொடியே மரத்தின் மேல் இருந்து அவன் நின்ற இடத்தில் சொத்தென்று ஏதோ ஒன்று விழுந்த மாதிரி ஒரு சப்தம். திரும்பிப் பார்த்தவனுக்கு நிஜமாலுமே நெஞ்சை அடைத்தது.

விழுந்து கிடந்தது அந்த பாம்புதான்!

படம் விரித்த நிலையில் சீற்றமாகவே பார்க்கவும் செய்தது!

## 2

புரிந்துகொள்ள முடிந்தால் புரிந்து கொள்ளுங்கள்.

உங்களுக்கு நடக்கும் எந்த ஒரு விஷயமும் உங்களால் ஏற்படுத்தப்பட்டதுதான்!

பைக்கை ஓரம்கட்டி நிறுத்திவிட்டு வீட்டினுள் நுழைந்தவனை காத்திருந்து பிடித்தாள் லக்ஷ்மி.

"கஜா வந்துட்டியா?"

"வந்துகிட்டே இருக்கேன்?"

"எப்படிப்பா இருக்கு ஆபீஸ்?"

"அதுக்கென்னம்மா... ஐம்பது அறுபது ஏக்கர்ல பெரிய கம்பெனி. தமிழ்நாட்டிலயே விண்ட் மில் புராஜெக்ட்டுக்கான முதல் கம்பெனின்னுகூட சொல்லலாம்..."

"ஆபீஸ்ல எல்லாம் நல்லா பழகினாங்களா? வேலை எல்லாம் எப்படி?"

"அட, என்னம்மா நீ... குடிக்க முதல்ல காபி கொடு... உன்கூட நான் பேசறதுக்கு நிறையவே விஷயங்க இருக்குது. காபி குடிச்சிக்கிட்டே சொல்றேன்..." கஜேந்திரன் சட்டையை கழட்டியபடியே சொன்னதை கேட்டவளாக லக்ஷ்மியும் சமையல்கட்டு நோக்கி ஓடினாள்.

காபியுடன் வந்தவளிடம் அவனும் நடந்ததை சொல்லத் தொடங்கினான். அவன் சொல்லச் சொல்ல அவள்



முகத்தில் ஒரு இனம் புரியாத மாற்றம். அவன் சொல்லி முடிக்கவும் படபடப்போடு கேட்டாள்.

"ஏம்ப்பா... அந்த பாம்பு உன்னைக் கடிக்க வந்துச்சா?"

"இல்லம்மா... சீறிச்சு! அவ்வளவோட சரி... அந்த சமயத்துல கைல ஏது கிடைச்சிருந்தாலும் அதை போட்டு தாக்கியிருப்பேன். அதுக்கு அதிர்ஷ்டம் என் கைக்கு எதுவும் கிடைக்கலை..."

"இல்லப்பா... அப்படி எல்லாம் எதுவும் சொல்லாதே. செஞ்சிடாதே. அது பெரிய பாவம்..."

"பாவமா... என்னம்மா நீ கூடவா பயப்படறே? பாம்புங்கறது ஒரு விஷ ஜந்தும்மா... அவ்வளவுதான்..."

"இந்தக் காலத்துப் பசங்க இப்படி எல்லாம்தாம்ப்பா பேசறீங்க. ஆனா, பாம்புக்கு பின்னால பல உண்மைகள் இருக்குப்பா."

"போக்கடா... உன்கிட்ட நான் இனி இது விஷயமா பேசக்கூடாது. நீ கொஞ்சம் பழைய புராணமான பேர்வழி..."

காபியை ருசித்தபடியே அவன் சொன்னது அவள் வரையில் வலியை ஏற்படுத்தியது.

"கஜா... திரும்பவும் சொல்றேன் நீதான் புரியாம பேசற... ஜீவராசிகள்ள பாம்புக்கு மனித சமுதாயத்துல ஒரு தனி இடம் உண்டுப்பா... காலோ கையோ இல்ல சிறகோ எதுவும் இல்லாத அதே சமயம் ரெண்டு பல்லால மட்டுமே எதிரிகள் கிட்ட இருந்து தன்னைக் காப்பாத்திக்கிட்டும் தனக்கான இரையைத் தேடிப்பிடிச்சும் ஒரு ஜீவன் உயிர் வாழறது ஒன்னும் சாதாரண விஷயமில்லை.

எதைப் பார்த்தாலும் பெருசா வராத ஒரு பயம், பாம்பை பார்த்த நொடி வருதுன்னா அது ஒண்ணும் சாதாரண விஷயம் இல்லை. நம்ம சாமிங்கள்ல பெருமாள் அதை படுக்கையா போட்டு படுத்திருக்கிறதுக்கும், சிவ பெருமான் கழுத்துல விட்டுக்கிட்டிருக்கிறதுக்கும் சக்தி கைலயும் இடுப்புலயும் ஆபரணமாவே அணிஞ்சிட்டிருக்கிறதுக்கும் பின்னால, நாம எடுத்துக்க வேண்டிய உண்மைகள் எவ்வளவோ இருக்குப்பா...''

லக்ஷ்மி ஒரு மினி உபன்யாசமே செய்து முடித்து விட்டாள். கஜேந்திரனுக்கே அவள் கருத்தில் கொஞ்சம் பிரமிப்பு ஏற்படத்தான் செய்தது.

'அம்மா இதெல்லாமே நமது மனோபாவம்... சீனாவில் பாம்புகளைப் பார்த்து யாரும் பயப்படுவதே இல்லை. மாறாக பாம்பு சூப்தான் அங்கே ஃபேமஸ்' என்று செல்லலாமா என்று நினைத்தவன் அவள் அதற்கும் ஏதாவது கூறுவாள் என்று உணர்ந்தவனாக,

''சரிம்மா... இப்ப நீ முடிவாக என்னதான் சொல்றே?'' என்றான்.

''அந்தப் பக்கம் நீ போகாதே... போறதா இருந்தா பக்தியோடவும், பயத்தோடவும் போ...''

''ஓஹோ... இல்லேன்னா அந்த பாம்பு என்னைக் கடிச்சிடுமா?''

''பாம்பு கடிக்குமோ கடிக்காதோ... அந்த திரிசூலம் தான் எனக்கு பயத்தை தருது.''

''அது நட்டு வைக்கப்பட்டிருக்கிற ஒரு மெட்டல் பொருள்மா... அதுக்கு உயிரெல்லாம் கிடையாது. அது ஒண்ணும் கால் முளைச்சு நடந்து வந்து என்னைக்



குத்திடாது... அதுக்கும் எனக்கு வாய்க்கால் வரப்பு சண்டை சச்சரவு கிடையாது...'' என்றான்.

லக்ஷ்மி அதற்குமேல் அவனிடம் விவாதம் செய்து கொண்டிருக்கவில்லை. சுவரில் படமாக தொங்கியபடி இருக்கும் அவனது அப்பா கோவிந்தராஜனையும், தாத்தா சிவஞானத்தையும்தான் பார்த்தாள்.

அந்த பார்வைக்குள் எவ்வளவோ அர்த்தங்கள்!

**ஆ**பீஸில் ட்ரெயினிங் சென்டரில் ஸ்லைட் ஃபிலிம்கள் காட்டப்பட்டுக் கொண்டிருந்தன. அவ்வளவும் காற்றாலைகள்! உலகில் எங்கெல்லாம் காற்றாலைகள் உள்ளதோ அங்கெல்லாம் சென்று எடுக்கப்பட்ட படங்கள் அவை. ஸ்விட்சர்லாந்து, அயர்லாந்து, நைஜீரியா, சான்ஃபிரான்ஸிஸ்கோ என்று வரிசையாக... ஒவ்வொன்றின் நீள, அகலம்... அதன் மின் உற்பத்தியளவு அங்கு வீசப்படும் காற்றின் வேகம். அவைகளுக்கு நேரிடும் கோளாறுகள், அவைகளைச் சரிசெய்யும் விதங்கள்... அவைகளில் எதெல்லாம் நமது தமிழ்நாட்டு சூழலுக்கும் ஏற்றது என்று விரிவாகவே ஒரு இளம்பெண் விளக்கி கொண்டிருந்தாள். அஜந்தா என்கிற வித்தியாசமான பேர் அவளுக்கு... அவளது மொழியும் குரலும் கவர்ச்சியாக இருந்தன. ஆளும் பார்க்க நல்ல உயரமாக, அதே சமயம் வெள்ளைக்காரப் பெண் போல ரோஸ் வண்ணத்தில் இருந்தாள்.

இன்றைய பெண்களுக்கு தலையை வாரி அதைப் பின்னிக் கொள்வது என்பது ஒரு வேண்டாத வேலையாகி விட்டது. குளித்துவிட்டு அப்படியே நேராக முகத்தை மறைத்தால் அதை தள்ளித் தள்ளி விட்டுக் கொள்ள வேண்டும். அவர்களது வரையில் அது அவஸ்தையாக

இல்லாமல் இருக்கலாம். பார்க்கும் சிலருக்காவது இது என்ன அவஸ்தை, அதை சற்று பின்னிக் கொள்ளலாமே என்று தோன்றும்.

அந்த ட்ரெயினிங் சென்டரில் கஜேந்திரனுக்கும் அப்படித்தான் தோன்றியது. இறுதியாக காங்கோ நாட்டு விண்ட் மில் சக்கரம் ஒன்றைக் காட்டி விளக்கிவிட்டு, ஸ்விட்சைப் போடவும், அறையின் செயற்கை இருட்டு நீங்கி அறை முழுக்க மின்விளக்கின் ஒளி. அனைவரையும் பார்த்து "எனி டவுட்?" என்று கேட்டாள் அஜந்தா.

"யெஸ்... ஐ ஹேவ் ஒன்!" என்றான் கஜேந்திரன்.

"கேளுங்க..."

"நீங்க எப்ப உங்க தலையை பின்னிக்குவீங்க?"

அந்த கேள்வியைக் கேட்டு அந்த பயிற்சி அரங்கமே சிரித்துவிட்டது. அஜந்தாவும் சிரித்தாள். அப்போதே அவன் எதிரிலேயே கிராமத்துப் பெண்கள் போல அள்ளி முடிந்தும் காட்டினாள். மேலும் சிரிப்பு. அதன்பின் எல்லோரும் கலைந்து அவரவர் இருப்பிடம் நோக்கி செல்லத் தொடங்கினார்கள். கஜேந்திரனும் புறப்பட்டான். அஜந்தா அவனை தடுத்து நிறுத்தினாள்.

"மிஸ்டர் கஜேந்திரன்... எங்க உங்க கேபினுக்கு போறீங்களா?"

"ஆமாம். ஏன் மேடம்?"

"ப்ளீஸ்! என்னை அஜந்தான்னு பேரைச் சொல்லியே கூப்பிடலாம்."

"ஓ... சரி. அப்படியே கூப்பிட்டா போச்சு... கூப்பிட்டாதானே பேரு."



"ஆமாம். ஏன் உங்க பேர் கொஞ்சம் புராணமா இருக்கு?"

"அதுக்கு நான் என்ன பண்ண முடியும், நீங்க எங்க அப்பா அம்மா கிட்டதான் கேக்கணும்"

"நாம நடந்துகிட்டே பேசுவோமா?"

"வித் ப்ளெஷர்!"

"நீங்க இப்பதான் புதுசா ஜாய்ன் பண்ணி யிருக்கீங்களா?"

"ஆமாம் அஜந்தா... அது சரி, உங்க ஊர் எது? உங்க அசல் பேரே இதானா?"

"அதுல என்ன சந்தேகம். எங்கப்பா ஒரு ஹிஸ்ட்ரி புரொபசர். பெரிய ரசிகர். அதான் வித்தியாசமா அஜந்தா எல்லோரா ஞாபகமா எனக்கும் அஜந்தான்னு பேர் வெச்சுட்டார்?"

"ஒரு வேளை உங்கப்பா அஜந்தா குகையைச் சுத்திப் பார்க்கும்போது அப்பவே வலி எடுத்து பொறந்துட்டீங்களோ?"

அவள் அதைக் கேட்டு கலகலவென்று காசை குலுக்கிப்போட்டது போல சிரித்தாள். அப்போது இருவருமே அந்த வேப்பமரத்தை எட்டியிருந்தனர். ஒரு பெண் அங்குள்ள திரிசூலத்துக்கு பொட்டு வைத்து வணங்கிக் கொண்டிருந்தாள். அஜந்தா அதைப் பார்த்து சிரித்தாள்.

"என்ன அஜந்தா... உங்களுக்கு கடவுள் நம்பிக்கை எல்லாம் இல்லியா?"

"இருக்கு... ஆனா இப்படி நினைச்ச இடத்துல சூலத்தை நட்டு அதை கும்பிடறது எல்லாம் டூமச்..."

"எக்ஸாக்ட்லி... இந்த விஷயத்துல நாம இரண்டு பேருமே ஒரே கட்சி..." அவன் சொன்னதோ, இல்லை அவன் சொன்னதோ அந்த பெண் காதில் விழுந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால், அவளிடம் சாமி வந்துவிட்ட மாதிரி ஒரு நடுக்கம்.

"ஏய்...!" என்று கத்த ஆரம்பித்தவள் அந்த சூலத்தை பிடுங்கி கையிலும் எடுத்துக் கொண்டாள்.

அசுரனைக் கொல்ல காளி சூலத்தை கையில் எடுத்துக் கொண்டால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது.

எல்லாமே சில நொடிகள்தான்... அவள் சூலத்துடன் கஜேந்திரனைதான் நோக்கி ஓடிவந்தாள். வரும்போதே கேள்வி வேறு...

"டேய்... என்னையா கேள்வி கேட்டு கேலி செய்தே? உன்னை என்ன பண்றேன் பார்."

அவள் கேட்ட வேகத்தோடு அவன் கிட்டே சென்று கையில் பிடித்தபடியே அவனை குத்துவாள் என்றுதான் எல்லோரும் நினைத்திருக்க, சட்டென்று அந்த திரிசூலத்தை அவனை நோக்கி எறிந்தாள். அதுவும் அவன் வயிற்றில் விசையோடு ஏறியது.

எல்லாமே நொடிக்கும் குறைவான கால கதிக்குள் நடந்து கஜேந்திரனும் அப்படியே சுருண்டு விழத் தொடங்கினான்!



## 3

புரிந்துகொள்ள முடிந்தால் புரிந்து கொள்ளுங்கள்...

'உங்கள் மனோசக்தியால் நீங்கள் தீவிரமாக முயன்றால் பூமியின் சுழற்சியையேகூட நிறுத்தி விட முடியும்!'

ஆஸ்பத்திரி!

ஐ.சி.யூ.-வுக்குள் கஜேந்திரன்.

வார்டுக்கு வெளியே பர்சனல் மேனேஜர் இளங்கோவனில் இருந்து அந்த அஜந்தா வரை.

லக்ஷ்மியை இளங்கோவனின் டிரைவர் போய் அழைத்துக் கொண்டும் வந்து விட்டான். அவள் உள் நுழையும்போதே ஒரு அசாதாரண வேகம்.

"கஜா...!" என்கிற ஒரு நீளமான அலறல் வேறு!

இளங்கோ சமாதானப்படுத்தினார்.

"தைரியமா இருங்கம்மா... உயிருக்கெல்லாம் எதுவுமில்லை..."

"இல்லை... என் மகன் பிழைக்கமாட்டான். இதை நான் எதிர்பார்த்தேன். திரிசூலம் இருக்கற பக்கம் நீ போகாதேடான்னு நான் படிச்சுப் படிச்சு சொன்னேன். என்னை ஒரு பைத்தியக்காரியாதான் பார்த்தான். ஐயோ! நான் பயந்த மாதிரியே ஆயிடுச்சே..."

லக்ஷ்மியின் புலம்பல் இளங்கோவனைவிட அஜந்தாவைத்தான் அதிகம் யோசிக்க வைத்தது.

''அம்மா! நீங்க என்ன சொல்றீங்க... இன்னிக்கு நடந்துருக்கிறது ஒரு ஆக்ஸிடெண்ட். சூலத்தை பிடுங்கி குத்துன பொண்ணுக்கு நடந்தது எதுவுமே தெரியாது...''

''அது தெரிஞ்சு நடந்திருந்தா என்ன... தெரியாம நடந்திருந்தா என்ன என் மகன் பிழைக்கப் போறதில்லை. அந்த பூசாரியோட சாபத்தோட சக்தியை இப்ப நான் உணர்றேன். ஐயோ! எனக்குன்னு இருக்கிற ஒரே பிள்ளையையும் நான் பறிகொடுக்கப் போறேனே...''

லக்ஷ்மி ரொம்பவே உணர்ச்சிவசப்பட்டு இறுதியாக மயங்கியும் விழுந்துவிட்டாள். கஜேந்திரனுக்கு உள்ளே ஒரு சிறிய ஆபரேஷன் ஆரம்பமாகியிருந்தது. வயிற்றுப் பாகம் கிழிந்து உள்ளே குடல்பாகம் கூட அறுந்து போயிருந்தது. அதற்குத்தான் ஆபரேஷன் நடந்து கொண்டிருந்தது. அந்த ஆபரேஷனை செய்தபடி இருந்த டாக்டர் எதற்கோ வெளியே வரவும் அஜந்தா, ''எப்படி இருக்கு டாக்டர்? உயிருக்கு ஒரு ஆபத்தும் இல்லையே...?'' எனவும், ''அதை இப்ப சொல்ல முடியாது...'' என்றார் அவர். சொன்னவிதமே சரியில்லை. அரை மயக்கத்தில் அது லக்ஷ்மியின் காதிலும் விழுந்தது. திரும்பவும் அது அவளை ஷாக் அடித்த மாதிரி உசுப்பி விட்டது. சிலிர்ப்பிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தவள், அஜந்தாவைப் பார்த்து,

''அம்மாடி... அந்த திரிசூலம் இப்ப எங்க இருக்கு?'' என்று கேட்க, அஜந்தா அதை எதிர்பார்க்கவில்லை.

''எதுக்கும்மா கேக்கறீங்க... அது இப்போ போலீஸ் எவிடன்ஸ்...''



''அது எங்க இருக்குங்க. அதை சொல்லுங்க.''

''எங்க ஆபீஸ்லதான், அந்த மாத்துக் கிட்டேயே இருக்கு. விஷயம் போலீஸ் கேஸ் ஆயிட்டதால போலீஸ் வந்து அதை எடுத்துக்கிட்டுப் போய் கோர்ட்ல புரொட்யூஸ் பண்ணுவாங்க. நாங்கதான் முதல்ல கஜேந்திரனை காப்பாத்தற இன்ட்ரஸ்டுல போலீஸை மதியம் வரச் சொல்லியிருக்கோம். குத்தின பெண்ணும் அங்க எங்க ஆபீஸ் ரூம்லதான் இருக்கா...''

''அந்த திரிசூலத்தையும் அந்தப் பொண்ணையும் நான் பார்க்கணும், கூட்டிக்கிட்டுப் போவீங்களா?''

''எதுக்குமா?''

''உங்களுக்கு சொன்னா புரியாது. அந்த பெண்ணை தயவுசெய்து தண்டிச்சிடாதீங்க. இது போலீஸ் கேஸ் ஆகவும் வேண்டாம். என்னை முதல்ல உங்க ஆபீஸுக்கு கூட்டிக் கிட்டுப் போங்களேன்.''

''அவங்களைப் பார்த்து என்னம்மா பண்ணப் போறீங்க?''

''அவ கால்ல நான் விழுந்து மன்னிப்புக் கேட்கணும். அந்த சூலத்தையும் நான் கும்பிடணும். இதைச் செய்தா வேணும்னா என் மகன் ஒரு வேளை பிழைப்பான். இல்லைன்னா சான்ஸே இல்லை.''

''என்னம்மா இது... இவ்வளவு முட்டாள்தனமாவா யோசிப்பீங்க?''

''போதும்மா... உங்க விமர்சனம் பத்தி எல்லாம் நான் கவலைப்படத் தயாரா இல்லை. என்னவோ பேசிட்டுப் போங்க. என்னை முதல்ல தயவுசெய்து உங்க ஆபீஸுக்கு கூட்டிக்கிட்டுப் போங்க.''

லக்ஷ்மி கெஞ்சினாள். இளங்கோவன் இதற்கு மேல் அங்கு இருப்பது நல்லதல்ல என்கிற மாதிரி நழுவி வேறு பக்கம் போய்விட, அஜந்தா மட்டும் சிக்கினாள்.

"அம்மா... டாக்டருங்க போராடிக்கிட்டிருக்காங்க. ஒரு அம்மாவா நீங்க இருக்காம ஆபீஸுக்கு போய், குத்துன பெண்ணோட காலை விழுறேன்னா என்னம்மா அர்த்தம். ஒரு தாய் பேசுற பேச்சா இது..."

அஜந்தா கேட்டதும் லக்ஷ்மிக்கு மின்சாரத்தைக் கடித்தது போல ஒரு கோபமும், தாக்கமும் ஏற்பட்டது. அஜந்தாவை முறைத்தபடியே, "இனி உங்க கிட்ட பேசறதுல அர்த்தமில்ல நான் ஒரு ஆட்டோ பிடிச்சு போறேன். இங்க நான் இருக்குற ஒவ்வொரு செகண்டும் என் மகன் உயிருக்குத்தான் ஆபத்து..."

லக்ஷ்மி வந்த வேகத்தில் திரும்பி வாசலை விட்டு வெளியேறிப் போனபோது அஜந்தாவால் அதற்கு மேல் அவளிடம் மல்லுக்கட்ட விருப்பமில்லை.

"அம்மா இருங்க... நான் என் காரிலேயே உங்களை கூட்டிக்கிட்டுப் போறேன்..." என்று அவளை தொடர்ந்தாள்

வெகு தூரம் வரை போய்விட்டுத் திரும்பிப் பார்த்த இளங்கோவனுக்கு ஒரே குழப்பமாகி விட்டது.

வேப்ப மரத்தடியில் கஜேந்திரன் மேல் பாய்ந்து தாக்க விட்ட நிலையில் ரத்தம் தோய்ந்தபடி கீழே கிடந்தது அந்த திரிசூலம். கீழே தரை முழுக்க நிறையவே ரத்தத்திப்பிகள். செக்யூரிட்டிகள் இருவர் அந்தப் பக்கம் யாரும் வந்து விடாதபடி காவலில் இருந்தனர். இப்படி ஒரு சூழ்நிலைக்குள்தான் அந்த காரும் வந்து தேங்கி நின்றது.



அஜந்தாவும் லக்ஷ்மியும் காரைவிட்டு இறங்கினர்.

லக்ஷ்மி இறங்கிய வேகத்தில் கைகளைக் கூப்பிக் கொண்டாள். கீழே கிடக்கும் சூலத்தை எடுக்கப் போனாள்... அஜந்தா தடுக்கத் தொடங்கினாள்.

"அம்மா! வேண்டாம், எடுக்காதீங்க... அப்புறம் போலீஸ் வந்தா கேஸ் திசை திரும்பிடும்."

"நீ சும்மா இரும்மா... என் மகனை எந்தப் பொண்ணும் குத்தலை... நீங்களும் போலீஸைக் கூப்பிடத் தேவையில்லை." என்கிற ஒரு புதிரான பதிலோடு சூலாயுதத்தை தொட்டுத் தூக்கினாள்.

உடம்பும் கையும் வெடவெடவென்று நடுங்கின.

தலை முதல் கால் வரை வியர்த்து வடிந்தது.

அப்படியே சூலத்தின் அடி மூன்று கூர்மையான பாகத்தை நெற்றியில் ஒற்றிக் கொண்டாள். நடுத்தரை அது பதிக்கப்பட்ட இடத்தில் துவாரம் தெரிந்தது. அதில் அதைச் செருகி அதை நிலைநிறுத்திவிட்டு கீழே விழுந்து வணங்கினாள்.

அஜந்தாவுக்கு குழப்பமாயும் இருந்தது, சிரிப்பாகவும் வந்தது. அந்த காலத்து கிராமத்து வளர்ப்புப் பெண்ணாக லக்ஷ்மி இருக்க வேண்டும் என்று அவ்வேளையில் நினைத்துக் கொண்டாள். லக்ஷ்மி திரிசூலம் முன் மண்டியிட்டிருந்தாள்.

"தாயே! என் மகனை காப்பாற்று... அவனை உயிர் பலி வாங்கி விடாதே... பெரியவர்கள் செய்த தவறுக்கு பிள்ளைகளை பழி வாங்குவது சரியில்லை. ஒரு உயிருக்கு மூன்று உயிர்கள் போய் விட்டன. அது போதாதா? என்

மகனை ஒன்றும் செய்து விடாதே. அவனுக்கு உயிர் பிச்சை போடு...''

அவளிடம் பிரார்த்தனை தொடங்கியது- அஜந்தாவின் செல்போனில் அமட்டல்.

அவளும் காது கொடுத்தாள்.

''மிஸ் அஜந்தா! எங்க இருக்கீங்க?'' கேட்டது இளங்கோவன்.

''ஆபீஸ் கேம்பஸ்ஸுக்குள்ளதான் சார்...''

''அங்க என்ன பண்றீங்க?''

''மிஸ்டர் கஜேந்திரனோட அம்மாவோட இருக்கேன் சார்... அவங்க இப்ப அந்த திரிசூலத்தை எடுத்து நட்டுக்கிட்டு ப்ரே பண்ணிக்கிட்டு இருக்காங்க.''

''என்ன இடியாட்டிக் அப்ரோச் இது... இங்க மிஸ்டர் கஜேந்திரன் கண் முழிச்சிட்டார். அம்மா வந்தாங்களா... எங்க அவங்கன்னு கேட்கிறார்...''

''நோ ப்ராப்ளம் வித் இன் ஆஃப் ஹவ் அவர்ல நான் அவங்களோட அங்க இருப்பேன். டோண்ட் ஒர்ரி...''

அஜந்தா செல்போனை முடக்கிவிட்டு, பிரார்த்தித்தபடி அமர்ந்திருக்கும் லக்ஷ்மி அருகில் சென்றவளாக ''அம்மா எழுந்திருங்க... உங்க மகன் உங்களைப் பார்க்க ஆசைப்படுறாரம்.''

''என் மகனா... கண் முழிச்சிட்டானா... நிஜமாவா?''

''ஆமாம்மா... இப்பதான் போன் வந்தது. கிளம்புங்க நீங்க''

''என் பிரார்த்தனை வீண் போகலை... அந்த ஆதிபராசக்தியும் ஒரு தாய்தானே... அவ கருணை



செய்துட்டா... கருணை செய்துட்டா...'' என்று சிலிர்த்தபடியே அஜந்தாவுடன் புறப்பட்டாள்.

ஹாஸ்பிடல்!

கஜேந்திரன் தெளிவாகவே காணப்பட்டான். இளங்கோவனுடன் சகஜமாகவும் பேசிக் கொண்டிருந்தான்.

''உங்க மதர் வந்தாங்க கஜேந்திரன்... அவங்க மெண்டலா ரொம்ப பாதிக்கப்பட்டிருக்கிற மாதிரிதான் நான் நினைக்கிறேன். திரிசூலம் தாக்கி விபத்துன்னா உடனேயே சாமிகுத்தம், அதான் இப்படி ஆயிடுச்சாம்கற மாதிரி யோசிச்சாங்களோ என்னவோ, நான் இப்பவே அந்த சாமியைக் கும்பிடணும்கற என்ஸைட் ஆகி நம்ம இண்டஸ்ட்ரிக்கு போய்ட்டாங்கன்னா பார்த்துக் குங்களேன்...''

இளங்கோவன், லக்ஷ்மியைப் பற்றிக் கூறவும் கஜேந்திரனுக்கு அவன் மார்பை கடித்த மாதிரி இருந்தது. முகம் கோணிப் போனது.

''உங்கம்மா ரொம்ப சென்டிமெண்டானவங்களோ?''

''ஆமாம் சார்... எங்கம்மாவுக்கு எல்லாத்துலயும் சென்டிமெண்ட்தானே நேர் எதிர்.''

''அவன் தன்னைப் பற்றிக் கூறும்போது ஜெனரல் மேனேஜர் தாமஸ் வந்தார். அவர் வரவும் எழுந்து அமர முயன்றான் கஜேந்திரன்.

''என்ன மிஸ்டர் கஜேந்திரன்... வேலைக்கு சேர்ந்த ரெண்டாவது நாளே பெரிய ஹீரோ ஆயிட்டீங்களே...''

''ஹீரோவா... நானா சார்... அப்படி நான் எதை சார் சாதிச்சேன்.''

''நான் எல்லாத்தையும் கேள்விப்பட்டேன். சில அசட்டு நம்பிக்கைகளுக்கு நம்ம மேனேஜ்மெண்ட் இடம் கொடுத்திருக்கவே கூடாது. கொஞ்சம் வளைஞ்சு கொடுத்ததுக்கு நீங்க இப்ப அனுபவிக்கிறீங்க...''

''போனது போகட்டும் சார்... இனியும் அந்த திரிசூலம் அங்க இருக்கக் கூடாது சார். இவ்வளவுக்கு பிறகும் அது அங்க இருந்து அதை நாலு பேர் கும்பிட்டா... நாம இண்டஸ்ட்ரி நடத்தறதுலயே அர்த்தமில்ல. பேசாம இண்டஸ்ட்ரிக்கு பதிலா ஒரு பஜனை மடம் நடத்தப் போயிடலாம்'' என்றான் கஜேந்திரன். அப்போது பார்த்து கச்சிதமாக லக்ஷ்மியும் வந்து சேர்ந்தாள். அவனை இளங்கோவனும் தாமஸும் ஒரு மாதிரிதான் பார்த்தனர்.

''கஜா...''

''எனக்கு ஒண்ணும் இல்லம்மா... ஆமா எதுக்கும்மா இப்ப எங்க ஆபீஸ் பக்கம் போனே?''

''என்னடா அப்படி கேட்டுட்டே... நான் அங்க போயிருக்காட்டி நீ இப்ப இப்படி எழுந்து உட்கார்ந்து என்கூட பேசிக்கிட்டிருக்க முடியுமா?''

''அம்மா... உனக்கு நான் எதை சொல்லி புரிய வைப்பேன். ஏம்மா இப்படி இருக்கே?''

''போதும்டா... உன் நாத்திகப் பேச்சை என்கிட்ட காட்டாதே. அதே சமயம் நான் கண்டிப்பாவும் சொல்றேன். அந்த திரிசூலத்தை எப்ப பார்த்தாலும் பக்தியோட கன்னத்துல போட்டுக்கோ'' என்றவள், தாமஸையும், இளங்கோவனையும் பார்த்து, ''சார்... நடந்த சம்பவத்தை



பெருசுபடுத்தாதீங்க... போலீஸ் கேஸ்னு போறதெல்லாம் வேஸ்ட். என் பையன் பண்ண தப்புக்குத்தான் இப்படி ஆயிருக்கு. ஆகையால், இதை அப்படியே விட்டிருங்க... உங்களக் கெஞ்சிக் கேட்டுக்கறேன்'' என்றாள்.

தாமஸும் இளங்கோவனும் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்துக் கொண்டனர்.

## 4

புரிந்துகொள்ள முடிந்தால் புரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்த்தும் சரி, சாபமும் சரி அப்படியே பலிக்கும். அதை நீங்கள் உணர்வு பூர்வமாக நூறு சதவிகிதம் அதை நெகிழ்ந்தோ அல்லது வருந்தியோ வழங்கும் போது...

ஒரு வாரத்தில் கஜேந்திரனின் வயிற்றுக் காயம் ஆறிவிட்டது. இன்றைய மருத்துவ விஞ்ஞானம்தான் எங்கோ போய்விட்டதே! எல்லாமே ஹெவிடோஸ் மருந்துகள். காயம் ஆறினாலும் கொஞ்சம் கவனமாகத்தான் இருக்க வேண்டும். அதிகம் குனிந்து நிமிரக் கூடாது என்று பல விதமான அட்வைஸ்களுடன்தான் அவனை டாக்டர் டிஸ்சார்ஜ் செய்திருந்தார்.

வீடு திரும்பியவன் பேண்ட் சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு வேலைக்கு கிளம்பத் தயாராகிவிட்டான். அதைப் பார்த்து லக்ஷ்மி பதைத்துப் போனாள்.

''வேண்டாம்ப்பா... பேசாம படுத்திரு. ஒரு பத்து நாள் நீ எதையும் செய்யக்கூடாது'' என்றாள்.

''இல்லம்மா. நான் வீட்ல இருந்தா நீ எதையாவது சொல்லிக்கிட்டிருப்பே. வேலைக்குப் போனாலாவது எனக்கு கொஞ்சம் தெம்பா இருக்கும். அதோட புதுசா வேலைக்கு சேர்ந்த இரண்டாவது நாளே இப்படி ஆனது ரொம்ப வருத்தத்தைத் தருது. இன்னிக்கெல்லாம் மனசுக்கு பிடிச்ச வேலை கிடைக்கறதே பெரும்பாடா இருக்கு. இதுல தொடக்கத்துலயே லீவு போட்டாக்க அவ்வளவுதான். நான் கவனமா இருந்துக்கறேன்...'' என்று ஒரு ஆட்டோ பிடித்து ஆபீஸுக்கு புறப்பட்டு விட்டான்.

ஆபீஸில் ஜெனரல் மேனேஜர் தாமஸ் அவனைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்.

''என்ன கஜேந்திரன், என்ன அவசரம்?''

''அவசரமில்லை சார்... இதுக்கு மேலயும் என்னால ஆஸ்பத்திரியில் படுத்திருக்க முடியாது சார்... ஐ ஆம் ஆல்ரைட்''

''பார்த்து. திரும்ப ஒரு சிக்கல் இதனால வந்துடப் போகுது.''

''தோ சார்... நான் பார்த்துக்கறேன்... ஐ வில் டேக் கேர்... சார்! நான் அன்னிக்கே நம்ம புராஜெக்ட் இடத்துக்கு போய் அங்க காத்தோட வேகத்தை கால்குலேட் பண்ணி டைரக்ஷனை டிஸைட் பண்ண இருந்தேன்... தெள இப்ப நான் அதை முடிச்சிடறேன்.''

''ஓகே. ஆபீஸ் ஜீப்பை எடுத்துக்கிட்டுப் போங்க. டிரைவர் பிச்சைமுத்து உங்கள அங்க கூட்டிக்கிட்டுப் போவான்...''



ஜி.எம். ஓகே. சொல்லிவிட்டு, பிச்சைமுத்துவுக்கு இன்ஸ்ட்ரக்ஷன் கொடுக்கத் தொடங்கிவிட்டார். கஜேந்திரனும் ஒரு லெவல் இண்டிகேட்டர், ஒரு டிஜிடல் கேமிரா, ஒரு விண்ட் ஸ்பீட் கால்குலேட்டர், ஒரு ஹைட்ரஜன் மினி சிலிண்டர், இரண்டடி விட்டமுள்ள பலூன் என்று ஆயத்தங்களுடன் தயாராகிவிட்டான். யதார்த்தமாக ஜி.எம். ஆபீஸ் பக்கம் வந்த அஜந்தா, கஜேந்திரனைப் பார்த்துவிட்டு ஓடி வந்தாள்.

''ஹலோ சார்... இப்ப எப்படி இருக்கிங்க?''

''ஐ ஆம் ஆல்ரைட் அஜந்தா... இப்ப ஃபீல்டுக்கு கிளம்பிட்டிருக்கேன்''

''பி கேர்ஃபுல்... யார் உங்க கூட வர்றது?''

''டிரைவர் பிச்சைமுத்துதான்...''

''ஓகே! ஆல் த பெஸ்ட்...'' அவள் அவனுக்கு டாட்டா காட்டினாள்.

அவனும் போய் ஆபீஸ் ஜீப்பில் ஏறிக்கொண்டான். ஜீப் புறப்படத் தயாரான நொடியில் அவனிடம் ஒரு தேக்கம்.

''ஒன் செகண்ட் அஜந்தா...'' என்று அவளை அழைத்தான்.

''யெஸ் சார்.''

''ஆமாம். அப்புறமா அந்த திரிசூலம் எக்ஸ்ட்ரா எக்ஸெட்ராவை எல்லாமே தூக்கிப் போட்டுட்டீங்க தானே?''

அஜந்தா அமர்த்தலாக சிரித்தாள்.

''என்ன சிரிக்கறீங்க?''

''போகும்போது அப்படியே பாருங்களேன்... தெரிஞ்சிட்டுப் போகுது.''

''ஹா... என்னை நூத்துன அந்தப் பொண்ணு?''

''வீ வாஷ் அவ்பொண்ட்... உங்கம்மா விருப்பப் படியே வெளிநாட்டு போயிடல கேள். கொட்டு வழக்குன்னு போக விருப்பல... அவளை மட்டும் அனுப்பிட்டாங்க. ஆனா, அந்த பொண்ணு, என்மேல ஒரு தப்பும் இல்ல. ஐயா செஞ்சு எனக்கு வேலை கொடுக்கன்னு டெல்லி வந்துவிட்டு இருக்கா...''

''ஓ.கே. ஓகே. அறுந்தா சீழ...'' என்றான். ஜீப் புறப்பட்டது. தன் பயணத்தில் பாதி வழிந்தடத்தில் அந்த திரிசூலம் உள்ள மரத்தை ஜீப் நெருங்கியபோது, அங்கே திரும்பவும் வணக்கத்துக்குரிய நிலையில் அந்த திரிசூலம். இப்போது அதற்கு மேல ஒரு ஆஸ்பெஸ்டாஸ் கொட்டகை வேறு! கஜேந்திரனுக்கு தூக்கிவாரிப் போட்டது.

''என்ன கொடுமை இது...'' என்றான் பலமான குரலில்.

''இதுல என்ன சார் கொடுமை இருக்கு... நம்ம எம்.டி.யும் ஒரு அம்பாள் பக்தர்தான். திரிசூலம்பாட்டும் இருந்துட்டு போகட்டும்னு சொல்லிட்டாருன்னாங்க...''

அதற்கு மேல் அவனிடம் பேச கஜேந்திரனும் தயாராக இல்லை. வெளியே வெறித்தபடி வந்தான். காற்று முகத்தில் பட்டு அறைந்தது. ஜீப்பின் வேகத்துக்கு ஏற்ப காற்றிடமும் வேகம். அப்படி வேகமாய் வீசும் காற்றை வைத்து அதன் விசையை கொண்டு கார்கூரை மேலேயே ஒரு மினி விண்ட் மில்லை வைத்து அதன் மூலமாக மின்சாரம் பெற முடியுமா என்பதெல்லாமும் அவனுக்குள் ஒளிந்திருக்கும் கேள்விகள்



ஆனால், மனது அதிலெல்லாம் போகாமல் அந்த திரிசூலம் மேலேயே சென்று சென்று நின்றது. விஞ்ஞான பூர்வமாக செயல்பட வேண்டிய ஒரு ஆபீஸ் இப்படி முட்டாள்தனத்தையும் மதிக்கிறதே என்று ஒருவித கோபமும் அவனிடம் துளிர்விட்டது. ஜீப் ஓடியபடியே இருந்தது.

ஒரு நீண்ட ஓட்டத்துக்குப்பின் இரு மலைகளுக்கு நடுவில் சுரங்கம் போல ஒரு சாலைக்குள் நுழைந்தது. அந்த சுரங்கச் சாலைக்குள் மிதமான காற்று வீச. ராட்சதமான நிறுவனங்கள் அங்கே தங்கள் காற்றாலை விசிறிகளை நிறுவியிருந்தன. அந்த ராட்சச காற்றாடிகளும் ஒரு விதமான வேகத்தில் சுழன்று கொண்டிருந்தன. கஜேந்திரன் அங்கு வரவும் தன்னை மறந்து பணியில் மூழ்கத் தொடங்கிவிட்டான். சில இடங்கள் வேலி போடப்பட்டு அவனது நிறுவனத்தால் அரசாங்கத்திடம் இருந்து லீஸுக்கு எடுக்கப்பட்டிருந்தன. அங்கே எல்லாம் சென்று தனது ஆய்வினை செய்தவன், பாதி வடிவமைக்கப்பட்ட ஒரு காற்றாலை எந்திரம் அருகே சென்று பார்த்தான். அங்கே ஒரு சூப்ரவைசர் ஜெனரேட்டர் ரூமின் ஒரு மூலையில் சிறிய ஆபீஸ் அமைத்து அதனுள் அமர்ந்து கொண்டிருந்தார். அவர் ஓடி வந்தார். கஜேந்திரனையும் பார்த்து விஷ் செய்தார்.

''ஐ ஆம் கஜேந்திரன். புராஜெக்ட் இன்ஜினியர்...''

''ஐ ஆம் ஃபீல்ட் சூப்ரவைசர். என் பேர் ஜார்ஜ் சார்.''

''அது சரி, ஏன் இந்த புராஜெக்ட் பாதில நிக்குது. என்ன பிரச்சினை?''

''இதை ஓட்ட பயிற்சி செய்யும்போதெல்லாம் ஆக்ஸிடெண்ட் ஆகி நாலஞ்சு பேருக்கு மேல ஆஸ்பத்திரியில போய்ப் படுத்திட்டாங்க சார்... இங்கே

ஏதோ வாஸ்து கோளாறு இருக்கறதா ஒரு பேச்சு இருக்கு சார்!"

ஜார்ஜ் சொல்லி முடிக்கக்கூட இல்லை. பட்டென்று தலையில் அடித்துக் கொண்டான் கஜேந்திரன் அப்படியே.

"நான்சென்ஸ்... இங்கேயும் ஒரு முட்டாள்தனமான விஷயமா? சரி மேனேஜ்மெண்ட்ல என்னதான் செய்யப் போறாங்களாம்?"

"தெரியல சார்!"

"ரைட்... நான் இதை ரன் பண்ணிக் காட்டறேன்... வாஸ்து தோஷ்து விஷயமெல்லாம் என்கிட்ட நடக்காது... நான் போய் என்ன ஏதுன்னு ஏற்பாடு பண்ணிட்டு அப்புறமா வரேன்..." என்றவனாக வந்த வேலையையும் முடித்துக் கொண்டு புறப்பட்டான்.

ஜீப்பில் திரும்பும்போது அந்த வெப்பமரத்திடம் ஜீப்பை நிறுத்தச் சொல்லிவிட்டு திரிசூலத்தை முறைத்து வேறு பார்த்தான். பிறகு ஜீப்பை எடுக்கச் சொல்லி ஆபிஸில் ஜி.எம். அறை முன்பாக இறங்கிக் கொண்டான்.

அவரைப் பார்க்க உள் ஓடினான்.

அவரும் அவனுக்கு காது கொடுக்க ஆரம்பித்தார்.

"யெஸ் மிஸ்டர் கஜேந்திரன்!"

"சார்! நான் நம்ம விண்ட் மில் வேலிக்கு போய்ட்டு வந்தேன். அஞ்சு மில்லை இம்மிடியேட்டா நாம அங்க போடலாம். இப்ப நல்ல விண்ட் ஃப்ளோ இருக்கு. நம்ம இனிஷியல் இன்வெஸ்ட்மெண்ட்டை வித் இன் எ இயர்ல எடுத்துடலாம். பை த பை அங்க ஒரு புராஜெக்ட் ஏதோ வாஸ்து கோளாறுன்னு ரன் ஆகாமலே இருக்கு..."



"ஆமாம்... போறவங்களுக்கெல்லாம் ஆக்ஸிடெண்ட் ஆனா என்னத்த செய்யறது?"

"ஆக்ஸிடெண்ட்டுன்னாலே எதிர்பாராம நடக்கறது தானே சார். அதுக்கும் வாஸ்துவுக்கும் என்ன சார் சம்பந்தம்?"

"நினைச்சேன்... நீங்க இப்படித்தான் பேசுவீங்கன்னும் தெரியும். சரி. நீங்க என்ன சொல்றீங்க?"

"என் முதல் புராஜெக்ட் அதுதான் சார்... அதை ஓட வெச்சு இந்த வாஸ்து பூமி சாஸ்திரம்லாம் பேப்புன்னு ப்ரூவ் பண்ணி காட்டறேன் சார்!"

"வேண்டாம் கஜேந்திரன். இப்பதான் ஒரு திரிசூலக் குத்துங்கற பெக்கூலியரான விஷயத்துல இருந்து மீண்டுருக்கீங்க... உடனே இதுல இறங்கணுமா?"

"சார்! நமக்கு புத்தின்னு ஒன்னு இருக்கு... அதை சென்டர்ல வெச்சு பேசுவோம். நாம ஒழுங்கா ஒரு விஷயத்தை முயற்சி செய்தா அது நல்லபடியா நடந்து முடியும். நம்மகிட்ட தப்பு இருந்தா விஷயமும் தப்பா முடியும். இதை போய் வாஸ்து, சாமி குத்தம்னுல்லாம் சிந்திக்கிறது கொஞ்சமாவது சரியா?"

கஜேந்திரன் ஆவேசம் ஜி.எம். தாமஸை வெகுவாக கவர்ந்தது.

"ரைட் கஜேந்திரன்! நீங்க அந்த புராஜெக்ட்டை முதல்ல முடியுங்க. பீ கேர்ஃபுல். வரிசையா எதனால ஆக்ஸிடெண்ட் ஆச்சுன்னு கேட்டு தெரிஞ்சுகிட்டு அதுக்கு தகுந்த மாதிரி எச்சரிக்கையா நடந்துக்குங்க. உங்க தன்னம்பிக்கை ஆர்வத்தை நான் ரொம்பவே பாராட்டறேன்..." என்றார்.

கஜேந்திரனுக்கு அப்போதுதான் மனதும் லேசாகத் தொடங்கியது.

டிபார்ட்மெண்ட் அறையின் ஸீட்டில் இருந்தான் கஜேந்திரன்.

ஒய்யாரமான உடையமைப்போடு கூலிங்கிளாஸ் சகிதம் உள் நுழைந்தாள் அஜந்தா.

"குட்மார்னிங் மிஸ்டர் கஜா!"

"வெரிகுட்மார்னிங் அஜா!"

"என்னது அஜாவா?"

"ஆமா... கஜேந்திரன் கஜாவாகலாம். அஜந்தா அஜா வாகக்கூடாதா?"

"ஓ... நீங்க அப்படி வர்றீங்களா... போகட்டும். என்ன சார் ட்யூட்டியில ஜாய்ன் பண்ண உடனேயே திரும்பவும் ஒரு காம்ப்ளிகேடிவான புராஜெக்ட்லயே கை வைச்சிருக்கீங்க."

"அந்த வாஸ்து கம்ப்ளைண்ட் புராஜெக்ட்தானே?"

"யா!"

"இங்க திரிசூலம்னா... அங்க வாஸ்து... ரெண்டையுமே நான் விடறதா இல்லை அஜந்தா."

"பார்த்து மிஸ்டர் கஜேந்திரன். கேர்ஃபுல்"

"நீங்க வார்ன் பண்றதைப் பார்த்தா நீங்களும் பயப்படற மாதிரி தெரியுதே..."

"நான் பொய் சொல்ல விரும்பலை. திரிசூலம் விஷயமும் சரி, அந்த விண்ட் மில் வாஸ்து விஷயமும் சரி, சம்திங்! அதுக்குள்ள என்னவோ இருக்குன்னுதான் என் மனசு நினைக்குது."



"ஷேம்... ஷேம்... நீங்க பார்க்கத்தான் நாகரீக மங்கை. மத்தபடி எங்கம்மா மாதிரிதான் நீங்களும்..."

"பார்ப்போம், நீங்க எப்படி அச்சீவ் பண்றீங்கன்னு..."

"பண்ணிக்காட்டறேன்... அப்புறமா பேசுங்க"

அஜந்தாவிடம் சொன்னது போலவே கஜேந்திரன் நல்ல வேகமெடுத்து அந்த புராஜெக்ட்டை மூவ் செய்யத் தொடங்கி விட்டான். விஷயம் வேகமாக நடப்பதற்காக விண்ட் மில் ஏரியாவில் இடைஞ்சலாக இருந்த கம்பி வேலிகளை எல்லாம் அகற்றி புரொபல்லர், ஃபேன் விசிறிகள் உள் நுழைய வசதி செய்து கொடுத்து மளமள வென்று காரியத்தில் இறங்கி பதினைந்து நாளில் அந்த புராஜெக்ட்டை ஓடும் நிலைக்கு தயார்ப் படுத்திவிட்டான். ஜி.எம். தாமஸில் இருந்து, இளங்கோவன் முதல் அஜந்தா வரை அங்கே வந்து கைதட்டி பாராட்டி தங்கள் மகிழ்வையும், பகிர்ந்து கொண்டனர்.

அதன்பின் அடுத்தடுத்த பதினைந்து நாட்களில் அடுத்தடுத்த புராஜெக்ட்களையும் செயல்படுத்தி அவ்வளவும் ஓட்டமும் காணத் தொடங்கிவிட்டன. இதனால் யூனிட்டுக்குள் கஜேந்திரன் என்றாலே சுறுசுறுப்பானவன், துணிச்சலானவன் என்கிற ஒரு அபிப்பிராயமும் பரவிவிட்டது.

ஒரு நாள் ஆபீஸ் விட்டு வெளியே செல்லும்போது, செக்யூரிட்டி கேட்டுக்கு வெளியே சாலை ஓரமாக அவனை திரிசூலத்தை பிடுங்கிக் குத்திய பெண் பரிதாபமாக நின்று கொண்டு கஜேந்திரன் ஜீப் வரவும் வழிமறித்தாள்.

"என்னம்மா..."

"சார்! நான் வேணும்னு செய்யல சார்... எனக்கே அன்விக்கு என்ன நடந்ததுன்னு தெரியாது சார்... என்னை மன்னிச்சு எனக்கு வேலை கொடுங்க சார்..."

அவள் குரலில் கெஞ்சல் பொங்கி வழிந்தது.

"சரி, நான் ஒண்ணு சொன்னா கேட்பியா?"

"சொல்லுங்க சார்... உங்க செருப்பை துடைக்கச் சொன்னாக்கூட தயார் சார். வேலை இல்லாம கஷ்டப்படறேன் சார்."

"உளறாதே... உனக்கு நான் திருப்ப வேலை வாங்கித் தரேன். ஆனா, அந்த திரிசூலத்தை நட்ட நீயே அதை புடுங்கிக்கிட்டு வேற எங்கேயாவது போய் நட்டு வைச்சுக்கோ... செய்வியா?" அவன் கேள்வி அவளை தடுமாறச் செய்தது.

"முடியும் முடியாது... சட்டுன்னு சொல்லு."

"சார், அது வந்து..."

"இது தொழில் நடக்கிற இடம்... பஜனை மடம் இல்லை. நான் பிளாட்ஃபாரத்துல கோவில் கட்டி வெச்ச கும்புடறவங்களையே உதைக்கணும்கற ஆள்."

"சார்! எனக்கு பயமா இருக்கு சார்."

"என்ன பயம்?"

"இல்ல சாமி குத்தம் வந்துட்டா?"

"மண்ணு... நீ இப்ப தெருவுல நிக்கறியே, அந்த சாமி வந்து உனக்கு உதவி செய்யலாம்ல..."

"......"



"என்ன யோசனை. எனக்கு நேரமாகுது பார்."

"சரி சார்... அதை அங்க இருந்து எடுத்து அதோ அங்க இருக்கிற வேப்பமரத்துக்கு கீழ நட்டு வெச்சு கும்புடலாமா சார்!"

"அது உன் இஷ்டம்... கம்பெனிக்குள் இப்படி எல்லாம் முட்டாள்தனமான விஷயம்லாம் வரக்கூடாது... எனக்கு அதுதான் முக்கியம்"

"சரி, சார்... நாளைக்கே நான் ஒரு பூஜை பண்ணி அதை அங்க இருந்து எடுத்து இங்க கொண்டு வந்து நட்டுடறேன் சார்!"

"நாளைக்கென்ன நாளை... இதை இப்பவே பண்ணு... இந்தாப்பா செக்யூரிட்டி இந்த பொண்ணை உள்ள விடு..." என்ற கஜேந்திரன் ஜீப்பையும் உள்ளே திருப்பச் சொன்னான்.

ஜி.எம். ஆபீஸ் முன் நின்று இறங்கிக் கொண்டவன். துள்ளலான நடையுடன் அவரைக் காண உள் நுழைந்தான்.

## 5

புரிந்து கொள்ள முடிந்தால் புரிந்து கொள்ளுங்கள்.

நீங்கள் எதுவாக விரும்பினாலும், ஆக முடியும். தடுப்பதற்கு இந்த பூமியில் யாரும் கிடையாது. உங்கள் விருப்பம் மட்டும் நூறு சதவிகித நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்!

ஸ்ரீ [illegible] முடியவில்லை. [illegible] அழகாகவும் ஒரு சரியான திசையில் செல்வதாகத்தான் தோன்றியது.

"அந்த பெண்ணை நான் ஒண்ணும் தேடிப் போகலை சார். அவளாதான் என் கால்ல வந்து விழுந்தா. அப்பதான் எனக்கு இப்படி ஒரு யோசனை தோணிச்சு."

"ரைட் மிஸ்டர் கஜேந்திரன்! உங்க விருப்பப்படியே செய்யுங்க. நான் இளங்கோவன் கிட்ட சொல்லி அந்தப் பொண்ணுக்கு வேலை போட்டுத் தரச்சொல்றேன்... நடந்த சம்பவங்களை ஒரு தற்செயலான விபத்தா பாக்கறதுதான் சரி..." என்று அவனையும் அனுப்பி வைத்தார்.

அந்தப் பெண்ணும் அப்போதே தேங்காய், பழமெல்லாம் வாங்கிக்கொண்டு உள்ளே சென்று திரிசூலம் முன்னால் வைத்துப் படைத்துவிட்டு ஒரு முறைக்கு நான்குமுறை விழுந்து வணங்கினாள். பின்னர் அந்த திரிசூலத்தை தொட்டுப் பிடுங்கி அதை கையில் பிடித்த படியே செக்யூரிட்டிகேட் நோக்கி ஓடத் தொடங்கி விட்டாள்.

மெல்ல மெல்ல அவள் உணர்ச்சிவசப்படுவதை அவள் ஓட்டத்தை வைத்தே உணரவும் முடிந்தது. அவளும் அவள் விரும்பியது போலவே அந்த திரிசூலத்தை சாலை ஓரமாக உள்ள ஒரு வேப்பமரத்தடியில் நட்டு அப்படியே சோர்ந்து போய் உட்கார்ந்து விட்டாள்.

வெளியே ஜீப்பில் போகும் போது பார்த்த கஜேந்திரன் நின்று' அதைக் கவனித்தான். அவளையும் அழைத்து, "நீ நாளைல இருந்து வேலைக்கு வரலாம்" என்றவனாக



[illegible] நிறக்கவில்லை.

கை கால் கழுவிக் கொண்டு ஹாலில் இடந்த சோபாவில் வந்து அமர்ந்தான். லக்ஷ்மியும் அவனுக்கு காபி போட்டு கொடுப்பதற்காக, எழுந்தாள். அவனருகில் வந்தவள்... "என்ன கஜா, ரொம்ப வேலையா... பார்க்க ரொம்ப களைப்பா இருக்கியே?" என்று ஆரம்பித்தாள்.

"ஆமாம்மா... ஆபீஸ்னாலே வேலை இருக்கத்தானே செய்யும்?"

"அது எனக்குத் தெரியாது பார்."

"அப்படி இல்லம்மா... என் வரைல நான் கொஞ்சம் கூடுதலாவே அக்கறை எடுத்துக்கிட்டு சவாலான சில விஷயங்கள்ளயும் ஈடுபடறேன். அதனால கொஞ்சம் வேலை பளு எனக்கு கூடுதல்னு வெச்சுக்கயேன்."

"வயித்துல உனக்கு ஆபரேஷன் நடந்துருக்கு... அது உன் ஞாபகத்துல இருக்கட்டும்."

"அதை ஏம்மா ஞாபகப்படுத்தறே... அதுதான் நடந்து முடிஞ்சிடிச்சே..."

"எப்படியோ இந்த முறை அந்த சாமி அருளால நான் உன்னைக் காப்பாத்திட்டேன். நான் மட்டும் அன்னிக்கு அங்கே போய் அந்த திரிசூலம் கால்ல விழாம போயிருந்தா நீ போயிருப்பே... நீ நல்லபடியா குணமான நிலையில் ஒரு

நான் உன்னோடயே வந்து வணங்கறதா வேண்டியிருக்கேன்.''

''அங்கு தொட்டு இங்கு தொட்டு லக்ஷ்மி வேண்டுதலில் வந்து நின்றபோது கஜேந்திரனுக்கு நறுக்கென்றது.

''அய்யோ அம்மா... அது என்ன ஊருக்கு பொதுவான கோயிலா, இல்ல குளமா? நீ உன் இஷ்டத்துக்கு வேண்டிக்கிறதுக்கு... அது கம்பெனிக்குள்ள இருக்கிற விஷயம்மா...'' - அலறினான்.

''நான் என்ன இப்பவேன்னா சொன்னேன்... ஒரு தடவை, ஒரே ஒரு தடவை நீயும் என்கூட வந்தா விஷயமும் முடிஞ்சிடுச்சு'' - லக்ஷ்மி அசால்டாக சொன்னபடி வாசல் பக்கம் தலைகாட்டிய காய்கறிக்காரியை நோக்கி நடந்தாள்.

கஜேந்திரனுக்கு கத்திபோய் வால் வந்த கதையாக இருந்தது. அந்த சூலாயுதத்தை பிடுங்கித் தூக்கிப் போட்டு விட்டதை சொன்னால் அம்மா தாங்குவாளா? இல்லை அதற்கும் சேர்த்து ஏதாவது சொல்லி பதைத்துப் போவாளா?

அவனுக்குள் கேள்விகள் ஓடிற்று... வீட்டுக்குள் நுழைந்ததும் இந்த டாபிக்கை தொட்டிருக்கத் தேவையில்லை என்றும் எண்ணியவன், அதை நான் எங்கே தொட்டேன் அம்மாவே தொட்டு ஆட்டிவிட்டல்லவா போயிருக்கிறாள்.

லேசாக அவனுக்கும் அழுகை கலந்த சிரிப்பும் வந்தது!

உலகில் யார் யாருக்கோ எது எதுவோ பிரச்சினை... நினைத்த இடத்தில் எல்லாம் குண்டு வெடித்து அப்பாவி ஜனங்கள் கொத்துக் கொத்தாகச் சாகிறார்கள்... ஒரு பக்கம்



மழையாக பெய்து ஊரே வெள்ளக்காடாகி பேரழிவும் உருவாகி வருகிறது... சுனாமி பூகம்பமும், அடிக்கடி கேள்விப்படும் ஒன்றாகிவிட்டது. இதற்கெல்லாம் அழுவதில் ஒரு அர்த்தம் இருக்கிறது. ஆனால், இது எதோடும் சேராதபடி இப்படி ஒரு திரிசூலத்துக்காக அழுவதில் துளியாவது அர்த்தம் இருக்கிறதா என்று கேள்வியும் சேர்ந்து கொண்டு அவனை இன்னமும் சங்கடப் படுத்தியது.

லக்ஷ்மி கையில் புடலங்காயைப் பிடித்துக் கொண்டு உள் திரும்பிக் கொண்டிருந்தாள். அது அவனுக்கு வெளவாலத்தடி பாம்பை ஞாபகப்படுத்திற்று. முகத்தை வேகமாக திருப்பிக் கொண்டான். எதிரில் நின்றால் தொட்டுத் தொட்டு அந்த பேச்சாகவே போகும் என்று யூகித்தவன் மாடியில் உள்ள அவனது அறை நோக்கிச் சென்று கதவையும் தாழிட்டுக் கொண்டான்.

மறுநாள் காலை!

பேண்ட்டுக்குள் ஷர்ட்டை இழுத்துவிட்டு டக் செய்து கொண்டிருந்த போது டிபன் கேரியரில் சாம்பார் சாதமுடன் லக்ஷ்மி வந்து நின்றாள்.

''கஜா... சூடா சாம்பார்சாதம் வெச்சிருக்கேன். மிச்சம் வைக்காம சாப்பிடு... கேண்டீன்ல கண்ட எண்ணெய் பதார்த்தங்களை வித்துக்கிட்டிருப்பாங்க. அதை எல்லாம் வாங்கி சாப்பிடாதே. அது உன் வயித்துக்கு நல்லதில்ல... அப்புறம் உன்கிட்ட கேக்கணும்... அன்னிக்கு என்னை உங்க கம்பெனிக்கு ஒரு பொண்ணு கூட்டிக்கிட்டுப் போச்சே... அது பேர் என்ன?''

''யார் அஜந்தாவா?''

''என்னடா இது அஜந்தான்னு ஒரு பெண்ணுக்கு பேரா... அது ஒரு இடத்தோட பேரில்ல...''

''அம்மா! நீ விஷயத்துக்கு வா... எனக்கு டயமாகுது.''

''இல்ல, அந்த பொண்ணுகிட்ட கொஞ்சம் நான் பேசணும். அதான் கேட்டேன்.''

''எதுக்கும்மா?''

''அன்னிக்கு என்னை அந்த மரத்தடி கோவிலுக்கு அதானே கூட்டிக்கிட்டுப் போச்சு. ஒரு நன்றிகூட சொல்லலப்பா.''

லக்ஷ்மி திரும்பவும் அவன் நினைக்கக்கூட விரும்பாத அந்த விஷயத்தை தொட்டாள்.

''சும்மா விடும்மா... உன்னைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன். அந்த மரம், திரிசூலம் எல்லாத்தையும் தயவுசெய்து மறந்துடும்மா... நாம நினைக்கவும் பேசவும் எவ்வளவோ விஷயங்கள் இருக்குதும்மா.''

''போடா போ... எதை மறந்தாலும் தெய்வத்தை மறக்கக் கூடாது... அதுலயும் இந்த திரிசூல விஷயம் ஒண்ணும் சாதாரண விஷயம் இல்லை. இதுக்கு பின்னால ஒரு கதையே இருக்கு...''

''கதைதானேம்மா... உண்மை இல்லையே... விட்டுத் தள்ளு. அந்த அஜந்தாவுக்கு உன் சார்பா நான் நன்றி சொல்லிக்கறேன்'' என்று டிபன் கேரியரை எடுத்து வைத்துக் கொண்டு வேகமாக கிளம்ப தயாரானான்.

''உன்கிட்ட என்ன பேச்சு... உன் ஆபீஸ் நம்பருக்கு போன் செய்து நான் பேசிக்கிறேன்'' என்றாள் லக்ஷ்மி. தான்



பேசுகிறேன் என்று சொன்னது அவன் காதில் சரியாக விழாதபடி அவன் செல்போன் சப்தம் அவன் கவனத்தை திருப்பியது. அதற்கு காது கொடுத்துக் கொண்டே கிளம்பிவிட்டான்.

ஆபீஸ்!

அஜந்தா தன் ஸீட்டில் லேப்டாப்பை ஊடுருவிக் கொண்டிருந்தாள். அவ்வப்போது நெற்றியில் சரிந்து விழும் தலைமுடியை ஒதுக்கி ஒதுக்கிவிட்டுக் கொண்டே வலை தளத்துக்குள் தனக்கான மெயில் பாக்ஸை திறந்து கொண்டிருந்தவளை அழைத்தது ஆபீஸ் போன்.

''யெஸ்! அஜந்தா ஸ்பீக்கிங்...''

''அஜந்தாவா... அம்மாடி நான் கஜாவோட அம்மா பேசறேம்மா...''

''ஓ... நீங்களா... கொஞ்சம் இருங்கம்மா...'' என்றவள், லேப்டாப்பை ஒதுக்கி வைத்துவிட்டு ''சொல்லுங்கம்மா'' என்று முழு கவனத்தையும் அளித்தாள்.

''கஜா உனக்கு நன்றி சொல்லச் சொன்னானா?''

''நன்றியா... எனக்கா... எதுக்கும்மா?''

''என்னம்மா அப்படிச் சொல்லிட்டே... அன்னிக்கு நீதானே உங்க கம்பெனிக்குள்ள இருக்கிற அந்த மரத்தடி கோவிலுக்கு கூட்டிக்கிட்டுப் போனது.''

''அதுக்கா நன்றி...''

''இல்லையா பின்னே... நான் மட்டும் அன்னிக்கு போய் அந்த சாமி கால்ல விழாம போயிருந்தா கஜேந்திரன் உயிர் பிழைச்சிருக்கவே மாட்டான்மா...''

''அம்மா...''

''ஆமாம்மா... இப்ப கூட நானும் அவனும் ஒரு நா அங்க போய் தேங்கா பழம் உடைச்சி பூஜை செய்ய வேண்டிக்கிட்டிருக்கேன்... முடிஞ்சா அன்னிக்கு நீயு வா...''

''என்ன சொல்றீங்க நீங்க... இப்ப அங்க அ கோவிலும் இல்ல ஒண்ணுமில்ல... உங்ககிட்ட கஜேந்திர சொல்லலையா?''

''என்னம்மா சொல்றே?'' அதிர்ந்தாள் லக்ஷ்மி.

''ஆமாம்மா... உங்க பிள்ளைதான் அதை தூக் போட்டவரும்கூட. முதல்ல எதுக்குன்னு யோசிச்ச எங் எம்.டி-யும் கூட எதுவும் சொல்லல...''

''அடப்பாவி... என்கிட்ட இந்த கஜா சொல்லவே யில்லையே... பெரிய தப்பு பண்ணிட்டானே...''

''அட, என்னம்மா நீங்க... அப்படி எல்லாம் எதுவு இல்ல. நான்தான் அவசரப்பட்டு உளறிட்டேன் நினைக்கிறேன். நீங்க தைரியமா இருங்க... இதெல்லா சின்ன விஷயம்.''

''சின்ன விஷயமா... அடப்போம்மா...! இப்ப சொல்றேன், நல்லா கேட்டுக்கோ. கஜா தப்புக்கு மே தப்பா பண்ணியிருக்கான். நான் இனி என்ன பண்ணப்போறேன்னு தெரியலியே...''

லக்ஷ்மி பதற ஆரம்பித்துவிட்டாள். அஜந்தாவுக் வேலியில் போன ஓணானை எடுத்து உடம்புக்கு விட்டு கொண்டது போலாகிவிட்டது.



''அம்மா ப்ளீஸ்... நீங்க ஒரு எஜுகேடட்... ஃபேமிலியோட ஒருத்தர். கொஞ்சத்துக்கு கொஞ்சம் படிச்சவங்க மாதிரி யோசியுங்க. பேசுங்க. நீங்க கும்பிடற அந்த ஆதிபராசக்திக்கு கஜேந்திரன் தப்பு பண்ணிட்டான்னு தண்டிக்கறதா வேலை... இல்லம்மா புரிஞ்சுக்குங்க. கஜேந்திரனும் எந்த தப்பும் பண்ணலை...''

''அம்மாடி! நீ இந்த காலத்துப் பொண்ணு... இப்படித் தான் பேசுவே, ஆனா, உனக்கு சில விஷயங்கள் தெரியாது.''

''அது எதுவா இருந்தாலும் சரி, ஒரு நாள் நான் உங்க வீட்டுக்கு வரேன். நாம நிறையவே பேசுவோம். இப்ப நீங்க நிம்மதியா இருங்க.''

''அது எப்படிம்மா முடியும். என் மகனை அந்த திரிசூலம் விடப் போறதில்லை... நீ வேணா பாரு, அவனை அது தண்டிச்சே தீரும். என் குடும்பம் ஏற்கெனவே அதுக்காகவே சபிக்கப்பட்ட ஒரு குடும்பம்மா...''

''சரிம்மா. நான் அப்புறமா வரேன். இப்ப ஆபீஸ்ல நிறைய வேலை இருக்கு. நான் போனை வெச்சுடறேன்.'' என்றபடியே அஜந்தா ரிஸீவரை டொக்கென்று வைத்தாள்.

முகம் பெரிய அளவில் மாறிவிட்டது.

கச்சிதமாக எக்ஸ்க்யூஸ்மீ என்றபடி எதிரில் கஜேந்திரன். அவளை அவ்வளவு சீக்கிரமாக அவனும் எதிர்பார்க்கவில்லை.

''மே ஐ கம் இன்?''

''ப்ளீஸ், மிஸ்டர் கஜேந்திரன்.''

அவனும் வந்து அமர்ந்தான். அவன் மலங்க மலங்க பார்ப்பதை வைத்து.

''என்ன அஜந்தா எனி பிராப்ளம்?''

''பிராப்ளம்... பிராப்ளம்... யெஸ், மிஸ்டர் கஜேந்திரன்! இது ஒரு விதமான பிராப்ளம்தான். இட் ஈஸ் எ பெக்கூலியர் பிராப்ளம்.''

''சொல்லுங்க... நானும் கொஞ்சம் எங்கம்மா பத்தி உங்ககிட்ட பேச வேண்டியிருக்கு.''

''உங்கம்மா பத்தியா?''

''ஆமாம்... ஏன் அஜந்தா...''

''இல்ல, கஜேந்திரன் இப்பதான் உங்கம்மா போன் பண்ணி என்கூட பேசுனாங்க.''

''மை குட்நெஸ்... இவ்வளவு சீக்கிரமாவே பேசிட்டாங்களா... சரி, என்ன பேசினாங்க அஜந்தா... ஒண்ணும் சிக்கலா எதுவும் ஆயிடலையே...?''

''கொஞ்சம் சிக்கல்தான்னு நினைக்கிறேன். ஐ ஆம் ஸாரி கஜேந்திரன்... அந்த திரிசூலத்தை நீங்க தூக்கிப் போட்ட விஷயத்தை நான் உங்கம்மாகிட்ட கேஷுவலா பேசிட்டேன்... ஆனா, அவங்க பதிலுக்கு ரொம்பவே சீரியஸ் ஆயிட்டாங்க... உங்கள அந்த திரிசூலம் விடாதாம்... நிச்சயம் திரும்ப வந்து தாக்கப் போகுதுங்கறாங்க... எனக்கு இதை எப்படி எடுத்துக்கறதுன்னே தெரியல மிஸ்டர் கஜேந்திரன்... உங்கம்மா, ஆனாலும் பிற்போக்கா இருக்காங்களே...''

அஜந்தா சொல்லி முடித்துவிட்டு நெற்றியைத் தேய்த்துக் கொண்டாள்.

''ஆமாம் அஜந்தா... அம்மாவை என்னால மாத்த முடியலை... இந்த மாதிரி டாபிக்கை எல்லாம் நாம பேசாம இருக்கிறதுதான் நமக்கு இருக்கிற ஒரே வழி.''



''ஸாரி கஜேந்திரன்... உங்கம்மா பத்தி எனக்கு சரியா தெரியாததால் நான் கொஞ்சம் உளறிட்டேன். வெரி ஸாரி!''

''இட்ஸ் ஓகே. இனி நான் பாத்துக்கறேன்... இன்ஃபாக்ட் இதை பத்தி நாமளேகூட பேசக்கூடாது. அப்படிப் பேசினா அது நமக்கேகூட கொஞ்சம் பிரச்சினையாயிடலாம். இது ஒரு குப்பை பெறாத விஷயம். இதுக்கு மேல இதைப்பத்தி சொல்ல எதுவும் இல்லை. நான் வரட்டுமா?''

கிளம்பிவிட்டான் கஜா.

''ஒன் மினிட்... உங்க எல்லா புராஜெக்ட்டும் ஓகே.யாயிடிச்சா?''

''கிட்டத்தட்ட... ஏன் அஜந்தா?''

''நீங்க சூப்பர் ஃபாஸ்ட்ல போய்க்கிட்டிருக்கீங்க... எம்.டி. எனக்கு ஒரு மெயில் போட்டிருக்கார். அதுல உங்கள ரொம்ப பாராட்டியிருக்கார்... உங்களுக்கு மட்டும் ஆயிரம் விண்ட் மில்லுன்னு ஒரு டார்கெட் ஃபிக்ஸ் பண்ணப் போறாராம்...''

''நிஜமாவா?''

''ஆமாம்... அந்த ஆயிரம் விண்ட் மில்லுக்கான லேண்ட் ஹண்ட்டிங்கல இருந்து பிரசாஸிங் வரை எல்லாமே உங்க விருப்பம்தான். ஒவ்வொரு மில்லும் ஆவரேஜா ஒரு நாளைக்கு ஒரு கிலோ வாட் பவர் தந்தாலும் ஆயிரம்னா ஆயிரம் கிலோ வாட்... தமிழ்நாட்டுல பவர்கட்ங்கற வார்த்தையே இல்லாம போயிடும்ல?''

''எக்ஸாக்ட்லி... என் லட்சியமே அதுதான்... இந்த உலகத்தோட இப்போதைய உயிர்நாடியா நான் எலக்ட்ரிசிடியைத்தான் பாக்கறேன். இதுல மட்டும் ஒரு

தோல்வி இந்த மனித சமுதாயத்துக்கு ஏற்பட்டா ஊர்ல ஒரு மரம் மட்டை கூட மிஞ்சாது. அவ்வளவையும் இந்த மனித சமுதாயம் வெட்டி எரிச்சு சாம்பலாக்கிடும். ஊரே சுடுகாடாயிடும்.''

அதிகமாகவே பயந்தான் கஜேந்திரன். அவன் கண்களில் அந்த பயம் நன்றாகவே தெரிந்தது. அது அஜந்தாவுக்கும் பிடித்திருக்கிறது. அவனுக்குத்தான் எவ்வளவு பொறுப்புணர்ச்சி?

வியந்தாள்!

## 6

புரிந்துகொள்ள முடிந்தால் புரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் ஒவ்வொரு புதிய ஆசைகளுமே ஒரு விதையைப் போன்றது... அது விழும் இடத்திற்கு ஏற்ப வளர்ந்தே தீரும்...!

திடீரென்று ஆபீஸில் ஒரு பரபரப்பு!

ஆளுக்கு ஆள் கூடிக்கூடி பேசிக் கொண்டார்கள். கஜேந்திரன் கவனித்தான்.

''என்னப்பா விஷயம்?'' என்று ஒருவரை கூப்பிட்டு விசாரித்தான்.

''சார் நம்ம பர்சனல் மேனேஜர் இளங்கோவனுக்கும் யூனியன் லீடருக்கும் முட்டிக்கிச்சு சார்... அதான்!'' என்றான்.



இது இந்திய நாட்டின் சாபக்கேடு... அந்த நிறுவனத்தில் இப்படி ஒரு சிக்கல் இல்லை. இளங்கோவனுக்கே ஒரு போன் போட்டு கேட்டுவிடுவது என்று முனைந்தபோது அவரும் லைனில் வந்தார்.

''என்ன சார் சிக்கல்?''

''ஒண்ணுமில்ல கஜா... புது யூனியன் லீடர் ஒரு பக்குவம் இல்லாத ஆள். இப்ப நம்ம ஆபீஸ் கேண்டீன்ல ஒண்ணேகால் ரூபாய்க்கு சாப்பாடு போடறோம். இலவசமா போட்டா என்னன்னு கேக்கறான்...''

''ஐ. சீ... நீங்க என்ன சொன்னீங்க?''

''ஒண்ணேகால் ரூபாய்ங்கறது இருவது வருஷம் முந்தி அப்ப இருந்த யூனியன் லீடர் ஃபிக்ஸ் பண்ண தொகை. இப்ப நமக்கு ஆவரேஜா ஒரு சாப்பாடு இருபது ரூபாய் ஆகுது. ஆனா நிர்வாகம் சார்பா அஞ்சு ரூபான்னு ஒரு ரேட் ஃபிக்ஸ் பண்ணியிருக்கோம். அதுக்கு அவர் ஒத்துக்க மாட்டாராம்... சாப்பாடு ஃப்ரீயா போடணுமாம்.''

''நீங்க சொல்றதுதான் சரி... இன்னிக்கு ஒரு நல்ல சாப்பாடு சாப்பிடணும்னா ஹோட்டல்ல ஐம்பது ரூபாய்க்கு மேல போகுது. இங்க அஞ்சு ரூபாய்ங்கறது ஒரு தொகையே இல்லை...''

''நானும் காம்ப்ரமைஸ் பண்ணிக்கறதா இல்ல கஜேந்திரன். வரட்டும், என்ன பண்றாங்கன்னு பார்ப்போம்.''

இளங்கோவன் குரலில் உறுதி தொனித்தது. ஆல் த பெஸ்ட் என்று கூறிவிட்டு, தன் வேலையைப் பார்க்கப் போனான். பொசுக்கென்று கரண்ட் போனது. முதலில் அதை வழக்கமான பவர்கட்டாகத்தான் நினைத்தான். பிறகுதான் தெரிந்தது அதுவும் யூனியன் ஆட்கள் கைங்கர்யம் என்று...

செக்யூரிட்டி மெயின் கேட்டுக்கு வெளியே யூனிஃபார்ம் அணிந்த லேபர் கூட்டம் திரளத் தொடங்கி விட்டது. அவர்களிடம் கோஷம் வேறு...

'ஜிந்தாபாத்... ஜிந்தாபாத்... லேபர் யூனியன் ஜிந்தாபாத்...' என்கிற அவர்கள் குரல் உள்ளே ஏ.ஸி. அறைக்குள்ளும் கேட்டது. மெல்ல வெளியே வந்து பார்த்தான். கிட்டத்தட்ட ஒரு நூறு பேருக்கு மேல் திரண்டு விட்டிருந்தனர்!

ஜி.எம். அறை முன்னால்கூட ஒரு கூட்டம் கோஷம் போடத் தொடங்கியிருந்தது.

''ஆக்காதே, ஆக்காதே அஞ்சு ரூபா ஆக்காதே...''

''கோவிலில்கூட இலவச உணவு... உழைப்பவனு க்கில்லையா இலவச உணவு?''

''ஊதியம் உயரவில்லை... உணவுக்கு மட்டும் உயர்வா?''

- இப்படிப் பலவிதமான கோஷங்கள்.

தாமஸே கஜேந்திரனையும் தன் அறைக்கு வரும்படி அழைத்தார். அவனும் சென்றான்.

அவர் அறையில் கிட்டத்தட்ட அந்த ஆபீஸின் எல்லா மேல்மட்ட அதிகாரிகளும் இருந்தனர். கஜேந்திரனும் அவர்களுடன் கலந்தான். தாமஸ் பேசினார்.

''டியர் ஆபீஸர்ஸ்... பிரச்சினை இப்ப இலவச உணவா? இல்லை அஞ்சு ரூபா உணவாங்கறது இல்லை. புது யூனியன் லீடர்தான் என்ன சொன்னாலும் நிர்வாகம் கேக்கணும்னு எதிர் பார்க்கிறான். நாம இப்ப இதுக்கு வளைஞ்சு கொடுத்தா அப்புறம் ஒவ்வொண்ணா



எல்லாத்துக்கும் வளைஞ்சு கொடுக்க வேண்டியிருக்கும். ஆகையால் இந்த பிராப்ளத்தை என்னவானாலும் சரி, நாம துளிகூட காம்ப்ரமைஸ் இல்லாம சந்திக்கிறதுன்னு முடிவெடுத்துருக்கோம்'' எனும்போது எல்லோரிடமும் கைதட்டல்.

தாமஸ் தொடர்ந்தார்.

''நீங்க ஒவ்வொருத்தரும் தனித் தனியா நம்ம லேபர்கிட்ட பேசுங்க. அந்த யூனியன் லீடர் தான் பேர் எடுக்கறதுக்காக கம்பெனிகிட்ட ரொம்ப ரூடா மோதறாங்கறத புரிய வையுங்க... ஆளுக்கு ஒரு பத்துபேரை இழுத்தாகூட போதும் அவனால எதுவும் பண்ண முடியாது. என்ன சொல்றீங்க?'' என்று கேட்டார்.

''டோண்ட் ஒர்ரி சார்... நாங்க பாத்துக்கறோம்'' என்று எல்லோரும் உடனேயே செயலில் இறங்கத் தொடங்கி விட்டனர். கஜேந்திரனிடம் மட்டும் சற்று வித்தியாசமாக வேறு மாதிரி எண்ணம்.

தாமஸூம் கவனித்தார்.

''மிஸ்டர் கஜேந்திரன்! என்ன யோசனை?''

''ஒண்ணுமில்ல சார்... என் டிபார்ட்மெண்ட்ல எனக்கு கீழே லேபர்ன்னு யாரும் இல்ல. அதான் நான் வேற மாதிரி யோசிச்சுக்கிட்டிருக்கேன்''

''வேற மாதிரின்னா?''

''செக்யூரிட்டி கேட்ல கத்திக்கிட்டிருக்கிற கூட்டத் தோட ஒரு டைரக்ட் அட்டாக்''

''புரியல... அட்டாக்னா.?''

''பதில் கோஷம்தான்... வேறு என்ன?''

"நோ... அது நாகரீகமா இருக்காது. வேணும்னா உங்க கருத்தை மெகா போன் மூலமா பேசுங்க... புரிஞ்சுக்கறவங்க புரிஞ்சுக்கட்டும்."

"அப்ப முதல்ல மெகாபோனை கொடுங்க சார்."

"இருங்க... என்ன பேசுவீங்க? எப்படிப் பேசுவீங்க?"

"ரொம்ப சிம்பிள்... ஒரு சிகரெட்டுக்கும் பான் பராக்கும் ஒரு நாளைக்கு இருபது முப்பது செலவழிக்கிற நீங்க ஒரு நல்ல சாப்பாட்டுக்கு அஞ்சு ரூபா செலவழிக்க யோசிக்கலாமான்னு கேட்பேன்."

"நல்ல பாய்ண்ட்... இதை நானும் கேட்டுட்டேன். ஆனா, அவங்க என்ன சொல்றாங்கன்னா, அப்ப அஞ்சு ரூபாயை வாங்கறதுக்கு வாங்காமலே போங்கங்றாங்க. அதுக்கு என்ன சொல்வீங்க."

"அஞ்சு ரூபாய் அல்பம் இல்லை சார்... அஞ்சு பைசாகூட அல்பம் கிடையாது. சிறு துளிதான் பெரு வெள்ளம். அஞ்சு ரூபாதானேன்னு இன்னிக்கு சாதாரணமா நினைச்சா அது எதுல வேணா போய் முடியலாம். அடுத்து சாப்பிடறவங்க காசு கொடுத்து சாப்பிடும்போதுதான் கஷ்டம் தெரியும். சாப்பாட்டையும் விரயம் பண்ண மாட்டாங்க. சும்மா சாப்பிட்டா அதுக்கு பேர் பிச்சை... எந்த நிறுவனமும் தன் தொழிலாளியை பிச்சைக்காரனா ஆக்கிப் பார்க்க விரும்பாது. விரும்பவும் கூடாது சார்."

"ஹைலி வேலிட் பாய்ண்ட். போங்க பேசிப் பாருங்க. கூட்டம் கண்ட்ரோல் ஆகலைன்னா போலீஸுக்கு நான் தகவல் தரேன். பார்த்துப் பேசுங்க. உங்க கூட இளங்கோவனையும் கூட்டிக்கிட்டுப் போங்க. ஏன்னா அந்த



யூனியன் லீடர் ஒரு திமிர் பிடிச்சவன். 'நான் உன்கூடல்லாம் பேச மாட்டேன். நீ நேத்து வந்தவன். பர்சனல் மேனேஜரை கூப்பிடு'ன்னு சொல்வான்..." என்று அப்போது கஜேந்திரனுக்கு எடுத்தும் தந்தார்.

அதன்பின் கஜேந்திரனும் இளங்கோவனும்தான் செக்யூரிட்டி கேட் நோக்கி நடந்தனர்.

'ஜிந்தாபாத்... ஜிந்தாபாத்... லேபர் யூனியன் ஜிந்தாபாத்' என்கிற கோஷத்துக்கு நடுவில் கம்பீரமாக வந்து நின்ற இளங்கோவனையும், கஜேந்திரனையும் அந்த கூட்டமே ஒரு வித கேலிப்பார்வை பார்த்தது.

அதற்கெல்லாம் இளங்கோவன் அசரவில்லை.

"நண்பர்களே... நெஞ்சுல கையை வெச்சு யோசிங்க... இதெல்லாம் ஒரு கோரிக்கையா...? இலவசமா யார் சாப்பிட ஆசைப்படுவாங்க? பிச்சைக்காரன், கையாலாகாதவன், சோம்பேறி இவங்கதானே? இலவசமா சோறு போட்டா அதுக்கு பேர் அன்னதானம்... அன்னதானம் செய்ய இது என்ன ஆண்டிமடமா... இல்ல சத்திரம் சாவடியா? உங்கள்ள பாதி பேருக்கு மேல சிகரெட் பிடிக்கிறீங்க. வெத்தல பாக்கு போடறீங்க... உங்க உடம்பை கெடுக்கிற இந்த விஷயத்துக்கு ஐம்பது நூறுன்னு செலவழிக்கிற நீங்க உங்க சாப்பாட்டுக்கு அஞ்சு ரூபா கொடுக்க யோசிக்கலாமா?"

இளங்கோவன் பேச்சும் அதனுள்ளிருந்த கேள்விகளும் கூட்டத்தை முணுமுணுக்க வைத்துவிட்டது.

"யோவ், யாருய்யா இந்த அஞ்சு ரூபாய ஒரு விஷயமா சொன்னது. பணம் இங்க பேச்சே இல்லை. இது எங்க

கம்பெனி... இது என் வீடு மாதிரி... என் வீட்ல நான் காசு கொடுத்து சாப்பிடறது எந்த வகைல சரி.''

கூட்டத்தின் ஒருவன் நெத்தியடியாகத்தான் கேட்டான்.

''கோடிக்கணக்குல லாபம் சம்பாதிக்கிறீங்கள்ளே... எங்க கிட்ட அஞ்சு ருவா வாங்கித்தான் உங்களுக்கு விடியப் போவுதாக்கும்? ஏய்யா, இப்படி அஞ்சு ரூபாய்க்காக இந்த பேச்சு பேசறே?''

இன்னொருவன் பாய்ந்து வந்தான்.

''உனக்கு புதுசா வந்துருக்கிற இந்த கஜேந்திரன் கறவன் வக்காலத்தா?'' அங்கே தொட்டு இங்கே தொட்டு கஜேந்திரனையும் எட்டிப் பிடித்தனர். கஜேந்திரனுக்கும் 'கர்ர்' என்றது. வாலிபத் துள்ளல் அவனிடமும் இருக்கிறதே?

''எப்பா, வக்காலத்து வாங்கக்கூடாதா? வேலை கொடுத்து வாழ்க்கைக்கு ஆதாரமா இருக்கற கம்பெனிக்காகவும், அதோட நல்லதுக்காகவும் பேசறது எந்த வகைல தப்பு... உங்கள் மாதிரி நன்றி இல்லாம வெளியில கூடி ஒழிக கோஷம் போடணும்னு சொல்றீங்களா?''

கஜேந்திரன் தன் பேச்சில் 'நன்றி இல்லாம' என்று பயன்படுத்திய வார்த்தை கூட்டத்தை சற்று வெறி கொள்ள வைத்தது.

''ஏலேய்... யாருக்குடா நன்றி இல்லை... நேத்து வந்த நீ எல்லாம் எங்ககிட்ட வந்து நன்றி பத்தி பேசறியா... நன்றி பத்தி இந்த மேனேஜ்மெண்டுக்கு ஏதாவது தெரியுமா? நன்றின்னு ஒரு வார்த்தை ஞாபகத்துல இருந்தா நாங்க



உழைக்கற உழைப்புக்கு போடற சோத்துக்கு காசு கேக்குமாடா இந்த நிர்வாகம்...''

ஒருவன் எகிறிக் கொண்டு சாமியாடவும், இளங்கோவன் அவனைப் பார்த்துக் கையை உயர்த்தி அதட்டலாக எச்சரிக்க ஆரம்பித்தார்.

''யாரா இருந்தாலும் மரியாதையா பேசணும். வார்த்தையை விட்டா திரும்ப இங்க உள்ள வந்து வேலை பார்க்க முடியாது. அப்படியே போயிட வேண்டியதுதான்.''

''யார்ரா... யாரைப் பார்த்து வெளியே போயிட வேண்டியதுதாங்கறே... அதிகாரம் இருக்குங்கறதுக்காக ஆடாதடா பர்சனல் மேனேஜா... நீ முதல்ல பார்த்து பேசு...''

இளங்கோவன் அடுத்த நொடி திரும்பி செக்யூரிட்டியைப் பார்த்து, ''இனி இவங்ககிட்ட பேசறதுல பிரயோஜனமில்ல. கேட்டை இழுத்து மூடுங்க... எப்ப பேச்சு வார்த்தை நடக்கும்போது அதுக்கு ஒரு மரியாதை இல்லையோ... அங்க பேசறதுல அர்த்தம் இல்ல.''

பேச்சோடு பேச்சாக கம்பெனிக்குள் செல்ல எத்தனித்தவரை அப்படியே ஒரு கூட்டம் சுற்றி வைத்து கெரோ செய்யப் பார்த்தது. கோஷமும் பயங்கரமாக வெளிப்பட்டது.

''மூடாதே, மூடாதே! செக்யூரிட்டி கேட்டை மூடாதே...

பேசாதே, பேசாதே தகாத வார்த்தை பேசாதே...

மன்னிப்புக் கேள்... மன்னிப்புக் கேள்...

எல்லோரிடமும் மன்னிப்புக் கேள்...''

-கோஷம் இப்படிப் பலவிதமாக மாறியது. அப்படியே வட்டமாக சுற்றிவளைத்தவர்கள் நசுக்க முயலவும், செக்யூரிட்டி கார்டுகள் கையில் லத்தியை சுழற்றிக் கொண்டு வந்து இளங்கோவனையும், கஜேந்திரனையும் மீட்க போராடத் தொடங்கினர். அவர்களது லத்தி பட்டு சிலருக்கு காயம் ஏற்படவே, பதிலுக்கு அவர்கள் ஓரம் சாரமாக கிடக்கும் கற்களை எடுத்து எறியத் தொடங்கினர். செக்யூரிட்டி கார்டுகளும் திருப்பி கற்களை எறிந்தனர். சில நொடிகளுக்குள் அந்த இடம் ஒரு வன்முறைப் பிரதேசமாக மாறிவிட்டது. கூட்டம் இங்கும் அங்கும் கலைந்து ஓடியது. ஓடும்போது விழுந்தவர்கள் மேல் சிலர் மிதித்துக் கொண்டு ஓடினர். சிலர் கையில் கிடைத்ததை எல்லாம் எடுத்து எறியத் தொடங்கினர்.

ஒருவன் தலையில் ரத்தப் பெருக்குடன் ஆவேசத்தின் உச்சத்தில் இருந்தான். அவன் கண்ணில் ஒரு மரத்தின் கீழ் நடப்பட்டிருந்த அந்த தங்கலிங்க திரிசூலம் பட்டது. ஆவேசத்தில் அதைப் போய் பிடுங்கியவன் அப்படியே அதை இளங்கோவனை நோக்கித்தான் வீசி எறிந்தான். ஆனால், அது பாய்ந்து [illegible] இளங்கோவன் விலகவும், இளங்கோவனுக்கு பின் நின்றபடி இருந்த கஜேந்திரனை நோக்கி அது பாய்ந்து விட்டது.

[illegible]

[illegible]



லக்ஷ்மிதேவி பயந்தது நடந்தேவிட்டது! இது என்ன ஆச்சரியம்... அவள் பயந்தபோதெல்லாம் அது ஒரு அநாவசியமான பயம் என்றும், முட்டாள்தனமான எண்ணம் என்றும் நினைத்தது எவ்வளவு பெரிய தவறு என்றும் அப்போதுதான் அவனுக்கும் தோன்றியது. அந்த ஸ்தம்பிப்பு கலையாமல் எழுந்து வெளியே சென்று பார்த்தான்.

செக்யூரிட்டி கேட்டுக்கு வெளியே போலீஸ் வேன் வந்து நிற்பதும், ஆம்புலன்ஸ் வந்து நின்று கொண்டிருப்பதும் தெரிந்தது. கூட்டத்தினர் சிதறி ஓடியிருந்தனர். சிலர் நிறுவனத்தின் காம்பவுண்ட் வாசல் சுவரை தாண்டிக் குதித்துக் கொண்டிருந்தனர். இப்படி ஒரு அமைதியில்லா ஆர்ப்பாட்டமான சூழ்நிலை உருவாகும் என்று யாருமே யூகிக்கவில்லை.

ஒரு சாப்பாட்டு விஷயம் இப்படிக்கூடவா முடியும் [illegible] சிலைபோல் நின்று கொண்டிருக்க, [illegible] அவனை நோக்கித்தான் வந்து கொண்டிருந்தார்.

"[illegible]...!"

"யெஸ் சார்!"

"நான் [illegible] போகிறேன். நீங்க கொஞ்சம் கஜேந்திரன் வீட்டுக்கும் போய் பக்குவமா விஷயத்தை சொல்லி [illegible] கூட்டிக்கிட்டு வந்துடுங்க..."

"ஷ்யூர் சார்!"

அந்த பதிலோடு அவனும் வேகமானான்!

# 7

புரிந்துகொள்ள முடிந்தால் புரிந்து கொள்ளுங்கள்.

உடம்பின் சக்தி என்பது பஞ்ச பூதங்களும் ஒன்றான நிலையில்தான் வெளிப்படும். மனதுக்கு இந்த பூதங்கள் தேவையில்லை!

கஜேந்திரன் வீடு!

வாசலில் நின்ற காரில் இருந்து உதிர்ந்தாள்.

அஜந்தா!

அந்த நாளைய வீடு... வீட்டு முகப்பில் முல்லை, மல்லி, பெரிய கொடியாக பரவி ஏராளமாக அரும்பும் விட்டிருந்தது. அதைக் கடந்து கடப்பைக்கல் தாழ்வாரம்... அதில் நடந்து உள் நுழையவும் பார்வையில் பளிச்சென்று பட்டது கஜேந்திரனின் அப்பாவான கோவிந்தராஜனின் மாலை அணிவிக்கப்பட்ட படம்... சற்றுத் தள்ளி சித்தப்பா படம்... அதற்கும் மாலை! அதற்கும் சற்று தள்ளி கஜேந்திரனின் தாத்தாவான சிவஞானத்தின் படம். ஹாலில் ஊஞ்சல் - ஊஞ்சல் மேல் அரும்பு மல்லிகை தொகுத்துக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் லக்ஷ்மி.

''அம்மா'' என்று குரல் கொடுத்த அஜந்தாவை பார்த்ததும்,

''அடடே! அஜந்தாவா... வா... வா...'' என்று எழுந்தாள். உட்காரச் சொல்லி காபி போடவும் தயாராகி விட்டாள் லக்ஷ்மி.



''அம்மா, ஒரு நிமிஷம்மா... நான் இப்ப காபி சாப்பிடவோ இல்ல உங்க கூட கொஞ்சநேரம் பேசிவிட்டுப் போகவோ வரலை...''

சொல்லும்போதே அஜந்தாவுக்கு நாக்கு வறண்டு போனது. லக்ஷ்மியும் அஜந்தாவின் முக பாவத்தை வைத்தே ஏதோ விபரீதம் என்பதை புரிந்து கொண்டு விட்டாள்.

''என்னம்மா விஷயம்?'' லக்ஷ்மி தழைந்த குரலில் கேட்டாள்.

''ஒரு நடக்க கூடாத விபரீதம் நடந்துடிச்சிம்மா...?''

''விபரீதமா... என்ன சொல்றே?''

''பதட்டப்படாதீங்க... கஜேந்திரனுக்கு திரும்பவும் வயித்துல காயம்.''

''என்னது...''

லக்ஷ்மி கேட்ட வேகத்தில் மயங்கி விட்டாள்.

அதன்பின் முகத்தில் தண்ணீரை தெளித்து எழுப்பவும் புலம்பத் தொடங்கிவிட்டாள்.

''என் கஜா இப்ப எப்படி இருக்கான். ஐயோ... எனக்கு இருக்கறது ஒரு பிள்ளை ஆச்சே... அவனுக்கு ஏன் இப்படி நடக்குது? கடவுளே... பாட்டன் செஞ்ச தப்புக்கு பேரன் என்ன செய்வான். அவனை நீ மன்னிக்க மாட்டாயா?'' என்று அவள் ஆரம்பிக்கவும் அஜந்தாவிடம் ஒரு கூர்மை.

அன்றுகூட பேச்சுப் போக்கில் சாபம் பலித்து விட்டதாகத்தான் சொல்லி அழுதிருந்தாள். இப்போதோ பாட்டன் தப்பு என்ற ஒரு புதிய கோணத்தை காட்டுகிறாள்.

''அம்மா புறப்படுங்க... போற வழில பேசிப்போம்...'' என்று லக்ஷ்மியை தன் காரிலேயே ஏத்திக்கொண்டாள்.

காரும் கிளம்பியது.

காருக்குள் வெட்டப்பட்ட ஒரு மரக்கிளை மாதிரி உட்கார்ந்திருந்தாள் லக்ஷ்மி. அவள் உதடுகள், "என் மகன் பிழைக்க மாட்டான்... என் மகன் பிழைக்க மாட்டான்... அவனை இனி யாராலயும் காப்பாத்த முடியாது..." என்று முணங்கிக் கொண்டே இருந்தன.

"அப்படி எல்லாம் சொல்லாதீங்கம்மா... அவருக்கு பெரிய அளவுல ட்ரீட்மெண்ட் கொடுக்க சொல்லி அப்பாவே சொல்லிட்டாரு... இப்படி ஆகும்னு யாருமே எதிர்பார்க்கலை..."

"சாபம்னாலும் அப்படித்தாம்மா வேலை செய்யும்... அதுக்கு எப்பவுமே அவ்வளவு சக்தி..."

"அம்மா கேக்கறேன்னு தப்பா எடுத்துக்காதீங்க. நீங்க பாவம் சாபம்னு சொல்றதெல்லாம் என்னை ரொம்பவே யோசிக்க வைக்குது. இந்த காலத்துல போய்..."

அஜந்தா என்ன கேட்க வந்தாள் என்பது அவள் முடிக்கும் முன்பே லக்ஷ்மிக்கு புரிந்து விட்டது.

"போதும் நிறுத்திக்கோ... நீ என்ன கேக்கப் போறேன்னு எனக்கும் தெரியும், நீ இப்படி எல்லாம்தான் கேட்பே... நானும் ஒரு காலத்துல உன்னை மாதிரி யோசிச்சவதாம்மா... நீ என்ன படிச்சிருக்கே?"

"கம்ப்யூட்டர் சயின்ஸ்."

"நான் எம்.எஸ்ஸி. மேத்ஸ் முடிச்சவ..."

லக்ஷ்மியின் பதில் அஜந்தாவின் உச்சி மண்டையில் ஒரு மரங்கொத்தி போல கொத்து கொத்தியது போல் இருந்தது. அது அவள் கண்களில் அப்பட்டமாகத் தெரிந்தது.



"நான் ஒரு பிரைவேட் காலேஜில அசிஸ்டெண்ட் புரொபசரா நாலு வருஷம் வேலையும் பார்த்தவ..."

இது அடுத்த கொத்து!

"அம்மா உங்களைப் பார்த்தா தெரியலம்மா. ஸாரி..."

"தெரியாது... உருவத்தைப் பார்த்து ஏமாறுகிற உலகம்தானே இது!"

"ஸாரிம்மா..."

"நீ எதுக்கு ஸாரி கேக்கறே... உன் படிப்பு... உன் இளம் வயசு... இன்னைய காலகட்டம்... உலகத்தை வீட்டுக்குள்ள காட்டுற டி.வி. கண்டெடுத்தாலே ஒருவர் இருந்தாலும் பேச முடிஞ்ச செல்போன். இதெல்லாம் இப்படித்தான் கேட்க வைக்கும்... பேச வைக்கும்... விழிகள் திரையின் மீது... கைகளோ தூக்கம் கம்பிகளை வருடிக் கொண்டு என்று ஒரு கவிஞர் எழுதின மாதிரி என்னதான் விஞ்ஞான வாழ்க்கை நாம வாழ்ந்தாலும் அதை உணரும் மனசும் அதோட எண்ணங்களும் நம்ம கைகள்ல கிடையாதும்மா... நமக்கெல்லாம் தெரிஞ்ச விஷயத்தை விட தெரியாத விஷயங்கள் ரொம்ப அதிகம் இந்த பூமியில..."

கார் அதன் ஓட்டத்தில் சீரான வேகத்துடன் ஓடியபடி இருக்க, லக்ஷ்மி சொன்னது ஒரு குறிபார்த்து எறியப்பட்ட ஈட்டி போல அஜந்தா மனதில் செருகியது.

"நீங்க தெரியாத விஷயங்கன்னு எதைச் சொல்றீங்க?"

"எவ்வளவோ... தெரிஞ்சது ஒண்ணுமே இல்லை."

"எனக்கு கொஞ்சம் புரியற மாதிரி சொல்ல முடியுமா?"

''என் மனசு இப்ப என் மகனை நினைச்சு துடிச் கிட்டிருக்கு. இப்ப போய் நான் உனக்கு எதைப் பு வைக்க...''

''அவரை எத்தனை லட்சம் செலவானாலும் எ எம்.டி. காப்பாத்திடுவார்... நீங்க கவலைப்படாதீங்க.''

''அதெல்லாம் முடியாதும்மா... எப்ப அவன் பேச்சை கேக்கலையோ, எப்ப அவன் நம்ப வேண்டிய நம்பலையோ, எப்ப அவன் ஒரு பவித்ரமான விஷயத் அலட்சியப்படுத்தினானோ அப்பவே அவன் பா செத்துட்டான்.''

''இப்படி நீங்க பேசறதுதான் எனக்குப் புரியலை... அது என்ன சாபம்... யார் கொடுத்த சாபம்? எதனால அ சாபம் இப்படி துரத்துது?''

''நீ கேட்டு என்னம்மா பண்ணப்போறே... நா சொல்லி முடிச்ச உடனே அவ்வளவும் என் கற்பனைன்னோ, இல்லை என்னோட மனப் பிராந்தின்னோ சொல்ல முயற் பண்ணுவே...''

''இல்லம்மா... நான் அப்படி நிச்சய சொல்லமாட்டேன். நீங்க சொல்லப்போற விஷயத்துக் பின்னால் சூட்சமமா ஏதோ ஒண்ணு இருக்கு. நா கம்ப்யூட்டரை பற்றியும், மின்சாரம் தயாரிக்க பயன்பட விண்ட் மில்லைப் பத்தியும் மட்டும் யோசிக்கிற ஒ பொண்ணா இருக்க விரும்பலை... நீங்க சொன்ன மாதி வாழ்க்கைல நமக்கு தெரியாத விஷயங்களும் நிறையவே இருக்குன்னு நம்பி அவைகளை பத்தியும் தெரிஞ்சுக்க விரும்பறேன்... தெரிஞ்சுக்க மட்டுமில்ல. இந் விஷயத்துல நான் உங்க மகனுக்கு ஏதாவது உத முடியுமான்னும் யோசிக்கிறேன்...''



அஜந்தா சொன்ன பதில் லக்ஷ்மியை கொஞ்சம் நெகிழ வைத்தது. அவனை ஊன்றிப் பார்த்தாள். காரை டிரைவ் செய்தபடியே அவளும் கனிவாக லக்ஷ்மியைப் பார்த்தாள்.

லக்ஷ்மி அந்த சாபம் பிடித்த கதையைச் சொல்ல ஆரம்பித்தாள்.

''அஜந்தா... நான் சொல்லப் போற விஷயம் கதை இல்லை... ஒரு நடந்த சம்பவம். நான் இந்த வீட்டுக்கு கல்யாணம் ஆகி வந்த புதுசுல, அதாவது சரியா முப்பத்தைஞ்சு வருஷத்துக்கு முந்தி நடந்த ஒரு விஷயம். என் மாமனார் பேர் சிவஞானம்... அவர்தான் இந்த சாபம் பிடிச்ச விஷயத்துக்கு பின்னால இருக்கிற முக்கியமான நபர். என் புகுந்த வீட்டோட சொந்த ஊர் கரூர் பக்கமா வேலாயுதம்பாளையம்... காவேரி பாயற ஊர்! வெத்தல கொடிக்காலும், கரும்பு வயலும் கண் கொள்ளாக் காட்சி'' லக்ஷ்மி அப்படியே விவரணைகளோடு முப்பத்தைந்து வருடங்களுக்குப் பின்னால் செல்லத் தொடங்கினாள்!

வேலாயுதம்பாளையம்!

அந்த அதிகாலை வேளையில் வெற்றிலைகளை வாழை மட்டையில் வைத்து பண்டல் பண்டலாக கட்டி எடுத்துக் கொண்டு வந்து மெயின் ரோட்டின் ஓரமாக போட்டுவிட்டு வரப் போகும் பஸ்ஸுக்காக காத்துக் கொண்டிருந்தது ஒரு கூட்டம்.

மெல்லிய பனி... அதனூடே பஸ்ஸின் ஹெட்லைட் வெளிச்சம் சினிமா தியேட்டர் கியூவில் குறுக்கே புகப் பார்க்கும் அராத்து பேர்வழிகளைப் போல உள் நுழைந்து ஊடுருவியது பார்க்க ஒருவித அழகாக இருந்தது.

அந்த கூட்டத்தில் சிவஞானமும் இருந்தார்.

அவரது தோட்டத்து கொடிக்கால் வெற்றிலை கட்டுக்கள்தான் அதிகம் இருந்தன. வேலாயுதம்பாளையம் வரையில் அவர் வைத்ததுதான் சட்டம். ஊரின் தங்க மாரியம்மன் கோவிலுக்கு தலைவர் வேறு... பார்க்கவும் நல்ல தோரணையான உடற்கட்டு. எப்பொழுதும் வெற்றிலை குதப்பலான வாய்... கழுத்தில் ஒரு பருமனான தங்க சங்கிலி!

பார்க்கின்றவர்களும், வணக்கம் தலைவரே என்று மரியாதையாக ஒரு கும்பிடு போட்டுவிட்டுத்தான் சென்றனர். ஒரு பஸ்காரன் ஓரமாக நிறுத்தி அவரது அவ்வளவு பண்டல்களையும் பஸ் கூரைமேல் ஏற்றிக் கொண்ட பிறகுதான் பஸ்ஸை எடுத்தான்.

அது சேலம் போகும் பஸ்...! கூட்டமும் பிதுங்கி வழிந்து கொண்டிருந்தது. பஸ் புறப்பட்ட பிறகுதான் சிவஞானமும் கிளம்பினார். வழியிலேயே தங்க மாரியம்மன் கோவில்! புதிதாக எடுத்துக் கட்டுவதால் தட்டி அடைத்து சாரம் போடப்பட்டிருந்தது. பூசாரி சண்முகசுந்தரமும் அப்போதுதான் கோவில் கதவைத் திறக்க நடந்து கொண்டிருந்தார்.

சிவஞானம் தென்படவும் பணிவாக ஒரு கும்பிடு போட்டார்.

"என்ன பூசாரி கோவிலுக்கா?"

"ஆமாங்கய்யா... மணி ஆறாகப் போவுதுல்ல?"

"அதுவும் சரிதான்... நீங்க போங்க, நான் காவேரி ஆத்துல விழுந்து எந்திரிச்சிட்டு வரேன்."



என்றவர் அப்படியே படித்துறை பக்கமாக சென்றார். ஆற்றில் ஆடி வெள்ளம் ஓரளவு திரட்டலாக ஓடிக் கொண்டிருந்தது. படித்துறையில் இறங்கி தண்ணீரில் காலை வைக்கவும், உச்சந்தலை வரை ஒரு சிலிர்ப்பு பாய்ந்தது.

அதே வேகத்தில் ஒரு முழுக்கு!

இப்படி ஒரு நாள் ஒருவர் முழுக்கு போட்டபோது காலடியில் தட்டுப்பட்ட ஒரு கற்சிலைதான் தங்க மாரியம்மன் உருவச்சிலை... அவர் அதை தொட்டுத் தூக்கவும், வானில் மேகம் விலக்கிக் கொண்டு சூரியன் எட்டிப் பார்க்கவும் சரியாக இருந்தது. ஆற்றுக்கு குளிக்க வந்த அவ்வளவு பேரும் அப்படியே கைகளை கூப்பிவிட்டனர்.

அந்த தங்கமாரியை அப்படியே கொண்டு வந்து கரையோரமாக ஒரு வேப்பமரத்தடியில் வைத்து வணங்க ஆரம்பித்ததில் இருந்தே ஊரில் ஒருவித சுபிட்சம் வந்து விட்டது. விலை போகாமல் வீட்டோடு இருந்த அவ்வளவு கன்னிப் பெண்களுக்கும்கூட கல்யாணமாகி விட்டது... இதனால் ஊரே தங்கமாரியை தங்கள் குலதெய்வமாகவே பாவிக்கத் தொடங்கிவிட்டனர்.

அவளும் கேட்டவர்களுக்கு கேட்டதை எல்லாம் கொடுத்தாள்.

நான் என்னை நம்புகின்றவர்களுக்கு கை கொடுக்கும் தெய்வம் என்றும் நிரூபித்துக் கொண்டே இருக்கிறாள். சிவஞானமும் ஆற்றில் முழுக்குப் போட்டவராக தோளில் கிடந்த துண்டாலேயே துவட்டிக் கொண்டு வேட்டியையும் நனைத்து பிழிந்து கட்டிக் கொண்டு கோவில் நோக்கித்தான் நடந்தார்.

பூசாரி சண்முகசுந்தரமும் நடையைத் திறந்து விளக்கு போட்டு முடித்திருக்க, சுடர் விளக்கின் ஒளியில் தங்க மாரி முகம் பளிச்சென தெரிந்தது. உள்ளே நுழைந்த சிவஞானத்துக்குதான் முதல் தீபாராதனை... அப்படியே பூசாரி கொடுத்த விபூதி குங்குமத்தை நெற்றி நிறைய பூசிக் கொண்டார்.

''அப்புறம் பூசாரி... இன்னிக்கு நம்ம கோவில் கமிட்டி கூட்டம் பதினோரு மணிக்குதானே?''

''ஆமாங்கய்யா... இன்னிக்கு நம்ம சிங்கப்பூர்க்காரரு நம்ம ஆத்தாளுக்கு தங்கத்துலயே திரிசூலம் செஞ்சு தரப் போறதுதான் பெரிய அளவுல நாம பேச வேண்டிய விஷயமே...''

''பேசிருவோம்... அப்படியே நன்கொடை வசூலும், கட்டுமான விஷயமும், கும்பாபிஷேகத்துக்கான தேதின்னும் எல்லாத்தையும் நாம இன்னிக்கே தீர்மானிச்சு ஒரு முடிவுக்கு வந்துருவோம்...''

சிவஞானத்தின் ஒப்புதல் பூசாரி முகத்தில் ஒரு புன்னகையை உருவாக்கியது. சிவஞானமும் புறப்பட்டு விட்டார்... தெருவில் இறங்கி நடக்கும்போது ஒரு படகு கார் ஒன்று உரசிக் கொண்டு போனது. அதனுள்ளே அதே ஊரை சேர்ந்த அருணாசலம் பிள்ளை மகன் அரவிந்தன் தென்பட்டான்.

அரவிந்தனும் சிவஞானத்தின் மகன் கோவிந்தராஜனும் ஒரு வகுப்பு தோழர்கள்! கோவிந்தராஜன் அப்பாவுக்கு துணையாக கொடிக்காலில் வெற்றிலை பிடுங்கிக் கொண்டிருக்கிறான். அரவிந்தன் திருச்சி வரை போய் காலேஜில் எல்லாம் படித்து கார் வாங்கும் அளவு பெரியவனாகி விட்டான்...



அவனும் அந்த கார் சவாரியும், சிவஞானத்தை என்னவோ செய்தது. அந்த ஒரு சில நொடிகளில்தான் தன் பிள்ளையைச் சரியான திசையில் செலுத்தவில்லையோ என்று ஒரு கேள்வி தோன்றி கொஞ்சம் போலச் சுட்டது!

ஒரு பிள்ளைக்கு இரண்டு பிள்ளைகள்! கோவிந்தராஜன், வரதராஜன் என்று அவர்களுக்கும் ராஜநாமமாக பெயர் வைத்து விட்டால் போதுமா?

ராஜாக்களை போல வாழவைக்க வேண்டாமா...? தெருவில் போன ஒரு கார் சிவஞானத்தை நிறையவே கலைத்து விட்டது. அகத்தின் அழகுதான் எப்பொழுதும் முகத்தில் நன்றாகத் தெரியுமே...?

அதே தெருவில் எதிர்திசையில் கைவீசியபடி வாக்கிங் வந்து கொண்டிருந்தார் மாரிமுத்து முதலியார். சிவஞானத்தைப் பார்த்துவிட்டு, ''என்ன சிவஞானம்... என்ன உடம்புக்கு கிடம்புக்கு முடியலியா... ஏதோ செத்த பொணம் ஒண்ணு எழுந்திரிச்சு நடக்கற மாதிரி நடக்கிறியே?'' என்று சற்று கூர்மையாகவே கீறிவிட்டார்.

''ஒண்ணுமில்ல மாரிமுத்து... இந்த ஊர்ல பெருசா என்னத்த பொழச்சுப்புட்டேன்னு திடீர்னு ஒரு கேள்வி... அதான்.''

''இது என்னய்யா கூத்து... இப்ப எதுக்குயா இந்த கேள்வி உன் பொழப்புக்கென்ன...? ஊருக்குள்ள நீ ஒரு பெரிய மனுஷன்! வயல் வரப்புக்கு பஞ்சமில்லை... பெரிய வெத்தல வியாபாரி வேற... ஒரு புள்ளைக்கு இரண்டு புள்ளைங்க... நல்லா சிங்கக்குட்டிங்க மாதிரி... அவங்களும் நீ கிழிச்ச கோட்டை தாண்டறது கிடையாது...''

"எல்லாம் சரி... ஆனா அவங்களை நல்லா படிக்க வெச்சு பெரிய ஆளாக்கி பார்க்காம என்னை மாதிரியே வெத்தலை வியாபாரி ஆக்கிவிட்டேனே."

"அதான் ரெண்டு பேரும் ஹைஸ்கூல் வரை போய் படிச்சிருக்கானுங்களே... அஞ்சும் மூணும் எட்டுன்னு நல்லா தானே கூட்டிக் கழிக்கறாங்க..."

"இதெல்லாம் ஒரு படிப்பா... அருணாசலம் மகன் அரவிந்தன் எம்.ஏ. எம்.டெக்குன்னு பெரிய பெரிய படிப்பு படிச்சிட்டு உக்காந்த இடத்துல மாசம் லட்ச ரூபா சம்பளம் வாங்கறானாமுல்ல?"

"இப்ப இதான் உன் புகைச்சலுக்குக் காரணமா?"

"இதை ஏன்யா புகைச்சல்ங்கறே... இப்பதான் முழிச்சிக்கிட்டு பாக்கறேன்னு வைச்சுக்கோயேன்..."

"அட போப்பா... ஊர் பெரியவன் மாதிரியா இப்ப நீ பேசறே... ஏதோ சின்ன பையன் பேசற மாதிரி இருக்கு... நான் தெரியாமதான் கேக்கறேன்... இனிதானா உன் பசங்க படிக்கப் போறங்க... அதுக்கு ஒரு வயசு இருக்குல்ல..."

"நீ சொல்றதும் வாஸ்தவம்தான்... எல்லாத்துக்கும் ஒரு யோகம் வேணும்..."

"அத்த சொல்லு... ஆமா, நீ எதுக்கு இப்ப படிப்பு இல்லேன்னு கவலைப்படறே... இந்த காலத்துல பசங்க அறிவு வளர்ச்சிக்காகவா படிக்கிறாங்க? நிறைய படிச்சா நிறைய சம்பாதிக்கலாம்கறதுதானே அவங்க எண்ணம்?"

"அதனால...?"

"உன் மக்களை புது புது பிஸினஸ்ல இறக்கி விடு... அதுல அவங்க அம்பிக் குவிக்கட்டும். நாம் சிங்கப்பூர்க்காரன்



கூடதான் படிக்கலை... ஒண்ணாங்கிளாஸோ... ரெண்டாங்கிளாஸோ... ஆனா, இன்னிக்கு ஊர்லயே அவன்தானேப்பா கோடீஸ்வரன்."

தெருவில் வாக்கிங் போகிற போக்கில் சிவஞானம் மனதுக்குள் மாரிமுத்து நிறையவே ஆசைப் பட்டாசுகளைக் கொளுத்திப் போட்டுவிட்டுப் போய்விட்டார்.

ஒரு படகு காரை கண்ணால் பார்க்கப் போய் பற்றிக் கொண்ட நெருப்பு, இறுதியில் மகன்களை பிஸினஸில் இறக்குவதில் வந்து முடிந்து நின்றது!

## 8

புரிந்துகொள்ள முடிந்தால் புரிந்து கொள்ளுங்கள்.

உலகிலேயே உறுதியாகவும், தெளிவாகவும், இருக்க வேண்டியது மனம் ஒன்று மட்டும்தான்...!

பதினோரு மணி...!

தங்க மாரியம்மன் கோவில் முன்புற பிராகார மண்டபத்தில் கமிட்டிக் கூட்டம் தொடங்கியது.

சிவஞானம் கோவில் துண்டை மஞ்சளில் நனைத்து தலைப்பாகையாகக் கட்டிக் கொண்டிருந்தார். செயலாளர், பொருளாளர், கமிட்டி உறுப்பினர்கள் என்று ஒரு கூட்டமே திரண்டிருந்தது. முதலாவதாக உண்டியல் வசூல் கணக்கு சரி

பார்க்கப்பட்டது. பிறகு கோவில் கும்பாபிஷேகத்துக்கு தேதி குறிப்பது தொடர்பாகவும், அது தொடர்பாக ஒரு வாரத்துக்கு ஊரையே தடபுடல் ஆக்கிவிடுவது என்றும் தீர்மானம் போட்டு முடித்தனர்.

புதிதாக நவக்கிரகங்களுக்கு சந்நிதி கட்டுவது என்றும் அதை சிவஞானமே தன் உபயத்தில் செய்து தந்துவிட வேண்டும் என்றும் முடிவானது. அன்றைய மதிப்புக்கு நவக்கிரக சிலைகள், அதற்கான கல் மேடை... மேலே கூரை, சுற்றி வர பிளாட்ஃபாரம்... அதைச் சுற்றி மதில் சுவர் என்று ஒரு கணக்கு போட்டதில் ஒன்னேகால் லட்ச ரூபாய் தேவைப்பட்டது.

சிவஞானத்திடம் வாஸ்தவத்தில் அவ்வளவு பணம் இல்லை. இருந்தாலும் ஊர் பெரியவன், கோவில் கமிட்டி தலைவன் என்கிற வறட்டு கௌரவம் மாட்டி விட்டு விட்டது. அரைமனது கூட இல்லை. கால் மனதாக அதற்கு ஒப்புக் கொண்டவர், பேசும்போது மட்டும் கித்தாப்பாக "மொத்த கோவில் கும்பாபிஷேகத்தையே என் செலவுல நடத்தணும்னுதான் நினைச்சேன்... நீங்க எங்க விட்டாதானே?" என்றும் பேசினார். அவர் வெட்டியாக பேசுகிறார் என்று மற்றவர்களுக்கும் புரிந்தது.

நடுவில் சிங்கப்பூர்க்காரர் எனப்படும் ராமசுப்ரமணியன் தனது அம்பாஸடர் காரில் ஒரு பளபளப்பான ஜாதிக்காய் பலகையால் ஆன நான்கரை அடி நீள அரை அடி அகலப் பெட்டி ஒன்றோடு கூட்டத்துக்குள் நுழைந்தார்.

அவரை சிலர் எழுந்து நின்று வரவேற்றனர்.

அது சிவஞானத்துக்கு பிடிக்கவில்லை.

"காசு இருந்துட்டா கால்கழுவுன தண்ணியகூட குடிப்பாங்கப்பா..." என்று முனங்கிக் கொண்டார்.



ராமசுப்ரமணியனும் கும்பிடு போட்டுவிட்டு உட்கார்ந்தார். பெட்டியை முன் வைத்து திறந்தவர், கண்களைப் பறிக்கும் ஒரு தங்கத்தால் செய்யப்பட்ட திரிசூலத்தை அதில் இருந்து எடுத்தார். எல்லோர் கண்களிலும் சூரியனே புகுந்து கொண்டது போல ஒரு ஒளிர்வு.

நான்கடி உயரத்தில் நல்ல வேலைப்பாட்டுடன் ஒரு பக்கம் மாணிக்கக் கல்லும் மறுபக்கம் வைரமும் பதிக்கப்பட்டு ஜெகஜ்ஜாலமாக ஜொலித்தது அந்த தங்க திரிசூலம்!

"ஆத்தி... கண்ணைப் பறிக்குதே!"

"கண்ணு போடாதய்யா... சிங்கப்பூர்க்காரர் மனசு போலவே அவர் நம்ம கோவிலுக்கு உபயமா தரப்போற திரிசூலமும் ஜொலிக்குது பாரு..."

"ஐயா... நீங்க சும்மா ஏதோ பேச்சுக்குத்தான் சொல்றீங்கன்னு நினைச்சோம். என்னங்க இது... நெசமாலுமே கொண்டுகிட்டு வந்துட்டீங்களே."

"அவர் என்ன வெட்டிப் பேச்சு பேசற வெளக்கெண்ணெ பார்ட்டின்னு நினைச்சியா... ஐயா சொன்னா சொன்னது தான்."

கமிட்டிக்குள் உறுப்பினர்களிடம் விதம் விதமான பேச்சுக்கள்.

"மொத்தம் இதோட எடை மூணு கிலோ முந்நூத்தி நாப்பது கிராம். நல்லா திடமா இருபத்தி இரண்டு காரட் தங்கத்துல பண்ணது. அவ்வளவும் மலேசிய முத்திரைத் தங்கம். இன்னிக்கெல்லாம் ஒரு பவுன் மூவாயிரம் சில்லறை. கணக்குப் போட்டுக்குங்க... அந்தா இந்தான்னு

நாலுமத்திப் பதினஞ்சு பவுன் கணக்கு வருது... அதோட அந்த காராட்டுல வைரம், அதே அளவு மாணிக்கம் விலை மதிப்பே போட்டா..." என்று ஒருவர் தாடையை வருடிய படியே மனக்கணக்கு போட முயல, ராமசுப்ரமணியமோ சிரித்தபடி "பதினஞ்சு லட்ச ரூபா வரைல ஆச்சு... இப்ப எதுக்கு அந்த கணக்கெல்லாம்... ஆத்தா இந்த ஊர் ஆத்துல வந்தவ... இந்த ஊரையே வாழ வெச்சவ... இவளை கும்பிட்டுதான் நான் சிங்கப்பூருக்கு விமானம் ஏறுனேன். அங்க நான் தொட்டதெல்லாம் பொன்னாச்சு... அதான் எனக்கு கிடைச்சதுல ஒரு சிறு பங்குக்கு இந்த திரிசூலத்தை செஞ்சு காணிக்கையா கொண்டு வந்துருக்கேன். இது ஒரு ஆரம்பம்தான்... போகப் போக இன்னும் நிறையவே செய்யணும்கறதுதான் என் எண்ணம்!"

ராமசுப்ரமணியனின் தன்மையான பேச்சில் பக்தி மட்டுமல்ல, பணிவு, ஊர்ப்பாசம் என்று அனேக விஷயங்கள் தெரிந்தன. எல்லோருமே அவரை மிக மதிப்பாகவே பார்த்தனர்... சிவஞானத்தால் அதை தாள முடியவில்லை.

'காசு இருக்குதுன்னு ஒரு தங்க திரிசூலத்தை செஞ்சு கொடுத்துட்டு ஊரையே வளைக்கப் பாக்கறானே இவன்... விட்டா இந்த கோவிலுக்கும் அப்படியே ஊருக்கும், இவனே கூட தலைவனா வந்தாலும் வந்துடுவான்!' என்றும் திரும்பவும் தனக்குள் முணங்கிக் கொண்டார்.

அந்த திரிசூலத்தை அப்போதே தங்கமாரி கையில் வைத்து கற்பூர ஆரத்தியும் காட்டி அழகும் பார்த்தனர்.

"ஆத்தா உயரத்துக்கு தோதா நல்லா அம்சமா இருக்கு..." என்று விமர்சனமும் செய்தனர்.



"ஐயா... இன்னிக்கு தங்க திரிசூலம் கொடுத்த நீங்க நாளைக்கே ஆத்தாவோட கோபுரத்தையும் தங்க கோபுரமாக்கிடணும்" என்றார் ஒருவர்.

"அதான் என் அடுத்த திட்டமே...!" என்ற அவரை திரும்பவும் எல்லோரும் பெருமையாகப் பார்த்தனர்.

**வீ**டு திரும்பி வாசற்புறம் கிடந்த கட்டிலில் விழுந்த சிவஞானத்துக்கு யாரோ ரம்பத்தால் அவரைத் துண்டுத் துண்டாக அறுப்பது போலவே இருந்தது.

மூத்தவன் கோவிந்தராஜன் ஒரு குதிரை வண்டியில் லக்ஷ்மியுடன் இறங்கிய நிலையில் அவரைப் பார்த்தான்.

"எங்கப்பா போய்ட்டு வரே...?"

"பக்கத்துல டவுன் வரைக்கும் போய்ட்டு வர்றேன்பா... ஒரு நல்ல விசயம்."

"என்னப்பா..."

"லக்ஷ்மி இப்போ மாசமா இருக்காப்பா..."

"அப்படியா... எனக்கொரு பேரன் பொறக்கப் போறானா... பலே... பலே!"

லக்ஷ்மி அதைக் கேட்டு வெட்கமுடன் சிரித்துக் கொண்டே வீட்டினுள் சென்றுவிட, மகனை அருகில் அமர்த்திக் கொண்டார். ஒரு பெருமூச்சு விட்டபடி ஊன்றியும் பார்த்தார்.

"என்னப்பா, எதுக்கிந்த பெருமூச்சு?"

"ஒண்ணுமில்லப்பா... படகு மாதிரி கார்ல வந்து நீ இறங்குனா நல்லாயிருக்கும்... ஒரு குதிரை வண்டில போய் வந்து இறங்கறியேப்பா."

''அட, என்னப்பா நீங்க... கார் வாங்கற காலம் வராமலா போய்டும்?''

''காலம்லாம் தானா வராது கோவிந்தா. அதை நாமதான் வரவழைக்கணும்.''

''என்னப்பா சொல்றீங்க... உங்க முகமும் வாடியிருக்கே?''

''எல்லாம் உங்களைப் பத்துன கவலைதான்!''

''எங்களைப் பத்தியா?''

''ஆமாப்பா... நான்தான் வக்கில்லாம வெத்தலையை வெச்சு பொழைப்பு நடத்தறேன்னா நீங்களுமா?''

''ஏம்ப்பா... நம்ம தொழிலுக்கென்ன... நல்லா தானேப்பா நடந்துகிட்டிருக்கு?''

''என்னா நல்லா... ஒரு வருசம் நல்லா விளைஞ்சா மறு வருசம் போட்டுப் பாத்துடுது... ஆத்துத் தண்ணிக்கும் அந்த கர்நாடகாகாரனை நம்பிக்கிட்டு இருக்க வேண்டியிருக்கு...''

''இல்லப்பா, உங்களுக்குள்ள வேற ஏதோ சிக்கல்? அதான் நீங்க இப்ப இப்படி எல்லாம் பேசறீங்க...?''

''சிக்கல் இல்லடா... தெளிவுன்னு நினைக்கறேன்... நிமிர்ந்து நடக்கத் தெரியாதவன்லாம் கை நிறைய சம்பாதிக்கிறான். என் எதிர்லயே கார்ல வந்து இறங்கறான். கேட்டா, அந்த தங்கமாரி கொடுத்தான்கறான்...''

சிவஞானம் குமுறும் அந்த நொடியில் இளையவன் வரதராஜனும் ஒரு சைக்கிளில் வந்து இறங்கினான். வேட்டியை மடித்துக்கட்டி கொண்டே வந்து இருவர் முன்னாலும் நின்றான்.



''சரிப்பா... நீங்க கொஞ்சம் அமைதியா ஓய்வு எடுங்க... பிறகு பேசுவோம்.''

''அட, போடா... எனக்கு அமைதியே இனி கிடையாது. உங்கள நல்ல பெரிய நிலைல நான் பாக்கணும். அப்பதான் எனக்கு அமைதி.''

''என்னண்ணே... என்னாச்சு இவருக்கு?''

வரதராஜன் ஆரம்பித்தான்.

''ஒண்ணுமில்லடா... அப்பாவுக்கு ஊர் பெரிய வர்ங்கற தன் பெருமையும் பதவியும் தன்னைவிட்டுப் போய்டுமோன்னு ஒரு பயம் வந்துடுச்சு... அதை நேரா காட்டிக்க தெரியாம ஏதேதோ பேசறாரு.''

''நான்கூட கேள்விப்பட்டேண்ணே... அந்த சிங்கப்பூர்க்காரர் ராமசுப்ரமணியத்தை இந்த ஊருக்கு பிரசிடெண்ட்டாக்கி, அவரையே கோவிலுக்கும் தலைவராக் கிடணும்னு நிறைய பேர் ஆசைப்படறாங்கலாமுள்ள...''

''யாருடா... யாரு... எவன் அப்படிச் சொன்னவன்? நான் இருக்கும்போது எந்த நாய் என் இடத்துக்கு வர முடியும். என்னை என்ன கேனப் பயல்னு எல்லாரும் நினைச்சுட்டாங்களா?''

என்று சிவஞானமும் உக்கார்ந்த இடத்திலிருந்து சுண்டிவிட்டது போல எழுந்து நின்றார்.

''ஐயோ அப்பா... முதல்ல இப்படிப் பதட்டப்படாம உக்காருங்க... ஊருன்னு இருந்தா நாலுபேர் நாலு விதமா பேசத்தான் செய்வாங்க. நீங்க ஒண்ணு... டேய், வரதா... போடா போய் வேலையப் பாரு'' என்று கோவிந்தராஜனும் வரதராஜனை அங்கிருந்து விலக்கிவிட்டார்.

லக்ஷ்மி உள்ளிருந்தபடியே அவ்வளவையும் பார்த்து கொண்டே இருந்தாள். அவள் முகத்தில் சலன ரேகைகள். கோவிந்தராஜனும் சிவஞானத்தை விட்டு மெல்ல விலகி உள் நுழையவும் பார்த்தார்.

"என்ன லக்ஷ்மி... அப்பா பேச்சு உனக்கு இன்னிக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்குல்ல?"

"ஆமாங்க... ஆனா, இது தேவையில்லாத பயம்... அநாவசிய கவலை..."

"அப்படி இல்ல லக்ஷ்மி. இதே ஊர்ல மதிப்பா நடமாடியாச்சு. இப்படி காச இருக்கறதால ஒருத்தர் அப்பா இடத்தை பிடிக்க வரும்போது யாருக்கும் ஒரு பயம் வரத்தானே செய்யும்?"

"என்னங்க பெரிய இடம். மதிப்பும் மரியாதையும் தானா வரணுங்க. நாமா அதை தேடிப்போகக் கூடாது. அதே போல நேரம் காலம் வந்தா எதுவும் தானா நம்மைத் தேடி வரும். போகணும்னு இருந்தாலும் பிடிச்செல்லாம் வைக்க முடியாதுங்க."

லக்ஷ்மியின் பேச்சை தடுக்கும் வேகத்தோடு அவள் வாயில் கையை வைத்து பொத்திய கோவிந்தராஜன்,

"போதும். உபதேசம் பண்ணாம போய் வேலையைப் பாரு..." என்றபடியே விலகிச் சென்றான்.

அதைக் கேட்டபடி இருந்த சிவஞானத்துக்குள்ளே தீர்மானமாய் சில முடிவுகள்!



# 9

புரிந்து கொள்ள முடிந்தால் புரிந்து கொள்ளுங்கள்.

தெரிந்து நீங்கள் செய்யும் தவறுக்கு நீங்கள் தெரிந்தே தண்டனை அனுபவித்தாக வேண்டும்!

நள்ளிரவு நேரம்!

வாசலில் கட்டிலில் படுத்திருந்த சிவஞானத்திடம் உறக்கமில்லை. இரவில் சுருட்டுப் பிடிப்பது அவரது வாடிக்கை. கரிப்பு வாசனையோடு புகையும் வந்து கொண்டிருந்தது. லக்ஷ்மிக்கு நல்ல கூர்மையான நாசி. சுருட்டு வாசனையும் அவளுக்குப் பிடிக்காது. எனவே ஜன்னல் கதவை மூடவந்தவள் திகைத்துப் போனாள்.

சிவஞானம் மறைவாக யாருடனோ பேசிவிட்டு ஓசைப்படாமல் அவரோடு வெளியே எங்கோ புறப்பட்டுக் கொண்டிருந்தார். திரும்பிய லக்ஷ்மி எதிரில் கசகசப்பின் நிமித்தம் பனியனை அவிழ்த்தபடியே கோவிந்தராஜன்.

"என்ன லக்ஷ்மி... சுருட்டு வாடை பிடிக்காம கதவை மூடப் போறியா?"

"இல்லீங்க... அதுக்கு அவசியம் இல்லீங்க. உங்கப்பா யார்கூடயோ எங்கேயோ புறப்பட்டுப் போய்க்கிட்டு இருக்கார்..."

"என்ன சொல்றே நீ... இந்த ராத்திரியில எங்க போறாரு?"

கேள்வியோடு கோவிந்தராஜனும் வாசல் பக்கம் போய் நின்று பார்த்தார். அதற்குள் சிவஞானம் உருவம் மறைந்துவிட்டிருந்தது. கட்டிலில் படுக்கை மட்டும் விரிக்கப்பட்டிருந்தது! திரும்பி வந்த கோவிந்தராஜனிடம் பெருமூச்சு!

"என்ன பெருமூச்சு விடுறீங்க..."

"அப்பா ஏன் இப்படி தப்புத் தப்பா யோசிக்கிறார்னே தெரியல..."

"அவர் தப்பா யோசிக்கிறார்ங்கறது உங்களுக்கு தெரிஞ்சா சரி..."

"என்ன லக்ஷ்மி... இதான் சாக்குன்னு என்னை நீ ஆழம் பாக்கறியா?"

"அட, நீங்க ஒண்ணு... நான் யதார்த்தமாத்தான் சொன்னேன்..."

"சரி, சரி. படு... பொழுது விடியட்டும் பேசிக்கலாம்." என்று விளக்கை அணைத்துவிட்டு படுக்கையில் விழுந்தார் கோவிந்தராஜன்.

## விடிந்துவிட்டது!

தெருவில் பால்காரனின் சைக்கிள் மணி சப்தம் கேட்டு கண் திறந்த லக்ஷ்மி, வாசல் கதவைத் திறந்தபோது கட்டில் மேல் இன்னமும் எழுந்திராத நிலையில் சிவஞானம்! சாதாரணமாக இந்த நேரம் காவிரியாற்றில் குளித்தே முடித்திருப்பவருக்கு இன்று என்னாயிற்று...? விளக்குமாற்றை எடுத்து தெருவைக் கூட்டி முடித்து தண்ணீரும் தெளித்து கோலமும் போட்டு முடித்தாள்.



அந்த சப்தங்கள் கேட்டும் சிவஞானம் கண் திறக்கவில்லை. ஆச்சரியம் அதிகரித்தது. சர்க்கரையோடு தோளைத் தொட்டு மாமா என்றவளுக்கு கொஞ்சம் அதிர்ச்சியாகக்கூட இருந்தது. புரண்டு படுத்தவரிடம் இருந்து குப்பென்று சாராயவாடை..!

இரவு யாருடனோ போய் மதுவருந்திவிட்டு வந்திருக்கிறார்!

யூகித்தவள் உள்ளே சென்று கோவிந்தராஜனை எழுப்பி விடிந்தும் விடியாத அந்த காலைப் பொழுதில் விஷயத்தைக் கூறவும், "அடக்கடவுளே!" என்று கோவிந்த ராஜனிடமும் ஒரு அங்கலாய்ப்பு... அதிர்வு!

"என்னங்க இது புதுப்பழக்கம்... வெளிய தெரிஞ்சா என்னாகும்?"

"எனக்கே கேக்க சங்கடமாதான் இருக்கு லக்ஷ்மி. அவர் கண்ணு முழிக்கட்டும்... வெச்சுக்கறேன். கச்சேரியை..."

கோவிந்தராஜனின் கோபமும், அவர் கண் விழிக்கவும், அவர் மேல் பாய்ந்தது.

"இப்ப என்ன ஆயிடுச்சின்னு இப்படி எல்லாம் பண்றீங்க?"

"மனசு சரியில்லப்பா அதான்."

"மனசெல்லாம் நல்லாத்தான் இருக்கு... நீங்கதான் குழப்பிக்கிறீங்க..." சண்டை நடந்து கொண்டிருக்கும் போதே சிங்கப்பூர்க்காரரான ராமசுப்ரமணியன் ஊருக்கான பிரசிடெண்ட் எலெக்ஷனில் அன்னபோஸ்டாய் தேர்ந்தெடுக்கப்பட்டு ஊருக்குத் திரும்ப உள்ளார் என்கிற தகவலும் வந்து சேரவும்.

''அவன் என்னை ஒரு மூலையில உக்கார வெச்சுட்டுத் தான் விடுவான். எனக்கு இதுல சந்தேகமேயில்லை'' என்றபடியே வீட்டை விட்டு ஆவேசமாக எங்கோ கிளம்பிச் சென்றார். கோவிந்தராஜனுக்கும் அதற்கு மேல் பேச திராணி இல்லாமல் போய்விட்டது!

அன்று இரவும் ஜன்னலை சாத்தப் போன லக்ஷ்மிக்கு தூக்கிவாரிப் போட்டது. சிவஞானம் ஒரு போர்வையால் தலையைச் சுற்றி மூடியபடி யாரோ ஒரு கள்ளன் போல எங்கோ போனபடி இருந்தார்.

திரும்ப வந்து படுத்த போது மணி மூன்று!

சப்தம் கேட்டு எழுந்து பார்த்து நேரத்தையும் மனதில் குறித்துக் கொண்டாள் லக்ஷ்மி.

பொழுது விடியவும் கோவிந்தராஜனிடம் தவறாமல் போட்டும் விட்டாள்.

''போகட்டும் விடு... கேட்டா ஏதாவது கதை சொல்லுவார்...''

''அது எப்படிங்க... குடிச்சுபிட்டு இவர்பாட்டும் எங்கயாவது விழுந்து கிடந்தா நம்ம மானமுல்ல போகும்?''

''சரி, என்னை என்னதான் பண்ணச் சொல்றே?''

கோவிந்தராஜன் தீர்க்கமாகக் கேட்கும்போது சிவஞானமே அவர்களைப் பார்த்தபடி வந்துவிட்டார்.

''அப்பா...''

''என்னப்பா... உன் பொஞ்சாதி பகல்லயே தலையணை மந்திரம் ஓதறாளாக்கும்.''

''போதும்ப்பா... இவ கேக்கறதுல என்னப்பா தப்பு இருக்கு?''



''கவலப்படாதே... ஏதோ ஒரு நாள் மனசு சரியில்லைன்னு குடிச்சேன்... இனி அந்த பக்கமே போக மாட்டேன். அது மட்டுமில்ல, இப்ப நான் புதுசிவஞானம். என்னை யாரும் அசைக்க முடியாது.'' அவர் குரலில் ஒரு தனித் தெம்பும் தெரிந்தது...

அது மட்டுமல்ல... அன்று அவர் புது வேட்டி சட்டை என்று அணிந்து கொண்டு, கழுத்துக்கு தங்க சங்கிலியையும் தேடி எடுத்து அணிந்து கொண்டிருந்தார்.

தான் கட்டித் தருவதாக கூறிய நவக்கிரக மண்டபத்தையும், சந்நிதியையும் கட்டுவதற்கும் தயாராகி விட்டார். கொத்தனார் மேஸ்திரி என்று வரிசையாக வந்து விட்டுப் போயினர்.

அவரும் ஒரு நாள் கோவில் பூசாரியோடு சுவாமி மலை வரை போய் ஒன்பது கிரகங்களின் சிலைக்கும் ஆர்டர் கொடுத்துவிட்டு வந்தனர்.

ஊருக்குள்ளும் சிங்கப்பூர்க்காரர் ஊர் பிரசிடெண்ட் ஆக தேர்வு செய்யப்பட இருப்பதற்கான போஸ்டர்கள்! அதைப் பார்க்கும் போது சிவஞானம் முன்போல சிதி விழவில்லை. ஒரு நமுட்டு சிரிப்பு மட்டும் சிரித்துக் கொண்டார். லக்ஷ்மிக்கும் சரி, கோவிந்தராஜனுக்கும் சரி, அவர் மாற்றம் செயற்கையான ஒன்றாகத்தான் தெரிந்தது. வரதராஜனும் லக்ஷ்மியிடம், ''இந்த அப்பா போக்கையே புரிஞ்சுக்க முடியல அண்ணி...'' அவனும் தன் பங்குக்கு ஹார்மோனியம் வாசித்தான்.

ஒரு நாள், லக்ஷ்மி எதற்கோ பீரோவை திறந்தபோது கட்டுக்கட்டாய் ரூபாய் நோட்டுக்கள். அது மட்டுமல்ல, ஏராளமான தங்க பிஸ்கட்டுகளும் இருந்தன! ஒரு க்ஷணம்

நெஞ்சையடைக்க ஓடிவந்து கோவிந்தராஜனிடம் கூற கோவிந்தராஜனும் அதைப் பார்த்துவிட்டு, "ஒருவேளை கோவிலுக்கு வாங்கின தங்கமா இருக்கலாம்" என்றார்.

ஆனால், விவகாரமே வேறு...

கோவிலில் திடீரென்று கமிட்டிக் கூட்டம் கூட்டப்பட்டு ஒரு விவகாரமும் பெரிதாக வெடித்திருந்தது.

அவர்கள் நடுவில் சிங்கப்பூர்க்காரர் கோவிலுக்கு நேர்த்திக்கடனாக செலுத்திய தங்கத் திரிசூலம்!

சுற்றி எல்லோரும் அமர்ந்தபடி இருக்க, ஒரு ஆசாரி அந்த திரிசூலத்தில் பல பாகங்களை உரசிப் பார்த்துவிட்டு "இது தங்கமில்ல... அவ்வளவும் செம்பு..." என்றபோது கூட்டமே உறைந்து போய்விட்டது.

சிங்கப்பூர்க்காரர் எனப்படும் ராமசுப்ரமணியன் "இல்ல... இது பொய்... இது தங்கம் இல்லன்னா... இது நான் கொடுத்த திரிசூலமா இருக்காது. அது வேற, இது வேற..." என்றார்.

"அப்ப தங்க திரிசூலம் தானா செம்பா மாறிடிச்சா?" என்று இடக்காக ஒரு கேள்வி கேட்டார் சிவஞானம். அவர் கையில ஒரு மொட்டைக் கடுதாசி அதில், 'தங்கமுலாம் பூசிய திரிசூலத்தை தங்க திரிசூலம் என்று தந்திருக்கிறார் சிங்கப்பூர்க்காரர். உரசிப் பாருங்கள் உண்மை தெரியும். இப்படிக்கு உண்மை விளம்பி' என்று எழுதப்பட்டிருந்தது.

ஒரு மொட்டைக் கடுதாசியை நம்பி கமிட்டியை கூட்டுவதா என்று கேட்டவர்கள் எல்லாம் வாயைப் பிளந்துவிட்டனர்.

சிங்கப்பூர்க்காரர் அசரவில்லை.



"இந்த கோவில்ல ஏதோ தப்பு நடந்திருக்கு. நான் தங்கம் வாங்கி ஆசாரிகிட்ட கொடுத்து செய்ததுக்கு ஆதாரத்தை காட்டறேன்... இந்த திரிசூலத்தை யாரோ மாத்திட்டாங்க... மூணேகால் கிலோ தங்கம் திருட்டு போயிருக்கு... இது சத்தியம்" என்று ஆவேசமாக அவர் சொல்லவும், கூட்டத்தில் ஒருவர் கவனம் பூசாரி பக்கம் திரும்பியது.

"என்ன பூசாரி... நீ ஏதாவது திருவிளையாடல் பண்ணிட்டியா?" என்று கேட்கவும், பூசாரிக்கு உடம்பெல்லாம் நடுங்கி வியர்த்துக் கொட்டத் தொடங்கிவிட்டது.

"ஐயா... வாயக்கழுவுங்க! நான் ஆத்தாளுக்கு தங்கத்தை கொடுக்க ஆசைப்பட்றவன். எடுக்கறவன் கிடையாது" என்றார்.

"அப்ப ரெண்டு நாளா தங்கம் செய்யற ஆசாரியோடயே சுத்திக்கிட்டிருந்தீங்களே... அது எதுக்காக?" என்று அதே நபர் கேட்கவும், பூசாரிக்கு கிறுகிறுவென்று வந்துவிட்டது.

"நான் சுத்தல... அவர்தான் வம்பா என்கூட வந்து வந்து பேசினாரு."

"பேசினாரா... உனக்கு அஞ்சு பவுன்ல சங்கிலிய கொடுத்து அரை விலை கொடுத்தாகூட போதும்னு சொல்லல... நீயும் சரின்னு வாங்கிக்கல..."

"ஆமாங்கய்யா... ஒரு அவசர செலவு, பணம் தேவைப்படுது... என்கிட்ட சங்கிலிதான் இருக்கு, நகை செய்யும் போது சேதாரமாகற தங்கத்தை ஒண்ணா சேர்த்து செஞ்சதுன்னு சொன்னதால நானும் நம்பிட்டேன்."

''யார்கிட்ட கதை விடறே... நீதான் திரிசூலத்தை திருடியிருக்க... ஊரை ஏமாத்த செம்புல செஞ்சு முலாமும் பூசிவெச்சுட்டே... இதை எவனோ கவனிச்சு மொட்டை கடுதாசியும் எழுதிப் போட்டுட்டான்.''

''ஐயோ... ஐயோ... இது அநியாயம்க... அடுக்காதுங்க... நான் ஒரு பாவமும் அறியாதவங்க.''

''போதும்யா... உன் வீட்டைக் குடைஞ்சா தெரிஞ்சிட்டுப் போகுது.''

விஷயம் எங்கேயோ ஆரம்பித்து எப்படியோ போனது. பூசாரி வீட்டில அரிசிப் பானையில் இருநூறு கிராம் தங்க பிஸ்கட்டுகள் இருந்தன...!

அதன்பின் பூசாரியின் எந்தப் பேச்சும் எடுபட வில்லை. கமிட்டியினர் போலீஸ் கம்ப்ளைண்ட் கொடுக்க, பூசாரியும் கைது செய்யப்பட்டு தெருவே பார்க்க இழுத்துச் செல்லப்பட்டார். இங்கெல்லாம் சிவஞானம், ''இந்தக் காலத்துல யாரை நம்பறதுன்னே தெரியல... சிங்கப்பூர்க்காரர் பொய் சொல்றாரா... இல்ல, இந்த பூசாரிதான் தப்பு பண்ணிட்டானான்னு ஒரு எழவும் புரியல... ஹூம். அந்த தங்கமாரிக்கு சக்தியிருந்தா அவதான் வந்து இதுக்கு ஒரு நல்ல தீர்ப்பு சொல்லணும்'' என்று வக்கணையாக பேசமட்டும் செய்தார்.

கேட்டுக் கொண்டிருந்த லக்ஷ்மி முகம் கறுத்துப் போனது. கோவிந்தராஜனை தனியே இழுத்துக் கொண்டு போய் காதைக் கடிக்கத் தொடங்கினாள்.

''உங்கப்பா நல்லா நடிக்கறாரு... இவர்தான் திருட்டுத்தனம் பண்ணியிருக்காரு! தினம் நடு ராத்திரியில வெளிய போய்ட்டு வந்ததெல்லாம் அதுக்குத்தான்...''



''சத்தம் போடாதே... எதை வெச்சு இவ்வளவு திடமா சொல்றே?''

''எங்க என் முகத்தை பார்த்து சொல்லுங்க பார்ப்போம்... உங்கப்பா தப்பு பண்ணலைன்னு.''

''அது... அது...''

''எதுங்க... பீரோல திடீர்னு தங்க பிஸ்கட்டுங்க எப்படிங்க வந்துச்சு?''

''லக்ஷ்மி கொஞ்சம் மெல்லப் பேசு... அப்பா காதுல விழுந்துடப் போகுது'' என்று கோவிந்தராஜன் சொல்லி லக்ஷ்மி தன் குரலை தழைத்துக் கொள்ளும் முன்பே சிவஞானம் அவர்களுக்கு நடுவில் முறைத்தபடி வந்து நின்றார்.

''அப்பா...''

''போதும்டா... என்ன சொல்றா உன் பொண்டாட்டி, என்னைக் குத்தம் சொல்றாளா?''

''சூழ்நிலை அப்படியும் இருக்குதேப்பா?''

''உங்களுக்கு எதுக்கு இந்தப் பேச்சு?''

''அப்பா...''

''போடா... போய் கொடிக்கால் வேலையை நீ பார்... அம்மாடி! அடுப்படி சமாசாரத்தை தவிர, வேறு எதையும் நீ பேசக்கூடாது.''

''இப்படிச் சொன்னா எப்படிப்பா... நாளைக்கு உங்களுக்கு ஏதாவது ஆயிட்டா?''

''எதுவும் ஆகாது... எங்க எதை எப்படி பண்ணணும்னு எனக்கு நல்லா தெரியும். நான் எதை

செய்தாலும் அதுல உங்க நல்லதும் சேர்ந்துதான் இருக்கும்... அதை மறந்துடாதீங்க.''

''இப்ப நான் பயப்படறதே அதுக்குத்தான். நீங்க செய்யறதுல நல்லது இருந்து அது எங்களைச் சேர்ந்துட்டா பிரச்சினை இல்லை. பாவம் இருந்து அது எங்களைத் தூத்துனா...''

''பாவமாவது புண்ணியமாவது... எல்லாம், புத்திதான்! சிங்கப்பூர்க்காரன் பாவம் பண்ணலைன்னு உனக்குத் தெரியுமா? நாமக்கல் பக்கமா எருமப்பட்டில அவனுக்கு ஒருத்திக்கு ரெண்டு வைப்பாட்டி இருக்காளுங்க. சிங்கப்பூர்லயும் ஒழுங்கா தொழில் பண்றதா எனக்குத் தெரியல... கடத்தல் பேர்வழின்னும் பேசிக்கிறாங்க... அவன் சாமிக்கு பண்றேன்னு சொல்றதெல்லாம் ஊரை ஏமாத்த...''

''அடுத்தவங்கள பத்தி நமக்கு எதுக்கு... நாம நல்லபடியா இருக்கறதுதான் நமக்கு நல்லது. அதோட தங்கமாரி சக்தி வாய்ஞ்சவ... அவகிட்ட தப்பு பண்றது பெரிய ஆபத்துலதான் முடியும்.''

''அப்படி அவளுக்கு சக்தி இருக்கறது நிஜம்னா இந்த ஊர்ல ஒரு தப்புகூட நடக்காது. கமிட்டி மெம்பர்ல முக்காலே மூணுவீசம் பேர் எல்லா தகிடுதத்தமும் பண்றவங்கதான்...''

சிவஞானமும் துளிகூட சளைக்கவில்லை. லக்ஷ்மிக்கும் ஓய்ந்து போய்விட்டது. கோவிந்தராஜன் மட்டும்,

''அப்பா! இவ்வளவு நாரம் நீங்க பேசினதுல இருந்தே நீங்க தப்பு பண்ணிட்டீங்கன்னு நல்லா தெரியுதுப்பா...



உங்களுக்கு சிங்கப்பூர்க்காரர் மேலதான் கோபம், வருத்தம் எல்லாம். பூசாரி என்ன தப்பு பண்ணாருப்பா?''

''இந்த பூசாரிதான் அந்த ஆள்கிட்ட தங்கத்துல திரிசூலம் செய்து தாங்கன்னு சொன்னவனே... அதோட அவன் மகனை சிங்கப்பூர் அனுப்ப இந்த ஆளுக்கு ஜால்ரா போட்டான். அங்கங்க, சிங்கப்பூர்க்காரய்யா ஒருத்தர் போதும், கோவிலை அவரே எடுத்துக் கட்டிடுவாருன்னும் பேச ஆரம்பிச்சான். அதான் அவனுக்கும் சேர்த்து ஆப்பு வச்சேன்.''

''அப்ப அந்த ஆசாரி உங்களுக்கு உடந்தையா?''

''ஆமாம்... சரி, சரி. இதுக்கு மேல என்னை எதுவும் கேட்காம நீங்க உங்க வேலையைப் பாருங்க... இந்த ஊர்ல இனி எப்பவும் ஒரே பெரிய மனுஷன்தான்! அது நான்தான்...!''

சிவஞானம் கொஞ்சம் திமிராக கர்ஜனையே புரிந்து விட்டு விலகிப் போனார்.

லக்ஷ்மி தலையில் கை வைத்துக் கொண்டு ஒரு மூலையில் போய் உட்கார்ந்தாள். சிறிது வெளியே போனவர், திரும்பி வந்தார். எல்லோரையும் ஒரு பார்வை பார்த்தார். குறிப்பாக லக்ஷ்மியை.

''அம்மாடி, மருமவளே... இங்க நமக்குள்ள பேசிக்கிட்டது. வெளிய போச்சுன்னா... இந்த குடும்பத்து மானம் மட்டுமில்ல. என் உசுரும் அடுத்த நொடியே போயிடும்... ஞாபகம் இருக்கட்டும்'' என்று ஒரு செல்ல எச்சரிக்கை அவரிடம்!

## 10

புரிந்துகொள்ள முடிந்தால் புரிந்து கொள்ளுங்கள்.

நாலு பேர் பார்க்க நீங்க செய்யும் ஒரு தப்பை விட, யாரும் பார்க்காத நிலையில் ரகசியமாக நீங்கள் செய்யும் தவறுதான் உங்களை அதிகம் பாதிக்கும்!

பூசாரியை வக்கீல் ஜாமீனில் அழைத்து வந்திருந்தார். போலீஸில், எங்கே தங்கம், எங்கே தங்கம் என்று கேட்டுக் கேட்டு அடித்ததில் உடம்பெல்லாம் கன்றிப் போயிருந்தது. பேசக்கூட அவரிடம் சக்தி இல்லை. ஜாமீனில் வெளியே வந்தவரால் சரியாக நடக்கக்கூட முடியவில்லை. தட்டுத்தடுமாறி கோவிலுக்குத்தான் முதலில் சென்றார்.

''ஆத்தாளுக்கு யார் பூஜை செய்தது?'' என்று கேட்ட போது, பக்கத்து ஊர் கோவில் பூசாரி ஒருவர் மெல்ல முன் வந்தார்.

''ஐயா... ஆத்தாளை விட்றாதீங்க... ஒரு வேளை பூசை கூட தவறிடக்கூடாது... எங்கம்மா ரொம்பவே பெரியவ... எனக்கு இப்படி ஆனதுகூட நான் எப்பவோ செஞ்ச பாவத்தாலதான்... எனக்கு இப்பகூட ஆத்தா மேல ஒரு வருத்தமும் இல்லை. அவ என்னைக் கைவிட்டுப் டான்னுல்லாம் நான் நினைக்கல... ஆனா, ஒண்ணு. நான் ஒரு பாவமும் அறியாதவன். என் மேல பழி போட்டு தப்பு பண்ணது யாருன்னும் எனக்குத் தெரியும். பாவம் அவர்...



தேன்கூட்டுல கையை வெச்சுட்டார். அதுக்கு உண்டானதை அவர் அனுபவிச்சே தீருவார்...

இதை சொல்லத்தான் வந்தேன். கத்தி எடுத்தவனுக்கு கத்தியாலதான் முடிவுன்னு சொல்வாங்க... இங்க திரிசூலம் எடுத்தவங்களுக்கும் திரிசூலமே பதில் சொல்லும்... சொல்லணும்... சொன்னாதான் கோவில் விஷயத்துல தப்பு செய்ய நினைக்கறவங்களும் யோசிப்பாங்க...

இதான் இந்த தாய்கிட்ட என் வேண்டுதல்!

இவ ஓடற ஆத்துல அடிச்சுக்கிட்டு வந்தவ!

அந்த ஆத்துலயே நானும் சமாதியாகிடப் போறேன். இதுக்கு மேல நான் உயிர் வாழறதுலயும் அர்த்தம் இல்லை. திரும்பவும் சொல்றேன்... என் தாயை நல்லபடியா பார்த்துக்கோங்க... நான் வர்றேன்.''

என்ற பூசாரி விறுவிறுவென்று காவேரி ஆற்றை நோக்கி நடக்கவும், புதிய பூசாரிக்கு வயிற்றை கலக்கிவிட்டது.

அவரும் பின்னே ஓடினார்.

''ஐயா நில்லுங்க... மனுஷங்களுக்கு சோதனை வர்றது சகஜம். அதுல எதிர்நீச்சல் போட்டு ஜெயிச்சு மேல வரணும்க... நில்லுங்க... நில்லுங்க...''

ஆனால், அந்த பூசாரி நிற்கவில்லை.

ஆற்றிலும் ஆடி வெள்ளத்தின் திமிரான ஓட்டம்.

கரையோரமாக ஊர் ஜனங்கள்... பூசாரியும் வேக வேகமாக நடந்து வருவதைப் பார்த்து எல்லோரிடமும் சற்று விதிர்ப்பு.

ஒருவர் சற்று அவசரப்பட்டு, "இந்த காலத்துல சாமியார்ங்ககிட்டயும், பூசாரிங்ககிட்டேயும் ஜாக்கிரதையா இருக்கணும். இல்லாட்டி அவ்வளவுதான்" என்று பூசாரி காதில் விழுவது போல ஜாடை பேச, பூசாரிக்கு தொப்புளில் கத்தி முனை ஏறியது போல் இருந்தது.

நிலம் அதிர நடந்து வந்தவர், அவர் அருகில் நின்று "ஜாக்கிரதையால்லாம் இருக்க வேண்டாம்யா... உயிரோட நான் இருந்தாதானே உங்களுக்கு அந்த பாவம், கவலை எல்லாம்?" என்று கேட்டபடியே விறுவிறுவென்று ஆற்றுக்குள் இறங்கியவர், நடு ஆற்றை நோக்கி நடந்தார். அதற்குள்ளேயே உடம்பு இழுபட்டு மூழ்கியும் போனது.

கரையோரமாக பார்த்தபடி இருந்தவர்கள் கண்களில் எல்லாம் இமைக்கக்கூட முடியாதபடி ஒரு ஸ்தம்பிப்பு. புதிய பூசாரி மட்டும் கண்களில் பெருகிய கண்ணீரை துடைத்துக் கொள்ளக்கூட தோன்றாமல் அப்படியே மண்டி போட்டு விட்டார்.

பூசாரி ஆற்றோடு போன அந்த அதிர்வான விஷயம் சிவஞானத்தை அடைந்தபோது, அவருக்கே சற்று சுருக் கென்றுதான் இருந்தது. எல்லாம் தொடிகள்தான் சுதாரித்துக் கொண்டவர்,

"பூசாரி ஒரு வகைல மானஸ்தன்... அதான் தன் தப்புக்கு தானே தண்டனை கொடுத்துக்கிட்டிருக்கான்..." என்று அதற்கொரு புதிய பொருளை எடுத்துக்கூறவும், சிலர் அதை நம்பி அப்படியே ஊருக்குள் பரப்பவும் செய்தனர்.

பார்த்துக் கொண்டே இருந்த லக்ஷ்மிக்கு நெஞ்சமே பற்றி எரிந்தது. ஒரு திருட்டு மட்டும் என்று இருந்த கணக்கு எகிறி ஒரு கொலையையும் அது செய்துவிட்டதாக



கருதினாள். அப்போது அங்கே அடுத்தபடியாக ஒரு ஆவேசமான சம்பவமும் நிகழத் தொடங்கியது.

பூசாரியின் மனைவி சிவஞானத்தை தேடி வந்திருந்தாள். அவளிடம் நீதிகேட்டு சென்ற கண்ணகி போல தலைவரி கோலம். அவளை சிவஞானமும் எதிர்பார்க்கவில்லை.

"ஐயா... என் புருஷன் உங்களுக்கு என்ன கெடுதல்யா செய்தாரு...? அவரை இப்படி ஆக்கிட்டீங்களே... செத்த உடம்பைக் கூட பார்க்க முடியாதபடி அவர் தண்ணியோட தண்ணியா போகும்படி செய்துட்டீங்களே... நீங்க நல்லா இருப்பீங்களா? உங்க தலைமுறை நல்லா இருக்குமா?" என்று கேட்டவளை சிவஞானமும் சும்மா விடவில்லை.

"ஏய்... இனி ஒரு வார்த்தை நீ பேசக்கூடாது... வந்த வழியே திரும்பிப் போயிடு... உன் புருசன் நேர்மையா இருந்திருந்தா கோர்ட்ல என்மேல கேஸ் போட்டு என்னை சந்திச்சிருக்கணும். எப்ப ஆத்தோட போனானோ அப்பவே அவன் தன் தவறை ஊர் அறிய ஒத்துக்கிட்டதாதான் அர்த்தம்...

நீ இங்க வந்து என்னைக் குத்தம் சொல்றியா?" சிவஞானம் எதிர்கேள்வி கேட்க, அவருக்கு வக்காலத்து வாங்க கோவிந்தராஜனும், வரதராஜனும்கூட களத்தில் இறங்கினார்கள்.

"இதோ பார்... உனக்கு பிழைக்க வழி இல்லாட்டி, ஏதாவது உதவி செய்யுங்கன்னு நேரா கேளு... அத்தவிட்டுட்டு இப்படி எங்கப்பா மேலபழி சொன்னா, அப்புறம் நீயும் கம்பி எண்ண வேண்டியிருக்கும்" என்றான் கோவிந்தராஜன்.

"இவகிட்டதான் தங்கமும் இருக்கும். எங்க அதை தேடிக்கிட்டு எல்லாரும் தன் வீட்டுக்கு வந்துடுவாங்க னோன்னு இவ முந்திக்கிட்டு வந்து இங்க நாடகம் போடறா'' என்று வரதராஜனும் சேர்ந்து கொள்ள, லக்ஷ்மிக்கு மயக்கமே வந்துவிட்டது. அதே வேளையில் பூசாரி மனைவியும் நெருப்பை மிதித்தது போலானாள்.

"என்னங்கடா... அப்பனுக்கு காவலா நின்னு பேசறதா நினைப்பா உங்களுக்கு... இப்ப சொல்றேன்டா... என் புருஷன் கூட உங்களைத் தேடி வந்து சாபம் போடல... ஆனா நான் சாபம் போடறேன். நீங்க யாருமே நல்லா இருக்க மாட்டீங்க... உங்களுக்கு நல்ல சாவும் கிடையாது. தங்கத்துக்காக நீங்க களவாண்ட அந்த திரிசூலம் உங்களைத் துரத்தித் துரத்தி கொல்லும். அந்த தங்கமாரிக்கு சக்தி இருக்கிறது சத்தியம்னா... என் புருஷன் ஒரு தப்பும் பண்ணலேங்கறதும்... தப்பு பண்ணது நீங்கதாங்கறதும் உண்மைன்னா இந்த கலியுகத்துல நீங்க நிச்சயமா தண்டிக்கப்பட்டே தீருவீங்க... உங்களுக்குக் கிடைக்கிற தண்டனை ஊருக்கே ஒரு பாடமா மாறியே தீரும். இது சத்தியம்'' என்றபடி கை நிறைய மண்ணை வாரித் தூற்றியவள் அப்படியே திரும்பி ஓடினாள்.

அவள் அப்படி ஓடிச் சென்ற பத்தாவது நிமிடத்தில் கோவில் பலி பீடத்தின் முன் உள்ள திரிசூலத்தால் அவள் தன்னை மாய்த்துக் கொண்டதாக தகவல் வந்தது.

அதைக் கேட்டு கோவிந்தராஜனும், வரதராஜனுமே கூட ஸ்தம்பித்து சிலையாகி விட்டனர்!



## 11

புரிந்துகொள்ள முடிந்தால் புரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் தவறுகளுக்கான தண்டனையை கடவுள் உங்களுக்கு அளிப்பதில்லை. நீங்கள்தான் அளித்துக் கொள்கிறீர்கள்... அதற்கேற்ற சூழலை உங்கள் எண்ணங்களால் உருவாக்கி!

அஜந்தாவும் கிட்டத்தட்ட ஸ்தம்பித்திருந்தாள்!

நடந்தவைகளை ஒரு திரைப்படம் போல சொல்லி முடித்திருந்த லக்ஷ்மியிடம் சன்னமாய் ஒரு ஆசுவாசம்!

காரும் ஆஸ்பத்திரி முகப்பில் ஒரு மரத்தடியாய் பார்த்து தேங்கி நின்றிருந்தது.

காரைவிட்டு இருவருமே கிட்டத்தட்ட உயிர் பெற்ற பொம்மைகளைப் போல இறங்கினர்.

லக்ஷ்மி முகத்தில் உயிரே இல்லை. உதடிரண்டும் "அவன் இந்த முறை நிச்சயமா செத்திருப்பான்... ஏன்னா அவனுக்கும் அவங்க தாத்தா போலவேதான் புத்தி...'' என்று முணுமுணுத்தது.

"இல்லம்மா... உங்க பிள்ளை அப்படிப்பட்டவர் இல்லை. அவர் மூட நம்பிக்கைகளுக்கு மட்டும்தான் எதிரானவர்'' என்றாள் அஜந்தா.

"எதும்மா மூட நம்பிக்கை... அந்த பூசாரியும், அவர் மனைவியும் செத்த பிறகு, கோவில் கோபுர சாரம் சரிஞ்சதுல

கீழ விழுந்து அங்க இருந்த திரிசூலம் வயித்துல பாய்ஞ்சு செத்த என் மாமனார் சாவும், ஓடற லாரியில் இருந்த இரும்புக் கம்பிகள்ள மிகச்சரியாக மூணு கூரான கம்பிகளை தேடிப்போய் குத்திக்கிட்டு செத்த என் கணவர் சாவும், ஒரு கட்டடம் கட்டும் போது, கட்டுமானம் தளர்ந்து கீழ விழுந்து அங்கே கிடந்த பில்லர் கம்பிகளால வயிறு கிழிஞ்சு செத்துப் போன என் கொழுந்தன் சாவும் மூட நம்பிக்கையைச் சேர்ந்ததா?''

''நிச்சயமா இல்லை... இதுக்கு பின்னால ஒரு சத்திய ஆவேசம் இருக்கு... ஒரு தர்மத்தோட கைட் லைன் இருக்கு. மனித மனத்தோட சக்திக்கு வானம்தான் எல்லைன்னு பல அறிஞர்கள் சொல்லி கேட்டிருக்கேன். நீங்க சொன்ன சம்பவத்துல நான் அதை சம்பவ பூர்வமா பாக்கறேன்...''

''நீ எப்படிப் பார்த்தா என்ன... என் மகனையும், அந்த சாபம் விடப் போறதில்லை. அதான் ஒரு தடவை தப்பிச்சான். இரண்டாவது தடவை தேடிப்போய் மாட்டியிருக்கான்... இதை எல்லாம் பாத்து கண்ணீர் வடிக்கணும் கறதுதான் என்னோட தலை எழுத்து போல இருக்கு...''

''இல்லம்மா... எந்த ஒரு விஷயத்துக்கும் இன்னொரு பக்கம் உண்டும்மா... உங்க பையன் பிழைப்பார். அதுக்கு நான் உறுதி. ஆமா அந்த தங்கமாரி கோவில் வேலாயுதம் பாளையத்துலதானே இருக்குன்னு சொன்னீங்க...?''

''கோவில் அங்கேதான் இருக்கு... அதுவும் பல மடங்கு சக்தியோட! எனக்குதான் அங்க போக தைரியமும் இல்ல... தகுதியும் இல்ல.''

''நீங்க தப்பு பண்றீங்க... சரி, விடுங்க! நான் உங்க சார்பா அந்த கோவிலுக்கு போறேன். ஒரு திருத்தத்தை நான் அங்கே இருந்து ஆரம்பிக்கிறேன்.''



''ஐயோ! உனக்கு எம்மா தலைஎழுத்து... நீ என்னதான் செய்ய ஆசைப்பட்டாலும் இறந்துபோன அந்த பூசாரியோ, இல்ல அவர் மனைவியோ வரவா போறாங்க... அது நடக்காத நிலைல இது மட்டும் எப்படி நடக்க முடியும். ஏதோ என் மகன் இவ்வளவு நாள் பிழைச்சுக் கிடந்தானே... அதுவே ரொம்ப பெருசும்மா...''

லக்ஷ்மியின் குரலில் தெறித்த உறுதியை அஜந்தாவால் உடைக்க முடியவில்லை.

அதே நிலையுடன் கஜேந்திரன் கிடந்த ஐ.சி.யூ வார்டுக்குள் நுழைந்தபோது, தாமஸ் எதிரே சோகம் கப்பிய முகத்துடன் நின்று கொண்டிருந்தார்.

''சார்...''

''வாங்க அஜந்தா... வாங்கம்மா...''

''அம்மா! சார்தான் எங்க ஜெனரல் மேனேஜர்.''

''நல்லா தெரியுமே... அதான் முதல் தடவை அவன் குத்துப்பட்ட போதே பார்த்தேனே...''

''அம்மா என்னை மன்னிச்சிடுங்க... உங்க மகனுக்கு இப்படி ஒரு ஆபத்து ஏற்படும்னு கொஞ்சம்கூட நான் நினைக்கல... அந்த திரிசூலமெல்லாம் என் நினைவுலயே அப்ப இல்லை.''

''தெரியும்ங்க... விதி தன் கடமையைச் செய்யும் போது அது எல்லார் கண்ணையும் ரொம்ப அழகா கட்டும். நீங்க என்ன பண்ணுவீங்க?''

லக்ஷ்மி சாதாரணமாக எடுத்துக் கொண்டு சாதாரணமாகவே பதிலைக் கூறவும் தாமஸுக்கு அது சற்று ஆச்சரியமாக மட்டுமின்றி, வருத்தாகவும் இருந்தது. லக்ஷ்மி,

தாமலை உலுக்கி எடுக்கப் போகிறாள் என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்திருந்தனர். ஒரு வேளை அஜந்தா உரிய முறையில் சமாதானம் செய்துவிட்டாளோ என்றும் யூகித்த தாமஸ், அஜந்தாவை அந்தக் கேள்விக்கான முகத்தோடு பார்த்தார்.

அஜந்தா வார்டுக்குள் போய் கஜேந்திரனை பார்க்கச் சொல்லவும்,

''இருக்கட்டும்மா... நான் இப்ப பார்க்கலை... ஒரேடியா பாத்துக்கறேன்'' என்று லக்ஷ்மி அங்கே ஒரு ஓரத்தில் கிடந்த மரபெஞ்சை தேடிச்சென்று அமர்ந்து கொண்டாள்.

தாமஸிடம் ஆச்சரியம் அதிகமானது.

அஜந்தாவோடு வெளியே உள்ள தூங்குமூஞ்சி மர நிழலைத் தேடிச் சென்றவர், ''அஜந்தா! கஜேந்திரன் அம்மா ஏன் இப்படி இருக்காங்க. அவங்ககிட்ட நான் ஒரு அப்நார்மலை பார்க்கறேன்'' என்று தான் ஆரம்பித்தார்.

''ஆமாம் சார்... அவங்க இப்ப வழக்கமான ஒரு தாய் இல்ல, அவங்க எண்ண ஓட்டம், சிந்திக்கிற முறை எல்லாமே இப்ப வேற...''

''அப்படின்னா... எனக்குப் புரியல... பையன் கிட்டக்கூட போய்ப் பார்க்க மாட்டேங்கறாங்களே, பயப்படறாங்களா?''

''அதெல்லாம் இல்லை சார்... கஜேந்திரன் கட்டாயம் இறந்துடுவார்ங்கறதுதான் இப்ப அவங்க முடிவு.''

''வாட்...?'' தாமஸ் அலறிவிட்டார்.



''ஆமாம் சார்... அவங்க அப்படி நினைக்கறதுக்கு பின்னால ஒரு சம்பவம் இருக்கு... அதை கார்ல வரும்போது விஸ்தாரமா என்கிட்ட சொல்லிக்கிட்டும் வந்தாங்க...''

''என்ன அஜந்தா இது புதுக்கதை...''

''கதை இல்ல சார்... அது ஒரு சத்திய ஆவேசம்... மனுஷ மனங்களுக்கே உண்டான சக்தியை சொல்ற ஒரு அற்புதமான விஷயம்...''

''அப்படி என்ன அற்புதமான விஷயம்?''

''அதை நான் பிறகு சொல்றேன் சார்... அந்த விஷயங்களை கேள்விப்பட்டதுல இருந்து எனக்குள்ள சில முடிவுகள்... நான் அவைகளைச் செயல்படுத்தப் போறேன். இப்ப அதுதான் ரொம்ப முக்கியம்... அதே சமயம் இப்ப கஜேந்திரனோட நிலை எப்படி சார் இருக்கு?''

''வெரி சீரியஸ்... எதுவுமே சொல்ல முடியாத நிலை... பிழைக்கற சான்ஸைவிட நெகடிவுக்குதான் வாய்ப்பு அதிகம் இருக்கறதா டாக்டர் சொன்னார்.''

தாமஸின் பதில் அஜந்தாவை தீக்குச்சி உரசியது போல ஒரு உஷ்ணத்துக்கு ஆட்படுத்தியது.

''சார்! உங்ககிட்ட நான் இப்ப ஒரு உதவி கேட்பேன். செய்வீர்களா?''

''என்ன அஜந்தா?''

''அவசரமாக எனக்கு ஒரு நாற்பது லட்ச ரூபாயை கிராண்ட் பண்ண உங்களால முடியுமா?''

''நாற்பது லட்சமா... எதுக்கு?''

''கிட்டத்தட்ட மூணேகால் கிலோவுக்கு தங்கம் வாங்கி, அதுல திரிசூலம் செய்யணும்... அதை வேலாயுதம்

பானையம் தங்கமாரிக்கு காணிக்கையா கொடுக்கணும். அதுவும் எவ்வளவு வேகமா செய்ய முடியுமோ, அவ்வளவு வேகமா... திரிசூலத்தை கூட மெல்ல செய்துக்கலாம். தங்கத்தை அங்க சரண்டர் பண்ணணும்.''

''என்ன இது பைத்தியக்காரத்தனமான பேச்சு... இங்கே கஜேந்திரன் உயிருக்கு போராடறதுக்கும், இதுக்கும் என்ன சம்பந்தம்?''

''நிறையவே இருக்கு. எனக்கு இப்ப கமல்ஹாசனோட 'தசாவதாரம்' சினிமாதான் ஞாபகத்துக்கு வருது. அதுல கொடுமையான விஷக்கிருமி கொண்ட ஒரு சிறு பெட்டி அந்த படம் பூரா இடம் மாறிக்கிட்டே இருந்து கடைசில ஒரு பெருமாள் சிலைக்குள்ள போய் சேர்ந்துடும். கடைசியா அது வில்லன் கைல கிடைச்சு அதை அவன் உடைக்கவும், அந்த விஷக்கிருமி தாக்கி, அவன் கொடுமையா செத்துப் போவான். அந்த நொடியே கடல்ல சுனாமி வந்து ஊரே மூழ்கிப்போகும். அதுல பலநூறு பேர் செத்துப் போவாங்க. ஆனா, அந்த சுனாமி மட்டும் வராம போயிருந்தா இந்த உலகத்துல மனித இனமே, ஏன் உயிரினம்னே ஒண்ணு இல்லாம போக கூட வாய்ப்பு இருந்துருக்கும். அதாவது ஒரு சின்ன அளவுல அழிவு ஏற்பட்டு பேரழிவை தடுத்திட்டதாதான் அந்த விஷயத்தை நாம எடுத்துக்கணும்.

இதை எப்படி விளங்கிக்கிறது... எந்த லாஜிக் இதுக்கு பின்னால இருக்குன்னா அதுக்கு சொல்லப்பட்ட ஒரு வார்த்தை பதில் என்ன தெரியுமா?''

''அஜந்தா! எதுக்கு இப்ப இந்த 'தசாவதாரம்' கதை... எதுக்கு இப்ப இந்த கேள்வி... இதெல்லாம் பேசற நேரமா இது?''



''ஆமாம் சார்... நான் ஒரு மிகப்பெரிய விஷயத்தை உங்களுக்கு சுருக்கமா சொல்லியிருக்கேன். அந்த ஒரு வார்த்தை பதில் என்னன்னு உங்களுக்குத் தெரியுமா?''

''கேயாஸ்னு கமல் படத்துல சொல்வார்... கேயாஸ் தியரின்னு ஒரு தியரி உண்டு. நம்ம அறிவால விளங்கிக்க முடியாத விஷயங்களை கேயாஸ்னு சொல்றது மேல் நாட்டு வழக்கம்.''

''கரெக்ட் சார்... கஜேந்திரன் விஷயத்துக்கு பின்னாலயும் கொஞ்சம் கேயாஸ் இருக்கு... எல்லாமே எண்ண அலைகளோட சேட்டை.. இப்ப அந்த அலைகளை நான் ஒழுங்குபடுத்தத்தான் உங்ககிட்ட மூணேகால் கிலோ தங்கத்துக்கு பணம் கேட்டேன்.''

''அந்த கோவிலுக்கு தங்கம் கொடுத்தா இங்க கஜேந்திரன் பிழைச்சுக்குவாரா?''

''நிச்சயமா பிழைச்சுக்குவார்னுதான் நான் நம்பறேன்.''

''அப்ப மருந்து மாத்திரை ஊசி ஆபரேஷன்லாம் வேஸ்ட்... அப்படித்தானே?''

''நோ... அவைகளோட இந்த விஷயமும் சேரணும்.''

''என்ன எதாவது நேர்த்திக்கடனா... செலுத்தாமா விட்டுட்டாங்களா? சாமி குத்தம் ஏற்பட்டு இப்படி நடக்குதுன்னு அந்தம்மா உளறினாங்களா?''

''சாமிக்கும் இந்த விஷயத்துக்கும் ஒரு சம்பந்தமும் இல்லை. சாமி படைச்ச பூமி இது... அந்த பூமில எடுக்கற தங்கத்தால அதுக்கு ஆகப் போறதுதான் என்ன...? விஷயம் சாமி பத்தினதே அல்ல...''

''அப்புறம் எதுக்கு அந்த கோவிலுக்கு தங்கம் தாறும். அதுவும் மூணேகால் கிலோவுக்கு...''

''அந்த அளவு தங்கத்தை கஜேந்திரன் தாத்தா திருடியிருக்காரே... அதனால ஒரு உயிருக்கு மூணு உயிர் அநியாயமா செத்தும் போயிருக்கே...''

''அஜந்தா! நீங்க ஒரு மாடர்ன் கேர்ள்... அம்மன் சினிமா பட ஹீரோயின் மாதிரி எப்ப இருந்து மாறினீங்க?''

''நோ சார்... நான் இப்பவும் மாடர்ன் கேர்ள்தான்... மாடர்ன் கேர்ளா இருந்தாலும் எதிக்ஸ் எல்லாருக்கும் காமன்தானே?''

''ஐ ஆம் ஸாரி... கோவிலுக்கு தங்கம் கொடுத்தா இங்கே கஜேந்திரன் பிழைப்பார்ங்கறதும், ஒரு பாமரன் சாமிகிட்ட வேண்டிக்கிட்டு மொட்டை போட்டுக்கறதும் என் வரைல ஒண்ணுதான்.''

''சரி, அப்படியே வெச்சுக்குங்க... எனக்கு கடனா பணம் கொடுங்க, உங்களுக்கு நான் அப்புறமா திருப்பித் தந்துடறேன்.''

''கடனா ஆயிரம் ரெண்டாயிரம் கேட்கலாம். நாற்பது லட்ச ரூபா கேக்கறீங்க... நான் என்ன குபேரனா... அவ்வளவு பணத்துக்கு நான் எங்க போவேன்?''

''நம்ம ஆபீஸ் ஃபண்டுல இருந்து எடுத்து தரலாமே?''

''அப்புறம் நாம அவ்வளவு பேரும் கூண்டோட கம்பி எண்ண வேண்டியிருக்கும். பரவாயில்லையா?''

''கஜேந்திரனை சாகடிக்கறதுக்கு அது எனக்கு மேல்னு படுது சார்...''



''என்ன அஜந்தா, இது பிடிவாதம்... இப்படி அந்த அம்மா பேசினாகூட பரவாயில்லை. நீங்க போய் பேசறீங்களே...''

''அவங்க நம்பிக்கை இழந்துட்டாங்க... அதான் பேசலை... ஆனா, நான் இழக்கல சார்...''

''ஸாரி... ஐ கான்ட் ஹெல்ப் யூ... ஒண்ணு வேணா பண்ணுங்க.''

''சொல்லுங்க...''

''அந்த கோவிலுக்குப் போங்க. அந்த சாமிகிட்ட கஜேந்திரனை முதல்ல காப்பாத்த சொல்லுங்க... அவர் பிழைக்கட்டும், அப்புறம் நான் உங்க பேச்சை கன்சிடர் பண்றேன்.''

''இப்படி நடந்துகிட்டா அது கிட்டத்தட்ட வியாபாரம் மாதிரி சார்.''

''கரெக்ட்... கைல பணத்தோட நாம இப்படி நடந்துகிட்டா இது தப்பு. நம்மகிட்ட நெஜமாலுமே பணம் இல்லாத நிலைலதானே இப்படி நடந்துக்க சொல்றேன்.''

''இதுவும் ஒரு வகைல சரியான யோசனைதான் சார்... கஜேந்திரனுக்கு சாதகமாகவோ இல்ல அவர் நூறாண்டு வாழ்வார்னோ நினைக்க யாருமே இல்லை... அவங்கம்மாவே கூட அவர் நல்லபடி வாழ்வார்னு நம்பலை... நம்ப அவங்களால முடியல... காரணம், அந்தக் குற்றம் அப்படிப்பட்டது. அதுதான் கஜேந்திரன் இப்படி ஆக காரணம்!

இப்படி ஒரு சூழ்நிலைல நான் கஜேந்திரன் உயிர் பிழைக்கணும்னு அந்த தங்கமாரிகிட்ட வேண்டிக்கிறேன்...

கஜேந்திரன் தாத்தா செய்த தவறுக்கு பிராயசித்தம் செய்யவாவது கஜேந்திரன் நல்லா இருக்கணும், அவரை நான் செய்ய வைப்பேன். அவரும் உயிர் பிழைப்பார். அப்படிச் சொல்றதைவிட இப்படிச் சொல்லலாம். முன்னோர்கள் செய்த தப்புக்கு அவங்க வாரிசுகள் குற்றவாளிகளாகி உயிர் விடறதை விட, அதுக்குப் பரிகாரம் செய்து தீர்வு காண நினைக்கறது ஒரு பாசிடிவான எண்ணம் தானே? ஆகையால அந்த பாசிடிவான எண்ணம் இப்பவே வேலை செய்யட்டுமே... அவரும் பிழைக்கட்டுமே...''

''யூ ஆர் ரைட்... இந்த விஷயத்துல நானும் உங்க கட்சி! கடவுள் இங்க ஒரு காட்சிப் பொருள். அவ்வளவுதான்! சத்தியம் தர்மம் நியாயம்தான் இங்க கருப்பொருள். நாம அதை வாழ வைக்க என்ன வேணுமோ அதை செய்வோம்... நானும் உங்களோட சேர்ந்து ப்ரே பண்றேன்...''

''இங்க நின்னு பண்றது பெரிய விஷயமிலல... என் கூட அந்த கோவிலுக்கு வரமுடியுமா?''

''இப்பவா?''

''வேற எப்போ?''

''இங்க டாக்டர்கள் தேடுவாங்களே...''

''சொல்லிட்டே போவோம்... என்ன இப்போ?''

அஜந்தாவின் தெளிவும் துணிவும் தாமஸையும் தொற்றிக் கொண்டது.

''சரி, வாங்க போகலாம். அவங்களுக்கு நம்ம உணர்வை புரிய வைக்கறதுக்கு இப்ப நேரமில்லை. நூறு சதம் நாம நம்பிக்கையோட கிளம்புவோம்...''

தாமஸும் அஜந்தாவும் வேகமாகி காரில் ஏறப் போன சமயம் கை கூப்பியபடியே லக்ஷ்மியும் வந்தாள்.



''அம்மா...''

''நீ பேசினதை எல்லாம் கேட்டுக்கிட்டுதாம்மா இருந்தேன். உன்னால இப்ப எனக்குள்ளேயும் புது நம்பிக்கை பிறந்திருக்கு. அந்த தங்கம் இப்பவும் அப்படியே தான் இருக்கு... அதை நான் உண்டியல்ல போட்டுட நினைச்சதுண்டு, ஆனா, அதோட அந்த கோவில் பக்கமே போகற தைரியம்தான் எனக்கு இல்ல...''

''கோவில்ல போட தைரியம் இல்லாட்டி காவேரி ஆத்துல போட்டுருக்கலாமே?'' அஜந்தா கேட்ட வேகத்தை பார்த்து அயர்ந்து விட்டாள் லக்ஷ்மி!

''ஆத்துலயா?''

''ஆமாம்மா... அதுல மூழ்கித்தானே பூசாரி செத்தாரு.''

''எனக்கு இது தோணலியேம்மா...''

''நீங்க கிளம்புங்க... முதல்ல அந்த தங்கத்தை உங்க வீட்டை விட்டு வெளியேத்துங்க... அதுவே பாதி வெற்றியை நமக்கு தந்துடும்...''

அஜந்தா லக்ஷ்மியை அழைத்துக் கொண்டு கிளம்பினாள்.

**வீ**ட்டில் இருந்த ஒரு துணி மூட்டையைச் சுமந்து வந்தாள் லக்ஷ்மி. அதனுள் அந்த தங்க பிஸ்கட்டுகள்!

''இதை நீங்க இவ்வளவு நாள் வெச்சிக்கிட்டிருந்தது தான்மா நீங்களே உங்க மகன் மேல நம்பிக்கை இழக்க காரணம். சரி... இப்ப இதை கோவில்ல சேர்க்கவா... இல்ல காவேரியில தூக்கிப் போட்டுடவா?''

"நீ சொன்ன மாதிரி காவேரில பூசாரியை நினைச்சுகிட்டு போடறதுதான் சரி... கோவில்ல கொடுத்தா இதை நாம வேலாயுதமா மதிக்கிறதாதான் பொருள்... ஆத்துல போட்டாவோ இதைவிட பூசாரியும், அவர் தியாகமும் பெருசுன்னு நினைக்கறதா பொருள்... ஆகையால ஆத்துலயே போட்டுருவோம்..."

தங்கம் வீட்டை விட்டு வந்ததுமே லக்ஷ்மியிடம் ஒரு தெளிவு பிறந்துவிட்டது.

காரும் காவிரியாறும் நோக்கித்தான் ஓடியது!

வேலாயுதம்பாளையம் காவிரி படித்துறையைத் தேடிச் சென்று நின்றது. கால்கள் கூச்சமெடுக்க, அந்த மண்ணை தொட்டு இறங்கினாள் லக்ஷ்மி. மடியில் துணிமூட்டைக்குள் அந்த தங்கப் பிஸ்கட்டுகள்..."

நடந்தாள்...

பூசாரி அன்று நடந்தது போலவே...

அவர் இறங்கியது போலவே ஆற்றில் இறங்கியவள்.

"பூசாரிய்யா... இந்த ஆத்துல நீங்க இப்பவும் இருக்கீங்க... இதை உங்ககிட்ட சேர்த்துடறேன்... இதை அந்த தங்கமாரிகிட்ட சேக்கறது உங்க விருப்பம். அப்படியே மனசார மன்னிப்பும் கேட்டுக்கறேன். என் மகன் பிழைச்சுட்டா நிஜமா ஒரு தங்க திரிசூலம் வாங்கி காணிக்கை செலுத்துவேன். அவன் பிழைக்கறது நீங்க மன்னிக்கறதுலதான் இருக்கு" என்று மனதில் எண்ணியபடியே ஆற்றுக்குள் அந்த துணி மூட்டைகளை தூக்கிப் போட்டாள்.

கண்ணீரோடு காரில் ஏறினாள்.



அவனை சிலர் அடையாளம் கண்டு கொண்டு பார்த்தனர். அஜந்தா அவளிடம் கூறினாள்.

"அம்மா! நாம இப்ப அந்த சிங்கப்பூர்க்காரரய்யா வீட்டுக்குப் போறோம்."

"அங்க எதுக்கும்மா?"

"அவர் கால்ல விழுந்து மன்னிப்பு கேட்க... அவர் தங்கம்தானே அது?"

"அதுவும் சரிதான்..."

அந்த கார் அடுத்த பத்தாவது நிமிடம் சிங்கப்பூர்க்காரர் வீட்டு வாசலில் நின்றது. சிங்கப்பூர்க்காரர் ஈஸிசேரில் நரைத்த தாடியோடு படுத்திருந்தார். கண்ணீரோடு அவர் காலில் விழுந்து எழுந்தாள் லக்ஷ்மி.

"நீ என்னம்மா பண்ணுவே, உன் மாமனார் பண்ண தப்புக்கு..." என்றார் அவர்.

"அவர்தானே இப்ப என் மகன் ரூபத்துல இருக்காரு... அவன் பிழைக்கணுமே..."

"பிழைச்சுக்குவான்மா... எப்ப நீ இங்க தங்கமாரியைத் தேடி வந்துட்டியோ அப்ப அங்க அவன் உயிரும் வந்திருக்கும்."

அவர் சொன்னது வாஸ்தவம்தான் என்பது போல அப்போது செல்போனில் ஆஸ்பத்திரியில் இருந்து தகவல் -

கஜேந்திரன் உடம்பில் நல்ல முன்னேற்றம் தெரிவதாக... லக்ஷ்மிக்கு உடம்பு சிலிர்த்துப் போனது.

"ஆமா, கோவிலுக்கு போகலையாம்மா?" சிங்கப்பூர்க்காரர் கேட்டார்.

''மகன் பிழைச்சதும், அவன் கை திரிசூலத்தோட தாங்க நான் அவ முகத்துல முழிப்பேன்.''

''ஒரு வகைல இது நல்ல முடிவுதான்... ஆமா திருட்டுத் தங்கம் என்னாச்சு?''

''அது இப்ப காவேரி ஆத்துல பூசாரி ஐயாகிட்ட போய்ச் சேர்ந்திருக்கும்.''

''ஓ... தங்கத்தை ஆத்துல போடறதான்னு நினைக்காம நீ அவரை பெருசா நினைச்சிருக்கே... சபாஷ்!''

சிங்கப்பூர்க்காரர் பாராட்டியபோது, ஒருவர் பரவசமான பரவசத்துடன் ஓடிவந்து அந்த செதியைச் சொன்னார்.

''ஐயா... நம்ம கோவில் யானை ஆத்துல அபிஷே தண்ணி எடுக்கப் போனப்போ... அதோட துதிக்கைல ஒரு துணி மூட்டை வந்து மாட்டியிருக்கு... பிரிச்சுப் பார்த்தா தங்கக் கட்டிங்களாம் உள்ளுக்குள்ள...''

அதைக் கேட்ட நொடி சிங்கப்பூர்க்காரர் எழுந்து நின்றவராக ஜன்னல் வழியாக தெரிந்த கோவில் கோபுரத்தைப் பார்த்து கன்னத்தில் போட்டுக் கொண்டார். கண்களில் நீர்ப் பெருக்கு! சிலிர்த்துப் போன தாமலரும் அஜந்தாவிடம் சென்று சொல்லத் தொடங்கினார்.

''அஜந்தா... நம் எண்ணங்களுக்குத்தான் எவ்வளவு சக்தி. இதோட ஸ்டார்டிங் நீதான்... உனக்கு என் பாராட்டுதல்கள்'' என்றார்.

ஆமோதித்தது கோவில் மணி ஓசை...

சுபம்

# பாஷாண லிங்கம்

## 1

'பாஷாணம் என்றாலே விஷம் என்றுதான் எல்லோரும் சொல்வார்கள். ஒரு பாஷாணத்தைத் தனியாகப் பயன்படுத்தும்போதுதான் அது விஷமாகிறது. அதை இன்னொரு பாஷாணத் துடன் சேர்த்துப் பயன்படுத்தும்போது அந்த விஷமே வேறுவிதமாக மாறி வினைபுரியத் தொடங்கிவிடுகிறது. அதிலும் ஒன்றுக்கு ஒன்பது பாஷாணங்கள் ஒன்றுபடும் போது அங்கே ஒன்பது கிரகங்களின் சக்தியே வந்துவிடுவதாக சித்தபுருஷர்கள் கண்டறிந்தார்கள். அதனால்தான் அவர்களின் வழிபாட்டில் பாஷாண லிங்கங் களுக்கு ஒரு தனி இடம் இருந்தது!

அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள் பவித்ரா! அவளாகத் தூங்கவில்லை... ஆனந்தன் போட்டிருந்த ஒரு ஊசி அவளைத் தூங்க வைத்துக் கொண்டிருக்கிறது. அவளுக்கும் இப்போது தேவை நல்ல ஓய்வு!

ஒரு பூங்கொத்து போல படுக்கைமேல் தூக்கத்தில் இருந்த அவளையே வைத்தகண் வாங்காமல் பார்த்துக்

கொண்டிருந்தான் ஆனந்தன். சற்றுத் தள்ளி குத்துக்கால் இட்டு அமர்ந்திருக்கும் நிலையில் அவன் மனைவி மகாலட்சுமி. அவள் கிட்டத்தட்ட உறைந்து போய் ஒரு சிற்பம் போலவே காட்சி தந்தாள். நிசப்தமான அந்த சூழலில் தலைக்கு மேலே சுழன்று கொண்டிருந்தது மின் விசிறி. 'சர்ரக்... சர்ரக்...' என்று அதனிடம் மட்டும் சன்னமாய் ஒரு சப்தம்! இந்த உலகத்தில் ஓய்வறியாத ஒரே ஜென்மம் உயிரோடு இருக்கும் வரையில் மனித இதயம். அதற்கு அடுத்து சுற்றிச் சுற்றி வரும் கடிகார முட்கள்தான். அந்த முட்களும் கூட மணி நள்ளிரவு இரண்டு என்று காட்டிக் கொண்டிருந்தன. அது நள்ளிரவு என்பதற்கு சாட்சியாக தெரு நாய் ஒன்றும் அவ்வப்போது குரைத்துக் கொண்டிருந்தது.

மொத்தத்தில் ஆனந்தன் வசித்து வரும் விசுவநாதபுரம் என்கிற அந்தப் பகுதியே ஆழ்ந்த உறக்கத்தில் இருக்க - அவனுக்கோ அவன் மனைவிக்கோ மட்டும் உறக்கமில்லை. மின்விசிறிக் காற்றில் சற்றுத் தள்ளி டேபிள்மேல் கிடந்த பவித்ராவின் மெடிக்கல் ரிப்போர்ட் தாள்களும் பறந்து கொண்டிருந்தன. ஆனந்தனுக்கு அவைகளைப் பார்க்கவே பிடிக்கவில்லை. தாள்களா அவை. பவித்ராவின் நாட்கள் அவை. ஒரு பெரிய மஞ்சள் கவருக்குள் கறுப்பான எக்ஸ்ரே ஃபிலிம், சின்னக் கவருக்குள் ஈ.சி.ஜி. ரிப்போர்ட், இன்னொரு கவருக்குள் ஸ்கேன் என்னும் ஊடுருவிக் கருவியின் ரிப்போர்ட்டுகள். அவை எல்லாமாய் சேர்ந்து கிட்டத்தட்ட எட்டாயிரம் ரூபாயை விழுங்கி முடித்திருந்தன. அந்த எட்டாயிரத்துக்குப் பின்னாலே மகாலட்சுமியின் இரண்டு பவுன் சங்கிலி இருக்கிறது. அதை அடகு வைத்துத்தான் அவைகளையே ஆனந்தன் அடைந்திருந்தான். பெயரில்தான் அவனிடம் இப்போது



ஆனந்தம் இருக்கிறது. மனம் முழுக்க கும்மிருட்டு. அந்த இருட்டை வெளிச்சமாக்கிக் கொள்ளத்தான் வழியே தெரியவில்லை. யோசித்து யோசித்து களைத்துப் போய் விட்டான்.

சாண் ஏறினால் முழம் சறுக்குமே... அப்படி ஒரு மிடில் கிளாஸில் பிறந்துவிட்டவன். ஒரு தொழிற் சாலையில் ஃபிட்டர் வேலை பார்க்கிறான். பதினைந்து வருஷ சர்வீஸுக்கு பத்தாயிரம் ரூபாய் பக்கமாய் சம்பளம் வருகிறது.

வாடகை வீட்டுக்கும், டூவீலருக்கும், செல்போனுக்கும், எலெக்ட்ரிக் பில்லுக்கும் போக பசியில்லாதபடி கணவன் - மனைவி சாப்பிட முடிகிறது. ஆனால், ஒரு நூறு ரூபாயை மிச்சம் பிடித்து சேமிக்க முடியவில்லை. மிகுந்த பிரயாசையோடு தபாலாபீஸில் போடப்பட்ட ஐந்நூறு ரூபாய் ஆர்.டி. ஒன்று கட்டப்பட முடியாமல் நிறுத்தப்பட்டு விட்டது. இப்படிப்பட்ட வாழ்க்கை முறைக்கு நடுவில் ஒரே ஒரு பெண்குழந்தை பிறந்து அதற்கும் டாக்டர்களாலேயே கண்டுபிடிக்க முடியாத ரத்தவாந்தி எடுக்கும் ஒரு வியாதி வந்தால் யாரால்தான் நிம்மதியாக இருக்க முடியும்? பவித்ராவுக்கு 12 வயதாகிறது. எப்போது வேண்டுமானாலும் அவள் பருவத்துக்கு வரலாம். ஆனால், பருவத்தை வியாதி முந்திக் கொண்டு விட்டது. அந்த வியாதிக்குப் பெயரும் தெரிய வில்லை. அதுதான் விநோதம்! ''கோடியில ஒருத்தருக்கு இப்படி வரும் மிஸ்டர் ஆனந்தன். எனக்குத் தெரிஞ்சு இதுக்கு மருந்து அலோபதில இல்லை. வேற எதுல இருக்குன்னும் தெரியல. இதுக்கு ஒரு மருந்து இருக்க முடியாதுங்கறதுதான் என் கருத்து. உங்க பெண்ணை இனி

அலுங்காம பார்த்துக்குங்க. ஸ்கூலுக்கு அனுப்பறது கொஞ்சம்கூட நல்லதில்ல. ஏன்னா அங்க பசங்ககூட ஓடியாடி விளையாடினா உடனே ரத்தவாந்தி வந்துடும். கூடவே மயக்கமும் வந்துடும். அதோட எழுந்திருக்க முடியாதபடி கோமா ஸ்டேஜ் வரவும் வாய்ப்பு நிறைய இருக்கு...'' - என்று டாக்டர் என்கிற ஒருவர் அழுத்தமாக சொன்னதன் விளைவு, பவித்ரா பள்ளிக்குச் சென்றே பல மாதங்கள் ஆகிவிட்டன. வீட்டிலும் பொம்மை போல அவளை வைத்திருக்க வேண்டிய கட்டாயம். சில சமயங்களில் அப்பா அம்மாவின் அந்த கண்காணிப்பை மீறிக் கொண்டு தெருவில் விளையாடப் போய் அங்கேயே மயங்கி விழுந்து...

அந்த நள்ளிரவில் மணி மூன்றை நெருங்கவும் கடிகாரமும் பெண்டுலச் சப்தம் போட்டது.

டாண்... டாண்... டாண்...!

மெல்ல நிமிர்ந்து பார்த்தான் ஆனந்தன். மகாலட்சுமியும் பார்த்தாள். அப்படியே இருவர் பார்வையும் பவித்ரா மேலேயும் சென்றது. நல்ல தலைவாழை இலையை அணலில் வாட்டி எடுத்து பின் தரையில் அடித்து அதை இழை இழையாகக் கிழித்துப் போட்டால் எப்படி இருக்கும்...? அப்படி இருந்தாள் குழந்தை! இத்தனைக்கும் அவள் பிறந்த போது அப்படி ஒரு பேரழகாக இருந்தாள். பின் கழுத்துவரை தலைமுடி, பவழத்திட்டு போல நெற்றி, புஷ்டியான - கிள்ளிப் பார்க்கத் தூண்டும் கன்னம்... எடைகூட நான்கு கிலோ இருந்தாள். பார்த்தவர்கள் எல்லாம் மாய்ந்து போனார்கள். மகாலட்சுமியின் அம்மாவுக்கும், குழந்தைக்குத் திருஷ்டி சுற்றிப் போட்டே ஓய்ந்து போய் விட்டது. ஆனந்தன்கூட தன் வரைவில் ஒரு தேவதையே



வந்து பிறந்திருப்பதாகத்தான் கருதினான். ஆனால், போகப் போக அந்த தேவதையை ஒரு சாத்தான் விழுங்கப் போகிறது என்று அப்போது ஒருவர்கூட நினைக்கவில்லை.

நினைக்க நினைக்கவே நெஞ்சு கனத்துப் போகிறது ஆனந்தனுக்கு... விரக்தியின் உச்சியில் சிரிப்பும் வந்தது! அதுவும் அந்த அர்த்த ராத்திரியில்! மகாலட்சுமியும் நிமிர்ந்து பார்த்தாள். பார்வையே 'எதை நினைத்து இந்த சிரிப்பு?' என்று கேட்டது.

''என்ன மகா... என்ன பாக்கறே? 'இந்த நிலையிலும் எப்படிச் சிரிக்க முடியுது'ன்னுதானே...?''

''......''

''அதுலயும் இந்த ராத்திரில அநேகமா இந்த உலகத்துலயே சிரிச்ச ஒரே ஆள் நானாதான் இருப்பேன்.''

''......''

''வருத்தப்பட்டு வருத்தப்பட்டே நம்ம இரண்டு பேருக்கும் மரத்துப் போச்சு. அதிர்ச்சி, பேரதிர்ச்சி, அதுக்கும் மேல ஒரு அதிர்ச்சின்னு சந்திச்சு சந்திச்சே ஓய்ஞ்சு போய்ட்டோம். இப்படிப்பட்ட எனக்குப் பேர் ஆனந்தன். உனக்குப் பேர் மகாலட்சுமி... தா கிடக்குதே பார் நாம பெத்த பொக்கிஷம்... இதுக்கு பேர் பவித்ரா! வேடிக்கையா இல்லை?''

- அவன் எதை நினைத்து சிரித்தான் என்று கோடு காட்டியது அவளுக்கும் சிரிப்பை வரவழைத்தது. குத்துக் காலை விலக்கிக் கொண்டு படுக்கையில் இருந்து எழுந்தவன் ''சரி... நேரம் நெருங்கிடிச்சு. அத நான் எடுத்துக் கிட்டு வந்துடட்டுமா?'' என்று கேட்டான். அவளும்

அவளை ஒரு கலக்கமான பார்வை பார்த்தான். பின் காற்றுக் குரலில் கேட்டான்.

''கலந்தே வெச்சுட்டியா?''

''ஆமாம்...''

''.....''

''என்ன யோசனை? இதுக்கு மேலே தாக்குப் பிடிக்க நம்மகிட்ட என்ன இருக்கு?''

''இல்ல... அது வந்து...''

''இப்படி இழுத்து இழுத்துத்தான் இப்ப மூணு லட்ச ரூபா கடன்ல நிக்கறோம். காலைல வீட்டு வாடகையை மூணு மாச பாக்கியோட எண்ணி வைக்காட்டி வீட்டுக்காரர் சாமாஞ்செட்டைத் தூக்கி வீசிப்படறதா சொல்லிட்டு வேற போயிருக்கார்.''

''அதான்... அதான் மகா மனசை முள்ளாக்குத்துது. நாம முடிவெடுத்த மாதிரியே செத்துப் போவோம். பாழாப் போன இந்த வாழ்க்கை நமக்கு வேண்டவே வேண்டாம். ஆனா கடன்காரனாவா சாகறது?''

''என்ன பேசறீங்க நீங்க...? கடனை அடைக்க பணத்துக்கு எங்க போவீங்க? எங்கேயாவது திருடுவோம்னா திருடனா மட்டும் சாகலாமா?''

''நீ சொல்றதும் வாஸ்தவம்தான் மகா... கடன்காரனுக்கும் திருடனுக்கும் என்ன பெரிய வித்தியாசம் இருக்க முடியும்?''

''புரியுதுல்ல... பேசாம இருங்க. நான் போய் அதை எடுத்துக்கிட்டு வரேன். சாப்ட்டுப் போய்ச் சேருவோம்.''



- மகாலட்சுமி ஒரு தீர்மானத்துடன் விலகியவள் திரும்பி வந்த போது அவள் கையில் ஒரு கிண்ணம். அதில் விஷம் கலந்த பஞ்சாமிர்தம்!

ஆளுக்கு ஒரு வாய் சாப்பிட்டாலும் போதும் - அதன் பின் ஐந்து நிமிடம்கூட இதயத்தால் இயங்க முடியாது.

ஆனந்தன் அதை உற்றுப் பார்த்தான்.

திரும்பவும் சிரித்தான்.

''என்னங்க... பஞ்சாமிர்தம் எப்படி வந்துச்சுன்னு பாக்கறீங்களா?''

''இல்ல... நம்ம கெட்ட நேரம் இந்த அமிர்தத்தைக் கூட விஷமாக்கிடுச்சு பார்த்தியா. அதை நினைச்சேன்; சிரிச்சேன்.''

''இது நம்ம விபூதித் தாத்தா சித்தர்மலைக்குப் போய்ட்டு வந்து பிரசாதமா கொடுத்தது. தொண்ணூறு வயசாகுது. இந்த வயசுலயும் மாசம் தவறாம சித்தர் மலைக்குப் போய்ட்டு வந்துடறாரு தாத்தா.''

''அவராவது ஆரோக்கியமா இருக்காரே. சரி! இதுல சயனைடை நல்லா கலந்துட்டேதானே?''

''உம்... என்ன சந்தேகமா?''

''இல்ல மகா... இதுல ஒரு பக்கம் சரியா அது கலக்கப் படாம இருந்து அதை நான் சாப்பிட, கலந்த பக்கத்தை நீ சாப்பிட, உனக்கென்ன... நிம்மதியா நீ போய்டுவே. நான்தான் பிழைச்சுக்குவேன். அப்புறமா நான், நீயும் இல்லாம, என் 'பவி'யும் இல்லாம உசுரோடல்ல சித்ரவதையை அனுபவிப்பேன்...?''

''எப்படிங்க இப்படி எல்லாம் யோசிக்கிறீங்க?''

''நான் எங்க யோசிக்கிறேன். பேப்பர்லதான் தினசரி படிக்கிறேனே? 'காதலன் காதலி தற்கொலை முயற்சி - காதலி உயிர் பிரிந்தது - காதலன் பிழைத்துக் கொண்டான் - போலீஸார் துருவித்துருவி விசாரணை'-ன்னு...''

''சரி... இந்தாங்க நீங்களே நல்லா கலக்குங்க...''

- மகாலட்சுமி அந்த பஞ்சாமிர்த கிண்ணத்தை அவன் வசம் தந்தாள். அவனும் கலக்கினான். அப்படியே முகர்ந்து பார்த்தான். விஷவாடையும் அடித்தது.

மெல்ல அதைக் கீழே வைத்தான்.

அவளைத் திரும்ப ஆழமாய் ஒரு பார்வை பார்த்தான். அவளும் பார்த்தாள்.

''இதுதான் இந்த ஜென்மத்தில் நாம் பார்த்துக் கொள்ளும் கடைசி பார்வை. இறப்புக்குப் பின் யார் எந்தப் பக்கம் செல்வோமோ? நிச்சயமாக இந்த உடம்போ, இந்த வாழ்க்கை முறையோ நமக்கு இனி கிடையாது...''

- இருவருக்குள்ளும் ஒரே மாதிரி எண்ணம் ஓடியது. உற்றுப் பார்த்தபடி இருக்கும் விழிகளில் இருந்து கண்ணீர் உருள ஆரம்பித்தது. அப்போது பக்கத்தல் பவித்ரா புரண்டு படுத்து சிணுங்கினாள். அதனால் இருவர் கவனமும் அவள் பக்கம் திரும்பியது.

''மகா...''

''என்னங்க...?''

''பவிக்கு...''

''இதை முதல்ல அவளுக்குத்தாங்க கொடுக்கணும்.''

''ஐயோ மகா...'' - அவனால் அதற்கு மேல் பேச முடியவில்லை. நெஞ்சம் பதற அது நள்ளிரவு என்பதையும் மறந்து கதறத் தொடங்கினான்.

''எங்க... எங்க...?''



''நம்ம கையால நம்ம பிள்ளைக்கு விஷமா?''

''இப்படியே எத்தனை தடவைங்க நாம நம்மை ஏமாத்திக்கறது. அவளை நம்ம பாசம்தாங்க கொல்லாம கொன்னுக்கிட்டிருக்கு. வைத்தியம் பார்க்கவும் வழியில்லை; வாழ வைக்கவும் முடியலை. பாழாப்போன மிடில் கிளாஸ்ல பாடால்ல படறோம்...''

''இல்ல. இல்ல மகா... என்னால முடியாது... என்னால முடியாது...''

''நீங்க தராதீங்க... நான் தரேன்...''

''ஐயோ... நீ... நீ...''

''பதறாதீங்க. நான் துணிஞ்சிட்டேன். அதான் கொத்தா சாகப்போறேமே. இனியும் என்ன தயக்கம்.''

''முடியலியே... ஐயோ... ஐயோ... என் மகா! நம்ம மதத்துல எவ்வளவு சாமிங்க. காளி, சூலி, லட்சுமி, முருகன்னு... இதுல ஒண்ணுக்குக் கூடவா கருணை இல்லாமப் போயிடுச்சு?''

''சாமிங்களா? எல்லாம் படத்துலதாங்க இருக்கு. நிஜத்துல அப்படி எல்லாம் ஒண்ணு இருந்தா இந்த துடிப்புக்கு அதுங்க எப்பவோ பதில் சொல்லியிருக்குமே...''

''ஐயோ மகா... ஏகாதசி, சஷ்டி, பிரதோஷம்னு எவ்வளவு விரதம் இருந்தே? எவ்வளவு பூஜைங்க செய்திருப்பே...''

''விடுங்க... அதை எல்லாம் ஞாபகப்படுத்தாதீங்க. சாமிங்கள கல்லுல வெச்சதுக்கு நமக்குத்தான் காரணம் தெரியல. நாம தப்பா புரிஞ்சுக்கிட்டோம். அது வெறும்

கல்லு மண்ணுதான்னு கண்ணுக்கெதுக்க தெரிஞ்சும் நாம தப்புத் தப்பா அதை நம்பிட்டோம்.''

- மகாலட்சுமி பேசிய ஜோரில் எழுந்து சென்றவள் சமையல்கட்டில் உள்ள ஒரு சிறிய ஷெல்ஃபில் அவள் வணங்கி வந்த அவ்வளவு சாமி படங்களையும் எடுத்து வந்தாள். அதில் ஒரு சின்ன சிவலிங்கமும் இருந்தது. யாரோ காசிக்குப் போன போது வாங்கி வந்து தந்தது. அதற்கு, அவள் கையால் பல ஆயிரம் தடவை பாலபிஷேகம் செய்திருப்பாள்.

அவ்வளவையும் போட்டு உடைத்தாள்.

சரியாக உடையாததைத் திரும்பவும் போட்டு உடைத்தாள். கண்ணாடிச் சில்லு பட்டு கையில் இருந்து ரத்தம் பீறிட்டது.

அவன் 'ஐயோ... ரத்தம்!' என்றான். அதில் சில சொட்டுக்கள் அந்த பஞ்சாமிர்த கிண்ணத்திலும் பட்டன. உடனே அதைத் தள்ளி வைத்து அவள் கைக்குக் கட்டுப் போடப் பார்த்தான். ''விடுங்க... அதான் போய்ச் சேர்றோமுல்ல. குறைந்தபட்சம் ஆத்திரமாவது தீரட்டும். சாமிங்களாம் சாமிங்க. நாசமாப் போன சாமிங்க. கோவில்லகூட இந்த சாமிங்களுக்குப் பணக்காரங்களைத் தான் பிடிக்கும். காசிருக்கறவனுக்குப் பக்கத்துல வெச்சு தரிசனம். நமக்கோ தட்டுல காசு போட்டாத்தான் ஐயர் விபூதி, குங்குமமே தர்றார். சாமியாம் சாமி...! நாசமாப் போன சாமி... இந்த உலகத்துல அறுநூறு கோடிக்கு மேல ஒரு மனுஷங்க இருக்காங்களாம். அது போக தினசரி உலகம் முழுக்க லட்சத்துக்கும் மேல குழந்தைங்க பிறக்குதாம். அவ்வளவு பேரையும் விட்டுட்டு என் செல்லத்தைக் கேக்குதே அந்த சாமி. அழகா கொடுத்துட்டு ஆட்டி



வைக்குதே...? இதே தெருவுல ஒருத்தன் பிராந்திக்கடை வெச்சு ஊரையே அழிச்சுக்கிட்டிருக்கான். அவன் மக குந்தாணியா இருந்துகிட்டு நகையா போட்டுக்கிட்டு மினுக்கறா. அதெல்லாம் இதுக்கு கண்ணுக்குத் தெரியலியே. நாசமாப் போன சாமி.''

- என்று ஒரு கோரப் புலம்பலில் போய் நின்றாள். புயலில் சிக்கிய வாழை மரம் புயலடித்து முடிந்த பிறகு சாய்ந்து விழுந்து கிடக்குமே, அப்படி இருந்தது அவள் தோற்றம்.

திரும்பவும் அவர்களுக்கு நடுவில் ஒரு அமைதி!

கடிகாரத்தில் மணி நான்காகி விட்டிருந்தது.

டாண்... டாண்... டாண்... டாண்...!

சரியான அந்த நேரத்தில் தெருவில் ஒரு குடுகுடுப்பைக்காரனும் இறங்கியிருந்தான். அவனது குடுகுடுப்பை சப்தமும் துல்லியமாகக் கேட்கத் தொடங்கியது. அவர்கள் இருவர் எதிரிலும் சயனைட் கலந்த அந்த பஞ்சாமிர்தம். அதில் மகாலட்சுமியின் ரத்தத் துளிகளும் சேர்ந்திருந்தன!

## 2

சதுரகிரி என்னும் மலைத் தலத்துக்கு சித்தர் மலை என்றும் ஒரு பெயர் உண்டு. இந்த மலைத் தலம் மிக வித்தியாசமானது. பொதுவில் மலைகள் என்றாலே அவை வித்தியாசமானவைதான். தரைக்கும் மலைக்கும் நுட்பமான வேற்றுமைகள் நிறையவே உண்டு. குறிப்பாக சூரிய சந்திர கதிர்களும், விண்ணில் இருந்து வந்து சேரும் மற்ற

கிரகங்களின் கதிர்வீச்சுக்களும் தரைப் பரப்பைத் தொட்டுப் பரவும் விதம் வேறு. அதுவே மலைப் பரப்பில் விழுந்து பரவும் விதம் வேறானது. மலை என்பது உயர்ந்து எழுந்து விண்ணில் பரவி நிற்பது. எனவே ஒரு சூரியக் கதிர் தரையைத் தொட்டு முடியும் தூரத்துக்கும் மலையைத் தொட்டு முடியும் தூரத்துக்கும் அதன் உயரம் காரணமாக வேற்றுமை ஏற்படுகிறது. இதனாலேயே தரைப்பரப்பு உஷ்ணத்துக்கும் மலைப்பரப்பு உஷ்ணத்துக்கும் வித்தியாசம் இருக்கிறது. பளிச்சென்று உணர முடிந்த வித்தியாசம் இது. உணர முடியாத வித்தியாசங்கள் மிகவே உள்ளன! அவைகளே கதிர்வீச்சுகள். அவைகளால்தான் ஒரு மனிதனின் மனமும் அதன் போக்கும் தீர்மானமாகிறது. தரைப் பரப்பில் அதன் பலத்தில் மனிதன் திரிகிறான். ஆனால், மலைத் தலங்களில் ஒரு மனிதன் அவைகளைப் புரிந்து கொண்டு முயன்றால் அவனுக்குக் கீழ் அது அடங்கி வரும்!

குடுகுடுப்பைக்காரன் வரும் சப்தம் கேட்கவும் ஆனந்தனை ஒரு பரபரப்பு தொற்றிக் கொண்டது.

''மகா... குடுகுடுப்பைக்காரன் வந்துட்டான். இப்ப என்ன பண்ணப் போறே?'' என்று கேட்டான்.

''என்ன பண்ணப் போறேனா...? அவன்பாட்டும் தெருவுல போறான். அவனுக்கும் நமக்கும் என்னங்க சம்பந்தம்?''

''இல்ல நான் என்ன சொல்ல வந்தேன்னா...''

''போதும்... எதையாவது சொல்லி இந்தத் தடவையும் நாம எடுத்த முடிவைத் தள்ளாதீங்க. உங்களுக்கு சாகறதுக்கு



பயமா இருந்தா நீங்க வேணா இந்த விஷத்தை சாப்பிடாதீங்க. ஆனா, என்னையும் என் மகளையும் விட்டுடுங்க. போதும் இந்த வாழ்க்கை.''

- மகாலட்சுமி சற்று ஆவேசமானாள். தூக்கத்தில் இருந்த பவித்ராவைத் தொட்டுத் தூக்கி மடியில் போட்டுக் கொண்டாள். முகத்தை மூடியிருந்த மகளின் கூந்தலை விலக்கி விட்டாள். முழு மதி போல பவித்ரா முகத்தில் ஒரு பிரகாசம். கூடவே ரத்தம். சத்துப்போன ஒரு வாட்டம்!

''கண்ணு... கண்ணு...'' - எழுப்பினாள். பவித்ராவும் அரைக் கண்களைத் திறந்தாள்.

''ராஜாத்தி... அம்மா கூப்பிடறேன் பார்... எழுந்திரு.''

''அம்ம்ம்ம்...மா!''

- பவித்ராவிடம் ஒரு நினுசான முனகல். நிமிஷம்... ''அம்மா இப்ப உனக்கு மருந்து தரப் போறேன். சாப்ட்டுட்டு தூங்கிடு...''

''மருந்ந்...தா?''

''ஆமாம் கண்ணு... இதுதான் கடைசி மருந்து. இனி அம்மா உனக்கு மருந்தே தரமாட்டேன்.''

''வேண்டாம்மா... கசக்கும்.''

''இது இனிக்கும்ப்பா... எழுந்திருடா கண்ணு...''

- மகாவிடம் செயல் வேகம் சற்றும் தளராமல் இருந்தது. ஆனந்தனால் அதைத் தாள முடியவில்லை. அண்ணாந்து கடிகாரத்தைப் பார்த்தான். மணி 4.10. மகாவின் வேகத்தைப் பார்க்கும்போது 4.30-க்கு அந்த வீட்டில் மூன்று பிணங்கள் கிடக்கப் போவது உறுதி என்று அவன் மனமும் உறுதியாக நம்ப ஆரம்பித்து விட்டது.

மகா மளமளவென்று செயல்படத் தொடங்கினாள்.

பஞ்சாமிர்த கிண்ணத்தில் கையை விட்டு நன்றாகக் கையாலேயே பிசைந்தாள். பின் அதில் ஒரு பிடி எடுத்து முதலில் தன் வாயில் போட்டுக் கொண்டாள். அடுத்து ஆனந்தனின் வாய் முன்னால் அவள் கை நீண்டு நின்றது. அவனும் திறக்க மாட்டாதபடி உதடுகளைத் திறந்தான். அந்த விஷப் பஞ்சாமிர்தம் அவன் வாயிலும் நிரம்பியது. ஒருவித இனிப்பான கசப்பாக இருந்தது. மூன்றாவது கை அரைத் தூக்கத்தில் இருந்த பவித்ரா நோக்கி நீண்டது. குழந்தையின் வாயை வலியத் திறந்து ஊட்டி விட்டாள். 'வேண்டாம்மா...' என்று முணங்கியபடியே குழந்தையும் அதை விழுங்கி முடித்தாள். பஞ்சாமிர்தம் மிச்சம் இருந்தது அதை எதற்கு மீதம் வைக்க வேண்டும் என்று வழித்த மகா, அதைத் தானே உட்கொண்டாள். பின் கையை உதறிக் கொண்டு தன் அருமைக் கணவனை ஒரு பார்வை பார்த்தாள்.

''அவ்வளவுதாங்க... எல்லாம் முடிஞ்சு போச்சு. பூமிக்கு வந்த நாம திரும்பப் போறோம். இனி நமக்கு வியாதி, கடன், பாசம், பந்தம் எதுவும் பிரச்னையில்லை, இருங்க... 'நம்ம சாவுக்கு யாரும் காரணமில்லை. அந்த கடவுள்தான்'னு ஒரு வார்த்தை எழுதி வெச்சுட்டு வந்துடறேன்'' என்று அவள் எழுந்தபோது அவள் வீட்டு வாசலுக்கு வந்து சேர்ந்திருந்தான் குடுகுடுப்பைக்காரன்.

''நல்ல காலம் பொறக்குது. நல்ல காலம் பொறக்குது... இந்த வீட்டு மகராசனுக்கு இன்னில இருந்துதான் நல்ல காலம் ஆரம்பமாகுது. மலைமேல தூக்கி வெச்சுக்கப் போகுது... பாடாப்படுத்தின துயரமெல்லம் இனி ஓடப் போகுது. நம்பிக்கை தரப் போகுது.''



- அவன் சொல்லச் சொல்ல ஆனந்தனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. எழுந்து சென்று அந்த குடுகுடுப்பைக்காரனை ஒரு அறை அறையலாமா என்று கூடத் தோன்றியது.

மகாலட்சுமியும் கடிதம் - எழுதி வைத்துவிட்டு வந்தாள். அவள் காதிலும் அவன் குரல் விழுந்திருந்தது. இதழ்க்கடையில் சிரிப்பு ஒட்டிக் கொண்டிருந்தது. ஆனால், சாப்பிட்ட பஞ்சாமிர்தம்தான் எதையுமே அவர்களுக்குள் செய்யவில்லை. மாறாக 'மளுக்'கென்று கண்களைத் திறந்து கொண்டு பவித்ரா அவர்களைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் ஒரு தூக்கக் கலக்கமோ சோர்வோ துளிகூட இல்லை.

''கண்...''

''அம்மா...''

''என்னப்பா முழிச்சிகிட்டே... தூக்கம் வரலை?''

''இல்லம்மா...தூக்கம் போயிடிச்சு...'' - பவித்ரா தெம்பாகவும் பேசினாள். இருவருக்குமே ஆச்சரியமாக இருந்தது. பஞ்சாமிர்தம் சாப்பிட்டு கிட்டத்தட்ட ஐந்து நிமிடங்கள் கடந்து விட்டிருந்தன.

சயனைட் விஷம் இரண்டு நிமிஷத்தில் கணக்குத் தீர்த்து விடும். ஆனால், இங்கே மட்டும் எப்படி...?

''மகா... என்ன மகா இது... நாம இந்நேரம் போய்ச் சேர்ந்திருக்கணும்.''

''அதாங்க எனக்கும் புரியல.''

''நீ விஷத்தைத்தான் கலந்தியா இல்ல...''

"அட... என்னங்க நீங்க... நீங்க வாங்கிட்டு வந்து வெச்சிருந்த சயனைடை என் கண் எதிர்ல இல்ல கலந்தேன்."

"அப்புறம் எப்படி?" - அவன் தொடர்ந்து ஆச்சரியத்தில் மூழ்கிட, பவித்ரா எழுந்து உட்கார்ந்து கொண்டு "அப்பா... நாம இப்ப செஸ் விளையாடலாமா?" என்று கேட்டாள்.

"என்னது செஸ்ஸா...? இந்த காலை வேளையிலா?"

"ஓ... இது காலை நேரமா... நான்கூட மத்தியானம்னு நினைச்சேன்."

"சரி, கண்ணு... உன் உடம்பு இப்ப எப்படி இருக்கு?"

"எனக்கு என்ன... நான் நல்லாதானே இருக்கேன்?"

"என்னடா சொல்றே... கை, கால தூக்கக்கூட சிரமப்படுவியேம்மா..."

"இல்லையே... இப்ப உடம்பு ரொம்பவே நல்லா இருக்குப்பா..." - அவள் - அவன் எதிரில் எழுந்து நின்று நிமிர்ந்தும் காண்பித்தாள்.

இருவருக்குமே ஆச்சரியம் பிடுங்கித் தின்றது.

அவர்களுக்கும் எதுவும் ஆகவில்லை. மகாலட்சுமி அவ்வப்போது இழுத்து இழுத்து மூச்சு விடுவாள். அவளுக்கு அதுகூட இப்போது இல்லை.

"மகா... நீ சயனைட்னு வேற எதையோ கலந்துட்டேன்னு நினைக்கறேன்."

"இல்லீங்க... இருங்க அந்த பொட்டலத்தைக்கூட எடுத்துக்கிட்டு வரேன்."



- எழுந்து உள்ளே சென்றாள் மகாலட்சுமி. திரும்பி வந்தவள் கையில் எச்சரிக்கை முத்திரையுடன் கூடிய சயனைட் பொட்டலக் கவர்.

"என்ன மகா இது அதிசயம்... உனக்கும் எனக்கும்கூட எதுவும் ஆகலை. ஒருவேளை நீ கலந்தது வேறு பஞ்சாமிர்தமா இருக்குமோ?"

"நீங்க ஒண்ணு... இங்க இருக்கறதே ஒரு பஞ்சாமிர்தம் தானே? அதுவும் விபூதித் தாத்தா கொடுக்காட்டி, சக்கரைப் பொங்கல் செஞ்சு அதுல கலந்து சாப்பிட்டுவோம்னு நினைச்சேன்."

"சயனைடை முகர்ந்து பார்த்தாலே உயிர் போயிடும்னு சொல்வாங்க. ஆனா, இங்க நமக்கு எதுவும் ஆகலையே எப்படி?"

"அதான் தெரியலியே...?"

- அவன் சொன்ன நொடி மீண்டும் வாசற்புறம் குடுகுடுப்பைக்காரன் குரல் கேட்டது. அவன் வரையில் இது இரண்டாவது ரவுண்டு.

"நல்ல காலம் பொறக்குது... நல்ல காலம் பொறக்குது... கன்னிப் பொண்ணு வாழுற இந்த வீட்டுல இனி தொட்டது துலங்கப் போகுது. பட்டது விலகப் போகுது. அந்த மலைச்சாமி அருணாசல குலமே விளங்கப் போகுது. சத்தியம் இது சத்தியம்."

- அவனது குரல் இந்த முறை இருவரையுமே சிந்திக்க வைத்தது.

"என்னங்க இது அதிசயம், விபூதித் தாத்தா கொடுத்த பிரசாதம் விஷத்தையே ஜெயிச்சிடிச்சா...?"

"அப்படித்தான் இருக்கணும்."

அவன் சொல்ல, அவர்கள் எதிரில் பவித்ரா அந்தக் காலை வேளையில் ஸ்கிப்பிங் கயிற்றை எடுத்து வந்து எம்பி எம்பிக் குதித்து ஆடத் தொடங்கியிருந்தாள்.

அவர்கள் முகத்தில் ஒரு புது நம்பிக்கை!

## 3

மலைகளில் இப்படி மர்மமாகப் பல சிறப்புகள் இருப்பதால்தான் சித்தர்கள் தரையில் வாழ்வதைவிட மலையில் வாழ்வதைப் பெரிதும் விரும்பினார்கள். அங்கே அவர்களால் மனதை சிறப்பாகவே அடக்க முடிந்தது. இந்த சிறப்புகளால்தான் மலைகளில் மூலிகைத் தாவரங்களும் தங்கு தடையின்றி விளைந்தன. குறிப்பாக சதுரகிரி மலைத்தலம் இம்மட்டில் தனிச் சிறப்புடன் திகழ அந்த மலையில் திகழ்ந்திடும் தட்ப வெப்பம்தான் முழுமுதல் காரணம். உலகம் முழுக்க எல்லா நாடுகளிலும் மலைகள் இருக்கின்றன. அவைகளில் பல மலைகள் பசுமையாகவும் இருக்கின்றன. ஆனால், தட்பவெப்பத்தை பொறுத்தமட்டில் சமச்சீரான அளவு, மற்றும் பூமியின் புவிஈர்ப்பு விசைப்பாட்டில் நிலவும் விசை ஆகியவை சதுரகிரியில்தான் சிறப்பாக உள்ளன. அதனால் இங்கே, வேறு எங்கும் விளையாத மூலிகைத் தாவரங்கள் விளைகின்றன. அவைகளை ஒரு சித்தரால்தான் அடையாளம் காணவும் முடியும்!



பவித்ராவைப் பார்த்த டாக்டருக்குள் ஆச்சரியம் அள்ளிக் கொண்டு போயிற்று. அவர் எதிரில் பனிச்சென்று இருந்தாள் பவித்ரா. தலைவாரி பூவெல்லாம் வைத்துக் கொண்டிருந்தவள் ஒரு வினாடி கூட சும்மா இல்லை. அவர் டேபிள் மேல் இருந்த புத்தகங்களைப் புரட்டுவதும், ஸ்டெதாஸ்கோப்பை எடுத்து அப்பா மடிமேல் அமர்ந்திருக்கும் நிலையில் ஆனந்தனின் மார்புமேல் வைத்துப் பார்ப்பதுமாக படு கலகலப்பாக இருந்தாள்.

"ஆனந்தன்... ரியலி இட் ஈஸ் எ மிராகிள்... ஒண்டர்... எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலை..."

"என்ன டாக்டர் சொல்றீங்க... புரியும்படி சொல்லுங்க."

"உங்க மூணு பேர் பிளட் டெஸ்ட் ரிப்போர்ட்லயும் சயனைட் சாப்பிட்ட அறிகுறியே இல்லை. யூரின், மோஷன்லயும் அந்த கண்டென்ட் இல்ல. நீங்க சயனைடை சாப்பிட்டிருக்க வாய்ப்பே இல்லை."

"இல்ல டாக்டர்... நாங்க சாப்பிட்டது சத்தியம். அதுக்கு முந்தி நானும் என் மனைவியும் பட்ட பாடு எனக்குத்தான் தெரியும்..."

"இன்ஃபாக்ட் அது சயனைட் மாதிரி இருக்கற வேற ஏதாவதாதான் இருக்கணும்."

"இல்ல டாக்டர்... அதுக்குதான் நான் அந்தக் கவரையே கொடுத்தேன்." - ஆனந்தன் ஞாபகப்படுத்தவும் எழுந்து போய் அந்தக் கவரை எடுத்து வந்தார். சில்வர் கோட்டட் அலுமினிய பிளாஸ்டிக் பேப்பரில் ஆன கவர். 2 கிராம் சயனைடை உரிய எல்லாவித எச்சரிக்கைகளுடன் சரியான முறையில் பேக் செய்து மண்டை ஓடு போட்டு

அதன் மேல் பெருக்கல் குறியெல்லாமும் இருந்து எச்சரிக்கை செய்தி பொறிக்கப்பட்டிருந்தது. அதன் உள்பாகத்தில் ஒரு மூலையில் ஒரு பேனா முனைப் புள்ளியளவு சயனைட் ஒட்டிக் கொண்டிருந்தது. அந்த கவரை அப்படியே ஒரு கண்ணாடி தம்ளர் தண்ணீரில் அலசினார். எச்சரிக்கையாக கைக்கு பிளாஸ்டிக் கிளவுஸையும் போட்டுக் கொண்டார். அலசிய தண்ணீரை உற்றுப் பார்த்தவர் அதில் கொஞ்சம் சர்க்கரையையும் எடுத்து வந்து சேர்த்து கலக்கிவிட்டு டிஸ்பென்சரிக்குப் பின்னால் உள்ள ட்ரைனேஜ்பிட் அருகே சென்று கொட்டினார். அரை மணி நேரம் கழித்துச் சென்று பார்த்த போது அங்கே ஒன்றுக்குப் பத்து கரப்பான் பூச்சிகளும் ஏராளமான ஈக்களும் செத்துக் கிடப்பது தெரிந்தது. திரும்பி, வந்தார். காத்திருந்த ஆனந்தனைப் பார்த்தவர், "ஆனந்தன்... இந்த உலகத்திலேயே சயனைட் சாப்பிட்டும் பிழைச்ச உயிர்கள் நீங்க மூணு பேர்தான். திரும்பவும் சொல்றேன். ஏதோ அற்புதம் நடந்திருக்கு. அதுமட்டுமில்ல... உங்க மகளோட உடம்புலயும் நிறையவே மாற்றங்கள்... அவ ரத்தத்துல வெள்ளை அணுக்களுக்கும் சிவப்பு அணுக்களுக்கும் இருந்த வித்தியாசம் ரொம்பவே குறைஞ்சு கவுண்ட்டும் கூடியிருக்கு."

"எப்படி டாக்டர் இது சாத்தியம்?"

"ஐ திங்க்... என்னோட யூகப்படி பார்த்தா, அந்த பஞ்சாமிர்தத்துலதான் ஏதோ இருந்திருக்கணும்."

"அது விபூதித்தாத்தா பிரசாதமா தந்தது."

"யார் அவர்?"

"அவர் ஒரு நாடோடி. தெருவுல திண்ணைல கிடக்கற ஒரு பிரம்மச்சாரி. ஆனா ரொம்ப நல்லவர். யோகாசனம், பிராணாயாமம்னு ஒரு சித்தர் மாதிரி வாழறவர்."



"சித்தர் மாதிரியா...?"

"ஆமாம் டாக்டர்... அடிக்கடி நம்ம சித்தர் மலைக்கும் போய்ட்டு வருவார். இந்த பிரசாதம்கூட அங்க லிங்கங்களுக்கு அபிஷேகம் செய்து எடுத்துக்கிட்டு வந்து தந்தது தான்."

"வாரே வா... அப்ப அந்த லிங்கங்கள்கிட்டதான் நமக்கான விடை இருக்கு. நான் அந்த விபூதித் தாத்தாவைப் பாக்க முடியுமா?"

"அதுக்கென்ன... இப்பவே போனா கூட்டிக்கிட்டு வந்துருவேன்."

"போங்க... போய் முதல்ல அவரைக் கூட்டிக்கிட்டு வாங்க. இப்ப சொல்றேன். உங்க மகளுக்கு மருந்து கிடைச்சிடுச்சு. அவ நல்லபடி ஆகிடுவா."

"டாக்டர்."

"ஆமாம்... உங்க மக உடம்பு குணமாகத் தொடங்கிடிச்சு. இன்ஃபாக்ட் உங்க ரெண்டு பேருக்கும்கூட உடம்புல எந்த வியாதி இருந்தாலும் அது குணமாகியிருக்கும்னு நம்பறேன். ஏன்னா... நீங்க நிஜமா சாப்பிட்டது விஷம் இல்ல. விஷத்தையே முறிச்சிட்ட ஒரு அமிர்தம். சயனைடையே ஒரு மருந்து செயலிழக்க வைக்குதுன்னா அது எவ்வளவு சக்திமிக்கதா இருக்கணும்...?"

- டாக்டர் பேசப் பேச ஆனந்தனுக்குள் நிஜமாலுமே ஆனந்த அலையடிக்க ஆரம்பித்தது.

"டாக்டர்... டாக்டர்... இது கனவு இல்லையே?"

"நிஜம்தான். போங்க... போய் முதல்ல அந்த விபூதித் தாத்தாவைக் கூட்டிக்கிட்டு வாங்க..."

ஆனந்தன் அடுத்த நொடியே கிளம்பி விட்டான்.

ஆனந்தன் சொன்னதைக் கேட்ட மகாலட்சுமிக்கு அப்படியே தலையைச் சுற்றத் தொடங்கியது.

"என்ன மகா... நம்ப முடியலையா?"

"இல்லீங்க... என்னால இந்த சந்தோஷத்தைத் தாங்க முடியல. இப்பத்தான் வீட்டுக்காரர் வேற வந்துட்டுப் போனார். ராத்திரி அவருக்கு ஒரு கனவு வந்துச்சாம். அதுல நாம மூணு பேரும் விஷம் சாப்பிட்டு இந்த வீட்டுல கிடக்கறோமாம். தெருவே பாக்குதாம். அவரை எல்லாரும் திட்டறாங்களாம். அந்தக் கனவு அவரை ரொம்பவே பாதிச்சிடுச்சு. அதாவது நாம நிஜமா சாக நினைச்சது அவர் வரைல கனவா வந்துருக்கு.

அதான் தூங்கி எழுந்த உடனேயே நம்மைப் பாக்க வந்துட்டார். நீங்க டாக்டரைப் பார்க்கப் போகவும் நான் அவர்கிட்ட மாட்டினேன். 'அம்மாடி... தப்பா எதுவும் பண்ணிக்காதிங்க. வாடகையை மெல்லக் கொடுங்க'ன்னு சொல்லிட்டு அவர் போனப்ப எனக்கு எதுவுமே புரியல..."

"உண்மைதான் மகா... குடுகுடுப்பைக்காரன் ஒண்ணும் உளறலை. அவன் சொன்ன மாதிரி நல்ல காலம் பொறக்க ஆரம்பிச்சிடுச்சு. ஆமா... அந்த விபூதித் தாத்தா இப்ப எங்க இருப்பார்?"

"கடைசி வீட்டுத் திண்ணைலதான்... போய்ப் பாருங்க."

"வரும்போதே பாத்தேன். அங்க அவர் இல்லையே."

"அப்ப அவரைத் தேடுங்க. அவர்தான் இப்ப நம்ம கடவுள்..."



அவள் உணர்ச்சி மிகுதியோடு கைகளைக் கூப்ப, ஆனந்தனும் அவரைத் தேடிக் கொண்டு புறப்பட்டான்.

பவித்ரா வெளியே பக்கத்து வீட்டுப்பிள்ளைகளுடன் ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருக்க, அதைத் தெருவில் உள்ளவர்களேகூட மிகுந்த ஆச்சர்யத்துடன் பார்த்தபடி இருந்தனர்!

**ஆ**னந்தனின் தேடலில் அவர் அகப்படவில்லை. யாரைக் கேட்டாலும் 'இப்பத்தானே பார்த்தேன..! இங்க தானே இருந்தாரு...!' என்றார்களே தவிர அவரைக் காட்டவில்லை. ஒரே ஒருவர் மட்டும் "தாத்தா சதுரகிரி மலைக்குப் போகப் போறதா சொல்லிக்கிட்டு இருந்தாரு... ஒரு வேளை கிளம்பிப் போயிட்டாரோ என்னவோ?" என்றார்.

"சதுரகிரி மலை எங்க இருக்கு?" என்று ஆனந்தனும் கேட்டான்.

"அதுசரி. சதுரகிரிமலையை உனக்குத் தெரியாதா... சினிமால ரஜினி மாதிரி இப்ப மலைகள்ல அது..." என்ற அந்த நபர் சொல்லவும் ஆனந்தனுக்கு அவரை அறைய வேண்டும் போல கோபம் வந்தது. அடக்கிக் கொண் "யோவ்... அது எங்க இருக்குன்னு கேட்டா சொல்லுப்பா... ரஜினி, கமல்னுகிட்டு..." என்றான்.

"ராஜபாளையம் போயும் போகலாம்... விருதுநகர் இருந்து கிருஷ்ணன் கோவில் போய் வத்ராயிருப்பு போயு போகலாம். அதான் அமாவாசை, பௌர்ணமின்னா ஆயிரக்கணக்குல அந்த மலைல இருக்கற மகாலிங்கத்தை கும்பிட கூட்டம் கூட்டமா போறாங்களே..." என்றார் அந் நபரும்!

"இந்த தாத்தா அங்க போய் என்ன பண்ணுறாரு?" என்கிற ஒரு கேள்வி அவசர கதியில் வந்து விழுந்தது.

"அட, என்னப்பா நீ... அவர் என்ன டாஸ்மாக் பாருக்கா போயிருக்காரு. இல்ல அது என்ன டான்ஸ் ஆட்டம் நடக்கற க்ளப்பா - தப்பு சொல்ல...? சித்தர்சாமிங்க நடமாடற கோவிலுப்பா அது. வயசான காலத்துல ஒருத்தன் கிருஷ்ணா ராமான்னு கோவில் பக்கம்தானே போவான்?"

"அதுசரி... இங்க இல்லாத கோவிலா என்ன?"

"அப்படி இல்ல ராசா... எவ்வளவோ கோடி ஜனங்க இருந்தாலும் யாரோ ஒருத்தர்தானே எல்லாரையும் மயக்கற மாதிரி பாடுறார். எவளோ ஒருத்திதானே ஆடுறா... அப்படித்தான் இதுவும். ஆயிரம் கோயில் இருக்கலாம். சதுரகிரி அதுல தனிப்பா. அது மூலிகைக்காடு. அந்த காத்தை சுவாசிச்சாலே பாதி நோய் பறந்துடுமே?"

- அவர் மூலிகைக்காடு என்றதுமே ஆனந்தன் மனதும் அதைக் 'கப்'பென்று பிடித்துக் கொண்டது.

'மூலிகைக்காடு... மூலிகைக்காடு...' என்று மனது திரும்பத் திரும்ப உச்சரிக்க ஆரம்பித்தது.

'அந்தக் காட்டு மூலிகைகளில் ஏதோ ஒன்றுதான் பஞ்சாமிர்தம் வழியாகப் பவித்ராவுக்குள் புகுந்து அவளைக் குணப்படுத்தி உள்ளதோ?'

ஆனந்தனுக்கு ஒரு விடை கிடைத்த மாதிரி இருந்தது.

அப்படியே வீட்டுக்குத் திரும்பியவன் கொஞ்சம் அதிர்ந்து போனான்.

பவித்ரா திரும்பவும் சுருண்டு படுத்து விட்டிருந்தாள்.

"என்னன்னு தெரியலீங்க. பழையபடி சுருண்டுட்டா. வழக்கம் போல தலை வலிக்குது. கண்ண இருட்டிகிட்டு வருதுன்னு ஆரம்பிச்சுட்டா..."



"என்ன மகா சொல்றே... நாம தப்பிச்சிட்டோம்னுல்ல நினைச்சேன்..."

"நானும் அப்படித்தானே நினைச்சேன். ஆமா... எங்கங்க விபூதித் தாத்தா...?"

"அவர் ஒருத்தர்... இப்பப் பார்த்து சதுரகிரி மலைக்குப் போய்ட்டாராம்."

"திரும்பவுமா?"

"திரும்பவுமான்னா... நேத்து அங்கயா போயிருந்தார்?"

"ஆமாங்க... சித்தர் மலைன்னு அவர் அதைத்தானே சொல்வார்."

"அப்படியா சங்கதி... இப்ப அங்க போய் அவரை எங்கன்னு தேட?"

"அதுக்கு முந்தி டாக்டர்கிட்ட நம்ம பவித்ராவைக் காட்டுவோம். பாருங்க... எப்படிப் படுத்திருக்கா?"

- ஆனந்தன் அடுத்த நொடியே தன் அருமை மகளை அள்ளித் தோளில் போட்டுக் கொண்டான்.

"நீயும் புறப்படு..." - என்று ஒரு ஆட்டோ பிடித்தான்.

## 4

தரைக்கும் மலைக்குமான வேற்றுமை காரணமாகவே மனதை அடக்க வேண்டும் என்கிற கட்டுப்பாடுள்ள சித்தர்கள் மலைகளை நாடத் தொடங்கினார்கள். இந்த மலைகள் எல்லாமே சிறந்தவைகள்தான். ஆனால், இவைகளில் சதுர மலையும், சதுரகிரி மலையும் தனி ரகம்.

பொதுவில் 'கிரி என்றால் உயர்ந்து நிற்பது; அடித்தளம் வட்டமாகவும், மேற்பாகம் கூர்மை யாகவும் உடையது' என்பது பொருள். ஒரு மனிதன் அமர்ந்து தவம் செய்யும்போது அவன் தோற்றமும் மலையின் தோற்றம் போலத்தான் இருக்கும்.

எப்படித் தவம் புரிபவர் முகம் ஒளிவீசக் கூடியதாக இருக்குமோ அப்படி மலையின் முகடுகளும் சக்தி கொண்டதாக இருக்கும். இப்படிப்பட்ட கிரி எனப்படும் மலைகளில் கஞ்சமலை என்பது இரும்புத் தாதுவால் ஆனது. மலை முழுக்க இங்கே இரும்புக் கனிமங்கள்தான் உள்ளன. இதன் காரணமாக இங்கே வளரும் செடிகொடிகள் இரும்புக் கனிமத்துக்கு உரிய வகைளைச் சார்ந்தும், இந்த மலையில் பெய்யும் மழை நீரிலும் இரும்புச் சத்து மிகுதியாகவும் இருப்பதால் இந்த மலையை சில சித்த புருஷர்கள் தங்கள் வாசஸ்தலமாகத் தேர்வு செய்தனர். இரும்பு என்ப சனியின் அம்சம். கரிய நிறத்தோடும், அதிக பலம் உடையதாகவும், வெயிலில் உருகக் கூடியதாகவும், விரிவடையக்கூடியதாகவும் இருக்கும். எனவே இங்கும் சரி... இந்த மலையைச் சுற்றியும் சரி, பகல் பொழுது மிக வெப்பமானதாக இருக்கும். இந்த வெப்பத்துக்கு ஒரு மருத்துவ குணமும் உண்டு. இங்கு வீசும் காற்றுக்கும் அந்த குணம் உண்டு. எனவேதான் முக்கனிகளில் இரும்புச் சத்து மிகுந்த மாம்பழம் இந்த மலையைக் கொண்ட சேலம் மாவட்டத்தில் தனிச் சுவையோடு விளைகின்றது.



பவித்ராவைப் பரிசோதித்த டாக்டர் முகத்தில் ஏமாற்ற ரேகை மிக வேகமாக ஓடியது.

''டாக்டர்...''

''மிஸ்டர் ஆனந்தன்...! திரும்பவும் உங்க மகளோட ரத்தத்துல அந்த நோய்க் கிருமி வளர ஆரம்பிச்சிடிச்சு. பஞ்சாமிர்த மருந்து ஓரளவுதான் கட்டுப்படுத்தியிருக்கு. அதோட வீர்யம் குறையவும் நோய்க்கு பழைய சக்தி வர ஆரம்பிச்சிடிச்சு.''

''இப்ப என்ன டாக்டர் பண்றது?''

''ஒண்ணும் கவலைப்படாதீங்க. இதுக்கு மருந்தே இல்லைன்னுதானே நினைச்சுகிட்டிருந்தோம். மருந்து இருக்கறதுதான் தெரிஞ்சு போச்சே. ஆமா... எங்கே அந்த விபூதித் தாத்தா?''

''அவர் ஒருத்தர்... திடுதிப்னு சதுரகிரிங்கற சித்தர் மலைக்குப் போய்ட்டாராம் டாக்டர்...''

''நோ பிராப்ளம்... போய் அவரை எப்படியாவது பிடிச்சு இழுத்துக்கிட்டு வாங்க. அவர் தந்த பஞ்சாமிர்தத்துல தான் மருந்தோட ரகசியம் இருக்கு.''

''சரி, டாக்டர்... அதுக்குள்ள பவித்ராவுக்கு எதுவும் ஆயிடாதே...?''

''அதை நான் எப்படிச் சொல்ல முடியும். ஒண்ணு மட்டும் சொல்றேன். எப்ப இப்படி ஒரு மருந்து இருக்கறது தெரிய வந்ததோ... நீங்க சாக நினைச்சும் அது மாறிப் போச்சோ... அப்பவே உங்க வரைல நல்ல காலம் தொடங்கி யாச்சுன்னுதான் அர்த்தம். ஆகையால கடவுள் மேல நம்பிக்கை வெச்சுப் புறப்படுங்க. எவ்வளவு சீக்கிரமா அவரோட வர்றீங்களோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது.''

- டாக்டரின் பாசிடிவான பேச்சும் ஊக்கமும் ஆனந்தனை சதுரகிரி நோக்கித் திருப்பியது.

மனைவியைப் பார்த்தான்.

"புறப்படுங்க. தாத்தாவோட வாங்க. நான் காத்துக்கிட்டே இருப்பேன்..."

- மகா கண்கலங்க - அவனுக்கு விடை கொடுத்தாள்.

"அப்பா!" - அந்த பிஞ்சும் கூப்பிட்டது.

"கண்ணு..."

"எங்கப்பா போறே?"

"உனக்கு மருந்து தேடடா கண்ணு..."

"எனக்கு நல்லாயிடுமாப்பா...?"

"கட்டாயமா...?"

"சரிப்பா... பாத்துப் போயிட்டு வாப்பா..."

- அந்தப் பிஞ்சும் விடை கொடுத்தது. அது விடை கொடுத்த விதமே நெகிழ்ச்சியாக இருந்தது. ஆனந்தனும் ஒரு புது வேகத்துடன் கிளம்பினான்!

அந்த இடத்துக்குப் பேர் தாணிப்பாறை! அங்கிருந்து தான் சதுரகிரி என்னும் அந்த மலைத்தலம் ஆரம்பம் ஆகின்றது. ஆரம்பம் ஆகிய இடத்திலே பிலாவடிக் கருப்பு என்னும் கருப்பண்ணசாமிக்கு ஒரு கோயில்.

அந்த மலைக்கே கருப்புதான் காவல் தெய்வம். மாதம் தவறாமல் பௌர்ணமிக்குப் பௌர்ணமி மலை ஏறுகின்றவர்கள் கருப்புக்கு ஒரு கற்பூரம் காட்டி விட்டுத்தான் மலை ஏறவே ஆரம்பிப்பார்கள்.



இல்லாவிட்டால் வழியில் ஏதாவது இடர்பாடு ஏற்படும் என்பது அவர்கள் எண்ணம். எண்ணம் என்பதை விட அதுதான் சத்தியமான உண்மையும் கூட.

'சாமியாவது பூதமாவது...' என்று கேட்டு 'புத்திதான் சாமி' என்று வாழ்கிறவர்களும் இருக்கத்தானே செய்கின்றனர்?

அவர்களில் ஒருவன்தான் அண்ணாமலை!

பிக்பாக்கெட்டுல் கில்லாடி. அசந்தால் - முழிச்சுக் கொண்டிருக்கும் போதே கண்களையே திருட முடிந்தவன்.

அடிவாரத்தில் யாருக்கோ காத்திருப்பது போல காத்துக் கொண்டிருந்தான்.

அழுக்கேறிய காக்கி பேண்ட். ஒரு கட்டம் போட்ட சட்டை. உள் பாக்கெட்டுல் ஒரு பேனா கத்தி. காலில் டயர் செருப்பு. உதட்டுல் ஐந்து பூ மார்க் பீடி...

'கப் கப்' என்று புகை விட்டபடியே ஒரு பாறைமேல் அமர்ந்திருந்தான்.

நாலைந்து பேராக - கூட்டமாக யாராவது வந்தால், குறிப்பாக அவர்கள் கழுத்தில் கையில் வாட்ச், மைனர் செயின் என்று இருக்குமானால் அவர்களே அண்ணாமலையின் டார்கெட்.

அவர்களோடு சேர்ந்து கொண்டு மலை ஏற ஆரம்பித்தால் பதினைந்து கிலோ மீட்டரைக் கடப்பதற்குள் அவர்களுள் ஒருவனாகவே ஆகி விடுவான். வழியிலே அங்கே ஒரு அருவி இருக்கிறது. இங்கே ஒரு குகை இருக்கிறது என்று அவர்களைக் கூட்டிச் சென்று அங்கே ஒப்பேடுக்க வைத்து அவர்கள் அசந்த நேரம் பார்த்து

அவ்வளவையும் ஆட்டையை போட்டுக் கொண்டு ஓடுவதுதான் அவனது தொழில்!

புனிதத் தலத்தில் இப்படியும் சிலர்!

அன்று அண்ணாமலைக்கு பெரிய அளவில் ஏமாற்றமாக இருந்தது. பெரிதாக யாரும் வரக்காணோம். வருகின்றவர்களும் ஐந்து, பத்து கிராக்கிகளாகத்தான் அவனுக்கு தெரிந்தனர். பலமுறை வந்து சென்றவர்கள் என்பது அவர்கள் நெற்றியில் எழுதி ஒட்டப்பட்டிருந்தது. அண்ணாமலை நன்றாகவே நெற்றி படிப்பான். தப்பித் தவறியும் உஷாரான பார்ட்டிகளிடம் மாட்ட மாட்டான். அப்புறம் போலீஸ், ஜெயில் என்று யாரால் ஆகும்? ஒரு முறை ஒரு போலீஸ்காரரிடமே ஆட்டையை போட்டு ஆறுமாசம் கம்பி எண்ணியதை அவனால் ஜென்மத்துக்கும் மறக்க முடியாது.

எனவேதான் ஏதாவது 'ஈத்த பாத்தை'யாய் யாராவது சிக்குகிறார்களா என்று பார்த்துக் கொண்டே இருந்தான். அப்போது அவன் எதிரில் பட்டுப்பாவாடை சட்டையுடன் ஒரு இளம்பெண். வாளிப்பான உடம்பு. கிண்ணென்று இருந்தாள். கூடவே ஒரு வயதானவர். அந்தப் பெண்ணுக்கு அப்பாவாக இருக்க வேண்டும். அந்தப் பெண்ணின் கழுத்திலும் சரி, அவர் கழுத்திலும் சரி, ஏராளமான நகைகள். இரண்டே பேர்தான்!

அவன் எதிரில் பிலாவடிக் கருப்புக்கு கற்பூரம் காட்டிவிட்டு நேராக அவனிடமே வந்தார். அவனது காக்கிஉடுப்பு அவர் வரையில் அவனைப் பொறுப்பான ஒரு உழைப்பாளி போலக் காட்டிவிட்டதோ என்னவோ?

''வணக்கம் தம்பி...''



''வணக்கமா... எனக்கா?''

''உங்களைத்தான்... நீங்க இந்த மலைப் போலீஸ்தானே?''

''மலைப் போலீஸா... நானா?'' என்று இழுத்த அண்ணாமலை -

''அட... எப்படிக் கண்டுபிடிச்சீங்க?'' என்று பல்டியடித்தான்.

''அட, என்ன தம்பி நீங்க... இதுக்கு என்ன தனியா ஒரு மூளைய செஞ்சா தலைல வெச்சுக்கிட முடியும்? பாத்தாலே தெரியுதுல்ல.''

''சரி, சொல்லுங்க.. என்ன விஷயம்?''

''எங்களுக்கு இந்த யாத்திரை புதுசு. இப்பத்தான் முதல் தடவையா வந்துருக்கோம். இது என் மக...''

''சரிதான்... இந்த உங்க மகளோட நீங்க 15 கூட்டல் 15 முப்பது மைல் தூரம் போய்ட்டு வரப் போறீங்களா?''

''ஆமாம் தம்பி... அந்த சந்தன மகாலிங்கத்தைக் கும்பிட்டாத்தான் என் மகளுக்குக் கல்யாணம் நடக்கும்னு நாடி ஜோசியம் பாத்தப்ப ஜோசியர் சொன்னாரு. அதான் கூட்டிக்கிட்டு வந்தேன். என் மக கையால அந்த சாமிக்கு பூஜை செய்யணும்னு அழுத்தமா அந்த நாடில சொல்லிடிச்சு.''

''அப்ப நடங்க. ஆமா... கூட வேற யாரும் வரலையா?''

''அத ஏன் கேக்கறீங்க... நானும் இவளும் மட்டும்தான் போகணும். வேற யாரும் வரவும் மாட்டாங்கன்னு சொன்னார் ஜோசியர். அதே மாதிரிதான் ஆயிடிச்சு...''

''இந்த மாதிரி எல்லாம்கூட இப்ப ஜோசியக் காரனுங்க சொல்ல ஆரம்பிச்சுட்டாங்களா?''

''ஐயா அவர் பெரிய ஜோசியருங்க. அவர் சொன்னா சொன்னதுதான்.''

''அப்படி அவர் என்னதான் சொன்னாரு...?''

- அண்ணாமலை ஏதோ கதை கேட்பவன் போலக் கேட்டது அவருக்கே கொஞ்சம் அதிகமாகத் தோன்றியதோ என்னவோ?

''மன்னிக்கணும் தம்பி... அது எதுக்கு இப்போ? எனக்கு சில தகவல்கள் தெரியணும். சொல்றீங்களா?''

''என்ன தகவல்?''

''மேல போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்? அப்புறம் அங்க தங்க இடவசதி உண்டா? ஹோட்டல்லாம் இருக்குதா?''

அண்ணாமலை அவர் கேள்வியைத் தொடர்ந்து ஒரு சிரிப்பு சிரித்தான்.

''என்ன சிரிக்கிறீங்க?''

''சிரிக்காம என்ன பண்றது...? ஏதோ இந்த ஒரு மலைதான் மனுஷங்ககிட்ட இருந்து தப்பிச்சு கிடந்துச்சு. சாமி, பூதம்னு இதையும் இப்ப மனுஷக் கூட்டம் ஒரு வழி பண்ண ஆரம்பிச்சிடிச்சு. இதுல ஹோட்டல், லாட்ஜ் எல்லாம் வந்தா அவ்வளவுதான்.''

''என்ன தம்பி சொல்றீங்க... எனக்குப் புரியல.''

''நடங்க சொல்றேன். நானும் மேலதான் போறேன்.''

- என்று பாறையை விட்டு விலகிப் பாதைக்கு வந்தான்.



''ரொம்ப சௌகர்யமாப் போச்சு... ஆமா, எனக்கு பதிலே சொல்லலையே நீங்க...''

''மேல பெருசா எந்த வசதியும் கிடையாதுங்க. உங்கள மாதிரி காசுள்ளவங்க அன்னதானம் பண்ணுவாங்க. அதை சாப்பிட்டுக்கிட வேண்டியதுதான். அங்கங்க கொஞ்சம் போல தகரக் கொட்டா போட்டு படுத்துக்க கொஞ்சம் வழி பண்ணியிருக்காங்க. அம்புட்டுத்தான்...''

- நடந்தபடியே அண்ணாமலை ஆரம்பித்து விட்டான். அவரும் அந்தப் பெண்ணும் அவனைத் தொடரத் தொடங்கினர்.

''செருப்பு போட்டுக்கிட்டு நடக்கலாம்தானே?''

- அவர் காலைக் காட்டி கேட்டார்.

''வாங்க... வாங்க. நான் செருப்பு போட்டுக் கிட்டுத்தானே நடக்கறேன். ஆமா உங்க பேர்?''

''என் பேர் ஆதிகேசவன். இது என் மக. பேர் மல்லிகா.''

''பேரும் அழகு... உங்க மகளும் அழகு.''

- ரசனையோடு சொல்லிவிட்டு ஒரு கள்ளப் பார்வையும் பார்த்தான். அவளோ அவனைப் பார்ப்பதையே தவிர்ப்பவள் போல தரையை பார்த்துக் கொண்டே நடக்கத் தொடங்கினாள். ஆனால், அடுத்து அவர் சொன்னது அண்ணாமலைக்கே ஒரு அடியாகத்தான் அமைந்தது.

''பேரும் ஆளும் அழகா இருந்து என்ன தம்பி பிரயோஜனம். அந்த ஆண்டவன் பேச்சைப் புடுங்கிட்டான். பேச முடியாததால கல்யாணம்ங்கற விஷயமும் ஒரு கனவாவே இருக்கு'' என்ற அவரை சற்று அதிர்ச்சியோடு பார்த்தான்.

அவர்கள் அந்த மலைக்கு வந்துவிட்டதன் பின்னால் ஒரு அர்த்தம் இருப்பது போல் கூடத் தோன்றியது.

''என்ன தம்பி பாக்கறீங்க... ஏதோ அந்த மாகலிங்கம் அருளால ஒரு நல்ல மாப்பிள்ளை அமைஞ்சா உண்டு. அநாதையா இருந்தாக்கூட பரவாயில்ல. என்கிட்ட காசு பணத்துக்குக் குறைவில்ல. என் மக மேல உசுரா இருந்தா அது போதும் எனக்கு.''

அவர் சொல்லச் சொல்ல அந்த அநாதைய்ாக தான் இருந்துவிடக் கூடாதா என்றெல்லாமும் அண்ணாமலைக்குள் எண்ணம் ஓடத் தொடங்கியது. கப்பென்று ஒருவித மௌனம் அவனை ஆட்கொண்டது.

சிந்தித்தபடியே நடக்கத் தொடங்கினான்.

''ஆமாம்... வழிநெடுக இப்படித்தான் இருக்குமா? இல்லை நல்ல வசதியாக திருப்பதி மாதிரி ரோடு போட்டிருக்காங்களா?''

அவர் கேட்டது அவன் காதில் விழவேயில்லை. அவன் மனசெல்லாம் மல்லிகாவின் நகைகளைத் திருடுவதைவிட அவளைத் திருடிவிடுவதே உத்தமம் என்கிற மாதிரி நினைக்கத் தொடங்கி விட்டது.

ஆதிகேசவனுக்கு அதெல்லாம் தெரிய நியாயமில்லையே...?

ஒரு இடத்தில், ஒரு சின்ன மரத்தின் நிழலில் சிலர் அமர்ந்திருக்க - அநியாயத்துக்கு சடைபிடித்த தலையோடு ஒரு கோவணாண்டி தென்பட்டார். அவரது உடலின் எடையைவிட அவரது தலைமுடியின் எடை அதிகமாக இருக்கும் என்பது பார்த்த மாத்திரத்தில் தெரிந்தது.



அவரை அண்ணாமலையும் ஆதிகேசவனும் கடந்த போது அந்த மூவரையும் அவர் ஒரு தினுசாகப் பார்த்தார்.

ஏனோ ஒரு மாதிரி சிரித்தார். அது அண்ணாமலையை என்னவோ செய்தது. அவனும் பதிலுக்கு அவரை உற்றுப் பார்த்தான்.

''எங்க போறீங்க... உக்காருங்க! நிதானமா போகலாம். மீறிப் போனாலும் முக்காகல்லுக்கு மேல போக முடியாது'' என்றார்.

''இங்க உக்காந்து என்னத்த பண்ணப் போறோம். நீங்க ஏதாவது கதை உடுவீங்க. அதைக் கேக்கறதுக்கு - நடந்துகிட்டிருந்தா இருட்டறதுக்குள்ற கோவிலுக்காவது போய்ச் சேருவோம்ல?''

''அட, வெவரம் கெட்டவனே... நீ ஒரு களவாணிப்பய! நீ எக்கேடோ கெட்டுப் போ... ஆனா வாயில்லாத இந்தப் பொண்ணு எதுக்குடா உன்கூட வந்து கஷ்டப்படணும்?''

- அவர் சட்டென்று சீறினார். அதில் அவனைக் 'களவாணி' என்றதும், அந்தப் பெண்ணை 'வாயில்லாதவள்' என்றதும் அவன் விலாவில் ஊசியை ஏற்றியது.

ஆதிகேசவனும் ''பெரியவர் சொல்றார்னா அர்த்தம் இருக்கும். உக்காந்துட்டுதான் போவோமே...'' என்றார்.

அண்ணாமலையும் விட்டுப்பிடிக்க முடிவு செய்தான். பக்கமாய் பாறை... போய் அமரத் தோதாக! அதன்மேல் அமர்ந்து கொண்டு ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைக்கத் தொடங்கினான்.

அந்தப் பெரியவர் முறைத்தவராக, ''பிரம்மபத்ரத்துக்கு இந்த மலைல இடம் இல்லை. அட - தூக்கி எறியறியா இல்லையா?'' என்று கத்தினார். அந்த தொனியே அவனைக் கலக்கி விட்டது. பற்ற வைத்த பீடியோடு எழுந்தவன் மேல் அங்கே அமராமல் நடக்கத் தொடங்கி விட்டான்.

''அவன் போனா போய்ட்டு போறான். நீங்க உக்காருங்க. இன்னும் ஒரு பத்து பதினைஞ்சு நிமிஷத்துல ஒரு காத்து யுத்தம் இருக்கு. அதுல இந்த மலைக்காடெல்ல கிடுகிடுக்கப் போகுது...'' என்றார்.

ஆதிகேசவன் அவர் சொன்னதைக் கேட்டு சற்று அதிர்ந்து போய், ''சாமி பேரை நான் தெரிஞ்சுக்கலாமா?'' என்று கேட்டார்.

''எனக்கு அப்பன் பாட்டன் வெச்ச பேர் பெரியசாமி. ஆனா இந்த உலகத்துல அந்த மகாலிங்கம்தான் பெரியசாமி. அதனால நான் என்னை சின்னச்சாமி ஆக்கிக்கிட்டேன். நான் மட்டும் சின்னச்சாமி இல்ல. நீங்க எல்லாரும்கூட சாமிங்க தான். அதை மறந்துடாதீங்க. நாம வேற, சாமி வேற கிடையாது... சாமி வேற நாம வேற கிடையாது...''

அவர் கொஞ்சம் தத்துவமாக சொல்வது போலத்தான் ஆதிகேசவனுக்குத் தோன்றியது.

''இந்த மலைல சாமி என்ன பண்றீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?''

''மலைல என்னத்த பண்ண... அந்த மகாலிங்கம் பேரைச் சொலிக்கிட்டே உக்காந்திருப்பேன்.''

''ஜீவனத்துக்கு...''

''அப்படின்னா?''



''இல்ல.. வயிறுன்னு ஒன்னு இருக்கு. வாய்னு ஒன்னு இருக்கு...''

''அதுக்கு மேல புத்தின்னும் ஒன்னு இருக்கு. அத என் விட்டுட்டே?''

''இல்ல... அதை வெச்சுத்தான் இந்த கேள்வியே... தப்பா எடுத்துக்கக் கூடாது.''

''எனக்கு தப்பு சரின்னுல்லாம் எதுவும் கிடையாது. என் வரைல கோடீஸ்வரனும் சரி. கோமணாண்டியும் சரி. ஒன்னுதான்.''

''அது எப்படிச் சாமி ஒன்னாக முடியும். எனக்குப் புரியலியே.''

''அது சரி... போற போக்குல புரிஞ்சுக்க இது என்ன அஞ்சும் மூணும் எட்டுங்கற மாதிரி கூட்டிக் கழிக்கற விஷயமா? இந்த உலகத்து மாயையைக் கடந்து யோசிக்க வேண்டிய விஷயமாச்சே...''

''அது என்னவோ சாமி... உங்களை மாதிரி சாமிங்க எங்களுக்குப் புரியற மாதிரியே பேச மாட்டேங்கறீங்க. 'புரியலை சாமி'ன்னா உடனே 'அது லேசுப் பட்டதுல்ல'ன்னும் சொல்றீங்க. இப்படிச் சொன்னா எப்படிதான் சாமி எங்கள மாதிரி ஆளுங்க புரிஞ்சுக்கறது?''

''இதுக்கு மூனே வார்த்தைல ஒரு பதில் இருக்கு... சொல்லவா?''

''மூணு வார்த்தையா?''

''ஆமாம்... மூனே வார்த்தைதான். அதுதான் சத்தியமும் கூட...''

''என்ன சாமி அது?''

''விதி இருந்தா புரியும்!''

அதைக் கேட்ட நொடி ஆதிகேசவனுக்கு சற்று சப்பென்று ஆகிவிட்டது.

'இந்த பதிலைத்தானே போறவன் வருகிறவனெல்லாம் சொல்கிறான். இதைச் சொல்ல இவர் எதுக்கு?' என்கிற மாதிரி பார்த்தபோது தூரத்தில் புழுதிக் கவளத்தைக் கிளப்பிக் கொண்டு ஒரு சுழற்காற்று தாழ்ந்த ஒரு பகுதியில் இருந்து மேல்நோக்கி வந்தபடி இருந்தது.

''அடடே... சுழல்காத்து சீக்கிரமாவே வர ஆரம்பிச்சிடிச்சே. சரி, சரி... எல்லாரும் கண்ணை மூடிக்கிட்டு அங்கங்கே பாறைங்க பின்னால போய் உக்காந்துக்குங்க. இந்த மரத்தடில யாரும் நிக்க வேணாம். இந்த மரம் இன்னும் கொஞ்ச நேரத்துல எரிஞ்சு சாம்பலாயிடும்...'' - என்றவர், ''நான் வர்றேன்... விதி இருந்தா அடுத்து சந்திப்போம்...'' என்றபடியே அண்ணாமலை சென்ற பாதை மேல் நடக்கத் தொடங்கினார்.

விடுவிடுவென்ற நடை... நடக்கும்போதே கோவணத்தை அவிழ்த்து நிர்வாணமாக நடந்தபடியே அதை ஒரு உதறு உதறிவிட்டு திரும்ப அவர் கட்டிக் கொண்டு நடப்பதை ஆதிகேசவன் ஒரு வேடிக்கை உணர்வுடன் பார்க்க, வானில் ஒரு மின்னல் கீற்று ஒரு ஒளிப்பூச்சி போல கசாமுசாவென்று ஒடிற்று. அதைத் தொடர்ந்து ஒரு பெரும் இடி சப்தம்!

அனேகமாக ஆதிகேசவன் தன் வாழ்நாளில் மிக அதிகபட்சமாகக் கேட்ட ஒரு சப்தம் அதுவாகத்தான் இருக்க முடியும். அதையும் தொடர்ந்து வெகுதூரத்தில் ஒரு மின்னல் தரையில் இறங்கியதில் தூர இருந்த ஒரு மரம் அதன் கையில் சிக்கிக் கொண்ட மாதிரி ஒரு தோற்றம். இடியும் தொடர்ந்து விழுந்ததில் அந்த மரம் உடனேயே தீப்பிடித்துக் கொண்டது.



அப்போதுதான் ஆதிகேசவனுக்கே அபாயம் புரிந்தது. மகளோடு தூர ஓடினார். ஒரு பெரிய பாறையை ஒட்டி மல்லிகாவையும் கட்டிக் கொண்டு அமர்ந்தார்.

காற்று கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் அதனால் பேச முடியும் என்பது போல 'உய்ய்... உய்ய்...' என்கிற சப்தம்! சடசடவென மழைத் துளிகளும் சிந்திச் சிதற ஆரம்பித்தன.

மற்றவர்கள் எல்லாரும்கூட அங்கங்கே போய் அடைந்து கொள்ள - அந்த சடையாண்டி சித்தர் சொன்ன காற்று யுத்தம் கண் எதிரில் நடக்க ஆரம்பித்து, அவர்கள் நின்ற மரத்தின் மேலும் இடி விழுந்து அந்த மழை ஈரத்தையும் மீறிக் கொண்டு குபீர் என்று மரத்தில் தீப்பிடித்தது.

அது ஜோதிகர்ப்ப மரம்... அதன் இலைகளுக்கு பஞ்சுத்திரியின் குணம் உண்டு. எனவே கீழே உதிர்ந்து விழும் இலைகளைக் கொண்டே விளக்கெரிக்கலாம். வெளிச்சமும் நீலச் சுடரோடு பளிச்சென்றிருக்கும்.

அதெல்லாம் ஆதிகேசவனுக்குத் தெரியாது.

ஆனால், அந்த சின்னச்சாமி நிச்சயமாக ஒரு சித்தர் என்பதும் அவர் தடுக்காவிட்டால் காட்டுப் பகுதிக்குள் அண்ணாமலையோடு நிச்சயம் எக்குத் தப்பாக மாட்டிக் கொண்டிருக்க வேண்டியிருக்கும் என்பதும் அவருக்குப் புரிந்து போயிற்று.

அப்படியே மனதுக்குள் அந்த சின்னச்சாமிக்கு நன்றிகளைக் கூறிக் கொண்டார்.

# 5

மலைகளில் தாதுசத்து காரணமாகக் கஞ்சமலைக்கு ஒரு சிறப்பென்றால், சதுரகிரிக்கு அதன் நீள, அகலம் மற்றும் அகண்ட சமவெளி போல நடுவில் விரிந்து கிடக்கும் நிலப்பரப்பு ஆகியவையால் தனிச்சிறப்பு. சதுரகிரி என்பது ஏதோ வடிவத்தில் சதுரமாக இருப்பதாகப் பொருள் கொண்டுவிடக்கூடாது. சதுர் என்றால் நான்கு என்று பொருள். வேதங்கள்கூட நான்குதான். அந்த நான்கு வேதங்களுமே அங்கு நான்கு மலைகளாக - நான்கு திசைகளிலும் எழும்பிக் காட்சி தருகிறது. அந்தந்த மலைகளில் நடமாடித் திரியும்போது அங்குள்ள அதிர்வலைகள் காரணமாக மனதில் ஏற்படும் எண்ணங்கள் - வேதங்களைப் படித்தபின் ஒரு மனதுக்குள் ஏற்படும் எண்ணங்களை ஒத்திருக்கும். எனவே எது வேதம் என்று தெரியாதவன்கூட சதுரகிரி மலையில் ஒவ்வொரு மலையிலும் சில காலம் இருந்து தவம் செய்தாலே போதும், நான்கு வேதங் களையும் கற்றறிந்த வல்லாளன் ஆகிவிடுவான் என்பதே உட்பொருள்.

அது மட்டுமல்ல... நூற்றுக்கணக்கான சித்தர் பெருமக்கள் விடும் மூச்சுக் காற்று அங்கே பரவிக் கிடக்கிறது. அங்கு சென்ற நிலையில் நாமும் அதை சுவாசிப்பதால் மறைமுகமாக நமக்கும் அவர்களின் தொடர்பு காற்று மூலம் கிட்டுகிறது. இதனால் நமக்குள்ளும் நிறைய மாற்றங்கள் நிகழும்!



தாணிப் பாறைக்கு ஆனந்தன் வந்தபோது இருட்டி விட்டது. பஸ்ஸில் இருந்து இறங்கும்போதே கண்டக்டர், ''இங்க எங்கேயாவது படுத்து இருந்துட்டு விடியகாலைல எழுந்து மலைல நடங்க. ராத்திரில போய் மாட்டிக்காதீங்க.'' - என்று கூறியிருந்தது ஞாபகம் வந்தது.

ஒரு வேகத்தில் கையில் ஒரு துணிமணியைக்கூட எடுத்துக் கொள்ளாமல் வந்துவிட்டது ஒரு பெரிய தப்பாக அப்போதுதான் அவனுக்கே புரிய ஆரம்பித்தது.

'உவ்... உவ்...' என்று காற்றிடம் ஊளை வீச்சு.

ஒரு குடிசைகூட கண்ணில் படவில்லை.

பிலாவடிக் கருப்பு கோயிலில் மட்டும் இரு செங்கல் கற்களுக்கு நடுவில் ஒரு தீபம் - அணைந்து விடுவது போல எரிந்து கொண்டிருந்தது. ஆனந்தன் மெல்ல அங்கே சென்று நின்றான்.

'வள் வள்'என்று நாய் ஒன்று குரைக்கும் சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான். இருட்டோடு இருட்டாக ஒரு கறுப்பு நாய்! அதை ஒரு தெரு நாயாகத்தான் பார்த்தான். நடுவில் எங்கிருந்தோ யாரோ இருமும் சப்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து ஒரு இடத்தில் தீக்குச்சி உரசப்பட்டு ஒருவர் சுருட்டு பிடிப்பதைப் பார்த்தான்.

மெல்ல அவரை நோக்கிச் சென்றான்.

அவரைப் பார்க்கவும் ஒரு பிச்சைக்காரர் என்பது அவனுக்குத் தெளிவாகி விட்டது. இடுப்பில் கிழிந்த வேஷ்டி. மேலே ஒரு துண்டுகூட இல்லை. பக்கமாய் துணி மூட்டை. ஒரு அலுமினியத் தட்டு. அந்த நபரும் ஆனந்தனைப் பார்த்தார்.

''யாரு...?''

"நான் இந்த மலைக்கு ஒருத்தரைத் தேடி வந்தவன். ஆமா... இங்க தங்கிக் கொள்ள இடம் எதுவும் கிடையாதா?"

"இது என்ன ஊட்டியா, கொடைக்கானலா... என்னை மாதிரி வாழ்க்கை வெறுத்தவங்க சுத்தற இடம். இங்க எப்படி இருக்கும் தங்கறதுக்கான இடம்!"

"இல்ல... ராத்திரி பொழுதைக் கழிக்கணும்."

"தா... அப்படிப் போய் அந்தப் பாறை மேல படு. அதான் கறுப்பன் கூடவே இருக்கானே. அவன் பாத்துக்குவான்."

"கறுப்பனா... அது?"

"இந்த நாயைத்தான் சொன்னேன். இதான் கருப்பு. எங்களுக்கெல்லாம் காவல் தெய்வம்."

ஆனந்தனுக்கு உடனேயே சிரிப்பு வந்து விட்டது. அந்த நபருக்கோ இருமல்தான் வந்தது. அநியாயத்துக்கு இருமத் தொடங்கினான். ஆனந்தனுக்கு அங்கே நிற்கப் பிடிக்கவில்லை. மெல்ல நழுவினான்.

மெல்லிய இருட்டில் திக்குதிசை தெரியவில்லை.

சதுரகிரி என்றால் அது திருப்பதி, பழனி போல ஜே ஜே என்று மனிதர்கள் நடமாடும் இடமாக இருக்கும் என்று கருதி வந்தது பெரிய தவறு என்று அப்போதுதான் உறைத்தது.

அப்போது பார்த்து [illegible] கைகளில் தீப்பந்தங்களுடன் [illegible] இறங்கி வந்தபடி இருந்தனர்.

அப்பாடா...!

அருகில் வந்த அவர்கள் தோளில் சாக்கு இருந்தது. தலையில் முண்டாசு கட்டி இருந்தனர். நல்ல கட்டுமஸ்தான உடம்புடன் காணப்பட்டனர்.



அவர்களும் ஆனந்தனைப் பார்த்தனர்.

ஆனந்தன் அவர்களிடம் 'மேல போக வழி எந்தப் பக்கம் இருக்கு' என்கிற ரீதியில்தான் ஆரம்பித்தான்.

"மேலன்னா...?"

"மேல கோவில் இருக்குதாமே... அங்கதான்."

"அது கெடக்கு பதினைஞ்சு, பதினாறு கல் தூரம். ஆமா... ஐயா இப்பத்தான் மலைக்கு வர்றீங்களோ?"

"ஆமாங்க... ஒரு பெரியவரைத் தேடிக்கிட்டு வந்தேன்."

"சரிதான்... இப்படி எத்தனை பேர் சாமி வருவீங்க?"

- அவர்களில் ஒருவன் கேட்டதில் ஆனந்தனுக்கும் அதிர்ந்தது.

"நீங்க என்ன சொல்றீங்க?"

"என்னத்த சொல்ல... சித்தர் சாமிங்களைப் பாக்கணும்னும் அவங்ககிட்ட மருந்து வாங்கிட்டுப் போகவும் தான் எவ்வளவு பேர் வருவீங்கன்னேன்."

"மருந்தா?"

"ஆமா... இந்த மலையே ஒரு மருந்து மலைதானே?"

"நான் பாக்கணும்னு சொன்னது சித்தர் சாமிங்கள இல்ல. எங்க வீட்டுக்கிட்ட ஒரு பெரியவர் இருக்காரு. அவரை..."

"அப்படியாக்கும் சங்கதி... சரி, சரி. அப்படியே எங்க கூடவே வாங்க. நாங்க மலைச்சாதி கூட்டம். எங்க ஊரு வாசல்லாம் கோவிலுக்கும் மேல இருக்கற மலைல இருக்கு. அங்க விளைஞ்சதை எடுத்து வந்து சந்தைக்கும் போய் வித்துட்டு திரும்பிக்கிட்டு இருக்கோம்." என்றான்

இன்னொருவன். பேச்சோடு பேச்சாக அவர்களோடு மலை ஏறத் தொடங்கிய ஆனந்தனை அந்த கருப்பு நாயும் பின்தொடரத் தொடங்கியது.

இருளில் ஆனந்தன் அந்த நாய் தன்னைத் தொடர்வதை கவனிக்கவில்லை. மலைச்சாமி பனியர்களுடன் நடக்க ஆரம்பித்தான். அந்த சமயம் தனியாக வந்தது தப்போ என்றும் அவனுக்குள் ஓர் எண்ணம்!

பனியர்கள் தங்களுக்குள் பலவிதமான நாட்டுப்புற பாடல்களைப் பாடிக் கொண்டே நடந்தனர். அந்த பாட்டைக் கேட்டால் சிரிப்புதான் வரும்.

"ஏலே கொரங்கா கொரங்கா...

என் தங்கச்சி உதங்கா... உதங்கா..." - என்று ஒருவன் ஆரம்பிக்க,

"ஏலே மக்கா... மக்கா...

மாமன் நான் என் அக்கா மக்கா..." - என்று ஒருவன் தொடர,

"ஏலே மன்னா... மன்னா...

மலை ஏறு நீ நில்லா... நில்லா..." - என்று இன்னொருவன் தொடர - அவர்கள் பாடும் பாட்டுக்குள் தொடர்பு இருப்பது போலும் இருந்தது. இல்லாத மாதிரியும் இருந்தது.

இருளில் தனியாகப் போவதற்கு இப்படி இவர்களோடு சேர்ந்து கொண்டு போவது கொஞ்சம் பாதுகாப்பாகவும் தோன்றியது.

சட்டென்று அவர்கள் நின்றனர். அவர்கள் கைத் தீப்பந்தம் சடசடவென காற்றில் ஆடியதில் ஒரு ஐம்பதடி தூரத்தில் ஒரு பெரிய யானையும் அதை ஒட்டி ஒரு குட்டி



யானையும் தெரிந்தது. அதைப் பார்க்கவும்தான் நின்று விட்டனர். அவர்களிடம் பாட்டும் நின்று போனது. வானில் தெரிந்த நிலவொளியில் அந்த யானை தெளிவாக தெரியா விட்டாலும் இருட்டுக்குள் கார் இருட்டாய் கருங்கும்மென்று தெரிந்தது. பின் அது பிளிறியது. அந்த சப்தம் ஒடிவது போல கூட இருந்தது. அதைத் தொடர்ந்து ஆனந்தனைத் தொடர்ந்த நாய் குரைக்க ஆரம்பித்தது!

நாய் குரைக்கும் சப்தம் கேட்கவும் ஏதோ பேசி வைத்துக் கொண்டு விலகிச் செல்வது போல் அந்த யானை அப்படியே திரும்பிச் செல்ல ஆரம்பித்தது. அந்த நாயும் எல்லோருக்கும் தெரியும்படியாக ஒரு பாறைமேல் ஏறி நின்றது.

அவர்கள் உடனேயே "ஏலே கருப்பசாமிடா... சாமி ச... ச... கருப்பா..." - என்று கன்னத்தில் போட்டுக் கொண்டனர். ஆனந்தனுக்குள் வியப்பும் ஆரம்பம் ஆகிற்று. திரும்பவும் அவர்களிடம் உற்சாகமான நடை ஆரம்பமாகிற்று. பாதைதான் படுமோசம்... திண்டு திண்டாய் கற்கள். அவைகளுக்கு நடுவில் முட்செடிகள். நறநறவென்ற கரளை மண். ஆனால், காற்றில் முரட்டுத்தனமாய் ஒரு குளிர். அந்த குளிர் மட்டும் இல்லையானால் நடக்கும் வேகத்துக்கு உடம்பு வியர்வைத் தொட்டியாகிவிடும் ஒரு அபாயம் தெரிந்தது.

பனியர்களில் ஒருவன் தொடர்ந்து வரும் ஆனந்தனைப் பார்த்தான். "யாரப்பா அது... புதுசா இருக்கு?" என்று கேட்டான்.

"நான் மதுரைல இருந்து வர்றேங்க... இங்க சதுரகிரி மலைமேல மகாலிங்க சாமி கோவில் இருக்குதாம்ல. அங்க போய்க்கிட்டிருக்கேன்."

''தனியாவா வந்துருக்கீங்க...?''

''ஆமாம்... ஏன் கேக்கறீங்க?''

''தைரியம்தான்... அதுவும் இந்த ராத்திரியில எந்த தைரியத்துல வந்தீங்க?''

''நான் மலைக்கு தார் ரோடு போகும்... பஸ், கார்லாம் போகும். அதுல போகலாம்னு நினைச்சு வந்தேன். இங்க வந்த பிறகுல்ல தெரியுது - நடந்துதான் போக முடியும்கறது.''

''உங்கள மாதிரிதான் ரொம்ப பேர் விவரம் புரியாம கிளம்பி வந்துடறாங்க. நீங்களாவது பரவாயில்ல - சாமி கும்பிட வந்தேன்னீங்க... சிலர் ரொம்ப மோசம்... 'சித்தர் சாமிங்க இங்க நடமாடறாங்களாமே... அவங்களப் பார்க்க முடியுமா'ன்னு கேட்டு எங்க உசுரை எடுப்பாங்க...''

- ஒருவன் சொன்னதைக் கேட்கவும் ஆனந்தனுக்கு சற்று இடித்தது. தானும் கிட்டத்தட்ட சித்தர் மாதிரி ஒருவரைத்தான் தேடி வந்தது என்பதை இனி சொன்னால் எப்படி எடுத்துக் கொள்வார்களோ என்றும் தோன்றியது. இருந்தும் சாதுர்யமாகப் பேசுவது என்று முடிவு செய்து ''ஏங்க... அப்படி யாரும் இந்த மலைல இல்லையா?'' - என்று கேட்டான்.

''இருக்காங்க... கஞ்சா குடிக்கற சில சாமிங்க!'' என்று ஒருவன் சொன்னபோது அவன் குரலில் பயங்கர இளப்பம்.

''அப்படின்னா இப்ப நல்ல சாமிங்களே இல்லையா?''

''அட, என்னங்க நீங்க...? அம்பது அறுபது வருசத்துக்கு முந்தி இந்த மலைக்காடே பசுமையா



பச்சைப்பசேல்னு இருக்கும். இப்ப அதுல பத்துல ஒரு பங்கு இல்ல... தொண்ணூறு பங்கு மரத்தை வெட்டு வெட்டுன்னு வெட்டி இந்த மலையையே சொட்டையாக் கிட்டாங்க.

பத்தாக்குறைக்கு மலைக்கு சாமி கும்பிட வர்ற உங்கள மாதிரி ஜனங்க வேற... வர்றவங்க எங்க சும்மா போறாங்க. மரக்கிளையை ஒடிக்க வேண்டியது. முயல் பிடிக்கறேன், நரி பிடிக்கறேன்னு காட்டையே அழிச்சுப்பிட்டாங்க... நாங்களும் நகர்ந்து நகர்ந்து மலை உச்சிக்கே போய்ட்டோம்.''

''அப்ப சாமிமார்கள்னு இப்ப யாருமே இல்லையா?''

''ஆசாமிங்கதான் இருக்காங்க. யாராச்சும் நான் சித்தன்னு சொன்னா சுதாரிச்சிக்குங்க. உங்களுக்கு அந்த மருந்து தரேன், இந்த மருந்து தரேன்னு ஒரு பொற மாதிரி தருவாங்க. அதை சாப்ட்டா மூணு மணி நேரத்துக்கு எழுந்திரிக்க முடியாதபடி மயக்கம்தான் வரும். கண்ணு முழிச்சு பார்த்தா உடம்புல போட்டுக்கிட்டிருக்கற துணியைக்கூட உருவிக்கிட்டுப் போயிருப்பாங்க.''

- ஆனந்தனுக்கு அதைக் கேட்க பகீர் என்றது.

''ஆமா, நான் தெரியாமத்தான் கேக்கறேன். இப்படி ராத்திரியோட ராத்திரியா கிளம்பி வர்ற அளவுக்கு உங்களுக்கு அப்படி என்ன சிக்கல்?''

''சிக்கல்... சிக்கல்லாம் எதுவும் இல்லையே...''

''இதே சிவன் சாமி உங்க ஊர் மீனாட்சியம்மன் கோவில்லயே இருக்குமே...''

''நீங்க என்ன சொல்ல வர்றீங்க?''

''இல்ல... ஒரே சாமிய எத்தனை இடத்துக்கு வந்து கும்புடுவீங்க?''

''நான் கும்புட மட்டும் வரலை... என் வீட்டுகிட்ட விபூதித்தாத்தான்னு ஒருத்தர். அவர் அடிக்கடி இங்க வந்துடுவார். அவரைத் தேடிக்கிட்டு வந்தேன்.''

''அவர் எதுக்கு?''

''அவரைப் பாக்கணும்... அவர்கிட்ட கொஞ்சம் வேலை இருக்கு.''

''எங்களுக்கு தெரிஞ்சு மேல கோவில்ல ஒரு நாலஞ்சு பேர் இருந்தா ஜாஸ்தி. இந்த குளிருக்கு யாராலயும் மேல இருக்க முடியாது. நடக்கறதால உங்களுக்கு இப்ப தெரியல. ஒரு பத்து நிமிஷம் உக்காந்து பாருங்க. அப்ப தெரியும்...''

''நான் உங்ககிட்ட முடிவா கேக்கறேன். இந்த மலைல மூலிகைங்க நிறைய இருக்கறதாவும், அதைப் பத்தி தெரிஞ்ச சித்தருங்க இருக்கறதாகவும் சொல்றதெல்லாம் உண்மையா, பொய்யா...?''

''ஒரு காலத்துல இருந்தாங்க. இப்ப எங்களுக்குத் தெரிஞ்சு ஒரு அஞ்சாறு மூலிகைங்க இருக்கு. ஒரு சில சாமியாருங்க இருக்காங்க. அவங்க வாயத் திறந்து ஒரு வார்த்தைன்னா ஒரு வார்த்தை பேச மாட்டாங்க. அவ்வளவுதான்.''

- அந்த பளியர்களிடம் பேசியதில் நெடுந்தூரம் வந்து விட்டது தெரிந்தது. ஆனால், அவர்கள் சொன்ன தகவல்கள் தான் மனதுக்கு சோர்வு தருவதாக இருந்தன. வீட்டை விட்டுக் கிளம்பும்போது இருந்த நம்பிக்கை இப்போது இல்லை. குழந்தை பவித்ராவின் முகம் ஒரு வினாடி நிழலாடியது. 'அப்பா...!' என்று இரு கைகளை நீட்டிக்



கொண்டு ஓடிவந்து கழுத்தை கட்டிக் கொள்கிறாற்போல கூட ஒரு கற்பனை செய்து பார்த்தான். கண்கள் கலங்கி விட்டன! மனது களைக்கும்போது உடம்பும் களைத்துப் போவது வாடிக்கைதானே?

அப்படியே ஒரு ஓரமாக அமர்ந்தான். மேல் சட்டை எல்லாம் வியர்வை ஈரம்!

''சாமியோவ்... உக்காராதீங்க... தம் கட்டி கூட வாங்க. வழில ஊமைச்சாமி குடிசை ஒண்ணு வரும். அங்க தங்கிட்டு பொழுது விடியவும் கிளம்பி நடங்க'' என்றான் முன்னால் சென்ற ஒரு பளியன். அவன் பேச்சை தட்டிவிட்டு உட்கார ஆனந்தனுக்கும் மனது வரவில்லை. வேகவேகமாக அவர்களைத் தொடர்ந்தான்.

''ஆமா... கோவிலுக்கு இன்னும் எவ்வளவு தூரம் போகணும்?''

''அது கெடக்கு ஒரு ஏழெட்டு மைல்...''

- அந்த பதிலே நெஞ்சிலே குத்தியது!

## 6

பொதுவாகவே மலைகளில் சில சிறப்பான விஷயங்கள் உண்டு. ஒரு மலையில் ஒரு கோவில் இருந்து அந்த கோவிலில் மணியடித்து மந்திரம் சொல்லி வழிபடும் முறை இருந்தால் அந்த மலைத் தலம் முழுக்க அருள் அலைகள் சம அளவில் பரவி இருக்கும். அருள் அலைகள் பலமாகவும் சம அளவிலும் பரவி இருக்கும் ஒரு இடத்தில் மிக

கெட்ட எண்ணம் கொண்டவர்களால்கூட வலிமையாகச் செயல்பட முடியாது.

அவர்கள் அங்கே தங்கள் தீய எண்ணங் களின் பிடியில் இருந்து விடுபட்டு ஒருவித குழப்பத்தில் இருப்பார்கள். அது மட்டுமல்ல, அவர்கள் உள் எண்ணங்களுக்கு ஏற்ப அவர்களை நோக்கி நல்ல விஷயங்களும் தீய விஷயங்களும் தேடி வரும். உதாரணமாக மிகுந்த காம எண்ணம் உடைய ஒருவர் இது போன்ற மலைத் தலத்தில் இருக்கும் போது அவரது எண்ண அலைகள் புலி, சிங்கம் போன்ற மிருகங்களை நோக்கி அவரைத் தள்ளிச் செல்லும். அந்த மிருகங்களும் அவர்களை நோக்கி நகர்ந்து வரும்.

இவை எல்லாமே உள்ளுணர்வால் உந்தப்பட்டு அநிச்சையாக நடைபெறும்!

**ஊ**மைச்சாமி குடிசைக்குள் லேசான வெளிச்சம் தெரிந்தது. சாமி வெளியில் அமர்ந்து கொண்டு சுருட்டு பிடித்தபடி இருந்தார். பளியர்கள் அவரைப் பார்க்கவும் விழுந்து கும்பிட்டனர். பின் 'கீழே வாங்கி வந்தது' என்று சொல்லி சுருட்டு மற்றும் வெற்றிலை, சீவல், சுண்ணாம்பு அது போக கல் உப்பு, துணி சோப்பு என்று பல பொருட் களை அவர் முன் கொட்டினர். அவரும் அவைகளை வாங்கிக் கொண்டு பதிலுக்கு அவர்கள் தலையில் வாயால் ஊதி நெற்றியில் விபூதிப் பொட்டு வைத்து அனுப்பி வைத்தார்.

கறுப்பு நாயும் அவர் அருகில் போய் சாதுவாக அமர்ந்து கொண்டது. அவர்கள் ஆனந்தனை அவருக்கு



காட்டி "சாமி... இவரு சாமி கும்பிட வந்தவரு. ராத்திரி உங்க குடிசைல தங்கி இருந்துட்டு காலைல போகட்டும். நம்ம மலையைப் பத்தி சரியா தெரிஞ்சுக்காம கிளம்பி வந்துட்டாரு..." - என்று போகிற போக்கில் சொல்லிவிட்டு சென்று விட்டனர். ஆனந்தன் அவரையே உற்றுப் பார்த்தபடி இருந்தான். அவரும் பார்த்து சிரித்தார். அருகில் அழைத்தார். எதிரில் உட்காரச் சொல்லிவிட்டு உள்ளே சென்று மண் கலயத்தில் தண்ணீர் எடுத்து வந்து தந்தார்.

அந்த நேரத்துக்கு ஆனந்தனுக்கும் அதுதான் அமுதம்!

அப்படியே அள்ளிப் பருகி முடித்தான்.

கறுப்பு நாய் இடையிட்டு குரைத்தது.

அவரும் திரும்பிப் பார்த்துவிட்டு "என்ன... உன் ஆளா?" - என்று கேட்கவும் ஆனந்தனுக்கு 'குபீர்' என்றது. சாமி பேசியதுதான் காரணம்.

"சாமி... நீங்க பேசுவீகளா?" - கேட்டான்.

"எப்பவாவது... வருசத்துக்கு ஒரு தடவை - ரெண்டு தடவை!"

"நான், நீங்க ஊமைன்னு நினைச்சேன்..."

"அதனால என்ன... நினைச்சுட்டுப் போ..." - அவர் அதை சாதாரணமாக ஒப்புக் கொண்டார். அதுவே அவனை என்னவோ செய்தது.

"ஆமா... தன்னந்தனியா இந்த மலைக்கு இப்படி நடு ராத்திரின்னும் பார்க்காம வர்ற அளவுக்கு அப்படி என்னப்பா உனக்கு சிக்கல்?"

அவர் 'சிக்கல்' என்று குறிப்பிட்டு கேட்டது அவனுக்குப் பிடித்திருந்தது.

"சிக்கல்தான் சாமி... என் சிக்கல் பெரும் சிக்கல்... உங்ககிட்ட சொன்னாலாவது என் பாரம் குறையுதான்னு பாக்கறேன்..."

- ஆனந்தன், பவித்ரா பற்றிய விஷயத்தை சொல்ல ஆரம்பித்தான்!

அந்த நடுநிசி வேளை...

அந்த மலைக்காட்டில் ஒரு பாறைமேல் படுத்துக் கொண்டிருந்தான் அண்ணாமலை! அவன் பார்வை திரும்பித் திரும்பி பார்த்தபடி இருந்தது. அவன் பார்த்த பாதை மேல் ஆதிகேசவனும் அவர் மகளும் இன்னும் சிலரோடு மெல்ல நடந்து வந்து கொண்டிருந்தனர். அந்த சடைபிடித்த சாமி அப்போதே போய் விட்டார் என்பதும் அவர்கள் விட்டே தெருவிலும் தெரிந்தது. பெரிய காற்றும் மழையும் வந்து ஓய்ந்து விட்ட நிலையில் வழிந்தபடி நீரும் சந்து சகதி.

அண்ணாமலை படுத்திருக்கும் பாறை அருகே வரவும் அவனே தூக்கி கொடுத்தான். ஆதிகேசவனும் அவனைப் பார்த்தார்.

"என்னய்யா... ஒரு அசைந்த பெரிய காரியமாக்குமா?"

"ராத்திரி நேரம்... மழைச் சகதி வேற... நடக்கறதெல்லாம் சிரமமா இருக்கு"

"ஆமா... எங்க அந்த சடை முடிக்காரன்...?"

"அவர் அப்பவே போயிட்டாரு... அப்படித்தான்... என்ன ஒரு காத்து... என்ன ஒரு மழை...!"



"சரி, சரி... இப்படி வாங்க. இங்க ஒரு மலைக்குகை இருக்கு. உள்ளே ஒரு லிங்கமும் இருக்கு. படுத்துட்டு விடியவும் போகலாம்."

அண்ணாமலை தன் திட்டத்திற்கு அடிபோட்டான்.

ஆதிகேசவனுக்கு அதை எல்லாம் உணர்ந்திடும் சக்தி இருப்பதாகத் தெரியவில்லை.

"நான் ஒரு முடிவோடதாங்க கிளம்பி வந்தேன். இந்த மலையே ஒரு சிவலிங்கம்னு சொன்னாங்க. இந்த ஒவ்வொரு அங்குலத்துலயும் அந்த சாமி இருக்குது. ஆகையால் எல்லாத்தையும் சாமியே பாத்துக்கிட்டும்னு நம்பி கிளம்பி வந்துட்டேன்" - என்றபடியே அந்த பாறை மேல உட்கார்ந்தார்.

நிலாவொளியில் அவரும் அவர் மகளும் கொஞ்சம் போல வெள்ளி மின்னுவது போல மின்னினார்கள். மல்லிகாவும் அவரை ஒட்டி அமர்ந்து கொண்டாள்.

மறந்தும் அவள் அண்ணாமலை முகத்தை நேருக்கு நேர் பார்க்கவில்லை. அதுவே அவன் மனதில் அவள் மேல் மோகத்தை அதிகமாக்கிக் கொண்டே போனது.

"சரிங்க... வாங்க. குகைக்குள்ள போய் கட்டையை கிடத்துவோம். குளிர்காத்து தாங்குது பாருங்க" என்றான்.

"ஆமா... அந்த குகைக்குள்ள மிருகங்கள் தொல்லை எதுவும் இருக்காதே...?"

"அட... என்னங்க நீங்க... அது ஒரு சித்தர் இருந்த குகை. அவர் சமாதியானதுக்கப்புறம் குகையும் லிங்கமும் அப்படியே இருக்கு...!"

"அப்படியா! அப்ப அவசியம் அதை நான் பாக்கணுமே?"

"அதோ... அங்க இருக்குது. அப்படியே என் பின்னால வாங்க."

அண்ணாமலை வழிகாட்டியபடி முன்னால் நடந்தான்.

ஆதிகேசவனோடு வந்த சிலர் நிற்காமல் முன்னே போய் விட்டனர். மல்லிகாவும் பின்தொடர்ந்தாள்.

கால் கொலுசு சப்தம் அந்த இரவில் துல்லியமாகக் கேட்டது. அது அண்ணாமலைக்குள் நெருப்பை மூட்டியது.

ஒரு வழியாக குகையை எட்டினான்.

உள்ளே குழவிக்கல் கணக்காய் ஒரு சிவலிங்கம். அதன் முன் அடக்கமாய் ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. சின்ன அளவில் வெளிச்ச வட்டம்!

லிங்கத்தின் மேல் காட்டுப் பூக்கள் போடப்பட்டு அவை காய்ந்து போயிருந்தன. சிவலிங்கத்துக்கு மேல் பாறை - அலத்தில் 'ஓம் நமசிவாய' என்பது தலைகீழாக 'யவாசிமந' என்று எழுதப்பட்டிருந்தது. ஆதிகேசவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"சாமி பேரை தலைகீழா எழுதியிருக்குதே..." என்றபடி முன்னால் உள்ள சமதளம் போன்ற பாறைமேல் அமர்ந்தார். ஜில்லிப்பு அப்பி எடுத்தது. முதலில் உடம்பில் ஷாக் அடித்தது போல் இருந்து பின் நார்மல் ஆகியது.

மல்லிகா லிங்கம் முன் விழுந்து வணங்கினாள்.

அப்போது சேலை முந்தி சற்று விலகி வெளித்தெரிந்த மார்பகங்கள் அண்ணாமலை கண்ணில் நெருப்பைக் கொளுத்திப் போட்டன. நாக்கை ஈரப்படுத்திக் கொண்டான்.



ஆதிகேசவன் நெட்டி சோம்பல் முறித்தார். அப்படியே மகளைப் பார்த்து, "மல்லிகா கண்ணு படு... அப்பா முழிச்சிக்கிட்டு இருக்கேன்... தைரியமா தூங்கு" என்றார்.

"அட, என்னங்க நீங்க... நீங்களும் படுங்க... எதுக்கு முழிச்சிக்கிட்டு. இந்த ராத்திரில இப்படி ஒரு இடம் கிடைக்கறது எவ்வளவு கஷ்டம் தெரியுமா?"

"இருக்கட்டும்... இருக்கட்டும்... எனக்கு கண்ணு முழிச்சு பழக்கம். என் மகளுக்குதான் இப்படி நடக்கறதுல இருந்து எல்லாமே புதுசு..."

"ஆமா, ஆமா... அவங்கள பார்த்தாலே தெரியுது. இருந்தாலும் உங்க நம்பிக்கையை நினைச்சா எனக்கு ஒரு பக்கம் சிரிப்புதாங்க வருது..."

"சிரிக்க என்ன தம்பி இருக்கு?"

"என்ன இருக்குதா? சரிதான்... நான் தெரியாமத்தான் கேக்கறேன். உங்க மகளுக்கு பேச்சு வந்துடும்னு நம்பித்தான் வந்திருக்கீங்களா?"

"ஆமாம் தம்பி... நாடி ஜோசியத்துல அப்படித்தானே வந்துச்சு."

"நீங்க சினிமால்லாம் பார்ப்பீங்களோ...?"

"ஏன்?"

"இல்ல... அதுலதான் சாமி நேர்ல வரும்... நாக்குல திரிசூலத்தால எழுதும். பேச்சும் வரும். அப்படி எல்லாம் புருடா விட்டாதான் படமும் ஓடும். நிஜத்துல..."

"நிஜத்துல நடக்காத ஒன்னை பொய்யா கற்பனை எல்லாம் செய்து பார்க்க முடியாது தம்பி..."

"என்னவோ போங்க... இந்த மலைக்காட்டுல நான் 30 வருஷமா சுத்தி வர்றவன். அவ்வளவு ஏன்... சாமி பேரைச்

சொல்லி நல்லா ஏமாத்தித் திங்கறவங்கள பாத்திருக்கேன். அந்த சாமி அவங்களை எல்லாம் எதுவுமே பண்ணதில்ல. அவங்கள்ளாம் நல்லாத்தான் இருக்காங்க.''

''ஆனா, நான் அப்படி நினைக்கல தம்பி... என் மக 'நமசிவாய நமசிவாய'ன்னு ஒரு கோடி தடவை எழுதினா. அதோட பலன்தான் ஒரு குறிப்பிட்ட நாடி ஜோசியர் பத்தி தெரிய வந்துச்சு. 48 பிரதோஷம் விடாம போய்ட்டு வந்துருக்கா. அதோட பலன்தான் இந்த மலைய நாங்க தொட்டிருக்கோம். அந்த சாமி எங்களைக் கைவிடமாட்டார். அவருசாமி ஒரு அதிசயத்தையும் பாக்கலேன்னு சொன்ன நீங்க அந்த அதிசயத்தை பார்ப்பீங்க...''

ஆதிகேசவன் கொஞ்சம்கூட சந்தேகம் இன்றி பேசியதுதான் ஆச்சரியம். நடுநடுவே கொட்டாவியும் விட்டார்.

''சரி, படுங்க... நானும் அப்படி கட்டையைக் கிடத்தறேன்.''

''அதுக்கு முந்தி மூத்திரம் போறதா இருந்தா போய்ட்டு வந்துடுங்க...''

''அதுவும் சரிதான்...'' - அவர் எழுந்து வெளியே சென்றார். அவனும் பின்தொடர்ந்தான். மல்லிகா சற்று திமிர்ந்து பார்த்துவிட்டு ஒரு கையை மடக்கி அதன் மேல் தலையை வைத்துப் புடவைத் தலைப்பால் இழுத்துப் போர்த்திக் கொண்டாள்.

அவளைப் பார்த்தபடியே சென்ற அண்ணாமலைக்குள் படுவேகமாக சில குரூர முடிவுகள்.

இருட்டில் ஆதிகேசவன் ஒரு இடத்தில் நின்று கொண்டு சிறுநீர் கழிக்கும் சப்தம் கேட்டது.



''ஐயா, அப்படியே வாங்க... கால் கழுவிக்க பக்கமா ஒரு சின்ன ஓடை ஓடுது...'' - என்றான்.

''அப்படியா...'' என்றபடியே நிலவொளியில் அவன் போன பக்கம் போனார். அவன் ஒரு பாறை மேல் ஏறி நின்று கொண்டு அவரையும் அழைத்தான்.

''என்ன தம்பி... மேல ஏறிக்கிட்டீங்க?''

''இங்க வாங்க... இங்க இருந்து பார்த்தா கோயில் தெரியும்'' - என்று தூண்டில் போட்டான்.

''அப்படியா...?'' - அவரும் தாவி ஏறினார். அவன் அருகிலேயே நின்றுகொண்டு 'எங்க, எங்க' என்று கேட்டபடி நாலாபுறமும் பார்த்தார். ஆனால், வனாந்தரம்தான் கண்ணில் பட்டது. வேறு எதுவுமே துல்லியமாக உணரும் நிலையில் இல்லை.

அண்ணாமலை படுவேகமானான்.

அவரைப் பிடித்து ஒரே தள்ளு.

அந்த பாறைக்கு அந்தப்புறமாக எவ்வளவு அடி ஆழம் என்பதே தெரியாதபடி ஒரு பெரிய பள்ளம். விழுந்தால் எலும்புகூட தேறாது என்னும்படி... அதில் அவர் 'ஐய்யோ...!' என்கிற பெரும் சப்தமுடன் கீழே விழுந்து முடிந்தார்.

சப்தம், உள்ளே மல்லிகா காதில் விழுந்து அவளும் எழுந்து கொண்டாள்.

அவனும் ஒரு குரூர சிரிப்புடன் உள்ளே வந்தான்.

அவனைப் பார்த்த விதமே அலாதியாக இருந்தது.

அவளுக்கும் புரிந்தது. அவனுக்குப் பின்னால் அப்பாவைத் தேடினாள். இருந்தால்தானே அவர் வருவதற்கு?

'பா... பா... பா...' என்றாள்.

அவன் சிரித்தான்.

"உங்கப்பா... வரமுடியாத இடத்துக்குப் போய்ட்டாரு- நான்தான் அனுப்பி வெச்சேன். 'இந்த மலையே ஒரு சிவலிங்கம். அங்குலத்துக்கு அங்குலம் சாமி இங்க இருக்கு'ன்னு சொன்னாருல்ல. அந்த சாமி வந்து அவரைக் காப்பாத்தட்டும். அப்புறம் நீ கூட ஒரு கோடி தடவை 'நமசிவாய'ன்னு எழுதினியாமே. இப்ப நான் இங்க உன்னைக் கெடுக்கப் போறேன். நீ கோடி தடவை எழுதின சாமி வருதான்னுதான் பார்ப்போமே...?"

- அவன் பேச்சோடு பேச்சாக அவள் மேல் பாய்ந்தான். அவளுக்கு உடம்பெல்லாம் கூசியது. அவனை விலக்க ரொம்பவே போராடினாள். இருட்டில் பெரும் போராட்டமாக இருந்தது. இருந்தும் ஆசைக்கும் ஆவேசத்துக்கும் ஒரு போட்டி நடத்தால் அதில் எப்பொழுதும் ஆவேசம்தான் ஜெயிக்கும். அவளும் அவனைத் தள்ளி அந்த பாறைக் கல்லின்மேல் அவன் தலை மோதும்படி செய்துவிட்டு வெளியில் ஓடினாள். எங்கே போகிறோம் என்பதே தெரியாத ஓட்டம்!

# 7

மலைத்தலங்களில் உள்ள பல சிறப்புகளில் மேலான ஒரு சிறப்பு... இங்கே மனம் இலகுவாக ஒடுங்கும். காரணம் மிக ஆச்சரியமான ஒன்று. காட்டுக்குள் மனிதக் கூட்டம் இல்லாததால் அவர்களின் எண்ண அலைகளின் ஓட்டம் மலை வெளிகளில் பெருமளவு இருப்பதில்லை!



இதனால் அங்கு உள்ளோர் மனதில் பிற எண்ண அலைகளின் பாதிப்பு இருப்பதில்லை. நகரத்தில் வாழ்கின்றவர்களுக்கு இது முதலில் என்ன வென்றே தெரியாது. சில நாட்கள் மலைக் காடுகளில் வாழ நேரும்போதுதான் அவர்களால் இதை உணர முடியும். இனம்புரியாத ஒரு அமைதி. ஒரு விஷயம் பற்றி நினைக்கத் தொடங்கினால் அதில் இருந்து விலகாதபடி ஆழமாக அதில் பயணிக்கும் ஒரு தன்மை இதெல்லாம் மலைத்தலங்களில் சாதாரணமாகக் கிட்டும்.

இன்னொரு ஆச்சரியமான விஷயம்!

மலைத் தலங்களில் நமது நம்பிக்கையான எண்ணங்கள் பெரும் சக்தியோடும் செயல்படும். உதாரணமாக 'இன்று நான் கட்டாயமாக ஒரு புலியையாவது பார்ப்பேன்.' (அ) 'ஒரு அபூர்வ மிருகத்தையாவது பார்ப்பேன்' என்று நூறு சதம் நம்பி காட்டில் திரிகையில் அது சாதாரணமாக சாத்தியமாவதை உணரலாம்.

சுருக்கமாக கூறுவதானால் காடு ஒரு பேராற்றல் மிகுந்த வெளி. நமக்குத்தான் அதைப் பயன்படுத்த தெரிய வேண்டும்.

**ஊ**மைச்சாமி குடிசையில் தன் மகள் பவித்ரா பற்றி ஆனந்தன் சொன்னதைக் கேட்டு ஒரு ஆழ்ந்த பெருமூச்சில் இருந்தார் அந்த சாமி.

"சாமி... என் மக நிலையைக் கேட்டீங்க... என்ன சாமி நினைக்கறீங்க?" - அவனும் நிதானமாகக் கேட்டான்.

''என்னத்த நினைக்கறது... ஒரு பக்கம் திருவள்ளுவர், இன்னொரு பக்கம் ஔவைக் கிழவி, அந்தப் பக்கமா நாலடியார், இந்தப் பக்கமா நீதிநெறி. எல்லாத்துக்கும் மேலா தப்பு செஞ்சா தண்டனை கிடைக்கும். நல்லது செஞ்சா நல்லதுதான் நடக்கும்னு சொல்ற பல நூறு கதைங்க. ராமாயணம், பாரதம்னு அதுக்கெல்லாம் பேருங்க. இப்படி நல்ல வழிகாட்ட ஆயிரம் விசயம் இருந்தும், அதெல்லாம் தெரிஞ்சிருந்தும் தப்பு பண்ணுனா அது இப்படித்தான் வியாதியா வந்து நிக்கும்...''

அவர் பதில் சற்று வழக்கமான பதில்தான். ''சாமி...! எனக்குத் தெரிஞ்சு நான் பெருசா ஒரு தப்பும் பண்ணலை சாமி...'' என்றான் பதிலுக்கு.

''தப்பே பண்ணலை. பண்ணவும் மாட்டேன்னு உன்னால சொல்ல முடியல பாரு...''

''சிறுவயசுல தெரியாம பண்ண தப்புங்க இருக்கே சாமி.''

''தெரியாம பண்ற தப்பு பத்தி கவலையே படாதேங்கறேன். அதைத் தண்ணி விட்டு அழுக்க கழுவற மாதிரி கழுவிடலாம். ஆனா, தெரிஞ்சு செய்யறதுக்குத்தான் விமோசனமே இல்ல.''

''எங்க சாமி... எவ்வளவு பேர் எப்படி எல்லாம் இருக்காங்க தெரியுமா? எனக்குத் தெரிஞ்சு ஒரு கொலைகாரன் கோடியிலயே புரள்றான். அவனுக்கு தர்மத்தின் காவலன்னு பட்டம் வேற...''

''நீ ஒரு பக்கமா பாத்துட்டுப் பேசாதே... உன் கண்ணுக்குத் தெரியறதுல்லாம் கம்மா... தெரியாத பக்கம்லாம் நிறைய இருக்கு. அதைப் பாக்கத் தெரியணும். பாக்க முடியணும்...''



''அப்ப என் மகளுக்கு இப்படி இருக்கறதுக்கும் என் பாவம்தான் காரணமா சாமி...?''

''வியாதின்னாலே பாவம்தான்... புரிஞ்சுக்க... பாவம்கற வார்த்தையை கொஞ்சம் மாத்தி 'பா' எழுத்தை ஒரு ரெண்டு மாத்திரை அளவு கூட்டி பாகவதர்னு சொல்ற மாதிரி பா'வம்னு சொல்லிப் பார். அப்ப வேற அர்த்தம் வரும். அதாவது 'பாவிக்கறது...' மனசுல நினைச்சுப் பாக்கறதுங்கற மாதிரி அர்த்தம் அது. நாம செய்யற தப்பு எண்ணத்துல தங்கி அடுத்தடுத்த கட்டத்துக்கு போகும். இந்த பூமியில் ஒரு சின்ன துரும்புக்கு கூட ஒரு போக்கு உண்டு. உதாரணமா ஒரு சிறு துரும்பை கீழே போட்டா அது கொஞ்ச நேரம் அங்கே கிடக்கும். பிறகு காத்தடிக்கும் போது நகர்ந்து எல்லா பக்கமும் போகும். அது மேல மனிதனோட இல்ல மிருகங்களோட காலடி பட்டு நொறுங்கும்... தூளாகும்... அப்படியே மண்ணோட கலந்து அந்த இடத்துல எப்பவாவது ஒரு விதை விழுந்தா அதுக்குண்டான சக்தியைத் தந்து அந்த விதைக்கான செடி வழியா அது வேற வடிவத்துல கிளம்பும்...

ஒரு துரும்புக்குகூட இப்படி ஒரு வழிமுறை இருக்கும் போது நாம நினைக்கற நம் எண்ணங்களுக்கு எவ்வளவு இருக்கணும்...?''

''அப்படின்னா...?''

''நீ நினைக்கறதுதான் உனக்கு திரும்ப வருது...''

''அப்ப நான் இப்படி நடுராத்திரில உங்ககிட்ட உபதேசம் கேட்டுக்கிட்டு இருக்கக்கூட என் எண்ணம்தான் காரணமா?''

''அதுல என்ன சந்தேகம்?''

''சரி சாமி... தப்பு செஞ்சோம். வியாதியால கஷ்டப் படறோம்கறத ஒரு வார்த்தைக்கு ஒத்துக்கிட்டே உங்கள கேக்கறேன். தப்ப திருத்திக்க சந்தர்ப்பம் தரப்படணுமா வேண்டாமா?''

''சந்தர்ப்பம் இல்லைன்னு யார் சொன்னது...? தப்பு செய்யும்போது அதுக்கு மட்டும் சந்தர்ப்பத்தை யாராவது கூப்பிட்டா கொடுத்தாங்க...?''

''அப்ப அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பரிகாரம் தேடிக்கிட்டா எல்லாம் சரியாகணும்தானே?''

''அது தப்போட தன்மையைப் பொறுத்தது... ஒருத்தன் சட்டையை சண்டை போட்டு கிழிச்சிட்டேன்னா அதைக் கேட்டு வாங்கி மெஷின்ல வெச்சு தைச்சு கொடுத் துடலாம். அவனையே கிழிச்சு கொன்னுட்டா எப்படி உயிரை மீட்க முடியும்?''

''அப்ப அதுக்கு அனுபவிக்கறதுதான் ஒரே வழியா?''

''அதுல என்ன சந்தேகம்?''

''என் மக விஷயம் இதுல எந்த ரகம் சாமி?''

''எப்ப இந்த மலைக்கு நீ வந்துட்டியோ அப்பவே அது தீருகிற ரகம்தான்... ஆனா உயிரையே மீட்டுத்தர வேண்டிய அந்த மருந்து அவ்வளவு சுலபத்துல உனக்கு கிடைக்காது. துளிகூட சுயநலமில்லாம உன் உயிரையே நீ துச்சமா நினைச்சு தர முன்வரும்போதோ அல்லது தந்துட்டாலோ அந்த மருந்தும் உனக்கு கிடைக்கலாம்.''

''புரியுது சாமி... தப்புன்னு மனசுக்குத் தெரியற ஒரு சிறு தப்பையும் இந்த மலைல நான் செய்யக் கூடாது. அதுதானே நீங்க சொல்ல வர்றது?''



''சரியா சொன்னே... இந்த மலைல அந்த சிவம் தனியா ஒரு இடத்துலதான் இருக்குன்னு நினைச்சிடாதே. இந்த மலையே சிவம். வீசற காத்துகூட சிவம்... இங்க வா...! நான் உனக்கு ஒரு அபூர்வ அனுபவத்தை ஏற்படுத்தித் தரேன்.''

- அவர் அவனை அருகே அழைத்து அவனது காதருகே இரு கைகளால் மூடி ஒரு பெரிய நிசப்தத்தை அவனுக்கு ஏற்படுத்திய நிலையில் மெல்ல ஒரு பக்கமாக கையை தளர்த்தவும் அது வழியாக உட்புகுந்த சப்தத்தில்.

**ஓம் நமசிவாய...**

**ஓம் நமசிவாய...**

**ஓம் நமசிவாய...**

**ஓம் நமசிவாய...**

- என்கிற தொடர்ச்சியான உச்சரிப்பு அவன் காதில் ஒலிக்கத் தொடங்கியது. கிட்டத்தட்ட கிசுகிசுக்கும் குரலில்...

அவனிடமும் பிரமிப்பு...

அவரும் நெடுநேரம் கையை வைத்துக்கொண்டிருந்து விட்டு பின் விலக்கினார்.

''சாமி...! இது எப்படிச் சாமி?'' - அவன் பிரமிப்பு கலையாமல் கேட்டான்.

''மலை பூரா சாமிங்க தங்களை மறந்து ஜபிச்சிட்டு இருக்காங்க. அதுதான் உன் காதுல கேட்டது... அதனால தான் சொன்னேன். இந்த மலைல புல்பூண்டுலகூட அந்த சிவம்தான் இருக்குன்னு...''

''சாமி...! நெஜமா சொல்றேன். இப்ப நான்தான் இந்த உலகத்துலயே கொடுத்து வெச்சவன் மாதிரி தோணுது...'

''கொடுத்து வெச்சவங்களுக்குத்தான் சோதனைகளும் அதிகம் இருக்கும். சோதனைல அந்த ரெட்டை கழி கொம்புதான் குத்தும். அதை தாங்கிட்டா அது கழிஞ்சு சோதனை சாதனை ஆயிடும்...''

''என் மகளுக்காக நான் எந்த சோதனையையும் தாங்கிக்குவேன் சாமி...''

''தாங்கு... தாங்குனாதான் நீ நல்ல தகப்பன். அப்புறம் நல்ல மனுஷன். நல்ல கர்மம் பண்ணியிருந்தாதான் இந்த மலையையே மிதிக்க முடியும். நீயும் மிதிச்சிட்டே... கிளம்பு. இனி நீ ஆச்சு; உன் கர்மமாச்சு...''

- அவர் பனியர்களுக்கு செய்ததைப் போல உச்சந்தலையில் ஊதி அவன் நெற்றியில் விபூதி இட்டு அனுப்பி வைத்தார்.

''சாமி...! நான் புறப்படறேன். ஒரு சிறு தப்புகூட பண்ண மாட்டேன் சாமி. இந்த மலைல மட்டுமில்ல... எங்கேயும் எது நடந்தாலும் சரி... என் உசுரே போனாலும் சரி. நீங்க சொன்ன மாதிரி அந்த சாமி எனக்கு வழிகாட்டட்டும்.''

- ஆனந்தனும் வணங்கிவிட்டு கிளம்பினான். அது அதிகாலை பிரம்ம முகூர்த்த வேளை... அவனோடு அந்த நாயும் சேர்ந்து கொண்டது.

''தம்பி... இது சாதாரண நாய் இல்ல. கறுப்பன் உன்கூட வருதுன்னா ஏதோ நடக்கப் போகுதுன்னு அர்த்தம். பார்த்துப் போ...'' - என்று போகிற போக்கில் அவர் சொன்னது அடுத்தகட்ட ஆச்சரியமாக அவனுக்கு அமைந்து விட்டது!



அந்த அதல பாதாள பள்ளத்தில் விழுந்திருந்த ஆதிகேசவன் மலைக்கொடிகளின் ஊடே மெத்தென்ற இலைதழை மேல் விழுந்து கிடந்ததுதான் ஆச்சரியம்.

அந்த காலை வேளையில் சூரியனின் விழிப்பும், அவனது கதிர்த் தாக்கமும் அந்த மலை முழுக்க ஒரு புது புத்துயிர்ப்பையே ஏற்படுத்தியிருந்தது. நகரங்களில் சுத்தமாக அழிந்துவிட்ட தூக்கணாங்குருவி கூட்டமும், சில அபூர்வ பட்சிகளும் அந்த பகுதியில் ஒரு பெரும் மாநாட்டையே தொடங்கி விட்டன.

மயக்கத்தில் கொடிகளின் பிடியில் கிடந்த ஆதிகேசவன் முகத்திலும் சூரியக்கதிர் ஒன்று சுள்ளென்று தாக்கியதில் மயக்கம் நீங்கி கண்கள் திறந்து கொண்டன.

ஒரு வினாடி எதுவும் புரியவில்லை!

கண்களைக் கசக்கிக் கொண்டு கையை அசைத்த போது கொடிகளின் பாகங்களில் விலகல் ஏற்பட்டு உடம்பு திரும்ப கீழ் இறங்க ஆரம்பிக்கவும் சுதாரித்து இரு கைகளாலும் பருமனான ஒரு கொடியைப் பிடித்துக் கொண்டு கீழே பார்த்தார்.

அவர் கண்களையே அவரால் நம்ப முடியவில்லை. கீழே ஒரு தடாகம். அதில் ஏராளமாய் அல்லி மலர்கள். ஒரு பக்கமாய் ஒரு கஸ்தூரிமான் ஒன்று தன் குட்டியுடன் நீர் அருந்தியபடி இருக்க, அந்த தடாகத்தில் துளிகூட அசைவின்றி சில சித்த புருஷர்களின் உடம்புகள் சவம் போல மிதந்து கொண்டிருந்தன. அது ஒருவித யோகப் பயிற்சி. ஆதிகேசவனுக்குள் அந்த காட்சி ஒரு பெரும் கிளர்ச்சியையே உண்டு பண்ணியது. அப்படியே கொடியை பிடித்துக் கொண்டே கீழ் இறங்கினார். உடம்பில் சட்டை கிழிந்து வேட்டி ஒரு உயரத்தில் சிக்கியிருந்தது. இடுப்பில்

பட்டாபட்டி டிராயர் மட்டும் அவிழாமல் மானம் காத்தபடி இருந்தது. கழுத்து சங்கிலிகூட அப்படியே இருந்தது.

பொத்தென்று கொடியின் பிடியில் இருந்து தரையில் விழவும் சப்தம் ஏற்பட்டது. ஆனால், அதனால் எல்லாம் தடாகத்தில் மிதக்கும் சாமிகள் தங்கள் கண்களைத் திறக்கவில்லை. தண்ணீர் குடித்த அந்த கஸ்தூரிமான் மட்டும் சப்தம் கேட்டு வேறு பக்கமாக முணுக்கென்று ஓடியது.

ஆதிகேசவன் கைகளைக் கூப்பிக் கொண்டு அந்த தடாகத்தையே ஒரு கோவில் போலக் கருதி சுற்றி வந்து விட்டு குளத்து தண்ணீரையம் எடுத்து தலைமேல் தெளித்துக் கொண்டார்.

அப்படியே அண்ணாந்து பார்த்தபோதுதான் விழுந்த தூரம் தெரிந்து மயக்கமே வரப் பார்த்தது. இரவு தான் தள்ளப் பட்டதும் அப்போதுதான் நினைவுக்கு வந்தது. அடுத்த நொடியே மகள் மல்லிகா நினைப்பு வந்து உடம்பு பதற ஆரம்பித்து விட்டது.

''ஐயோ! பாவிப்பய என்னைத் தள்ளி விட்டுட்டு என் மகளை என்ன பண்ணானோ தெரியலியே...'' என்று வாய்விட்டு முனங்கினார். அங்கிருந்து வேறு இடங் களுக்குப் போகவும் வழி தெரியவில்லை. சாமிகளும் கண்களையே திறந்து பார்க்காதபடி ஜல சமாதி நிஷ்டையில் இருந்தனர். 'அவர்களைக் கூப்பிட்டுப் பார்' என்று உள்ளுணர்வு சொன்னபோதும் ஒருவகை அச்சம் வாயைக் கட்டியது. சற்று தாகமாகவும் இருந்தது. எனவே தடாக நீரை மொண்டு குடித்தபோது அது அமிர்தமாக தித்தித்தது உடம்பிலும் ஒரு புது தெம்பு. தண்ணீரை திரும்பத் திரும்ப மொண்டு குடித்தார். அப்படியே மேலெல்லாம் தெளித்து குளித்தது போலவும் பரவசமானார். அந்த நொடியில் ஒரு



புலியின் உறுமல் சப்தம் கேட்டது. சப்த நாடியும் உடனேயே அடங்கிவிட்டது. சப்தம் வந்த திக்கில் பெரிய புதர். தட்டு தட்டாய் மணி பிளாண்ட் போல இலைகள். இலைகளின் அசைவுக்கு நடுவில் ஒரு புலி உடம்பில் கறுப்பு வரிகளோடும் வயலெட் நிற விழிகளோடும் நாக்கை ஈரப்படுத்திக் கொண்டு நடந்துவந்த விதமே அவருக்குள் பாதி உயிரை வாங்கி விட்டது. பக்கமாக ஒளியவும் இடம் இல்லை. சட்டென்று ஒரே ஒரு உபாயம்தான் தோன்றியது. பொதக்கென்று அந்த தடாகத்துக்குள் விழுந்தவர்... அந்த மிதக்கும் சித்தர்களுக்குப் பக்கமாய் போய் நீந்தியபடியே மிதக்க ஆரம்பித்தார். அந்த புலியோ சர்வ சாதாரணமாக வந்து தடாகத்து தண்ணீரை நன்றாக நக்கிக் குடித்துவிட்டு 'எனக்கென்ன' என்று திரும்பிப் போனது. ஆதி கேசவனுக்கும் போன உயிர் திரும்ப வந்த மாதிரி இருந்தது. அந்த நிலையிலும் மிதந்தபடியே இருக்கிற அந்த சித்தர்களின் உடம்புதான் அவருக்கு அப்போது பெரும் ஆச்சரியமளித்தது.

அப்படியே லேசாக தண்ணீரில் மூழ்கியபோது ஒரு பரவசம். மூழ்கின நொடி காதுக்குள் 'நமசிவாய... நமசிவாய' என்று யாரோ முணுமுணுப்பது போல ஒரு சப்தம்! சுற்றிலும் ஒரு சாண் நீளத்துக்கு நிறையவே மீன்கள் வேறு நீந்திக் கொண்டிருந்தன. அவைகள்தான் ஒருவேளை தண்ணீருக்குள் முணுமுணுக்கிறதோ என்று கூட ஒரு பிரமை தட்டிற்று...

அந்த சப்தம் 'திரும்பவும் மூழ்கு' என்று அவரைத் தூண்டவே திரும்பவும் மூழ்கினார். இந்த முறையும் அந்த சப்தம் தெளிவாகக் கேட்டது. அது மட்டுமல்ல - பளிச்சென்று உள்ளிருப்பதெல்லாமும் தெரிந்தது. மெல்ல

உடம்பும் கீழ் அமுங்கியதில் அடிப்பாகத்தில் சில சிவலிங்கங்கள் கண்ணில் பட்டன!

பாசி பூத பச்சை நிற லிங்கங்கள். ஒவ்வொரு லிங்கமும் அதிகபட்சம் ஒரு அடி உயரம், ஒரு அடி அகலம் இருக்கலாம்...

மும்மூன்றாய் மொத்தமாய் ஒன்பது லிங்கங்கள்!

அவைகளின் தரிசனம் கிடைத்த அதே நொடி மூச்சுவிட முடியாத அவஸ்தை ஆதிகேசவனை மேலே நோக்கித் தள்ளி விட்டது.

மேலே வந்த நொடி வெளிக்காற்றை இழுத்து ஒரு பெருமூச்சு விட்டார். வெளிவந்த வேகத்துக்கு நீரலைகள் உருவாகி தடாகமே குலுங்கிப் போனது. அதில் மிதந்து கொண்டிருந்த சித்தர்களின் உடம்புகள் அப்படியே கரை ஓரமாகப் போய் மோதிக் கொண்டு நின்றன.

ஆதிகேசவனும் கரையைத் தொட்டு மேலே ஏறினார். உடம்பில் ஒரு தனித் தெம்பு. தன்னைச் சுற்றி நம்ப முடியாதவைகளே நடப்பதால் அதன் காரணமாக மனதுக்குள் குழப்பம் - சந்தேகம் மற்றும் இது கனவோ என்கிற கேள்வி வேறு...

· சூரியனோ நிமிர்ந்து நேராகக் குளத்தைத் துளையிடுவது போல தாக்கிக் கொண்டிருந்தான்.

ஆதிகேசவனுக்கு அந்த நொடியில் ஒரு உத்தரவாத மான உள்ளுணர்வு மட்டும் ஏற்பட்டது.

நிச்சயம் தனக்கு ஆபத்தாக எதுவும் ஏற்பட்டு விடாது என்பதே அது. ஆனாலும் மல்லிகாவின் நினைப்பு திரும்பவும் தோன்றி "என் பொண்ணு எங்க என்ன பாடுபடுதோ தெரியலியே..." என்று முணுமுணுக்க வைக்கது.



# 8

ஒரு மலையின் சிறப்புக்கும் இன்னொரு மலையின் சிறப்புக்கும் இடையே நிறைய வேற்றுமைகள் நிலவவும் வாய்ப்பு உண்டு. மலை உயரத்தில் செல்லச் செல்ல குளிர்நிலை அதிகரிக்கும். அதற்கு ஏற்பதான் அங்கே தாவரங்கள் வளரும்... குளிரைத் தாக்குப் பிடித்து வளரும் தாவரங்கள், குளிர் தாங்காதவை - என்று தாவரங்களில் பல பிரிவு உண்டு. தாவரங்களும் சுவாசித்து உணர்வு நிலைகளோடு கிடப்பவை. எனவே அதற்கேற்ற காற்றோட்டமும் அலை வரிசையும் மலைத் தலங்களில் இருக்கும்.

அவை எப்படிப்பட்டவை என்பதைக் கண்டறிவதில் சித்தபுருஷர்கள் மிகவே வல்லவர்கள்! இங்கெல்லாம் சூரியக் கதி ரொளிக்கும் பங்கு உண்டு. சதுரகிரி மலைத்தலம் பனி உறையுமளவு உயரமானதுமில்லை. அதற்காக சுமாரான குளிர் கொண்ட குறைந்த உயரம் கொண்டதுமில்லை. எனவே இங்கே நிலவும் தட்பவெப்பம்தான் பலவித யோக நிலைகளுக்கும் உதவுவது.

அடுத்து இங்கு ஓடும் ஓடைகள்!

இந்த ஓடை நீரில் நிறையவே மருத்துவ குணங்கள் உண்டு.

பொலபொலவென்று விடிந்துவிட்ட நிலையில் விறுவிறுவென்று நடந்து கொண்டிருந்தான் ஆனந்தன்.

மனதில் நல்ல தெளிவு - கூடவே கொஞ்சம் போல அச்சமும் இருந்தது. அடிப்படையிலேயே நல்லவனான அவனுக்கு அந்த மலையில் பெரிதாக பாவம் செய்ய வாய்ப்பு ஏற்படும் என்றே தோன்றவில்லை.

'விபூதித் தாத்தா மட்டும் கண்ணில் பட்டால் போதும்' என்று ஆசைப்பட்டான். ஆனால், பெரிதாக யாரும் கண்ணில் படவில்லை.

தனியாக நடப்பது என்னவோ போல் இருந்தாலும் குளிர்காற்றை உரசிக் கொண்டு நடப்பது மிகவும் சுகமாக இருந்தது. ஒரு வளைவில் திரும்பும்போதுதான் ஒரு பெரு நெல்லி மரத்தை ஒட்டிய பாறைக்கு மேல் மல்லிகா விழுந்து கிடப்பதை கவனித்தான்.

வாளிப்பான தேகம்...

வாடாமல்லிக் கலரில் சிந்தடிக் புடவை...

நல்ல அடர்த்தியான கூந்தல்...

வெள்ளை வெளேர் என மைதாவைப் பிசைந்தது போல உடம்பு...

அவள் தூங்குகிறாளா, மயங்கிக் கிடக்கிறாளா என்று மட்டும் தெரியவில்லை. காலில் கிழிந்து ரத்தம் உறைந்து போயிருந்தது. அதுவே ஓடிவந்ததைக் காட்டிக் கொடுத்தது. அப்படி ஒரு காட்சியைப் பார்த்துவிட்டு எனக்கென்ன என்று அவனால் தாண்டிச் செல்ல முடியவில்லை.

கிட்டே சென்று முகத்தைப் பார்த்தான்.

''யாருங்க அது...?'' - என்று ஒரு கேள்வியையும் கேட்டான். பதிலுக்கு அவள் முனங்கினாள். முகத்தை அசைத்தாள். மெல்லக் கண் திறந்து ஆனந்தனைப் பார்த்து முதலில் கண்கள் நிறைய பயத்தைத்தான் காட்டினாள்.



''பயப்படாதீங்க... என்னாச்சு உங்களுக்கு?''

''.....''

''அட உன்னைத்தாம்மா... பார்த்தா நல்லா படிச்ச பணக்கார வீட்டுப் பெண் மாதிரி இருக்கே.... எதுக்கு இப்படி முழிக்கறே?''

அவள், அவன் கேள்விக்கு தன் ஊமை பாஷையில் கூட ஒரு பதில் சொல்லத் தோன்றாமல் அவனுக்கு முன்னும் பின்னும் பார்த்தாள். அண்ணாமலை அவளைத் தொடர்ந்து வந்துவிடுவானோ என்று பயந்து அவள் பார்க்கிற மாதிரி இருந்தது. அப்படியே கண்களில் நீர் உருள ஆரம்பித்தது.

''அட என்னம்மா நீ... எதுக்கு அழுவறே?''

அவள் உடனேயே கை எடுத்துக் கும்பிட்டாள். அழுதபடியே தனக்குப் பேச வராது என்று சைகை காண்பித்தாள்.

''ஓ... உனக்கு பேச்சு வராதா...? ஆமா... கூட யாரும் வரலையா?'' - என்று கேட்டான் ஆனந்தன்.

மீசை முறுக்குவது போல முறுக்கி அப்பாவுடன் வந்ததை சொன்னவள், அண்ணாமலை பற்றி சொல்ல முடியாதபடி தவித்தாள். அவனுக்கும் பரிதாபமாக இருந்தது. எழுந்து நின்றவளால் அதிக நேரம் நிற்க முடிய வில்லை. நின்ற மாத்திரத்தில் காலில் ரத்தம் பீறிட்டது. காயத்தோடு நடப்பதும் சாத்தியமில்லை என்பது நிதர்சனமாய் தெரிந்தது. ஒருசில வினாடிகளுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அவளோ அவன் சட்டைப் பாக்கெட்டில் தெரிந்த பேனாவைப் பார்த்துவிட்டு அதைக் கேட்டாள். அவனும் தந்தான். அவள் நின்ற இடத்துக்கு சில அடி தூரத்தில் புளியோதரை கட்டி எடுத்து வந்து சாப்பிட்டு

விட்டு தூக்கி எறிந்திருந்த பொட்டலம் ஒன்று கிடந்தது. அதை எடுத்து அதன் வெளுத்த பாகத்தில் நடந்ததை வேகமாக எழுதத் தொடங்கினாள். ஆனந்தனும் அவள் எழுத எழுதப் படித்தான்.

'நானும் அப்பாவும் வந்தோம். ஒருவன் வழியில் தொடர்ந்து வந்தான். போலீஸ்காரன் போல இருந்தான். பார்வையே சரியில்லை. அவன் அப்பாவை ஒரு பெரிய பள்ளத்தில் பிடித்து தள்ளிவிட்டு விட்டான். என்னைக் கெடுக்கப் பார்த்தான். ஓடிவந்து விட்டேன். அவன் வந்து விடுவானோ என்று பயமாக உள்ளது' என்று அவள் எழுதியதைப் படிக்கவும் ஒருவித கோபம் பீறிட்டது அவனுக்கு.

''யார் அந்த ராஸ்கல்...?'' - என்றான் ஆவேசம் குறையாமல். அவள் ஜாடையாலேயே தெரியாது என்றவளாக பேனாவை திருப்பித் தந்தாள்.

''சரிம்மா. தைரியமா இரு... இனியும் இங்கேயே நிக்காம நடப்போம்...'' - என்றபோது 'ப்பா... ப்பா...!' என்று அவள், அப்பா ஆதிகேசவன் பற்றி வாயெடுத்தாள்.

''அவரைத் தள்ளிவிட்ட இடம் எதுன்னு தெரியுமா?''

அவள் தலை மறுப்பாக ஆடியது.

''தெரியாம எங்கன்னும்மா போய் பாக்கறது?''

அவளோ 'போவோம்... தேடுவோம்... உதவுங்கள்' என்கிற மாதிரி கையைக் கூப்பினாள்.

அவனும் 'சரி,வா... என்னால முடிஞ்ச உதவியை செய்யறேன்' என்றான். ஆனால், அவளால் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியவில்லை. கற்கள் அந்த அளவு காலைக் கிழித்து ரணம் ஆக்கி விட்டிருந்தன.



சட்டென்று அவனிடம் ஒரு யோசனை.

தன் சட்டையைக் கழற்றியவன் அதையும் இரண்டாகக் கிழித்து அவள் காலுக்கு கட்டு போட்டான். அடிபாகம் மெத்தென்று இருக்கும்படி அமைத்து நடக்கச் சொன்னான். அவளும் நடந்தாள். அவள் கண்களில் நன்றி உணர்ச்சி. அவன் இடுப்பில் பேண்ட் மட்டும் இருந்தது. கால்களில் செருப்பு. ஒரு கட்டத்தில் அதையும் அவளுக்கே போட்டு நடக்கச் சொல்லவும், அவளுக்கு மிகவே சௌகர்யமாகி விட்டது. பார்வை என்னவோ சுற்றிச் சுற்றி பார்த்தபடியேதான் இருந்தது.

நடக்கும்போது தாளமாட்டாமல் பேசினான்.

''இந்த மலைக்கு நான் கிளம்பி வரும்போது இப்படி எல்லாம் நடக்கும்னு கற்பனைகூட பண்ணிப்பாக்கல.

உனக்கு ஒருவிதத்துல சோதனைன்னா எனக்கு இன்னொரு விதத்துல...'' என்ற அவனை, அவளும் கனிவாகப் பார்த்தாள்.

சிறிது தூரத்திலேயே ஒரு ஓடை குறுக்கிட்டது...

சின்னச் சின்ன பாறை இடுக்கில் புகுந்து ஓடிவரும் அதன் ஓட்ட கதியே சங்கீதம் போல இருந்தது.

குட்டிக்குட்டி மீன்கள் கூடத் தெரிந்தன.

அந்த ஓடைக் கரையில் ஆனந்தனுக்கு ஒரு ஆச்சரிய அதிர்வு காத்திருந்தது. அங்கே ஒரு இடத்தில் விபூதித் தாத்தா குளித்துக் கொண்டிருந்தார்.

''தாத்தா...'' - என்று அவரைப் பார்த்தவுடன் கூவி விட்டான். அவரும் திரும்பிப் பார்த்தார். ஆச்சரியப்பட்டார். ஆனந்தன் அவரை நோக்கி ஓடினான்.

''தாத்தா... தாத்தா...''

''யாரு... ஆனந்தம் தம்பியா?''

''நானேதான்... என்ன தாத்தா நீங்க... உங்களை நான் எங்கெல்லாம் தேடுறேன் தெரியுமா?''

''என்னையா...?'' - அவர் கண்கள் ஆச்சரியத்தில் விரிந்தன. அப்படியே நிற்க முடியாதபடி உட்கார்ந்துவிட்ட மல்லிகாவையும் பார்த்தது.

''பாவம் தாத்தா அந்த பொண்ணு... மலைக்கு சாமி கும்பிட வந்து, ரொம்பவே கஷ்டப்பட்டுக்கிட்டு இருக்கு. அப்புறம் தாத்தா... நான் உங்களைத் தேடிக்கிட்டுத்தான் இங்கேயும் வந்துருக்கேன். எனக்கு இப்ப ஒரு உண்மை தெரியணும்.''

''என்னப்பா உண்மை?''

''ரெண்டு நாள் முந்தி எங்க வீட்டுக்கு பஞ்சாமிர்த பிரசாதம் தந்தீங்களே... ஞாபகம் இருக்கா?''

''ஏன் இல்லாம...நவ லிங்கப் பிரசாதமாச்சே அது!''

''நவ லிங்கப் பிரசாதமா?''

''ஆமாம்ப்பா... அது பாஷாண நவலிங்கங்களுக்கு அபிஷேகம் செய்த பிரசாதம். ஏன் தம்பி... அதுக்கென்ன?''

''அதுக்கென்னவா... அதை சாப்பிட்ட என் மகளுக்கு உடம்பு நல்லாச்சு தாத்தா... சுருண்டு படுத்தே கிடந்தவ அதை சாப்பிட்ட பிறகு எவ்வளவு சுறுசுறுப்பா இருந்தா தெரியுமா?''

''பிரசாதம் இல்லையா...அதான் வேலை செஞ்சிருக்கு...''

''உங்களுக்கு அது பிரசாதம். டாக்டர் அதுல மருந்து இருக்கறதா சொல்றார்...''

''இருக்கும்ல... நவபாஷாண லிங்கம்னாலே மருந்துதானே?''



''தாத்தா... தாத்தா... நான் இப்ப அதைப் பாக்கணும். அதுக்கு திரும்ப அபிஷேகம் பண்ணி பஞ்சாமிர்தமோ பாலோ இல்ல தேனோ உடனே வேணும் தாத்தா. அது கிடைச்சாத்தான் என் மகள் பிழைப்பா. அது இந்த காட்டுல எங்க தாத்தா இருக்கு...?''

''அது ரொம்ப தூரத்துல இருக்கேய்யா... அதுலயும் இப்ப அது மச்சமுனி தடாகத்துலல்ல இருக்கும்...''

''தடாகமா...?''

''ஆமாம்... அதுல திடீர் திடீர்னு தண்ணி ஏறும்; இறங்கும். இறங்கி உள் இருக்கற அது தெரியும்போதுதான் அபிஷேகம் பண்ண முடியும்...''

''நான் இப்பவே பார்க்கணுமே...''

''ரொம்ப தூரம் போகணும்ப்பா... உன்னால மேடு பள்ளத்துலல்லாம் ஏறி இறங்க முடியாது.''

''உங்களால முடியும் போது என்னால முடியாதா?''

- துடித்தான் ஆனந்தன். மல்லிகா அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டே இருந்தாள்.

''சரி... வா - இப்பவே கிளம்பினாதான் இன்னிக்கு சாயந்தரமாவது நாம அங்க போய்ச் சேர முடியும்.''

— உற்சாகமாகவே அவரோடு புறப்படத் தயாரானவனுக்கு சட்டென்று நெருடியது. மல்லிகா அவனைப் பார்வையாலேயே மறித்தாள். அவளை என்ன செய்வதென்று தெரியவில்லை.

''ஏங்க... இப்ப என்னால உங்ககூட வர முடியாதுங்க. என்ன பண்ணலாம்?'' - என்றான். அவளுக்கு அடுத்த நொடி கண்ணீர் வந்துவிட்டது. 'ஓ'வென்றே அழத் தொடங்கி விட்டாள்.

"அம்மாடி... இப்படி எடுத்ததுக்கெல்லாம் அழுதா எப்படிம்மா...? ஏதோ என்னால முடிஞ்ச உதவியை செய்தேன். நீ அதிகம் எதிர்பார்த்தா எப்படிம்மா?"

அவளும் சளைக்கவில்லை!

'ப்பா... ப்பா...!' என்றாள்.

"பள்ளத்துல விழுந்தவர் உயிரோட இருக்காரோ, இல்லையோ... போலீஸ் கேஸ் வேற! வம்பா போயிடும்மா. நான் என் மக உயிரைக் காப்பாத்த வேண்டிய கட்டாயத்துல வேற இருக்கேன்."

— அவளோ தொடர்ந்து கைகளைக் கூப்பி அவனைக் கண்ணீர் மல்கப் பார்த்தாள். நடக்க முடியாத கால்களை வேறு காட்டினாள். விபூதித்தாத்தாவும் "ஆனந்தம்... யாருப்பா இந்த பொண்ணு... இதுக்கு என்ன பிரச்சினை?"

"அத என் தாத்தா கேக்கறீங்க... ஒரு பக்கம் பார்த்தா பாவமா இருக்கு. இன்னொரு பக்கம் பார்த்தா பரிதாபமா இருக்கு."

"சரி, நீ சட்டுன்னு சொல்... ஏன்னா என் திட்டம் வேற..."

"உங்க திட்டம் வேறென்னா... உங்களுக்கு என்ன வேலை தாத்தா - அதுவும் இந்த மலைக்காட்டுல...."

"எவ்வளவோ வேலைங்க... நான் இப்ப பல சித்தர் சாமிங்களுக்கு தொண்டு செய்யற ஒரு தொண்டன்.

ஒரு சாமிக்கு கால் பிடிச்சு விடுவேன். ஒரு சாமிக்கு சுருட்டு வாங்கிட்டு வந்து தருவேன். ஒரு சாமி சுக்கு கஷாயம் கேட்கும். போட்டுத் தருவேன்."

"இந்த வயசுல உங்களுக்கு எதுக்கு தாத்தா இந்த வேண்டாத வேலை எல்லாம்..."



"மேலோட்டமா பார்த்தா அப்படித்தான் தெரியும். ஆனா, நான் ஒண்ணும் காரணம் இல்லாம பண்ணல."

"அது என்ன காரணம்?"

"அத எதுக்கு உன்கிட்ட சொல்லிக்கிட்டு... விட்டுத் தள்ளு. நீ சட்டுன்னு ஒரு முடிவுக்கு வா..."

- தாத்தா ஏதோ புதிர்போல பேசினார். ஆனந்தனை தர்மசங்கடம் பிடித்து ஆட்ட ஆரம்பித்தது.

"தாத்தா... வேணும்னா இந்த பொண்ணையும் கூட்டிக்கிட்டுப் போலாமா?"

"தாராளமா... ஆனா காலுக்கெல்லாம் கட்டு போட்டுக்கிட்டு இந்த பொண்ணு நடக்குமா?"

"அதுகிட்டயே கேப்போம்... தா... பொண்ணு உன்னைதான். வேணும்னா நீயும் எங்க கூட வா. அவ்வளவு தான் என்னால சொல்ல முடியும். வழில வேற யாராவது வந்தா அவங்கள பிடிச்சுக்கிட்டு நீ என்னை விட்டுடணும்... என்ன?"

- அவளும் வேகமாகத் தலையாட்டி ஆமோதித்தாள். அதன்பின் அங்கிருந்து கிளம்பினர். தாத்தா அவர்களை வேறு ஒரு பாதை வழியாகக் கூட்டிச் செல்லத் தொடங்கினார்.

"தாத்தா... இந்த மலையே உங்களுக்கு அத்துப்படி மாதிரி தெரியுதே..."

"ஆமாம் தம்பி... எத்தனை தடவை வந்துருப்பேன் சொல்லு பார்ப்போம்."

"என்ன ஒரு இருபது, முப்பது தடவை வந்திருப்பீங்களா?"

அவர் சிரித்தவராக ''அட என்ன ஆனந்தம் நீ... பத்து இருபது தடவை வர்றதெல்லாம் ஒரு விஷயமா... இன்னும் ஒரு பத்து, இருபது தடவை நான் வந்தா கிட்டத்தட்ட இல்ல - துல்லியமாகவே நூறு தடவை வந்தவனா ஆயிடுவேன்.''

''அடேங்கப்பா...''

''அடேங்கப்பாதான்... இங்க நிறைய சாமிங்க இருக்காங்க. ஜெயில்ல இருந்து தப்பிச்சு வந்த சிலர்கூட சாமியாருங்க போர்வைல திரிஞ்சிகிட்டிருக்காங்க.''

- ஆனந்தனுக்கு நிஜமாலுமே தூக்கிவாரிப் போட்டது.

''சரி தாத்தா... வழில ஏதாவது தங்கற வசதி இருந்தா இந்த பொண்ணை அங்ககூட விடலாமே...''

''தங்கற வசதியும் கிடையாது. ஒரு எழவும் கிடையாது. வேணும்னா அங்கங்க குகைங்க இருக்குது. அதுக்குள்ற கொஞ்ச நேரம் சுருண்டு படுத்துக்கலாம்.''

''சரி, சரி. போகும்போது அப்படியே கவனிப்போம். இந்த மலைல போலீஸே கிடையாதா?''

''ஏன் இல்லாம... ஆனா அவங்க ஆபீஸை விட்டு பெருசா நகர மாட்டாங்க. சாமியாருங்க விஷயத்துலயும் தலையிடமாட்டாங்க.''

- தாத்தா நடந்து கொண்டே - பேசிக் கொண்டே போனார். மல்லிகாவும் தேங்கித் தேங்கி நடக்க முடியாதபடி நடந்து அவர்களைப் பின்தொடர்ந்தாள். ஆனந்தனும் திரும்பித் திரும்பி பார்த்தபடியே நடந்தான். மேலே சூரியனின் தாக்கமும் நேரம் செல்லச் செல்ல கூடிக் கொண்டே போனது. எல்லோரும் போகும் பாதையை விட்டுவிட்டு முற்றாக வேறு திசையில் அவர்கள் பயணம் இருந்தது. அந்த பாதையும் படு பயங்கரமாக இருந்தது.



அடர்வான புதர்கள்... குடைபோல தலைக்கு மேலே கவிழ்ந்திருக்கும் மரக்கூட்டம்... நிம்மென்று அங்கங்கே நிழல்! அப்படி ஒரு நிழலான இடத்தில் நடந்து போய்க் கொண்டிருக்கும்போது உடம்பில் பொட்டுத் துணிகூட இல்லாதபடி ஒரு சித்தர் திடீரென்று தரையில் மண்ணுக்குள் இருந்து புதைத்த பிணம் மேலே எழுவதைப் போல் எழுந்து நின்றார்.

இருவருக்குமே 'பகீர்' என்றது!

ஆனால், விபூதித் தாத்தா கொஞ்சம்கூட பயப்படவில்லை. அவர் காலில் விழுந்து எழுந்துவிட்டு தன்வசம் உள்ள ஒரு துணிப்பையில் இருந்து சில சுருட்டுகளை எடுத்து ''வெச்சுக்குங்க சாமி...'' - என்று கொடுக்கவும் அவர் முகத்தில் ஒரே சிரிப்பு. பதிலுக்கு அந்த சித்தர் குனிந்து தன் காலடி மண்ணை ஒரு கைப்பிடி எடுத்து, ''இந்தா... நீ எப்பவும் கேக்கற அடிமண்.'' என்று கொடுத்துவிட்டுப் போய் விட்டார். ஆனந்தன் கொஞ்சம் போல மிரண்டுதான் போயிருந்தான்.

''தாத்தா... என்ன தாத்தா இது... உங்களுக்கு எதுக்கு தாத்தா காலடி மண்...?''

''அதுக்கு இன்னிக்கு என்ன விலை தெரியுமா? புரவிப் பாளையம் ஜமீன்தார் இந்த ஒரு கைப்பிடி மண்ணுக்கே பல லட்சம் தருவார்...''

''அப்படி என்ன இருக்கு இதுல?''

''என்ன இல்ல இதுலன்னு கேள்... இது இருந்தா உன்னோட எல்லாவித திருஷ்டியும் ஓடியே போயிடும். காசும் பணமும் உன்கிட்ட கொட்டும்...''

"சரிதான்... இந்த காட்டுக்குள்ளேயும் இப்படி எல்லாம் சமாசாரங்களா?"

"அப்படிச் சொல்லாதே... இவங்க மதிப்பெல்லாம் உனக்குத் தெரியாது. இவராச்சும் மண்ணுதான் கொடுத்தாரு. ஒரு சாமியார் தங்கமே கொடுப்பாரு..."

"தங்கமேவா... என்ன தாத்தா நிஜமாதான் சொல்றீங்களா?"

"வா காட்டறேன்... பாத்துட்டு சொல்லு..."

"நான் பாக்கறது இருக்கட்டும்... அப்படி தங்கம் தர்றவங்கள வெச்சுக்கிட்டு நீங்க எதுக்கு தாத்தா கஷ்டப் படணும்?"

"நான் கஷ்டப்படறதா உன்கிட்ட சொன்னேனா?"

"இல்ல... நல்லா இருக்கலாமே இன்னும்னு சொல்ல வந்தேன்."

"நான் ரொம்பவே நல்லாதான் இருக்கேன். எனக்கு சாமியார் தர்ற தங்கத்தைவிட.. அதை அவர் எதை வெச்சு எப்படிச் செய்யறார்ங்கற ரகசியம் பெருசு. நான் அதைத் தெரிஞ்சுகிட்டு ஓடிடுவேன்."

தாத்தா அப்படிச் சொன்னபோது அது ஆனந்தனுக்கே ஆச்சரியமளித்தது. தாத்தா மரணத்தை மிக விரும்பும் ஒரு நபராகத்தான் அவன் வரையில் இருந்தார். ஆனால், இப்போது அவர் பேசுவதை எல்லாம் பார்த்தால் அவருக்குள்ளும் பேராசை ஒளிந்திருப்பது நன்றாகவே தெரிந்தது. தாத்தா திடீரென்று ஒரு இடத்தில் தேங்கி நின்று, "அந்த பொண்ணு நம்மகூட வர்றதுல இப்ப நமக்கும் சில சிக்கல்கள் இருக்கு. நீ என்ன பண்றே... அவளைக் கொஞ்ச நேரத்துக்கு உன் பொண்டாட்டினு சொல்லு...!"



"ஐயோ... என்ன தாத்தா இது. யார்கிட்ட நான் அப்படி சொல்லணும்...?"

"எல்லாம் நம்ம சாமியார்கள்கிட்டதான்னு வெச்சுக்கோயேன்."

"ஏன் அப்படி?"

"இங்க எல்லா சாமியார்களுமே பிரம்மச்சாரிங்க கிடையாது... சிலருக்கு பொண்டாட்டி செத்துட்டாங்க... அவங்கதான் அப்பப்ப இந்த உடம்பை அடக்க ரொம்பவே கஷ்டப்படுவாங்க. இவ யாரோ ஒரு பொண்ணுன்னா கொஞ்சம்கூட யோசிக்காம போதை வர்ற புகையைப் போட்டு அப்படியே அவளைக் கதறக் கதறக் கற்பழிச்சிடுவாங்க..."

"என்னது... கற்பழிப்பாங்களா?" - அசாதாரணமாக வாயைப் பிளந்துவிட்டான் ஆனந்தனும்...

"ஆமாம் ஆனந்தா. இங்க எல்லா டைப்லயும் ஆளுங்க இருக்காங்க. அவங்க வரைல சந்தோஷமா இருக்கணும். எதை நினைச்சும் கவலைப்படக் கூடாது. கவலைப்படறதே கூட ஒரு தண்டனை மாதிரிதான் அவங்களுக்கு..."

விபூதித் தாத்தா சொன்ன அடுத்த தகவலும் ஆனந்தனை ஒரு உலுக்கு உலுக்கி விட்டது! தாத்தாவோ சகஜமாகப் பேசியபடி நடந்து கொண்டிருந்தார். அவர் பேச்சு காதில் விழுந்ததில் மல்லிகா அப்படியே உறைந்து போயிருந்தாள். அதை எல்லாம் கேட்ட பிறகும் அவரைத் தொடர்வது என்பது அவளுக்கு ஆபத்தான ஒரு விஷயமாகத் தான் பட்டது. அது தயங்கித் தயங்கி அவள் நடப்பதில் துல்லியமாகப் புலப்பட்டது.

மனதிலே இப்படிப் புயல் வீசும்போது வெளியேயும் வானில் ஒரு பெரும் மாற்றம். திமுதிமுவென்று மழை மேகங்கள் திரண்டு வந்து காற்றும் பலமாக வீச ஆரம்பித்தது.

''தாத்தா மழை வரும் போலத் தெரியுதே...''

''அது வரும்... போகும்... அதுக்கெல்லாம் இந்த மலைல துளிகூட கணங்கக் கூடாது...''

''இல்லை... எனக்கு ஒண்ணும் இல்லை. இந்த பொண்ணை நினைச்சாத்தான்...''

''நானும் கவனிச்சுக்கிட்டுத்தான் இருக்கேன். அந்த பொண்ணுக்காக நீ ரொம்பவே கவலைப்படறே...'' - தாத்தா கொஞ்சம் மெல்லிய குரலில் சொன்னதில் கேலி பரவி இருந்தது.

''அப்படி இல்ல தாத்தா... ஊமைப் பொண்ணு. பாவமா இருக்குல்ல...''

''நீ வேறப்பா... பாவம் புண்ணியம்னுகிட்டு. இங்க இருக்கற சில சாமிங்க பாவம் புண்ணியம்னு யாராவது யோசிச்சாலே சிரிப்பாங்க.''

''ஆச்சரியமான பதிலா இருக்குதே...''

''ஆமா... எல்லாம் மனசு நினைக்கற நினைப்பு தான்கறது அவங்க சித்தாந்தம்...''

''அது எப்படி?''

''அது எப்படின்னா... ஒரு ஊருக்கு சுத்திப் பார்க்க போய்ட்டு வர்ற மாதிரிதான் நாம இந்த உலகுக்கு வந்துருக்கோம். வந்ததுகூட ஆத்மா மட்டும்தான். உடம்பை இங்கேயே போட்டுட்டு போய்க்கிட்டே இருக்கணும். அதாவது இருக்கறவரைதான் எல்லாம். அதுவும் ஆளுக்கு ஆள் 50 வயசு 60 வயசுன்னு மாறுபடுது. இதுல



இளமைங்கறதோ ஒரு பத்து பதினைஞ்சு வருஷம்தான். நீ இப்ப விரும்பினாலும் சின்ன புள்ளையாட்டம் எகிறிக்குதிச்சு ஓட முடியுமா? மரத்துல ஏறித் தொங்க முடியுமா... எதுவுமே போனா வராது...''

- தாத்தாவின் பிடிகை பலமாக இருந்தது.

''அதனால இருக்கும்போதும், கிடைக்கும்போதும் எல்லாத்தையும் அனுபவிச்சுக்கணும்கறதுதான் இங்க சில சாமிங்களோட சித்தாந்தம்.''

''சாமிங்களா இப்படி எல்லாம் சொல்றாங்க...?''

''சாமிங்கதான் சொல்வாங்க... அவங்க சொல்றதுல என்ன தப்பு இருக்குன்னுதான் நீயும் சொல்லேன்...''

''எனக்கென்னமோ எல்லாமே தப்பா படுது...''

''தப்பா படுதுன்னு பொதுவா சொன்னா ஆச்சா... காரண காரியத்தோட சொல்லு...''

- நடைக்கு நடை... பேச்சுக்குப் பேச்சு...

''நான் இப்ப இப்படி எல்லாம் பேச வரலை தாத்தா... எனக்குத் தேவை மருந்து...''

''அது சரி... இங்க மருந்து ஒண்ணும் சும்மா கிடைக்காது ஆனந்தம்...''

''அப்படின்னா...?''

''சாமிங்க சமாசாரம் அது... அவ்வளவு ஏன்... பாஷாண லிங்கங்களை சாமிங்கதான் செஞ்சாங்க. ஆகையால அது அவங்க சொத்து.''

''நீங்க பேசறத பார்த்தா அவங்க பணம் காசை எதிர்பார்ப்பாங்கன்னு சொல்லுங்க...''

- உடனேயே விபூதித் தாத்தா சிரிக்க ஆரம்பித்து விட்டார்.

## 9

மலைகளில் சில ஆபத்தான விஷயங்களும் உண்டு. அதில் ஒன்று இடிக்குழிநீர்! அதாவது மலைமேல் அடிக்கடி மழை பெய்யும்போது இடியும் சில இடங்களில் விழும். இடியின் விசை மிக அதிகமானது. இடிக்கு பின்னாலே மிகப் பெரிய அளவிலே மின்சாரமும் இருக்கிறது. அந்த இரண்டும் சேர்ந்து மலைப் பாறைகள் மேல் விழும் போது அங்கே பள்ளம் தோண்டியது போல குழிகள் உருவாகி விடும். பள்ளக் குழிகளில் மழைநீர் தேங்கி அப்படித் தேங்கிய மழைநீரில் மின்னல் பாயும்போது அதன் சக்தியால் அந்த நீர் எண்ணெய்க் குழம்பு போல ஆகிவிடும். இதற்கு சித்தர்கள் பாஷையிலே உதகநீர் என்று பேர். இந்த நீரை எவர் ஒருவர் ஒரு வாய் அருந்தினாலும் சரி, அவர்களது வயிறு கல் போல் ஆகி விடும். இந்த நீரைக் கொண்டுதான் சில வகை பாஷாணங்களை இதில் கலந்து உருவங்கள் செய்வார்கள். அந்த உருவங்கள் கல் போல கால காலத்திற்கும் இருக்கும். இதை உண்டவர்கள் துடிதுடித்து உயிர் விட்டிருக்கிறார்கள்...

அந்த தடாகத்தின் அருகில் வெளியேற வழி தெரியாமல் சிக்கிக் கொண்டிருந்த ஆதிகேசவனுக்குப் பசியோ தாகமோ இல்லை. ஆனால், அங்கே அகப்பட்டுக் கொண்டுவிட்ட ஒரு உணர்வு மட்டும் அவரைப் பிசைந்து கொண்டிருந்தது. கூடவே மல்லிகாவின் நினைப்பு... இவ்வளவுக்கும் நடுவில் அவர் கதைகளில் மட்டுமே



படித்திருக்கும் சில வகைப் பறவைகள் அந்த தடாகத்தில் வந்து தண்ணீர் குடித்துவிட்டுப் போவதெல்லாம் ஒரு ஆனந்தமான அனுபவமாகத்தான் அவர் வரையில் இருந்தது. இவ்வளவுக்கும் நடுவில் அந்த தடாகத்தில் தண்ணீர் குறைந்து கொண்டே போவதும் அவருக்கு ஆச்சரியம் அளித்தது. அவ்வளவு தண்ணீரும் ஏதோ மோட்டார் போட்டு வெளியேற்றப்படுவதைப் போல குறைகிறது. ஆனால், எங்கே போகிறது என்று மட்டும் தெரியவில்லை.

ஒரு கட்டத்தில் மிதந்து கொண்டிருந்த அந்த சித்தர்கள் மேல் சூரிய ஒளி செங்குத்தாக படவும் அவர்கள் மெல்ல கண் விழித்தனர். அப்படியே மிக மென்மையாக கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்தும் நின்றனர். அப்போது அவர்கள் இடுப்புக்குதான் தண்ணீர் இருந்தது. அவர்களைப் பார்த்து ஆதிகேசவனும் ''சாமி... நமஸ்காரம் சாமி!'' என்று கைகளைக் கூப்பினார்.

அவர்கள் முகத்தில் புருவ வளைசலில் 'நீ எப்படி இங்கே வந்தாய்?' என்பது போல ஒரு ஆச்சரிய ஒட்டம்...

''சாமி... காலைல இருந்து தவிச்சுக்கிட்டு இருக்கேன். எப்படி வெளிய போறதுன்னே தெரியல... ஆனா, உங்கள எல்லாம் பார்த்ததுல ரொம்பவே மனசுக்கு சந்தோஷம் சாமி... ரொம்பவே மனசுக்கு சந்தோஷம்...''

ஆதிகேசவன்தான் பேசினார். ஆனால், அவர்கள் எதுவும் பேசவில்லை. பக்கத்தில் தோள் அளவுக்கு வளர்ந்திருக்கும் - பெயர் என்னவென்றே தெரியாத ஒரு தாவரக் கூட்டத்துக்குள் அவர்களில் இருவர் புகுந்து - பார்த்துக் கொண்டிருக்கும்போதே மறைந்து விட்டனர். ஒருவர் மட்டும் ஆதிகேசவனிடம் வந்து உற்றுப்பார்த்து

உதட்டைப் பிதுக்கிச் சிரித்தார். பின் அண்ணாந்து உயரே பார்த்தார்!

''அங்க இருந்துதான் சாமி கீழே விழுந்தேன். நானா விழலை. ஒருத்தன் தள்ளி விட்டுட்டான். ஆனா, உடம்புல ஒரு காயம் இல்லை. வெளிய சொன்னா யாரும் நம்ப மாட்டாங்க...''

அவர் சிரித்தார்.

'' 'சாமி' வாயத் திறந்து பேசுங்க. நான் வெளியேற வழி சொல்லுங்க...''

'' 'நான்' வெளியேற ஒரே வழி 'நான் யார்'னு கேட்டுக்கறதுதான்...''

- அவர் சொன்னதில் தத்துவப் பொருள்!

''சாமி... நான் இங்க இருந்து போக வழி கேட்டேன் சாமி.''

''எப்படி வந்தியோ அப்படியே போ...''

''சாமி... என்ன சொல்றீங்க... எனக்குப் பறக்க வெல்லாம் தெரியாது...''

''கொஞ்சம் இரு... நான் பறக்கும்போது என் காலைப் பிடிச்சுக்கோ...''

''சாமி... என்ன சாமி சொல்றீங்க - நம்பற மாதிரி சொல்லுங்க...''

''இங்க எதை உன்னால நம்ப முடியல...?''

''எதைன்னு சொல்ல... எல்லாம்தான்! புலி வந்து தண்ணி குடிச்சுட்டுப் போகுது. மான் வருது... நீங்கள்ளாம் தண்ணிமேல மிதக்கறீங்க. உள்ற லிங்கம் இருக்கு...

இந்த தண்ணிய குடிச்சதுல இருந்து எனக்கும் தெம்பா இருக்கு...''



''நீ என்னதான் சொல்றே...?''

''இதெல்லாம் அதிசயம்... 'சதுரகிரி மலைக்குப் போ... அங்க பெரிய திருப்பம் ஏற்படும்'னு சிலர் சொன்னப்போ நான் துளிகூட நம்பலை. ஆனா இங்க இப்ப பார்க்கறேன். அதே சமயம் சாமி... என் மகளை நினைச்சா தான் ரொம்ப கவலையா இருக்கு...''

''இங்க எந்த கவலைக்கும் இடம் இல்லை... இங்க ஒருத்தன் கவலைப்பட்டா அவன் ஜீவனே இல்லை...''

''அப்படி எல்லாம் பேசாதீங்க சாமி... ஒரு அப்பாவா நீங்க இல்லை. அதான் இப்படிப் பேசறீங்க... என் மகளோட நான் தரிசனம் பண்ண வந்தேன் சாமி. இந்த மலைலகூட தப்பானவங்க இருக்காங்கன்னு இப்பத்தான் தெரியுது. அப்படி ஒருத்தன்தான் என்னைப் பிடிச்சு தள்ளி விட்டுட்டான்.''

''அதுக்கு நீ அவனுக்கு நன்றி சொல்... இது பூலோக கைலாசம். இங்க எந்த மாயைக்கும் இடம் இல்லை. இங்க பெரியவன், சின்னவன் இல்லை. பசி, தாகம், இல்லை, நட்பு, பகை இல்லை. இங்க இருக்கறது அமைதி ஒண்ணு மட்டும்தான்.''

''நீங்க சொல்றதுலயும் கொஞ்சம் உண்மை இருக்கத்தான் இருக்கு... அதே சமயம் என் மக நினைப்பு என்னை வாட்டுதே சாமி...''

''பைத்தியக்காரா... பூலோக கைலாசம் வர்ற அளவுக்கு புண்ணிய பலம் உனக்கு இருக்கும்போது எதுக்கு கவலைப்படறே. நீ இங்க வந்த மாதிரியே உன் மகளும் வந்து சேருவா. நீ அதை நம்பு. இங்க நீ எதை நம்பறியோ அது நடக்கும்...''

''சாமி... நீங்க சொல்றது கேக்க நல்லா இருக்கு. ஆனா, மனசு கிடந்து தவிக்குது சாமி...''

- ஆதிகேசவனால் படபடப்பை அடக்கிக் கொள்ளவே முடியவில்லை. அந்த சித்தருக்கும் 'இனி இவரிடம் பேசுவது வீண்' என்று தோன்றியதோ என்னவோ திரும்பிக் கொண்டார். தடாகத்திலும் தண்ணீர் முழுவதுமாய் வற்றி உள்ளிருக்கும் லிங்கங்கள் வெளியே தெரிந்தன.

''சாமி இன்னும் சில மணி நேரம்தான் தெரியும். கும்புட்டுக்கோ... யாருக்கும் கிடைக்காத பாக்கியம் இது. உள்ள இறங்கி தொட்டுக் கும்புட்டுக்கோ...

கட்டிப்பிடிச்சு சிவ சிவான்னு கதறு... மிச்சம் இருக்கற கர்மக் கணக்கும் நேராயிடும்.''

- அவர் பேசிக்கொண்டே போனார். சற்று முன் புதர்களுக்குள் புகுந்து மறைந்து போன சித்தர்கள் கையில் ஒரு மண்கலயத்தில் பால், வில்வம் என்கிற அபிஷேகப் பொருட்களுடன் திரும்பி வந்தபடி இருந்தனர்!

ஆனந்தனின் எதிரில் ஒரு சாக்கு மூட்டையில் அள்ளலாம் - அவ்வளவு தங்கம்! அதுவும் வெல்லக் கட்டிகள் போல உருண்டையாய், தட்டையாய் பல ரகங்களில்... தொட்டுத் தூக்கிக் கூட பார்த்தான். கனத்தது.

''அவ்வளவும் சுத்த தங்கம் ஆனந்தம்... எடுத்துக்க...'' - என்று அவனோடு இருக்கும் விபூதித் தாத்தாவும் ஊக்கப் படுத்தி விட்டார்.

''தாத்தா... இது நிஜ தங்கம்தானா?''

''அடப்பாவி... இது மேலயே சந்தேகமா... சாமிங்க தங்களுக்குத் தெரிஞ்ச ரசவாத வித்தையால செஞ்ச தங்கம் இது. 24 காரட்...''



''இவ்வளவு தங்கமும் எனக்கா?''

''உனக்கேதான்... எடுத்துக்கிட்டு கிளம்பு...''

''சாமி... என் பொண்ணுக்கு மருந்து...''

''அதான தங்கம் வந்துருச்சில்லே? இதை வித்து பணமாக்கி மேல்நாட்டுக்கு கூட்டிக்கிட்டுப் போய் வைத்தியம் பார். விதி இருந்தா பொழைக்கட்டும். இல்லாட்டி யாரால தடுக்க முடியும்?''

''சாமி... பாஷாண லிங்கத்துகிட்ட மருந்து இருக்கும் போது நான் எதுக்கு சாமி மேல்நாட்டுக்குப் போகணும்?''

''சாமிங்க எப்பவும் எதாவது ஒண்ணுதான் தருவாங்க. உனக்கு தங்கம் தந்துருக்காங்க. இது போதாது...?''

''சாமி... அப்படியே கொஞ்சம் மருந்து...''

''அட, உனக்கு சொன்னா புரியாது...? சாமிங்க கோபமா பாக்கறத பார்...!''

- விபூதி தாத்தா அந்த தங்கத்தை தந்த சில சித்தர்களைக் காட்டி கோபப்பட்டார்.

அவர்களும் முறைத்தனர்.

மல்லிகாவும் அவ்வளவையும் பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள். அவள் உடம்பில் மெல்லிய நடுக்கம் வேறு. ஏனென்றால், அவர்களில் ஒரு சித்தர் மல்லிகாவை காமப் பார்வை பார்த்துக் கொண்டிருந்தார். அவளால் அதை ஜீரணிக்கவே முடியவில்லை.

ஆனந்தனோ என்ன முடிவெடுப்பது என்று தெரியாமல் தத்தளிப்போடு இருந்தான். பின் தங்கத்தை அலட்சியப்படுத்திவிட்டு ''சாமி... எனக்கு தங்கம் வேண்டாம். மருந்து கொடுத்தா போதும்...'' என்றான்.

''பைத்தியக்காரா... மருந்து வந்தா உன் மக பிழைக்கலாம். ஆனா, தங்கம் வந்தா நீ குபேரனாகவே ஆயிடுவே தெரியுமா?''

''சாமி... எனக்குள்ற இப்ப என் மகதான் இருக்கா... பாவம் சாமி அது... உயிருக்கு துடிச்சிக்கிட்டு இருக்கு சாமி.''

''சரி... நான் மருந்து வாங்கித் தரேன். நீ இப்பவே கிளம்பு.''

''எங்க?''

''ஊருக்கு...''

''மருந்து...''

''நீ போ... நான் வாங்கிட்டு நாளைக்கு உன் வீட்டுக்கே வந்து தரேன்...''

''ஏன் சாமி... இப்ப கிடைக்காதா?''

''கிடைக்காது... அதுக்கு கைலாச குகை பக்கம் போகணும். அங்க எல்லாராலயும் போய்வர முடியாது...''

''ஆனா ஆரம்பத்துல முடியும்கற மாதிரி பேசினீங்களே...''

''இப்ப பேசறத நீ கேள்... அப்படியே திரும்பி நட.... நான் சாமிங்களோட போய் மருந்தோட வரேன்...''

- அவனும் அதற்குமேல் அவரிடம் பேச முடியாதவனாகி திரும்பினான். மல்லிகாவையும் அழைத்துக் கொண்டு திரும்பிப் பார்த்தவனை தாத்தா தடுத்து ''நீ மட்டும் போ...'' என்றார்.

மல்லிகாவுக்கு ஜிலீர் என்றது.

''என்ன தாத்தா சொல்றீங்க?''

''சாமிங்க இந்த கன்னிக்கு பூஜை செய்ய விரும்பறாங்க.''

''பூஜையா...?''



''ஆமாம்... கன்னி பூஜை... நீ போ...''

''இந்த பொண்ணுக்கு கன்னி பூஜையா...? சாமி... நேராவே சொல்லுங்க. அவங்களுக்கு இவ உடம்பு வேணும். அப்படித்தானே?''

''சரி... அப்படித்தான்னு வெச்சுக்கோ...''

''என்னத்த வெச்சுக்க. பாவம் சாமி அந்த பொண்ணு.''

''உன் பொண்ணுகூடதான் பாவம்...''

''அதுக்காக...?''

''உன் வேலைய பாத்துக்கிட்டுப் போ... ஊர்ல ஆயிரம் பொண்ணுங்க. யார் எக்கேடு கெட்டா உனக்கு என்ன?''

''சாமி... நான் வரும்போதே நினைச்சேன். உங்க பேச்சே சரியில்லை. இப்பத்தான் புரியுது.''

''இதோ பார்... அநாவசியமா தகராறு பண்ணாதே. வேணும்னா இந்த தங்கத்தையும் எடுத்துக்கோ. இடத்தைக் காலி பண்ணு...''

''சாமி...''

''பேசாதே... மழை வேற பலமா வர்ற மாதிரி இருக்கு பார்...''

- விபூதித் தாத்தா பிடித்து தள்ளி விட்டார். மல்லிகா வாய்விட்டு அழவே ஆரம்பித்து விட்டாள்.

''இதோ பார்... நீ மட்டும் சாமிங்க சந்தோஷப்படற மாதிரி நடந்துகிட்டே... உன்னை சாமிங்க பேசவும் வைப்பாங்க... அவங்களால முடியாததே இல்லை...''

— விபூதித் தாத்தா அவளுக்கும் வலை விரித்தார்.

ஆனந்தனுக்குள் புயல் வீச ஆரம்பித்தது.

அவனோ அவளைப் பார்த்து கைகளைக் கூப்பினான்.

கண்களில் கெஞ்சல் மின்னியது.

ஆனந்தன் சில அடிகள் நடந்திருப்பான்... சட்டென்று திரும்பி வந்தவன் ''சாமி! எனக்கு தங்கம் வேண்டாம், மருந்தும் வேண்டாம், உங்க சங்காத்தமும் வேண்டாம். நான் புறப்படறேன். அம்மாடி... நீயும் என் கூட வா. இவங்கள்ளாம் சாமியார் ரூபத்துல இருக்கற ருத்ராட்ச பூனைங்க'' என்று பலமாகவே கத்தினான்.

தாத்தா முகம் மிளகாய் கடித்த மாதிரி மாறி விட்டது.

''ஆனந்தம்... கோபத்துல எவளோ ஒருத்திக்காக சாமிங்கள பகைக்கக்காதே...''

''அட, போங்க தாத்தா... நீங்களும் இவ்வளவு மோசமா இருப்பீங்கன்னுல்லாம் நான் நினைக்கவே யில்லை. நீங்க ஊருக்கு வாங்க வெச்சுக்கறேன்...''

''ஆனந்தம்... நல்லா யோசிச்சு சொல்... 1000 கிலோ தங்கம்... பல நூறு கோடி ரூபா மதிப்பு... நீ பத்து கல்யாணம் பண்ணி நூறு பிள்ளைங்க பெத்துக்கலாம். உன்னைத் தேடி வருவாங்க.''

''இல்ல... வேண்டாம்... இந்த பொண்ணு அழுவறத பார்க்கும்போது என் பவித்ரா ஞாபகம் வருது. அவளுக்கு இப்படி நடந்தா நான் பாத்துக்கிட்டு சும்மா இருப்பேனா?''

''அப்ப இப்ப என்ன பண்ணப் போறே... சினிமா ஹீரோ மாதிரி சண்டை போடப் போறியா?''

''நிச்சயமா... யாராச்சும் கிட்ட வந்து பாருங்க. மண்டைய பிளந்துடுவேன். சாமியார்னு சொல்லிக்கிட்டு அநியாயம் பண்ண நினைக்கற உங்களை எல்லாம் தீயை வெச்சுக் கொளுத்தணும்...''



- அவன் கோபத்தின் உச்சிக்கே செல்ல - மல்லிகா அவனை ஒட்டிக் கொண்டாள். மான் குட்டிபோல நடுங்கினாள். 'சரி - இனி பேச்செதற்கு?' என்கிற மாதிரி ஒரு சித்தர் அவனை நோக்கி வரவும், கட்டுப்போட்ட கால் களுடனேயே ஓட ஆரம்பித்தாள். அவரும் துரத்தினார். அவள் ஓடி முடிந்த இடம் ஒரு மலைப்பாறை நுனி. கீழே அதல பாதாளம்.

அவள் துளிகூட யோசிக்கவில்லை. கீழே குதித்து விட்டாள். அவளைத் தடுக்க வந்த ஆனந்தனும் கட்டுப் படுத்திக் கொள்ள முடியாமல் அப்படியே அவளைப் பின்தொடர்வது போல குதித்தான்.

இருவரும் விழவும் விபூதித் தாத்தா ஏதோ சாதித்து விட்டதைப் போல சித்தர்களைப் பார்த்து, ''சாமி...! ஆனந்தன் ஜெயிச்சிட்டான். நான் மருந்து கொடுத்ததுக்கு ஒரு அர்த்தம் இருக்குன்னு இப்பவாவது உங்களுக்கு விளங்கியிருக்கும்'' - என்றார். அவர்களும் சிரித்தபடியே ''அவன் போய் இந்த மலையப் பத்தி தப்புத் தப்பா சொல்வான்தானே?'' என்று கேட்க, ''நிச்சயமாக...'' என்றார் விபூதித் தாத்தா.

'அப்ப அதுதானே எங்களுக்கெல்லாமும் வேணும். நீயும் இனி ஊர்ப்பக்கம் போகாதே. போனா திரும்ப வராதே...''

''சரி, சாமி...''

''இந்த மலை நல்லா இருக்கணும்னா மனுஷங்க இந்தப் பக்கம் வரவே கூடாது. போதும் அவங்க பக்தியும், பேராசையும்.''

- அவர்கள் எந்த அர்த்தத்தில் அப்படி நடந்து கொண்டனர் என்பதும் விபூதித் தாத்தாவுக்கு புரிந்தது!

[illegible]

"[illegible] கண்ணு... நீ இப்ப என்னைக் கூப்பிட்டே...?"

அவனும் ஆச்சரியத்தை விடாமல் "ஆமாம்ப்பா..." என்றான்.

"டேய்... உனக்கு பேச்சு வந்துடுச்சு..."

"ஆமாப்பா... என்னாலயே நம்ப முடியல... ஆமா, நீங்க எங்க இங்க?"

"அத ஏன் கேக்கறீங்க... நீங்க ரெண்டு பேரும் கட்டாயம் வருவீங்கன்னு சொல்லிட்டு சித்தர்சாமிங்க தடாகத்துல இருந்த லிங்கங்களை எடுத்துக்கிட்டுப் போய்ட்டாங்க. 'போகும்போது இந்த தண்ணியை எடுத்துக்கிட்டுப் போய் தினசரி ஒரு ஸ்பூன்னு ஒரு வாரம் குடிச்சா போதும்'னு வேற சொல்லிட்டுப் போனாங்க..."

"அப்ப கீழ விழுந்த நீங்களும் இந்த தடாகத்துலதான் விழுந்தீங்களா?"

"இல்லம்மா... நான் செடி கொடிங்ககிட்ட மாட்டிக்கிட்டேன். எப்படியோ தப்பிச்சேன்... ஆமா... எங்க அந்த கள்வாணிப்பய? உன்னை ஒன்னும் பண்ணலியே?"

[illegible]

"இந்த தடாகத் தண்ணீர்தாங்க மருந்து... [illegible] எடுத்துக்குங்க..."

"இதுவா... இதுவா மருந்து...?"

"சந்தேகம் என்ன... சந்தோஷமா எடுத்துக்குங்க. எனக்கும் இப்ப இங்க இருந்து போக வழி தெரியும்..."

"அப்ப கிளம்புங்க..." - ஆனந்தன்.

அந்த தடாகத்தைச் சுற்றிக் கிடந்த - உடைந்த பல பொருட்களுக்கு நடுவில் சில மண் கலயங்களும் இருந்தன.

அது நீரை வாங்கிக் கொள்ள, அவர்களும் புறப்பட்டனர்!

ஆதிகேசவனும், சில சித்தர்கள் வந்து போன வழித்தடத்தில் தைரியமாகத் தன்னை முன்னிறுத்தி நடந்தார்.

ஆதிகேசவனை மல்லிகா கட்டிக் கொண்டு நடந்தபடி இருந்தாள்.

சித்தர்கள் நுழைந்த புதர்களுக்குள் மூவரும் நுழையவும் அவர்கள் உருவமே மறைந்து போயிற்று.

மீண்டும் ஊமைச்சாமி குடிசை,

கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்த ஆனந்தனுக்குப் பக்கத்தில்தான் ஆதிகேசவனும் மல்லிகாவும் படுத்திருந்தனர். அவர்களும் எழுந்து கொண்டனர். சாமியும் எதிரில் வந்தார்.

தடாகத்தில் திரும்பவும் தண்ணீர் பெருகியிருந்த நிலையில் முதலில் மல்லிகாவும் பின்னாலேயே ஆனந்தனும் அதில் வந்து விழுந்தனர். தண்ணீரில் அடி ஆழம் வரை சென்றுவிட்டு மேலே வந்தவர்கள் எதிரில் ஆதிகேசவன் நின்றுகொண்டிருந்தார். அவரை எதிர் பாராமல் பார்த்த ஒரு ஆச்சரிய அதிர்வில் மல்லிகாவும் "அப்பா" என்று கூப்பிட்டுவிட, ஆதிகேசவனுக்கு பாதாதிகேசம் பரவசமாகி விட்டது.

"மல்லிகா கண்ணு... நீயா இப்ப என்னைக் கூப்பிட்டே...?"

அவளும் ஆச்சரியத்தை விடாமல் "ஆமாம்ப்பா..." என்றாள்.

"டேய்... உனக்கு பேச்சு வந்துடுச்சு..."

"ஆமாப்பா... என்னாலயே நம்ப முடியல... ஆமா, நீங்க எங்க இங்க?"

"அத ஏன் கேக்கறீங்க... நீங்க ரெண்டு பேரும் கட்டாயம் வருவீங்கன்னு சொல்லிட்டு சித்தர்சாமிங்க தடாகத்துல இருந்த லிங்கங்களை எடுத்துக்கிட்டுப் போய்ட்டாங்க. 'போகும்போது இந்த தண்ணியை எடுத்துக்கிட்டுப் போய் தினசரி ஒரு ஸ்பூன்னு ஒரு வாரம் குடிச்சா போதும்'னு வேற சொல்லிட்டுப் போனாங்க..."

"அப்ப கீழ விழுந்த நீங்களும் இந்த தடாகத்துலதான் விழுந்தீங்களா?"

"இல்லம்மா... நான் செடி கொடிங்ககிட்ட மாட்டிக் கிட்டேன். எப்படியோ தப்பிச்சேன்... ஆமா... எங்க அந்த களவாணிப்பய? உன்னை ஒண்ணும் பண்ணலியே?"



"இதோ இவரால தப்பிச்சேன். இவர் மட்டும் இல்லாட்டி நானும் இல்ல... எனக்கு மானமும் இல்லாம போயிருக்கும்."

"இவரு...?"

"என் பேர் ஆனந்தன். என் மகளுக்கு ஒரு தீராத வியாதி. அதுக்கு மருந்து இங்க பாஷாண லிங்கங்கள்ல இருக்குன்னு தெரிஞ்சு அதுக்காக வந்தேன். எனக்கும் இது மோசமான அனுபவம்..."

"இந்த தடாகத் தண்ணிதாங்க மருந்து... எவ்வளவு வேணுமோ எடுத்துக்குங்க..."

"இதுவா... இதுவா மருந்து...?"

"சந்தேகம் என்ன... சந்தோஷமா எடுத்துக்குங்க. எனக்கும் இப்ப இங்க இருந்து போக வழி தெரியும்..."

"அப்ப கிளம்புங்க..." - ஆனந்தன்.

அந்த தடாகத்தைச் சுற்றிக் கிடந்த - உடைந்த பல பொருட்களுக்கு நடுவில் சில மண் கலயங்களும் இருந்தன. அது நீரை வாங்கிக் கொள்ள, அவர்களும் புறப்பட்டனர்.

ஆதிகேசவனும், சில சித்தர்கள் வந்து போன வழித்தடத்தில் தைரியமாகத் தன்னை முன்னிறுத்தி நடந்தார்.

ஆதிகேசவனை மல்லிகா கட்டிக் கொண்டு நடந்தபடி இருந்தாள்.

சித்தர்கள் நுழைந்த புதர்களுக்குள் மூவரும் நுழையவும் அவர்கள் உருவமே மறைந்து போயிற்று.

**மீ**ண்டும் ஊமைச்சாமி குடிசை,

கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்த ஆனந்தனுக்குப் பக்கத்தில்தான் ஆதிகேசவனும் மல்லிகாவும் படுத் திருந்தனர். அவர்களும் எழுந்து கொண்டனர். சாமியும் எதிரில் வந்தார்.

"உங்களை உங்க பக்தியும் சத்தியமும் கைவிடலை. அது இனியும் கைவிடாது. உங்களைப் போலவே எல்லாராலயும் இருக்க முடியுமா... ஆகையால இந்த மலைப் பக்கம் வந்துட வேண்டாம்னு எல்லார்கிட்டேயும் சொல்லுங்க..." - என்று ஜடைச்சாமியும் தன் பங்கிற்கு சொல்லி அனுப்பி வைத்தார்.

திரும்பி நடந்து வரும் வழியில் யானை பிளிறும் சப்தம் கேட்டது. கொஞ்சம் பயமாகவும் இருந்தது. சிலர் சிதறி ஓடிக் கொண்டிருந்தனர்.

ஒரு பாறை மேல் யானை மிதித்துக் கொன்ற நிலையில் அண்ணாமலை பிணம்! மல்லிகா 'சிவ சிவா...' என்று நெக்குருகினாள். ஆதிகேசவனும்.

ஆனந்தனோ நடந்ததெல்லாம் கனவா இல்லை நனவா என்று யோசிக்கத் தொடங்கியிருந்தான். அந்த பாஷாண லிங்க நீர் அவன் இடுப்பில் ஜடைச்சாமி கொடுத்த ஒரு குடுவைக்குள் பத்திரமாக இருந்தது!

அடிவாரத்துக்கு வந்தவன் முதல் காரியமாக மகாலட்சுமிக்குத்தான் போன் செய்தான்.

"மகா, மருந்து கிடைச்சிடுச்சு..." என்றான்.

அவளும் -

"சீக்கிரம் வாங்க... சாமி நம்மைக் கைவிடலை!" என்றாள்.

தொலைவில் மகாலிங்க சந்நிதியின் மணியோசை ஆமோதிப்பது போல ஒலித்து அடங்கியது!

முற்றும்